## *Contents*

*Arise 2017* ........................................................................ 9

தியானம் - தேவனுடைய பிரசன்னத்தில் தொடர்ந்து வாழ்வது. 23

சேலா ........................................................................ 33

தாவீதின் வாழ்க்கையிலிருந்து நாம் கற்றுக்கொள்பவை........ 35

1. அபிஷேகமும்... அழைப்பும்... ...................................... 37

மேய்ப்பன் வழங்கும் காரியங்கள் - *Provision of the Shepherd* 39

மேய்ப்பனின் பாதுகாப்பு - *Protection of the Shepherd* ........... 40

மேய்ப்பனின் பிரசன்னம் - *Presence of the Shepherd* ............. 41

மேய்ப்பனின் பராமரிப்பு - *Preservation of the Shepherd*........ 41

அப்போஸ்தலனாகிய பவுல் - *Apostle Paul* ........................... 41

இயேசு கிறிஸ்து........................................................ 42

செயல்படுத்துதல் ...................................................... 43

தனிப்பட்ட கேள்விகள்.................................................. 45

2. கர்த்தரின் யுத்தம் ... முதல் வெற்றி... ............................ 47

2. எதிரியின் மேல் கர்த்தரின் நியாயத்தீர்ப்பு -வ 3-6........ 48

3. கர்த்தரின் நியாயத்தீர்ப்பு தரும் நம்பிக்கை -வ 7-10.... 49

4. தேசமாக சேர்ந்து கர்த்தரை துதித்தல்........................... 50

5. தேசங்களின்மேல் கர்த்தரின் நியாயத்தீர்ப்பு ................. 51

6. கர்த்தருடைய நியாயத்தீர்ப்பின் நம்பிக்கை .................. 52

இயேசு கிறிஸ்துவின் வாழ்க்கை......................................... 52

செயல்படுத்துதல் ...................................................... 54

கர்த்தர் நமக்கு என்ன செய்கிறார்?................................... 54

நாம் எப்படி அவருக்கு நன்றி செலுத்த வேண்டும்? .......... 54

அவரை ஏன் நம்ப வேண்டும்? ....................................... 54

கர்த்தருக்கு எந்தெந்த காரியங்கள் தெரியும்? அவைகளை குறித்தி அவர் என்ன செய்வார்? ....................................... 55

3. என்னை துரத்தும் துரோகி... ............................................ 59

Notes:

________________________________________________________
________________________________________________________
________________________________________________________

ஜான் மற்றும் பெட்டி ஸ்டாம்-ன் உண்மை வரலாறு ............ 62

விடுதலைக்காக ஜெபம் ............ 63

தேவையை வெளிப்படுத்துதல் ............ 64

எதிரிகளின் மேட்டிமை – திமிர் ............ 65

தேவன் மேல் தாவீதின் உறுதியான நம்பிக்கை ............ 66

தன் எதிரிகளை வீழ்த்தும்படி தாவீது கர்த்தரை வேண்டிகொள்கிறான் ............ 67

ஆபத்தின் பிரசன்னம் ............ 68

ஆபத்து நிறைந்திருந்தாலும் தேவனை துதித்தல் ............ 68

அப்போஸ்தலனாகிய பவுல் ............ 69

செயல்படுத்துதல் ............ 70

*The Martyrdom of John and Betty Stam* ............ 71

4. எனக்கு உதவினார்கள்... அவர்களையும் துன்பம் துரத்துகிறது... ............ 77

தீமை செய்வதையும் பொய் சொல்வதையும் விரும்பும் மனிதன் ............ 77

பரலோகத்தின் பதில் ............ 78

பொதுவான பதில் ............ 79

தாவீதின் பதில் ............ 80

சுருக்கம் ............ 81

ஸ்தேவானின் வாழ்க்கை ............ 81

செயல்படுத்துதல் ............ 82

நீங்கள் தேவனில் வேரூன்றியிருக்கிறீர்களா? ............ 84

5. எல்லாருக்கும் அவசியமில்லாதவன் – I ............ 87

ஆபத்து தொடரும்போது பயமும் விசுவாசமும் வெளிப்படுதல் ............ 87

இரக்கத்திற்காக கர்த்தரிடம் நோக்குவது ............ 87

பயப்படுவதா இல்லையா ............ 88

தொடரும் ஆபத்து ............ 90

தாவீதின்மேல் தேவனுடைய அக்கறை ............ 91

தேவன் தாவீதின் பிரச்சனைகளை அறிந்திருந்தார் ............ 91


Notes:

________________________________________________________

________________________________________________________

________________________________________________________

தேவன் மேல் இருக்கும் நம்பிக்கையை அறிக்கையிடுதல். 93
பொருத்தனையை நிறைவேற்றுதல் .................................... 94
அப்போஸ்தலனாகிய பவுலின் வாழ்க்கை ........................... 95
செயல்படுத்துதல் ................................................................ 96
இன்றைக்கு தேவனுடைய வாக்குத்தத்தம் ....................... 96
தேவனுடைய வசனமே நம்முடைய நம்பிக்கையின் ஆதாரமாக இருக்கிறது ................................................... 97
தேவனுடைய வசனமே நம்முடைய மனதை ஆவிக்குரிய சமநிலையில் வைக்கிறது ............................................... 97
தேவன் நம்மோடு இருப்பதை அவருடைய வார்த்தை நமக்கு நினைவுபடுத்துகிறது ........................................... 98
6. எல்லாருக்கும் அவசியமில்லாதவன் – II ....................... 101
நிரம்பி வழியும் துதி ........................................................ 101
தாவீதின் விடுதலையை குறித்த சாட்சி .............................. 102
தேவன் கொடுப்பதையும் அவருடைய பாதுகாப்பையும் ருசிப்பதில் உற்சாகம் ...................................................... 104
கர்த்தருக்கு எப்படி பயப்படுவது! .................................... 106
கர்த்தருக்குப் பயந்து வாழுங்கள் .................................. 107
கர்த்தருடைய கண்காணிப்பின் கீழ் ............................... 108
தேவன் தாழ்மையுள்ளவர்ககளுக்கு உதவி செய்கிறார் .... 108
உண்மையுள்ளவர்கள்மேல் தேவனின் அக்கறை ................ 109
அப்போஸ்தலனாகிய பவுல் ............................................. 110
செயல்படுத்துதல் .......................................................... 111
7. எங்கே நான் ஒளிவது... இங்கும் எதிரிகள் துரத்துகிறார்கள்.. 113
தேவனே என்னுடைய வாஞ்சை ....................................... 115
தேவனே என்னுடைய மகிழ்ச்சி ....................................... 117
தேவனே எனக்கு பாதுகாப்பு ........................................... 118
முடிவுரை ...................................................................... 119
இயேசு கிறிஸ்து ............................................................. 119
அப்போஸ்தலனாகிய பவுல் ............................................. 120

Notes:

________________________________________________________
________________________________________________________
________________________________________________________

செயல்படுத்துதல் ........................................................ 121
8. துரோகிதான்... ஆனாலும் உதவுவேன்........................... 125
துன்மார்க்கனுடைய குணம் ............................................ 125
தேவனின் பொறுமையும் இரக்கமும் ............................... 126
தாவீது ஜெபிக்கிறார் .................................................... 127
9. உதவினேன்.. ஆனாலும் அவர்கள்... ............................. 129
இயேசு கிறிஸ்து............................................................ 135
அப்போஸ்தலனாகிய பவுல்............................................ 135
பயன்பாடு ..................................................................... 136
காலை தியானம் – வாழ்க்கையை சமநிலைப்படுத்துதல் ........ 139
உலக (சரீர) வாழ்வு ........................................................ 141
செய்யக்கூடாதவை - Don't ............................................ 143
ஆவிக்குரிய வாழ்க்கை.................................................... 144
மாம்ச வாழ்க்கையும் ஆவிக்குரிய வாழ்க்கையும்............... 145
What would drain our strength? .......................................... 147
சரிசெய்தல் ................................................................... 149
1. கர்த்தருடைய வார்த்தையை கொண்டு .................... 149
2. கர்த்தருக்குள் மகிழ்ச்சி.......................................... 150
3. விசுவாசிகளின் ஐக்கியம்....................................... 151
10. எதிரியும்... நானும்... வித்தியாசம் ............................... 155
தேவனிடத்தில் ஜெபிப்பது விசுவாசத்தின் அடையாளம் 158
தேவன் உங்கள் பிரச்சனைகள் எல்லாவற்றைக்காட்டிலும் பெரியவர் என்று விசுவாசிப்பது! ................................. 158
தாவீதின் கதறல்............................................................ 163
தாவீதின் புகார்கள்......................................................... 164
தாவீதின் ஜெபம்............................................................ 164
கர்த்தரை மாத்திரமே நம்பிய தாவீது ................................ 165
விடுதலைக்காக தாவீதின் ஜெபம்.................................... 165
முடிவுரை...................................................................... 165
அப்போஸ்தலனாகிய பவுல்............................................ 166

Notes:

____________________________________________________________
____________________________________________________________
____________________________________________________________

செயல்படுத்துதல் ........................................................ 168
11. எல்லாருக்கும் அவசியமில்லாதவன் – III..................... 171
தனிமையின் கதறல் ...................................................... 173
அவருடைய நன்மையின் துதிகள்.................................... 173
பிறர் கொடுக்கும் வேதனை ............................................ 174
தேவனிடம் அவன் விசுவாசம் ........................................ 175
அவனுடைய வேதனைகள் விரிவாக ................................ 175
இறுதி கதறல்................................................................ 177
முடிவுரை ..................................................................... 181
இயேசு கிறிஸ்து............................................................ 182
அப்போஸ்தலனாகிய பவுல்............................................ 183
செயல்படுத்துதல் ........................................................ 184
நடைமுறை உதவிகள்.................................................... 185
12. வாக்குத்தத்தம் நிறைவேறும் காலம் – I (சில பகுதிகள்) 189
தேசத்தின் இரக்கத்திற்காக தேவனிடம் வேண்டுதல் செய்.. 189
தேவனின் வெற்றி வார்த்தை ............................................ 191
சாத்தியமற்ற வெற்றி தேவனால் சாத்தியமாகும்................ 192
இயேசு கிறிஸ்து............................................................ 193
அப்போஸ்தலனகிய பவுல் .............................................. 194
செயல்படுத்துதல் ........................................................ 194
13. வாக்குத்தத்தம் நிறைவேறும் காலம் – II (முழுமையாக) 197
தேவனுடைய கோபம் மாறி அனுக்கிரகம் கிடைத்ததற்காக தேவனுக்கு துதி ............................................................ 198
கலக்கத்திலிருந்து பாதுகாப்பிற்குள் ............................... 199
அழிவிலிருந்து பாதுகாப்பிற்குள்.................................... 199
அழிவிலிருந்து இரக்கம்.................................................. 200
Conclusion.................................................................. 200
இயேசு கிறிஸ்து............................................................ 201
அப்போஸ்தலனாகிய பவுல்............................................ 201
செயல்படுத்துதல் ........................................................ 202

Notes:

____________________________________________________________
____________________________________________________________
____________________________________________________________

*14. வாக்குத்தத்தம் நிறைவேறும் காலம் – III (எதிரிகள் தாக்கினாலும் வெற்றி)* ........................................................ 207

முடிவுரை............................................................................ 210

அப்போஸ்தலனாகிய பவுல்.................................................. 210

செயல்படுத்துதல் ............................................................... 211

*15. வாக்குத்தத்தம் நிறைவேறும் காலம் – IV (எதிரிகள் யாவரையும் ஜெயித்தேன்)* ................................................. 217

கர்த்தரின் சர்வஞானம்......................................................... 217

எங்கும் வியாபித்திருக்கும் தேவன் ...................................... 219

கர்த்தரின் சர்வ வல்லமை ................................................... 221

கர்த்தரை துதிக்கும் தாவீதின் விசுவாசம் ............................. 223

முடிவுரை............................................................................ 224

செயல்படுத்துதல் ............................................................... 225

*16.* செழிப்பு + மனநிறைவு + சோம்பல் = பாவம்............... 229

வேண்டுதல் ....................................................................... 230

பாவ அறிக்கை..................................................................... 231

ஒப்புக்கொள்ளுதல்............................................................... 231

ஜெபம்................................................................................ 231

வாக்குறுதி ......................................................................... 232

துதி.................................................................................... 233

சீயோனுக்கும் எருசலேமுக்கும் ஜெபம்............................. 234

செயல்படுத்துதல் ............................................................... 234

தேவனுடைய தவறாத அன்பு................................................ 236

*17.* பாவ மன்னிப்பும் நாம் கற்றுக்கொள்வதும்.................. 239

பாவ மன்னிப்பின் மகிழ்ச்சி................................................. 240

பாவ அறிக்கை செய்வதன் நன்மைகள்................................. 242

விசுவாசத்தின் மதிப்பு / பலன் ............................................ 243

குடும்பமாக எழும்பி பிரகாசித்தல் ......................................... 251

சார்ந்து வாழ அறிந்தவர்கள்................................................ 255

கற்றுக்கொடுத்து சீஷராக்குதல்........................................... 256

Notes:

________________________________________________________

________________________________________________________

________________________________________________________

தியாக வாழ்வு........................................................................ 257
தங்கள் இல்லத்தை திறந்துகொடுத்தார்கள்........................ 258
செயல்படுத்துதல் ........................................................... 258
தரிசன அறிக்கைகள் -Vision statements:........................... 261
குறிக்கோள் வாசகம் - Mission Statements .......................... 263
18. என்னோடு இருந்தார்கள்.. இப்போது துரத்துகிறார்கள்.. 267
மாலையில் பாடும் பாடல் - சங்கீதம் 4 ............................ 267
கர்த்தரிடத்தில் ஜெபம்..................................................... 268
எதிரிகளுக்கு இருதயத்திலிருந்து வார்த்தை....................... 268
கர்த்தர் மனமகிழ்ச்சியளிக்கிறார்...................................... 269
காலையில் பாடும் பாடல் - சங்கீதம் 5 ............................. 270
தேவனிடத்தில் ஜெபம்.................................................... 271
தேவனிடத்தில் விண்ணப்பம் ........................................... 272
தேவனிடம் நெருங்கி சேர்தல்........................................... 273
தேவனிடத்தில் விண்ணப்பம் ........................................... 273
கர்த்தருக்குள் சந்தோஷமான அடைக்கலம் ....................... 274
முடிவுரை ......................................................................... 275
இயேசு கிறிஸ்து.............................................................. 276
அப்போஸ்தலனாகிய பவுல்.............................................. 276
செயல்படுத்துதல் ........................................................... 278
19. வெற்றியா துக்கமா...................................................... 283
செயல்படுத்துதல் ........................................................... 288
20. அற்பமானவனும்... விசேஷித்தவனும்... ....................... 293
செயல்படுத்துதல் ........................................................... 296

Notes:

________________________________________________________
________________________________________________________
________________________________________________________

Notes:

______________________________________________________________
______________________________________________________________
______________________________________________________________

*ஏசாயா 60:1, "Arise [from spiritual depression to a new life], shine [be radiant with the glory and brilliance of the Lord];*

> *[ஆவிக்குரிய மன அழுத்தத்திலிருந்து] எழும்பிப் பிரகாசி [கர்த்தருடைய மகிமையையும் ஆற்றலையும் கதிர்களை போல பிரகாசமாய் ஒளிவீசு];*

*Liberty 2016ல் ஆவியானவரைப்பற்றி மிக விரிவாக கற்றுக்கொண்டோம். முக்கியமாக, இந்த கூட்டத்தை துவங்குவதற்கு முன், கொடுக்கப்பட்டுள்ள வசனத்தை சற்று ஆராய்ந்து பார்ப்போம், பின்பு அது எப்படி நமக்கு பொருந்தும் என்று பார்ப்போம்.*

*ஏசாயா இந்த வசனத்தை கூறுவதற்கு சற்று முன் தேவனைப்பற்றியும் அவருடைய நியாயதீர்ப்பை பற்றியும் கூறுகிறார். ஏசாயா தீர்க்கதரிசனத்தின் மூன்றாவது பகுதியின் (ஏசா 56-66) கருப்பொருள் அதிகாரங்கள் 60-62ல் அடங்கியிருக்கிறது.*

*பெர்சிய ராஜாவாகிய கோரேசு, பாபிலோனியர்களை துரத்திவிட்டு பெரிசிய ராஜ்யத்தை நிலைநாட்டினார் (ஏசாயா 44:24; 45:1) . தேவனுடைய திட்டத்தை கோரேசு புரிந்துகொண்டபடியால், தேவனுடைய ஜனத்தின்மேல் பாபிலோனிய ராஜாக்களை பார்க்கிலும் மிகவும் இரக்கம் பாராட்டினான். இஸ்ரவேல் ஜனங்களை தங்கள் தேசத்திற்கு திரும்பும்படி கி.மு. 538 ஆம் ஆண்டு கோரேசு கட்டளை பிறப்பித்தான் (எஸ்ரா 1:1-4).*

*ராஜா ஆணை பிறப்பித்திருக்கிறார்,*

*தீர்க்கதரிசிகள் வாக்குத்தத்தம் உரைக்கிறார்கள்,*

*ஆசாரியர்கள் நிர்பந்திக்கிறார்கள்.*

*ஆனாலும், இஸ்ரவேல் ஜனங்கள் தங்கள் தேசத்திற்கு பெருமளவு திரும்பவில்லை.*

*பாபிலோன் தேசத்திற்கு பரதேசிகளாய் வந்த இஸ்ரவேல் மக்கள் அங்கே சுகபோகமாக பெருகியிருந்தபடியால், அந்த தேசம் அவர்களுக்கு வசதியாக காணப்பட்டது. அதனால் அவர்கள்*

Notes:

______________________________________________________________________________________________________________________________________________________________________________________________________________________________________________

*அங்கிருந்து இஸ்ரவேல் தேசத்திற்கு திரும்ப மனதில்லாதிருந்தார்கள். இஸ்ரவேல் தேசத்திற்கு திரும்பிய சிலரும் - நிலம் பாழாய் போனதையும், , நகரமும் ஆலயமும் பாழாய் கிடக்கிறதையும், முரட்டாட்டமான மனிதர்கள் அந்த பட்டணத்தில் இருப்பதையும்தான் காண முடிந்தது. மகா மேன்மையான வாக்குத்தத்தங்கள் ஆசிர்வாதமாகவோ சம்பத்தாகவோ உடனடியாக மாறவில்லை.*

*பாபிலோனிலிருந்து திரும்பிய மக்கள் புதிய நெருக்கடிகளை சந்திக்க நேர்ந்தது.*

- *மதில் இல்லாத பட்டணம்*
- *கொள்ளைக்காரர்கள்*
- *சட்டவிரோத நடவடிக்கைகள்*
- *அரசாங்கம் இல்லை*
- *சட்டத்தை நிலைநிறுத்த போதிய தலைவர்கள் இல்லை*
- *ஆலயம் இல்லாததால் சமய சடங்குகள் குறைந்துபோயின*
- *சோம்பல்*
- *அலட்சியம்*
- *வெறுப்பு மனப்பான்மை*

*தாங்கள் தேவனுடைய ஜனம் என்கிற உணர்வு ஜனங்களிடத்தில் கொஞ்சம் கொஞ்சமாய் மங்க ஆரம்பித்தது. தேவனுடைய ஜனமாய் வாழ்வதை குறித்து அசட்டை பண்ண தொடங்கினார்கள். கர்த்தர் வாக்குத்தத்தம் பண்ணின எதிர்காலத்தை குறித்து சந்தேகிக்க தொடங்கினார்கள்.*

*பரிசுத்த ஆவியானவர் ஏசாயா 59வது அதிகாரத்தை மிக கவனமாக வடிவமைத்துள்ளார். இந்த அதிகாரத்தில் உரையாற்றுபவர்களை கவனித்தால், இந்த அதிகாரத்தை நான்கு பகுதிகளாக பிரிக்கலாம்:*

1. *ஜனங்கள் கர்த்தரிடம் முறையிடுகிறார்கள் (வ 1)*
2. *தீர்க்கதரிசி ஜனங்களுக்கு பதிலளித்து குற்றஞ்சாட்டுகிறார் (வ 2-8)*
3. *ஜனங்கள் தங்கள் குற்றங்களை ஒப்புக்கொண்டு பதிலளிக்கிறார்கள் (வ 9-15a)*

Notes:

__________________________________________________________

__________________________________________________________

__________________________________________________________

4. *கர்த்தர் தமது இரக்கத்தை வெளிப்படுத்துகிறார். (வ 15b-21)*

> *ஏசாயா 59:21, "உன்மேலிருக்கிற என் ஆவியும், நான் உன் வாயில் அருளிய என் வார்த்தைகளும், இதுமுதல் என்றென்றைக்கும் உன் வாயிலிருந்தும், உன் சந்ததியின் வாயிலிருந்தும், உன் சந்ததியினுடைய சந்ததியின் வாயிலிருந்தும் நீங்குவதில்லையென்று கர்த்தர் சொல்லுகிறார்; இது எனக்கு அவர்களோடிருக்கும் என் உடன்படிக்கையென்று கர்த்தர் சொல்லுகிறார்.*

இதுவே இஸ்ரவேல் ஜனங்கள் சென்றுகொண்டிருந்த கடினமான காலகட்டத்தில் கர்த்தர் அவர்களுக்கு கொடுத்த வாக்குத்தத்தம்.

- எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து மீட்கப்பட்டார்கள்
- வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசம் அவர்களுக்கு கொடுக்கப்பட்டது
- தேசம் கர்த்தரை மறந்தபோது எதிரிகள் அவர்களை அடிமைப்படுத்தினார்கள்
- கர்த்தர் அவர்களை மீட்டு திரும்பவும் அவர்களுடைய தேசத்தில் சேர்த்தார்
- ஆனாலும் அவர்களால் கர்த்தருடைய கிரியையை உணர்ந்துகொள்ள முடியவில்லை

ஏசாயா தீர்க்கதரிசி தாம் வாழ்ந்த நாட்களில் உலகத்தை பார்க்கும்போது மாபெரும் இருளை காண்கிறார்.

> *ஏசாயா 60:2, இதோ, இருள் பூமியையும், காரிருள் ஜனங்களையும் மூடும்; ஆனாலும் உன்மேல் கர்த்தர் உதிப்பார்; அவருடைய மகிமை உன்மேல் காணப்படும்.*

மாபெரும் இருள், கடுமையான இருள்.

ஏசாயாவின் காலத்தில் இவ்வளவாய் இருள் இல்லை என்றாலும் அந்த நாட்கள் இஸ்ரவேல் தேசத்தின் வரலாற்றில் பெரும் இருளாகவே காணப்பட்டது.

கர்த்தரையும், அவருடைய காரியங்களையும், பரலோகத்துக்கடுத்த காரியங்களை குறித்து அறியாதிருப்பதே இருளில் இருப்பது என்று அர்த்தம்..

Notes:

______________________________________________________________
______________________________________________________________
______________________________________________________________

*ஏசாயா 1:3, மாடு தன் எஜமானையும், கழுதை தன் ஆண்டவனின் முன்னணையையும் அறியும்;* ***இஸ்ரவேலோ அறிவில்லாமலும், என் ஜனம் உணர்வில்லாமலும் இருக்கிறது என்கிறார்.***

இன்னும் சுருக்கமாக சொல்வோமானால், ஜனங்கள் ஆடு மாடுகளையும் கழுதைகளையும் காட்டிலும் அறிவில்லாதவர்களாய் இருக்கிறார்கள் என்று சொல்லலாம். ஏனெனில், ஆடு மாடுகளும் கழுதைகளும் குறைந்தபட்சம் தங்கள் எஜமான் யார் என்றாவது அறிந்திருக்கும்.

ஓசியாவிலிருந்து மற்றொரு வார்த்தை:

*ஓசியா 4:6 என் ஜனங்கள்* ***அறிவில்லாமையினால்*** *சங்காரமாகிறார்கள்; நீ அறிவை வெறுத்தாய் ஆகையால் நீ என் ஆசாரியனாயிராதபடிக்கு நானும் உன்னை வெறுத்துவிடுவேன்; நீ உன் தேவனுடைய வேதத்தை மறந்தாய், ஆகையால் நானும் உன் பிள்ளைகளை மறந்துவிடுவேன்.*

கர்த்தரையும் அவருடைய காரியங்களையும் அறியாததாலே ஜனங்கள் பாவத்தில் விழுந்து தவறுகள் செய்து பொய்யில் விழுந்துவிடுகிறார்கள்.

இருளில் வாழ்வோமானால் ஒளிக்கும் நமக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்று யோவான் தமது சுவிசேஷத்தின் ஆரம்பத்திலேயே கூறுகிறார்.

*யோவான் 1:5, அந்த ஒளி இருளிலே பிரகாசிக்கிறது; இருளானது அதைப் பற்றிக்கொள்ளவில்லை.*

*யோவான் 3:19, ஒளியானது உலகத்திலே வந்திருந்தும் மனுஷருடைய கிரியைகள் பொல்லாதவைக-ளாயிருக்கிறபடியினால் அவர்கள் ஒளியைப்பார்க்கிலும் இருளை விரும்புகிறதே அந்த ஆக்கினைத்தீர்ப்புக்குக் காரணமாயிருக்கிறது.*

உலகம் இருளில் இருக்கிறது. ஆகவே ஒளியினிடத்தில் அதற்கு பங்கில்லை. உண்மை என்னவென்றால், இருள் ஒளியை கண்டு அஞ்சுகிறது. ஏனெனில் ஒளி, இருளை இன்னதென்று வெளிச்சம்போட்டு காட்டிவிடுகிறது.

Notes:

____________________________________________________________
____________________________________________________________
____________________________________________________________

*ஒரு சிறிய கதை:*

*பல ஆண்டுகளுக்கு முன் சீனாவை சேர்ந்த ஒரு மாபெரும் தொழிலதிபர் அமெரிக்காவிற்கு சென்றிருந்தார். அப்போது ஒரு சக்திவாய்ந்த நுண்ணோக்கியை (microscope) கண்டு வியப்பில் ஆழ்ந்தார். வைரம் மற்றும் பூக்களின் இதழ்களின் அழகையும் மற்றும் அவற்றில் தெரியும் பல விவரங்களையும் நுண்ணோக்கி மூலம் கண்டு மிகவும் ஆச்சரியப்பட்டார். ஆகவே ஒரு நுண்ணோக்கியை சீனாவிற்கு வாங்கி செல்ல வேண்டும் என்று முடிவு செய்து அதை வாங்கி சென்றார். பல நாட்கள் அதின் மூலம் பல காரியங்களை கண்டு வியந்து மகிழ்ச்சியுற்றார். ஆனால் ஒரு நாள், தான் உன்னவிருந்த அரிசியை அந்த நுண்ணோக்கி மூலம் கண்டவுடன் துயரப்பட தொடங்கினார். அந்த அரிசியில் கண்ணுக்கு தெரியாத பல பூச்சிகள் ஊரிக்கொண்டிருந்தன. அந்த உணவு அவருக்கு மிகவும் பிடித்தமான உணவாக இருந்ததால் என்ன செய்வது என்று யோசித்துக்கொண்டிருந்தார். தான் கண்ட அந்த உண்மையை அவரால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. ஆகவே இறுதியாக, அந்த உண்மையை கண்டறிய உதவியதால் விருப்பப்பட்டு வாங்கிய அந்த நுண்ணோக்கியை கீழே எறிந்து உடைத்துப்போட்டார்!*

*என்ன ஒரு முட்டாள்தனம் என்று நாம் கூறலாம். ஆனால் பலர் சுவிசேஷம் அறிவிக்கப்பட்டவுடன் இதைத்தான் செய்கிறார்கள். சுவிசேஷம் தங்கள் பொல்லாத சுயரூபத்தை வெளிப்படுத்துவதால் அதை புறம்பே தள்ளி அதை வெறுக்கிறார்கள்.*

*ஏசாயா 9:2 சொல்லுகிறது: "இருளில் நடக்கிற ஜனங்கள் பெரிய வெளிச்சத்தைக் கண்டார்கள்; மரண இருளின் தேசத்தில் குடியிருக்கிறவர்களின்மேல் வெளிச்சம் பிரகாசித்தது."*

*எழும்பி, பிரகாசி; உன் ஒளி வந்தது!*

*அடர்ந்த பெரும் இருளை ஏசாயா 59:9-10ல் விவரித்தபிறகு, இதுவே ரட்சகர் அளிக்கும் மகிமையான மீட்பு (glorious rescue from the Redeemer).*

*ஏசாயா 59:9-11 இஸ்ரவேல் ஜனங்கள் இருளில் நடப்பதை விவரிக்கிறது. அவர்கள் இருளில் இருப்பதும், சிறையில் இருப்பதும், தடுமாறி சுவற்றில் கிடப்பதும், கண்கள்*

Notes:

____________________________________________________________
____________________________________________________________
____________________________________________________________

இல்லாதிருப்பதும், வேதனையில் கலங்குவதும், இறுதியாக மரித்திருப்பதும் தெளிவாக இந்த வசனங்களில் சொல்லப்படிருக்கிறது.

- இவ்வளவு பிரச்சனைகளில் இருப்பவர்கள் எப்படி எழும்பி பிரகாசிக்க முடியும்?
- அவர்களால் முடியாது, ஏனென்றால் அவர்கள் எண்ணத்திலும் கூட கற்பனை செய்து பார்க்க முடியாதது.
- பாவத்திலும் மீறுதல்களிலும் மரித்துகிடப்பவர்கள் எப்படி எழும்பி பிரகாசிக்க முடியும்?
- இருள் எப்படி வெளிச்சமாக மாறும்?
- மரித்தவர்கள் எப்படி வாழ முடியும்?
- சுய இச்சை கொண்டவர்கள் எப்படி பிறர் மீது அன்பு செலுத்த முடியும்?
- திருடன் எப்படி கொடுக்க முடியும்?
- பொய்யன் எப்படி உண்மை சொல்ல முடியும்?

நமக்கு ஒரு இரட்சகர் வேண்டும்; ஒளியாக இருப்பவர், பார்வை இல்லாதவர்களுக்கு பார்வை அளிப்பவர், மரித்தவர்களுக்கு உயிர் ஜீவன் கொடுப்பவர். அப்படிப்பட்ட ஒருவரால்தான் நம்மை எழும்பி பிரகாசிக்கச்செய்ய முடியும்.

எருசலேம் ஜனங்கள் சிறைபட்டிருந்தபோது இருளில் பல ஆண்டுகள் அவதிப்பட்டனர் . எருசலேமிற்கு திரும்பி வர முடியாத நிலை, நகரம் பாழாய்கிடக்கிறது, சுற்றி இருக்கும் மற்றவர்கள் நகரத்தையும் தேவாலயத்தையும் திரும்ப கட்டுவதற்கு மிகவும் எதிர்கிறார்கள். இப்படிப்பட்ட சூழல்களினால் இஸ்ரவேல் ஜனங்கள் அடிக்கப்படுகின்றனர்.

தங்கள் பாவத்தின் நிமித்தம் வந்த இந்த சூழ்நிலை கர்த்தரின் நியாயத்தீர்ப்பிற்கு அவர்களை கொண்டு சென்றது. ஆனாலும், தேவன் அவர்களை அழிப்பதற்காக அவர்களை தண்டிக்கவில்லை, இரட்சிப்பதற்காகவே தண்டித்தார். இப்பொழுது அவர்களுடைய ரட்சண்ய நாள் வந்தது, அந்த ரட்சிப்பை சுதந்தரித்துக்கொள்ள சமயம் வந்துவிட்டது. அவர்கள் இவ்வளவு நாள் இருளிலும் பறகடிப்பிலும் இருந்தனர் ஆனால் இப்பொழுதோ, "வெளிச்சம் வந்தது" "கர்த்தருடைய மகிமை அவர்கள் மேல் பிரகாசித்தது".

Notes:

____________________________________________________________
____________________________________________________________
____________________________________________________________

பல காலங்கள் மறைந்ததுபோல் இருந்த யேகோவா தேவனே அந்த வெளிச்சம்.

**வெளிச்சம் / ஒளி வந்தது** – கர்த்தர் தமது ஜனங்களை அந்த வெளிச்சத்திற்கு பதிலளிக்கும்படி "**எழும்பவும்-பிரகாசிக்கவும்**" அழைக்கிறார் !

- இருள் வீழ்ந்து கிடப்பது; **வெளிச்சம்** எழும்புவதற்கு
- இருள் சோர்ந்து உறங்குவது; **வெளிச்சம்** பிரசிப்பதற்கு
- வெளிச்சம் வந்தவுடன், அதை நாம் அங்கீகரித்து, எழும்பி பிரகாசிக்க வேண்டும்.

முதலாவது கர்த்தருடைய ஒளியை ஏற்றுக்கொள்ள (receive) வேண்டும் பின்னர், அதை உபயோகப்படுத்த (**எழும்பி, பிரகாசிக்க**) வேண்டும்.

உங்கள் **வெளிச்சம் வரும்வரை** உங்களால் பிரகாசிக்க முடியாது, ஆனால் வந்த பிறகு நீங்கள் **எழும்பி பிரகாசி**க்கவில்லை என்றால், ஏதோ பிரச்சனை இருக்கிறது என்று பொருள்.

நம்முடைய சூழ்நிலைகளையும் ஏசாயா தீர்க்கதரிசியின் காலத்தின் சூழ்நிலைகளையும் ஒப்பிட்டு பார்க்கும்போது நிறைய ஒற்றுமைகளை காணலாம்.

- நாம் பாவத்தில் மரித்தவர்களாய் இருந்தபோது கர்த்தர் நம்மை இரட்சித்தார்.
- பரிசுத்த ஆவியானவர் நமக்கு அச்சாரமாக (Guarantee) கொடுக்கப்பட்டுள்ளார்.
- அருமையான நித்தியத்தின் வாக்குத்தத்தம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து மூலமாய் நமக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது.
- நாம் தவறும்போது அவரிடம் பாவமன்னிப்பு கேட்கிறோம், அவரும் நம்மை மன்னித்து மீண்டும் ஸ்திரப்படுத்துகிறார்.
- பரிசுத்த ஆவியானவர் மூலம் நமக்கு புத்திரசுவீகாரம் அளித்திருக்கிறார்.
- ஆனாலும் எதிரி நம்மை தாக்கும்போது இவை யாவையும் மறந்துவிடுகிறோம்.

Notes:

______________________________________________________________
______________________________________________________________
______________________________________________________________

- ஆனாலும் பல நேரங்களில் தேவன் நம் வாழ்வில் என்ன செய்துகொண்டிருக்கிறார் என்பதை உணர தவறிவிடுகிறோம்.

இந்த “வெளிச்சமும் - மகிமையும்” , ஒன்றோடொன்று இணையானவை. கர்த்தருடைய மகிமை பல வேளைகளில் “பிரகாசம் மற்றும் தெய்வீக தோற்றத்தின் அலங்காரமாக” சித்தரிக்கப்படுகிறது.

*எபேசியர் 5:14, ஆதலால், தூங்குகிற நீ விழித்து, மரித்தோரை விட்டு எழுந்திரு, அப்பொழுது கிறிஸ்து உன்னைப் பிரகாசிப்பிப்பாரென்று சொல்லியிருக்கிறார்.*

எழும்புவது, வெளிச்சம் வருவதும் ஒன்றன்பின் ஒன்றாக நடைபெறும்.




*யோனா 1:6, அப்பொழுது மாலுமி அவனிடத்தில் வந்து நீ நித்திரைபண்ணுகிறது என்ன? எழுந்திருந்து உன் தேவனை நோக்கி வேண்டிக்கொள்; நாம் அழிந்துபோகாதபடிக்குச் சுவாமி ஒருவேளை நம்மை நினைத்தருளுவார் என்றான்..”.*

சந்திரனிற்கு வெளிச்சம் தானாகவே இல்லை. சூரியனின் வெளிச்சத்தை அது பிரதிபலிக்கிறது. எந்த நேரத்திலும், சந்திரன் பாதி பூமிக்கும் சூரியன் பாதி பூமிக்கும் வெளிச்சம் தருகின்றன.

Notes:

________________________________________________________________
________________________________________________________________
________________________________________________________________




நாம் பிரதிபலிக்க அழைக்கப்படவில்லை, பிரகாசிக்க அழைக்கப்பட்டிருக்கிறோம்.

இயேசு நீதியின் சூரியன் என்று அழைக்கப்படுகிறார்.

> *மல்கியா 4:2, ஆனாலும் என் நாமத்துக்குப் பயந்திருக்கிற உங்கள்மேல் நீதியின் சூரியன் உதிக்கும்; அதின் செட்டைகளின்கீழ் ஆரோக்கியம் இருக்கும்; நீங்கள் வெளியே புறப்பட்டுப்போய், கொழுத்த கன்றுகளைப்போல வளருவீர்கள்.*
>
> *லூக்கா 1:78-79, **அந்தகாரத்திலும் மரண இருளிலும், உட்கார்ந்திருக்கிறவர்களுக்கு வெளிச்சம் தரவும்,** [79] நம்முடைய கால்களைச் சமாதானத்தின் வழியிலே நடத்தவும், அவ்விரக்கத்தினாலே **உன்னதத்திலிருந்து தோன்றிய அருணோதயம்** நம்மைச் சந்தித்திருக்கிறது என்றான்.*

ஆகவே நாம் என்றுமே பிரதிபலிக்க அழைக்கப்படவில்லை, நாம் பெற்ற வெளிச்சத்தை பிரகாசிக்கவே அழைக்கப்பட்டிருக்கிறோம்.

Notes:

________________________________________________________

________________________________________________________

________________________________________________________

*எபேசியர் 5:8, முற்காலத்தில் நீங்கள் அந்தகாரமாயிருந்தீர்கள், இப்பொழுதோ **கர்த்தருக்குள் வெளிச்சமாயிருக்கிறீர்கள்**; வெளிச்சத்தின் பிள்ளைகளாய் நடந்துகொள்ளுங்கள்.*

கர்த்தருடைய மகிமை உன்மேல் உதித்தது

"மகிமை" என்பது தேவனுடைய சகல பண்புகளோடும் வெளிப்படுத்தப்பட்ட தேவனுடைய பிரசன்னம். தேவனுடைய இந்த வெளிப்படுத்தப்பட்ட பிரசன்னத்தை நாம் ஐம்புலன்களாலும் உணரலாம்.

*'Glory' is the manifested presence of God with all His attributes. The manifested presence can be experienced in all our senses.*

*சங்கீதம் 19:1-4, வானங்கள் தேவனுடைய மகிமையை வெளிப்படுத்துகிறது, ஆகாயவிரிவு அவருடைய கரங்களின் கிரியையை அறிவிக்கிறது. [2]பகலுக்குப் பகல் வார்த்தைகளைப் பொழிகிறது, இரவுக்கு இரவு அறிவைத் தெரிவிக்கிறது. [3]அவைகளுக்குப் பேச்சுமில்லை, வார்த்தையுமில்லை, அவைகளின் சத்தம் கேட்கப்படுவதுமில்லை. [4]ஆகிலும் அவைகளின் சத்தம் பூமியெங்கும், அவைகளின் வசனங்கள் பூச்சக்கரத்துக் கடைசிவரைக்கும் செல்லுகிறது; அவைகளில் சூரியனுக்கு ஒரு கூடாரத்தை ஸ்தாபித்தார்.*

நாம் கர்த்தருடைய மகிமையை வெளிப்படுத்தப்படுவதற்கென்றே உருவாக்கப்பட்டுள்ளோம்.

*ஏசாயா 43:7, நான் என் மகிமைக்கென்று சிருஷ்டித்து உருவாக்கிப் படைத்து, என் நாமந்தரிக்கப்பட்ட யாவரையும் கொண்டுவா என்பேன்.."*

அப்போஸ்தலனாகிய யோவான், அந்த மகிமையை கண்டது மாத்திரமல்ல அந்த மகிமையை கையாண்டோம் என்று கூறுகிறார். அவருடைய மகிமை கிருபையாலும் சத்தியத்தினாலும் முழுவதுமாய் நிறைந்திருந்தது.

Notes:

________________________________________________________
________________________________________________________
________________________________________________________

*When Apostle John writes he says that not only we have seen the glory of God but also we have handled him. The glory of the Lord was present with them with full of goodness of His grace and truth.*

> *யோவான் 1:14, அந்த வார்த்தை மாம்சமாகி, கிருபையினாலும் சத்தியத்தினாலும் நிறைந்தவராய், நமக்குள்ளே வாசம்பண்ணினார்; அவருடைய மகிமையைக் கண்டோம்; அது பிதாவுக்கு ஒரே பேறானவருடைய மகிமைக்கு ஏற்ற மகிமையாகவே இருந்தது.*

> *யோவான் 2:11, இவ்விதமாக இயேசு இந்த முதலாம் அற்புதத்தைக் கலிலேயாவிலுள்ள கானா ஊரிலே செய்து,* ***தம்முடைய மகிமையை வெளிப்படுத்தினார்****, அவருடைய சீஷர்கள் அவரிடத்தில் விசுவாசம் வைத்தார்கள்.*

கிறிஸ்து அனைத்து விசுவாசிகளுக்குள்ளும் வாசம் செய்கிறார் என்பதே கர்த்தருடைய மகிமையின் இரகசியம். ஆதாம் பாவம் செய்தபோது என்ன நடந்தது என்று நினைவுபடுத்துவோமா?

> *ரோமர் 3:23, எல்லாரும் பாவஞ்செய்து, தேவமகிமையற்றவர்களாகி*

ஆகவே பாவம் நம்மை தேவ மகிமையிலிருந்து விழச்செய்தது ஆனால், கர்த்தருக்கு நாம் நன்றி செலுத்துவோம். ஏனென்றால், கிறிஸ்து இயேசுவின் மூலம் அதே மகிமையில் நாம் திரும்பவும் ஸ்திரப்பட்டு தேவனுடைய உண்மையான நோக்கமாகிய அவருடைய மகிமையில் நம்மை வாழச்செய்திருக்கிறார்.

> *கொலோசெயர் 1:27, புறஜாதிகளுக்குள்ளே விளங்கிய இந்த இரகசியத்திலுள்ள மகிமையின் ஐசுவரியம் இன்னதென்று, தேவன் தம்முடைய பரிசுத்தவான்களுக்குத் தெரியப்படுத்தச் சித்தமானார்;* ***கிறிஸ்துவானவர் மகிமையின் நம்பிக்கையாக உங்களுக்குள் இருப்பதே அந்த இரகசியம்***.

Notes:

___________________________________________________________

___________________________________________________________

___________________________________________________________

இப்போது உடனடியாக உங்களுக்கு ஏசாயாவிலிருந்து வேறொரு வசனம் நியாபகத்திற்கு வரும்!

> *ஏசாயா 42:8, நான் கர்த்தர், இது என் நாமம்; என் மகிமையை வேறொருவனுக்கும், என் துதியை விக்கிரகங்களுக்கும் கொடேன்.*

ஆனால் நீங்கள் வேறு ஒருவர் இல்லை! நீங்கள் கிறிஸ்தவர்! கிறிஸ்துவுக்கு சொந்தமானவர்கள்!

*But you are not another person! You are Christian!*

கிறிஸ்துவுக்குள் மறைக்கப்பட்டவர்கள்!

*You are hidden in Christ!*

> *கொலோசெயர் 3:3, ஏனென்றால், நீங்கள் மரித்தீர்கள், உங்கள் ஜீவன் கிறிஸ்துவுடனே தேவனுக்குள் மறைந்திருக்கிறது.*

எல்லா விசுவாசிகளும் கர்த்தர் தமக்கு தந்த மகிமையிலே வாழ வேண்டும் என்பதை குறித்து இயேசு கிறிஸ்து ஜெபிப்பதை பார்க்கலாம்.

> *யோவான் 17:24, "பிதாவே, உலகத்தோற்றத்துக்கு முன் நீர் என்னில் அன்பாயிருந்தபடியினால், நீர் எனக்குத் தந்த என்னுடைய மகிமையை நீர் எனக்குத் தந்தவர்கள் காணும்படியாக, நான் எங்கே இருக்கிறேனோ அங்கே அவர்களும் என்னுடனேகூட இருக்க விரும்புகிறேன்."*

நம்முடைய வாழ்வில் அவருடைய மகிமை விளங்கச்செய்யும்படி இயேசு பிதாவை வேண்டிக்கொண்டார்.

> *மத்தேயு 5:16, இவ்விதமாய், மனுஷர் உங்கள் நற்கிரியைகளைக்கண்டு,* ***பரலோகத்திலிருக்கிற உங்கள்***

Notes:

____________________________________________________________
____________________________________________________________
____________________________________________________________

**பிதாவை மகிமைப்படுத்தும்படி, உங்கள் வெளிச்சம் அவர்கள் முன்பாகப் பிரகாசிக்கக்கடவது.**

ஜனங்கள் தேவனுடைய மகிமையை உங்களிடத்தில் காணும்போது அது தேவனுடைய மகிமைதான் என்று அறிந்துகொள்ளும்விதமாக அது இருக்க வேண்டும்.

*When people see the glory of God in you they should be able to recognise that it's God.*

நாம் இனைந்து கர்த்தரை துதித்து அவருக்கு மகிமையை செலுத்த வேண்டும்!

*You and me should be able to say and praise God to give Him the Glory!*

எழும்புங்கள் எனக்கு பிரியமான சகோதர சகோதரிகளே!

உங்கள் ஒளி பிரகாசிக்கட்டும்!

கர்த்தருடைய மகிமை உங்கள் மேல் பிரகாசிக்கட்டும்!!

எல்லா ஜனத்திலும் கர்த்தருடைய நாமம் மகிமைப்படட்டும்!!!

*Arise my dear brothers and sisters*

*Let your light shine!*

*Let the Glory of our lord risen upon you!!*

*Let His name be glorified among all the people!!!*

Notes:

________________________________________________________
________________________________________________________
________________________________________________________

Notes:

______________________________________________________________

______________________________________________________________

______________________________________________________________

## **தியானம் - தேவனுடைய பிரசன்னத்தில் தொடர்ந்து வாழ்வது.**

*தேவனாகிய கர்த்தர் (YHWH Elohim) நம்மோடு நெருங்கிய ஐக்கியமாய் இருக்க விரும்பினபடியால், ஆதாமையும் ஏவாளையும் சிருஷ்டித்தார். தேவன், அவர்கள் பாவத்தில் விழும்வரை அவர்களோடு நெருங்கிய ஐக்கியம் கொண்டிருந்தார். ஆதாமும் ஏவாளும் கூட அவருடைய இனிமையான பிரசன்னத்தை அனுபவித்துக்-கொண்டிருந்தார்கள்.*

> ***ஆதியாகமம்*** *3:8, பகலில் குளிர்ச்சியான வேளையிலே தோட்டத்தில் உலாவுகிற தேவனாகிய கர்த்தருடைய சத்தத்தை அவர்கள் கேட்டார்கள்அப்பொழுது ஆதாமும் . அவன் மனைவியும் தேவனாகிய கர்த்தருடைய சந்நிதிக்கு விலகி, தோட்டத்தின் விருட்சங்களுக்குள்ளே ஒளித்துக்கொண்டார்கள்*

*ஆதாமும் ஏவாளும் பாவத்தில் விழுந்து தவறியதால், மனுக்குலம் தேவனுடைய பிரசன்னத்தில் வசிக்கக்கூடிய திறனை இழந்தது.*

> ***யாத்திராகமம்*** *33:20, நீ என் முகத்தைக் காணமாட்டாய், ஒரு மனுஷனும் என்னைக் கண்டு உயிரோடிருக்கக் கூடாது என்றார்.*

*கர்த்தருடைய பிரசன்னம் வேதாகமத்தில் எல்லா இடங்களிலும் சொல்லப்பட்டாலும் சில இடங்களில் தனித்துவம் வாய்ந்ததாக இருப்பதை நாம் பார்க்கலாம்.*

*பரலோகத்தில் கர்த்தருக்கு முன் நிற்பதை கர்த்தருடைய பிரசன்னம் என்று கூறுவதை பார்க்கலாம்.*

*சில விசேஷித்த இடங்களில் கர்த்தருடைய பிரசன்னம் இருந்தது எடுத்துக்காட்டாக –எருசலேம்.*

Notes:

__________________________________________________________

__________________________________________________________

__________________________________________________________

வேறு பல வேளைகளில் குறிப்பிட்ட சில இடங்களில், சில நேரங்களில் கர்த்தர் தம்மை பிரத்தியேகமாக வெளிப்படுத்துவது.

அக்காலத்திலே எருசலேமில் கர்த்தருடைய பிரசன்னம் வித்தியாசமான முறையில் தங்கியிருக்கும் என்று எரேமியா கூறுகிறார்

> ***எரேமியா*** *3:17, அக்காலத்திலே எருசலேமைக் கர்த்தருடைய சிங்காசனம் என்பார்கள்; சகல ஜாதியாரும் எருசலேமில் விளங்கிய கர்த்தருடைய நாமத்தினிமித்தம் அதினிடமாகச் சேர்வார்கள்; அவர்கள் இனித் தங்கள் பொல்லாத இருதயத்தின் இச்சையின்படி நடவார்கள்.*

கர்த்தருடைய பிரசன்னத்தை நாடி நாம் குறிப்பிட்ட இடங்களை தேடிப்போக வேண்டிய அவசியம் இல்லை. ஆனால், நம்மில் வாசம் செய்கிற கர்த்தருடைய ஆவியானவரின் வழிகாட்டுதலின்பேரில் நாம் கர்த்தரை ஆராதிக்கவும், வாழவும் அழைக்கப்பட்டிருக்கிறோம். நாம் சில நேரங்களில் கர்த்தருடைய பிரசன்னத்தை பிரத்தியேகமாக உணர்ச்சிவசமாய் உணருகிறோம், ஆனால் அவரோ எப்பொழுதும், எல்லா இடங்களிலும், எல்லா விசுவாசிகளுக்குள்ளும் வாசம் செய்கிறார் . இந்த காரணத்தாலேயே, பல பிரசங்கிமார் ஜனங்களை எருசலேமிற்கு அழைத்து சென்று அங்கு தேவனுடைய பிரசன்னத்தை உணர்ந்ததாக சொல்வதை வன்மையாக கண்டிக்கிறேன்.இது கர்த்தருடைய வார்த்தைக்கு மிகவும் எதிரான சுத்த பொய். உலகத்தில் பல சமயங்கள் செய்வதைப் போல எருசலேமிற்கு ஜனங்களை அழைத்து செல்வதை ஒரு வியாபாரமாகிவிட்டது. இந்துக்கள் காசிக்கும் இராமேஸ்வரத்திற்கும் செல்கிறார்கள், இஸ்லாமியர் மெக்காவிற்கு தங்கள் பாவங்களை கரைக்க புனிதப்பயணம் செல்கிறார்கள் . ஆக கிறிஸ்தவர்கள் என்று தங்களை அழைத்துக்கொள்பவர்கள், ஜனங்களை எருசலேமிற்கு அழைத்துச்செல்கிறார்கள், ஏமாறக்கூடிய ஜனங்களும் இதில் வீழ்ந்துவிடுகிறார்கள்.

பரிசுத்த, பாவமில்லாத தூதர்கள் மட்டுமே கர்த்தருடைய பிரசன்னத்தில் இருக்கிறார்கள்.

Notes:

______________________________________________________
______________________________________________________
______________________________________________________

**லூக்கா** 1:19, தேவதூதன் அவனுக்குப் பிரதியுத்தரமாக : நான் தேவசந்நிதானத்தில் நிற்கிற காபிரியேல் என்பவன்; உன்னுடனே பேசவும், உனக்கு இந்த நற்செய்தியை அறிவிக்கவும் அனுப்பப்பட்டு வந்தேன்;




மகிழ்ச்சியான செய்தி என்னவென்றால், நாம் அவரோடு சதாகாலங்களிலும் வாழப்போகிறோம்!!

**வெளிப்படுத்தின விசேஷம்** 21:1-4, [1]பின்பு, நான் புதிய வானத்தையும் புதிய பூமியையும் கண்டேன்; முந்தின வானமும் முந்தின பூமியும் ஒழிந்துபோயின; சமுத்திரமும் இல்லாமற்போயிற்று.
[2]யோவானாகிய நான், புதிய எருசலேமாகிய பரிசுத்த நகரத்தை தேவனிடத்தினின்று பரலோகத்தைவிட்டு இறங்கிவரக்கண்டேன்; அது தன் புருஷனுக்காக அலங்கரிக்கப்பட்ட மணவாட்டியைப்போல ஆயத்தமாக்கப்பட்டிருந்தது.
[3]மேலும், பரலோகத்திலிருந்து உண்டான ஒரு பெருஞ்சத்தத்தைக் கேட்டேன்; அதுஇதோ :, மனுஷர்களிடத்திலே தேவனுடைய வாசஸ்தலமிருக்கிறது, அவர்களிடத்திலே அவர் வாசமாயிருப்பார்; அவர்களும் அவருடைய ஜனங்களாயிருப்பார்கள், தேவன்தாமே அவர்களோடேகூட இருந்து அவர்களுடைய தேவனாயிருப்பார்.
[4]அவர்களுடைய கண்ணீர் யாவையும் தேவன் துடைப்பார்; இனி மரணமுமில்லை, துக்கமுமில்லை,

Notes:

________________________________________________________
________________________________________________________
________________________________________________________

*அலறுதலுமில்லை, வருத்தமுமில்லை; முந்தினவைகள் ஒழிந்துபோயின என்று விளம்பினது*

வானங்கள் அனைத்தும், பூமியனைத்தும் ஒன்றோடொன்று இணைந்து, மனிதனோடு கர்த்தர் சஞ்சரிப்பதற்கு ஒரு சரணாலயம் உருவாகியிருந்தது .. கர்த்தருடைய ஜனங்கள் யாவரும் அவரோடே சதாகாலமும் அனுபவிப்பதற்காக ஏதேன் மீண்டும் திரும்பி விரிவுபடுத்தப்பட்டு புதிய வானமும் பூமியும் உருவாகியிருக்கிறது..இருந்ததை காணமுடிகிறது.

*All of heaven has collided with the whole earth to make a perfect sanctuary for God to dwell with man. Eden has returned and expanded into new heaven and new earth where all of God's people enjoy his presence eternally.*

மிகவும் மகிழ்ச்சியான செய்தி என்னவென்றால், இப்போது பரிசுத்த ஆவியானவர் நமக்குள் வாசம் செய்வதன் மூலம், கர்த்தருடைய பிரசன்னம் எப்போதும் நம்மோடு இருக்கிறது.

*Great news is that at present we have the presence of God within us by the indwelling of His Holy Spirit.*

**யோவான்** *14:6, நான் பிதாவை வேண்டிக்கொள்வேன், அப்பொழுது என்றென்றைக்கும் உங்களுடனேகூட இருக்கும்படிக்குச் சத்திய ஆவியாகிய வேறொரு தேற்றரவாளனை அவர் உங்களுக்குத் தந்தருளுவார்.*

இது ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு மாத்திரம் அல்ல, சதாகாலத்திற்கும் !

*It's not for a set period of time its forever!*

*1* **பேதுரு** *2:9, நீங்களோ, உங்களை அந்தகாரத்தினின்று தம்முடைய ஆச்சரியமான ஒளியினிடத்திற்கு வரவழைத்தவருடைய புண்ணியங்களை அறிவிக்கும்படிக்குத் தெரிந்துகொள்ளப்பட்ட சந்ததியாயும், ராஜரீகமான ஆசாரியக்கூட்டமாயும், பரிசுத்த ஜாதியாயும், அவருக்குச் சொந்தமான ஜனமாயும் இருக்கிறீர்கள்.*

Notes:

____________________________________________________________
____________________________________________________________
____________________________________________________________




நாம் அவருடையவர்களானால், அவர் நம்மோடு இருக்கமாட்டாரா?

*If we belong to Him, will He not be present among us?*

நாம் எப்படி தவறிப்போயிருந்தாலும் எப்பொழுதும் கர்த்தருடைய பிரசன்னம் நம்மோடு இருப்பதை குறித்த உண்மையை மறந்துவிடக்கூடாது,.

*We never lose the reality of God's presence, no matter how badly we fail.*

பரிசுத்த ஆவியானவரை வெளியேற்றும் அளவிற்கு நாம் இன்னும் பாவத்தில் மூழ்கவில்லை. நம்முடைய பாவங்களினிமித்தம் ஆண்டவரை கோபப்படுத்த முடியும் ஆனால், உண்மையான விசுவாசிகள் ஒருபோதும் ஆண்டவருடைய பிரசன்னத்தை விட்டு விலக மாட்டார்கள். மெய்யான ஆண்டவருடைய பிரசன்னத்தை சிறிது காலம் இழந்துவிடாவிட்டாலும், அவருடைய பிரசன்னத்தின் "உணர்வை" இழந்துவிடுவோம்.

*We never sink so far as to banish the Holy Spirit. We can anger God because of our sin, but true believers never lose the presence of the Holy Spirit. While we will never lose the reality of God's presence, we might lose the "sense" of His presence.*

அவருடைய பிரசன்னத்தை உணர்கிற உணர்வை நாம் ஏன் இழக்கிறோம்?

*யோவான் 14:23, இயேசு அவனுக்குப் பிரதியுத்தரமாகஒருவன் : என்னில் அன்பாயிருந்தால், அவன் என் வசனத்தைக்*

Notes:

____________________________________________________________
____________________________________________________________
____________________________________________________________

*கைக்கொள்ளுவான், அவனில் என் பிதா அன்பாயிருப்பார்; நாங்கள் அவனிடத்தில் வந்து அவனோடே வாசம்பண்ணுவோம்.*

*யோவான் 15:4, என்னில் நிலைத்திருங்கள், நானும் உங்களில் நிலைத்திருப்பேன்; கொடியானது திராட்சச்செடியில் நிலைத்திராவிட்டால் அது தானாய்க் கனிகொடுக்கமாட்டாததுபோல, நீங்களும் என்னில் நிலைத்திராவிட்டால், கனிகொடுக்கமாட்டீர்கள்.*

கர்த்தர் நமது விசுவாசத்தை சோதிக்கும்போது நாம் சோர்வடைவோம் என்று எல்லா விசுவாசிகளும் அறிவார்கள். நாம் இன்னும் பரிசுத்தப்படும்படி அவர் நம்மை அக்கினியினாலே சோதிப்பவரல்லவா?.(*யோபு 23:10; 1 பேதுரு 1:7)*

கர்த்தர் நம்மை விட்டு விலகுவதில்லை என்று வாக்குப்பண்ணினதை மறந்துவிடாதீர்கள்.

அதே வேளையில், நாம் அவருக்குள் நிலைத்திருந்து அவருக்கு கீழ்ப்படிவது நமது கடமையாகும்.

அவருடைய பிரசன்னத்தை தொடர்ந்து வாழ்வில் உணர்வதற்கு மிகவும் அவசியமான காரியம்,

- நமக்கும் அவருக்கும் இடையில் எந்த தடையும் இல்லாமல் இருப்பது,
- அவருக்கு கீழ்ப்படிந்து, அவருடைய சித்தத்திற்கும் அவருடைய வார்த்தைக்கும் உண்மையும் உத்தமமுமாய் இருப்பதே அவருடைய பிரசன்னத்தில் தொடர்ந்து வாழ்வதை உறுதி செய்யமுடியும்.

தாவீதின் வாழ்வின் மூலம், தாவீது தனது பிரச்சனைகளின் மத்தியிலும் வெற்றியின் நாட்களிலும் கர்த்தருடைய பிரசன்னத்தில் தன்னை வைத்துக்கொண்டார் என்று தொடர்ந்து பார்க்கலாம்.

Notes:

__________________________________________________________
__________________________________________________________
__________________________________________________________

## நடைமுறையில் நமக்கு உதவும் சில காரியங்கள்:

1. தேவனிடத்தில் நேர்மையாகவும் வெளிப்படையாகவும் இருங்கள் - *Be honest and open with Him*

நீங்களும் ஆண்டவரும் உரையாடுவதற்கு எந்த தடையும் இல்லாமல் பார்த்துக்கொள்ளுங்கள். தேவன் நம்மை விட்டு விலகவில்லை, ஆனால் அவருடைய பிரசன்னத்தை உணரும் உணர்வு குறைவதற்கு அறிக்கையிடப்படாத பாவங்கள் தடையாக இருக்கலாம்.

**சங்கீதம்:32** *3-5 3.நான் அடக்கிவைத்தமட்டும், நித்தம் என் கதறுதலினாலே என் எலும்புகள் உலர்ந்துபோயிற்று .*

*4.இரவும் பகலும் என்மேல் உம்முடைய கை பாரமாயிருந்ததினால், என் சாரம் உஷ்ணகால வறட்சிபோல வறண்டுபோயிற்று. (.சேலா)*
*5. நான் என் அக்கிரமத்தை மறைக்காமல், என் பாவத்தை உமக்கு அறிவித்தேன்; என் மீறுதல்களைக் **கர்த்தருக்கு** அறிக்கையிடுவேன் என்றேன்; தேவரீர் என் பாவத்தின் தோஷத்தை மன்னித்தீர்(.சேலா) .*

நீங்களும் தேவனும் பேசிக்கொள்ளவில்லை என்று நீங்கள் உணரும்போது ,அவரிடத்தில் உண்மையாய் உங்கள் உள்ளத்தில் இருப்பவைகளை வெளிப்படையாய் அறிக்கையிடுங்கள் .. அறிக்கையிட்டபிறகு நீங்களும் அவரும் ஒருவருடைய சத்தத்தை ஒருவர் கேட்க முடியும்.




Notes:

__________________________________________________________
__________________________________________________________
__________________________________________________________

*I யோவான் 1:9 நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால், பாவங்களை நமக்கு மன்னித்து எல்லா அநியாயத்தையும் நீக்கி நம்மைச் சுத்திகரிப்பதற்கு அவர் உண்மையும் நீதியும் உள்ளவராயிருக்கிறார்.*

*பின்னர் உங்கள் உறவு சீரமைக்கப்பட்டு மீண்டும் உரையாடல் தொடரும்.*

2. *கர்த்தருடைய வார்த்தையை சத்தமாக வாசியுங்கள்! - Read the word of God Aloud!*

*கர்த்தருடைய வார்த்தையை சத்தமாக வாசிக்கும்போது நீங்கள் அதை முதலில் கேட்கிறீர்கள் !பின்னர் உங்கள் உறவு சீரமைக்கப்பட்டு மீண்டும் உரையாடல் தொடரும்". விசுவாசம் கேள்வியினாலே வரும், கேள்வி தேவனுடைய வசனத்தினாலே வரும்.(ரோமர்10:17 )*

*தேவன் அருளிய வார்த்தையை சத்தமாக வாசிக்கும்போது அதன் வல்லமையையும் அவருடைய பிரசன்னத்தையும் நீங்கள் உணருவீர்கள்.*

***எபிரெயர் 4:1**ல்" ,தேவனுடைய வார்த்தையானது ஜீவனும் வல்லமையும் உள்ளதாயும், இருபுறமும் கருக்குள்ள எந்தப் பட்டயத்திலும் கருக்கானதாயும் இருக்கிறது.*

*இந்த கருக்கான பட்டயம் தனது பாரத்தை நீங்கள் உணரும்படி செய்யும் அல்லது ஒரு அறிவுறுத்தலின் மூலமாகவோ அல்லது தூண்டுதலின் மூலமாகவோ அல்லது அகத்தில் ஏற்படும் தீர்மானத்தின் மூலமாகவோ உங்கள் இருதயத்தை குத்திக்கொண்டே இருக்கும்.*

3. *தேவனுக்கும் உங்களுக்கும் இடையில் எதுவும் வராமல் பார்த்துக்கொள்ளுங்கள் - Make sure there is nothing comes between you and God*

*உறவுகளோ மனைவி / கணவனோ, ஊழியமோ, பிள்ளைகளோ , எந்த ஒரு காரியமாக இருந்தாலும் சரி. உங்களுக்கும் தேவனுக்கும் இடையில் வராதபடி பார்த்துக்கொள்ளுங்கள்.*

*அவருக்கு கீழ்ப்படிவதில் எந்த தடையும் இருக்கக்கூடாது.*

*ஜெபம்:*

Notes:

__________________________________________________________

__________________________________________________________

__________________________________________________________

*சங்கீதம் 139:23-24ல் தாவீதின் ஜெபத்தை இங்கு வழிமொழிய விரும்புகிறேன்.*

*தேவனே, என்னை ஆராய்ந்து, என் இருதயத்தை அறிந்துகொள்ளும்; என்னைச் சோதித்து, என் சிந்தனைகளை அறிந்துகொள்ளும் .வேதனை உண்டாக்கும் வழி என்னிடத்தில் உண்டோ என்று பார்த்து நித்திய வழியிலே என்னை நடத்தும்.*

Notes:

______________________________________________________________

______________________________________________________________

______________________________________________________________

Notes:

________________________________________________________________
________________________________________________________________
________________________________________________________________

# சேலா

சேலா என்கிற வார்த்தை நமது வேதாகமத்தில் மொத்தம் 74 முறை காணப்படுகிறது. சங்கீதத்தில் மட்டும் 71 முறை. இந்த மூன்று நாட்களும் இந்த வார்த்தையை நாம் அடிக்கடி பார்க்க நேரிடும்.

சேலா-விற்கு நிகரான எபிரேய பதம் *"காலா"* (calah) என்பதாகும். இதன் பொருள், *"தொங்கவிடுதல்"* (to hang), *"எடை பார்த்தல் அல்லது தராசில் சமமாய் நிறுத்துதல் "* ("to measure or weigh in the balances.").

*சுருக்கமாக சொன்னால், பசு புல்லை தின்று அதை ஜீரணிப்பதாகும். பசு தனது உணவு எளிதாக ஜீரணமாகும்படி இரண்டு முறை சவைக்கும்.*

*ஒரு பசு முதலாவது உணவை உட்கொள்ளும்போது, அந்த உணவில் ஈரப்பதம்* (moisture) *இருக்கும்படி அதை நன்றாக சவைக்கிறது. சவைத்து அதை விழுங்கியவுடன்,* rumen *என்று சொல்லப்படும் அசைபோடும் பகுதிக்கு முதலில் செல்கிறது. இந்த பகுதியில் ஜீரணிக்கும் அமிலங்களால் அந்த உணவு இன்னும் மிருதுவாக்கப்பட்டு சிறு உணவுப்பந்துகளாக* (cud) *மாற்றப்படுகிறது.*

*When a cow first takes a bite, it chews just enough to moisten the food. Once swallowed, the food goes into the first section, the rumen, where it mixes with other acidic digestive liquids and is softened. The softened food is called cud, small balls of food.*




Notes:

____________________________________________________________

____________________________________________________________

____________________________________________________________

அதன் பிறகு, அசைபோடும் தசைகள் அந்த உணவுப்பந்துகளை மீண்டும் பசுவின் வாய்க்கு கொண்டுசெல்கிறது. அங்கு மீண்டும் சவைக்கப்பட்டு (Omasum) என்று சொல்லப்படும் மூன்றாவது இறைப்பையை சென்றடைந்து ஈரப்பதம் (moisture) யாவும் நீக்கப்படுகிறது,

*Next, the rumen muscles send the cud back up to the cow's mouth, where it is re-chewed and swallowed again, this time going to the Omasum section of stomach in order to squeeze out all of the moisture.*

இறுதியாக அந்த உணவு, Abomasum என்று சொல்லப்படுகிற நான்காம் இறைப்பையை சென்றடைந்து ஜீரணிக்கும் திரவங்களுடன் கலக்கப்பட்டு, முழுவதுமாக ஜீரணிக்கப்படுவதற்கு குடலுக்கு அனுப்பப்படுகிறது.

*Finally, the food enters the last part, Abomasum of the stomach where it mixes with digestive juices and makes its way to the intestine to be completely digested.*

பசுக்கள் உணவுப்பந்தை சவைப்பது ஆரோக்கியத்தின் (healthy and comfortable) ஒரு அடையாளமாக கருதப்படுகிறது. மகிழ்ச்சியும் ஆரோக்கியமுமான பசுக்கள் அதிக பால் கறக்கும் அல்லது அவற்றின் சுரக்கும் தசைகள் வலுவாக இருக்கும்.

*Cud chewing is often used as an indicator of a healthy and comfortable herd. A happy, healthy animal will produce more milk or have a higher production of muscle.*

நாமும் கர்த்தருடைய வார்த்தையில் அதையே செய்யா வேண்டும். நம்முடைய இருதயத்தை ஈரப்படுத்தி, அனாவசியமான காரியங்களை வெளியே கொண்டுவந்து, திரும்பவும் அதை சவைத்து உட்கொள்ளும்போதுதான் தேவனுடைய வார்த்தை உங்கள் வாழ்வில் ஒரு மாற்றத்தை ஏற்படுத்த முடியும்.

*This is what exactly we ought to do with the word of God. Especially David wants us to moisture our hearts first, then bring it back remove all the unwanted stuff and finally chew it again so that the word of God will make an impact in your life.*

Notes:

______________________________________________________

______________________________________________________

______________________________________________________

நாம் இந்த சேலா-வை செய்யவில்லை என்றால், சரியான முறையில் ஜீரணமாகாது; நாம் வெறும் ஏப்பம் விடுகிரவர்கலாக மாத்திரமே இருப்போம், ஆவிக்குரிய முறையில் எந்த காரியமும் நம்மிடம் சுரக்காது.

ஆம்ப்லிபைட் மொழிபெயர்ப்பு, சேலா வருகிற ஒவ்வொரு இடத்திலும், "நிறுத்தி நிதானமாக சிந்துத்து பாருங்கள்" என்று மொளிபெயர்த்திருக்கிறது.

*The Amplified Bible adds "pause and calmly think about that" to each verse where 'selah' appears.*

## தாவீதின் வாழ்க்கையிலிருந்து நாம் கற்றுக்கொள்பவை

*Life application study from the Life of David:*

இந்த வேத ஆய்வில் தாவீதின் உலக வாழ்வில் அவன் கடந்து சென்ற பல தருணங்களை குறித்து தியானிப்போம். அவை நாம் கடந்து செல்லும் காரிடங்களுக்கு மிகவும் நெருக்கமனாவை.

அவர் எழுதிய சங்கீதங்களின் ஆழமான ஆவிக்குரிய காரியத்தை நாம் தியாநிக்கப்போவதில்லை. அவர் மெய்யாவைக்குரித்து பல சங்கீதங்கள் எழுதியுள்ளார். இந்த ஆய்வில், நாம் நமது உலக வாழ்வை ஆவிக்குரிய சிந்தியோடு எப்படி நாம் சீரமத்துக்கொல்வது என்பதை குறித்து மாத்திரம் பாப்போம். அப்படி நாம் சீரமத்துக் கொள்ளும்போது, கர்த்தர் தாவீதை குறித்து சொன்னதுபோல, நம்மையும் "என் இருதயத்திற்கு ஏற்ற என் மகன்/மகள்" என்று அழைப்பாராக.

*We are Not going to looking into the deeper spiritual meaning of Pslams he had written. There are many Psalms he had written were Messianic. So this study only helps us to understand how we can manage our physical life in line with spiritual meaning. So that we will be called as 'A man/woman after MY own heart' as how God called David.*

Notes:

________________________________________________________
________________________________________________________
________________________________________________________

Notes:

__________________________________________________________________

__________________________________________________________________

__________________________________________________________________

## *1. அபிஷேகமும்... அழைப்பும்...*

### *கர்த்தர் நம்மை அழைத்து அபிஷேகிக்கும்போது*

*சங்கீதம் 23*

**சூழல்**: தாவீது ஆடு மேய்க்கும் சிறுவனாக இருக்கும்போது சாமுவேல் தீர்க்கதரிசியால் ராஜாவாக அபிஷேகம் பண்ணப்பட்டபோது, தாவீதால் எழுதப்பட்ட முதல் சங்கீதமாக இருக்கலாம். அபிஷேகம்பண்ணப்பட்ட போதும் தொடர்ந்து அவன் தன் ஆடுகளுக்கு மேய்ப்பனாயிருந்தான்.

**வேதவாக்கியங்கள்** : *1 சாமுவேல் 16:1-23 மற்றும் 17:20 மற்றும் 32-37*

இந்த சங்கீதம் பலருக்கு மிகவும் பரிச்சயமானது, கிறிஸ்துவை அறியாதவர்கள் கூட இந்த சங்கீதத்தை அறிவார்கள். பல கிறிஸ்தவர்கள் இதை மனப்பாடமாக சொல்வார்கள்.

கர்த்தரின் பிள்ளைகளுக்கு கிடைக்கும் ஆழமான விசுவாசமும் நம்பிக்கையும் இந்த சங்கீதத்தின் முக்கிய கருப்பொருள். எவ்வளவு அருமையாக தேவன் நம்மை பார்த்துக்கொள்கிறார்.

உலகப்பிரகாரமாகவும் ஆவிக்குரிய முறையிலும் கர்த்தரால் நமக்கு கிடைப்பவைகளை தாவீது அழகாக விளக்கியுள்ளார்.

*David illustrates the provision of the Lord, both physical and spiritual.*

*V 1-3*

*1.* ***கர்த்தர் என் மேய்ப்பராயிருக்கிறார்; நான் தாழ்ச்சியடையேன்.***

*2.* ***அவர் என்னைப் புல்லுள்ள இடங்களில் மேய்த்து, அமர்ந்த தண்ணீர்கள் அண்டையில் என்னைக் கொண்டுபோய் விடுகிறார்.***

*3.* ***அவர் என் ஆத்துமாவைத் தேற்றி, தம்முடைய நாமத்தினிமித்தம் என்னை நீதியின் பாதைகளில் நடத்துகிறார்.***

Notes:

____________________________________________________________

____________________________________________________________

____________________________________________________________

*தாவீது ஒரு மேய்ப்பனாக ஆபத்து நிறைந்த இடங்களிலும்எதிரிகள் நிறைந்த இடங்களிலும் பயணம் செய்கிறார்; அதில் கர்த்தர் தரும் பாதுகாப்பை இந்த வசனங்களில் விவரிக்கிறார்.*

*V 4-5*

***4. நான் மரண இருளின் பள்ளத்தாக்கிலே நடந்தாலும் பொல்லாப்புக்குப் பயப்படேன்; தேவரீர் என்னோடேகூட இருக்கிறீர்; உமது கோலும் உமது தடியும் என்னைத் தேற்றும்.***

***5. என் சத்துருக்களுக்கு முன்பாக நீர் எனக்கு ஒரு பந்தியை ஆயத்தப்படுத்தி, என் தலையை எண்ணெயால் அபிஷேகம்பண்ணுகிறீர்; என் பாத்திரம் நிரம்பி வழிகிறது.***

*கர்த்தருடைய அரவணைப்பில் கிடைக்கும் விசுவாசத்தையும் நம்பிக்கையையும், வாழ்நாள் முழுவதும் கர்த்தரின் நன்மையையும் இரக்கமும் நம்மை சூழ்ந்திருப்பதையும் இந்த சங்கீதத்தின் முடிவு பகுதியில் விவரிக்கிறார்.*

*V 6,*

***6. என் ஜீவனுள்ள நாளெல்லாம் நன்மையும் கிருபையும் என்னைத் தொடரும்; நான் கர்த்தருடைய வீட்டிலே நீடித்த நாட்களாய் நிலைத்திருப்பேன்.***

*தாவீது, கர்த்தருடைய வீட்டில் நிரந்தரமாய் தங்கியிருப்பார்.*

*ஆவிக்குரிய முறையில் கிறிஸ்தவர்களாகிய நாம், இந்த சங்கீதத்தில் ஒரு நல்ல மேய்ப்பனின் அருமையான நிழலை காண முடிகிறது. இயேசு கிறிஸ்துவே அந்த நல்ல மேய்ப்பன், தனது ஆடுகளுக்காக தன் ஜீவனை கொடுத்தும் இன்னும் நம்மை பார்த்துக்கொண்டிருக்கிறார். (***யோவான்*** 10:11-15; ***எபிரேயர்*** 13:20; 1 ***பேதுரு*** 2:21-25; 5:4).*

*கர்த்தருடைய ஜனமாகவும் அவருடைய பசுமையின் மேய்ச்சல்களாகவும் இருக்கிற நாம், அவருக்கு ஏறெடுக்க வேண்டிய துதிகளை சங்கீதம் 100-ல் காணலாம். ஆகவே சங்கீதம் 100-ஆனது சங்கீதம் 23-இன் பின்னிணைப்பாக பார்க்கலாம்.*

Notes:

__________________________________________________________
__________________________________________________________
__________________________________________________________

*A good follow-up to this psalm is Psalm 100, which expresses the praise we should render to God as His people and the sheep of His pasture.*




## மேய்ப்பன் வழங்கும் காரியங்கள் - *Provision of the Shepherd*

| | |
|---|---|
| ***The Lord is my shepherd;*** <br> ***I have all that I need.*** | [1] **கர்த்தர் என் மேய்ப்பராயிருக்கிறார்; நான் தாழ்ச்சியடையேன்.** |
| ***2 He lets me rest in green meadows;*** <br> ***he leads me beside peaceful streams.*** | [2] **அவர் என்னைப் புல்லுள்ள இடங்களில் மேய்த்து, அமர்ந்த தண்ணீர்கள் அண்டையில் என்னைக் கொண்டுபோய் விடுகிறார்.** |
| ***3 He renews my strength.*** <br> ***He guides me along right paths,*** <br> ***bringing honour to his name. (NLT)*** | [3] **அவர் என் ஆத்துமாவைத் தேற்றி, தம்முடைய நாமத்தினிமித்தம் என்னை நீதியின் பாதைகளில் நடத்துகிறார்.** |

Notes:

____________________________________________________________________
____________________________________________________________________
____________________________________________________________________

a) உலகப்பிரகாரமாக - எந்த பற்றாக்குறையும் இல்லை
*Physical – No lack*

1. கர்த்தர் என் மேய்ப்பராயிருக்கிறார்; நான் தாழ்ச்சியடையேன் - *Lord is my Shepherd I shall not want* (லூக்கா 12:22-32 மத்தேயு 6:25-33)
2. அவர் என்னைப் புல்லுள்ள இடங்களில் மேய்த்து - *He makes Me lie down in Green pastures*
3. அமர்ந்த தண்ணீர்கள் அண்டையில் என்னைக் கொண்டுபோய் விடுகிறார் - *Leads Me besides still waters* (வெளிப்படுத்தின விசேஷம் 7:17)

b) ஆவிக்குரியமுறையிலும் எந்த பற்றாக்குறையும் இல்லை
*Spiritual – No lack*

1. அவர் என் ஆத்துமாவைத் தேற்றி - *He Restores my soul* (வெளிப்படுத்தின விசேஷம் 3:19)
2. என்னை நீதியின் பாதைகளில் நடத்துகிறார் - *He leads me to the path of righteousness* (1 கொரிந்தியர் 10:13& 1யோவான் 1:27)

### **மேய்ப்பனின் பாதுகாப்பு - *Protection of the Shepherd***

| | |
|---|---|
| *4.Even when the way goes through<br>Death Valley,<br>I'm not afraid<br>when you walk at my side.<br>Your trusty shepherd's crook<br>makes me feel secure.* | 4நான் மரண இருளின் பள்ளத்தாக்கிலே நடந்தாலும் பொல்லாப்புக்குப் பயப்படேன்; தேவரீர் என்னோடேகூட இருக்கிறீர்; உமது கோலும் உமது தடியும் என்னைத் தேற்றும். |
| *5. You serve me a six-course dinner<br>right in front of my enemies.* | 5என் சத்துருக்களுக்கு முன்பாக நீர் எனக்கு ஒரு பந்தியை ஆயத்தப்படுத்தி, என் தலையை எண்ணெயால் அபிஷேகம்பண்ணுகிறீர்; என் |

Notes:

____________________________________________________________
____________________________________________________________
____________________________________________________________

| | |
|---|---|
| *You revive my drooping head;*<br>*my cup brims with blessing.(MSG)* | பாத்திரம் நிரம்பி வழிகிறது. |

1. தேவரீர் என்னோடேகூட இருக்கிறீர், பொல்லாப்புக்குப் பயப்படேன் - *He is with me so I fear no evil (எபிரேயர் 13:5-6)*
2. உமது கோலும் உமது தடியும் என்னைத் தேற்றும் - *His rod and staff comfort me (எபிரேயர் 12:5-11)*

### மேய்ப்பனின் பிரசன்னம் - *Presence of the Shepherd*

1. சத்துருக்களுக்கு முன்பாக எனக்கு ஒரு பந்தியை ஆயத்தப்படுத்தி - *Prepares a table in the presence of my enemies (யோவான் 16:33)*
2. தலையை எண்ணெயால் அபிஷேகம்பண்ணுகிறீர் - *Anoints my head with oil (எபேசியர் 3:20)*

### மேய்ப்பனின் பராமரிப்பு - *Preservation of the Shepherd*

*6 என் ஜீவனுள்ள நாளெல்லாம் நன்மையும் கிருபையும் என்னைத் தொடரும்; நான்* ***கர்த்தருடைய*** *வீட்டிலே நீடித்த நாட்களாய் நிலைத்திருப்பேன்*

*6. I know that your goodness and love will be with me all my life;*

*and your house will be my home as long as I live.(GNT)*

1. என் ஜீவனுள்ள நாளெல்லாம் நன்மையும் கிருபையும் என்னைத் தொடரும் *-Goodness and Mercy shall follow all the days of my life ( 2 தீமோத்தேயு 4:18)*
2. கர்த்தருடைய வீட்டிலே நீடித்த நாட்களாய் நிலைத்திருப்பேன் *-Dwell in the house of the Lord forever (யோவான் 14:1-3)*

### அப்போஸ்தலனாகிய பவுல் - *Apostle Paul*

அப்போஸ்தலனாகிய பவுல் சவுலாக இருந்தபோது, தங்களை கிறிஸ்தவர்கள் என்று சொல்லிக்கொள்பவர்களை கொலைசெய்வதற்கு மிகவும் அதிகமாய் பிரயாசப்பட்டான். வழியாகிய கர்த்தர் இயேசு கிறிஸ்து அவனை பாதையில்

Notes:

______________________________________________________
______________________________________________________
______________________________________________________

சந்தித்து தமஸ்குவிற்கு சென்று காத்திரு என்று அறிவுறுத்தினார் (அப் 9).

***அப்*** *9: 17 – 18 அப்பொழுது அனனியா போய், வீட்டுக்குள் பிரவேசித்து, அவன்மேல் கையை வைத்து சகோதரனாகிய சவுலே, நீ வந்தவழியிலே உனக்குத் தரிசனமான இயேசுவாகிய கர்த்தர், நீ பார்வையடையும்படிக்கும் பரிசுத்த ஆவியினால் நிரப்பப்படும்படிக்கும் என்னை அனுப்பினார் என்றான். உடனே அவன் கண்களிலிருந்து மீன் செதிள்கள் போன்றவைகள் விழுந்தது. அவன் பார்வையடைந்து,* ***எழுந்திருந்து, ஞானஸ்நானம்*** *பெற்றான்.*

பவுல் ஞானஸ்நானம் பெற்றவுடன் உடனடியாக (தாமதமின்றி) கிறிஸ்துவின் சுவுசெஷத்தை பிரசங்கித்தான்.

***அப்*** *9:20 தாமதமின்றி, கிறிஸ்து தேவனுடைய குமாரனென்று ஆலயங்களிலே பிரசங்கித்தான்.*

## இயேசு கிறிஸ்து

*லூக்கா 4: 18-19*

*18. கர்த்தருடைய ஆவியானவர் என்மேலிருக்கிறார்; தரித்திரருக்குச் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கும்படி என்னை அபிஷேகம்பண்ணினார்; இருதயம் நருங்குண்டவர்களைக் குணமாக்கவும், சிறைப்பட்டவர்களுக்கு விடுதலையையும், குருடருக்குப் பார்வையையும் பிரசித்தப்படுத்தவும், நொறுங்குண்டவர்களை விடுதலையாக்கவும்,*

*19. கர்த்தருடைய அநுக்கிரக வருஷத்தைப் பிரசித்தப்படுத்தவும், என்னை அனுப்பினார், என்று எழுதியிருக்கிற இடத்தை அவர் கண்டு,*

இயேசு தான் அனுப்பப்பட்டதை குறித்து தெளிவாக அறிந்திருந்தார். ஆகவேதான் அந்த அழைப்பிற்கு அவரால் உடனடியாக செவிகொடுக்க முடிந்தது.

*லூக்கா 4:43-44 43. அவரோ அவர்களை நோக்கி: நான் மற்ற ஊர்களிலும் தேவனுடைய ராஜ்யத்தைக்குறித்துப் பிரசங்கிக்கவேண்டும், இதற்காகவே அனுப்பப்பட்டேன் என்றார். 44. அந்தப்படியே கலிலேயா நாட்டிலுள்ள ஜெபஆலயங்களில் பிரசங்கம் பண்ணிக்கொண்டுவந்தார்.*

Notes:

________________________________________________________
________________________________________________________
________________________________________________________

## செயல்படுத்துதல்

*Application*

*இந்த சங்கீதத்தின் மைய பொருள் என்ன?*

***கர்த்தர்** என் மேய்ப்பராயிருக்கிறார்; நான் தாழ்ச்சியடையேன் (பற்றாக்குறை இல்லை).*

*எந்த அளவுக்கு இந்த காரியம் உங்கள் வாழ்வில் நிறைவேறியிருக்கிறது, எந்த அளவுக்கு இது உங்கள் எண்ணங்களில் ஒன்றியிருக்கிறது?*

*தேவன் நிறைவேற்றிய உலகப்பிரகாரமான தேவைகளை தாவீது எவ்வாறு விவரிக்கிறார்?*

*How does David illustrate the physical necessities provided by the Lord?*

- *தேவன் தாவீதை புல்லுள்ள இடங்களில் மேய்க்கிறார்.*
- *தேவன் அமர்ந்த தண்ணீர்களண்டையில் கொண்டு பொய் விடுகிறார்.*
- *நமது பரம தகப்பன் நமது தேவைகளை தாமே பார்த்துக்கொள்வார் என்று இயேசு வாக்குக்கொடுத்திருக்கிறார். இன்னும் நீங்கள் உங்கள் உலகப்பிரகாரமான தேவைகளை நாடி ஓடுகிறீர்களா? இன்று காலை நீங்கள் எதற்காக ஜெபித்தீர்கள்?*
- *உங்கள் உலகப்பிரகாரமான தேவைகளுக்காக ஜெபித்தீர்கள் என்றால், ஏன் உங்களால் கர்த்தரிடத்தில் நம்பிக்கை வைக்க முடியவில்லை?*

*தேவன் நிறைவேற்றுகின்ற ஆவிக்குரிய தேவைகளை தாவீது எவ்வாறு விவரிக்கிறார்?*

*How does David describe the spiritual necessities provided by the Lord?*

- *கர்த்தர் ஆத்துமாவை தேற்றுகிறார்.*
- *கர்த்தர் அவருடைய நாமத்தின்-நிமித்தம் நீதியின் பாதையில் நடத்துகிறார்.*

Notes:

____________________________________________________________
____________________________________________________________
____________________________________________________________

- *நமது ஆண்டவர் நம்மை பரிசுத்த ஆவியினால் அபிஷேகித்திருக்கிறார், பரிசுத்த ஆவியானவர் சகல சாத்தியத்திற்குள்ளும் நம்மை நடத்துவார். உங்கள் வாழ்க்கை எந்த அளவுக்கு அவருடைய சத்தத்திற்கு செவிகொடுத்து அவரை சார்ந்து இருக்கிறது?*
- *ஒவ்வொரு நாளும் உங்கள் ஆவிக்குரிய தேவைகளை நாடுகிறீர்களா?*

*மரண இருளின் பள்ளத்தாக்கில் நடக்கும்போது நமது ஆண்டவர் என்ன ஆறுதல் நமக்கு அளிக்கிறார்?*

*What protection or comfort does the Lord provide when one walks through the valley of the shadow of death?*

*நமக்கு பிரச்சனைகள் இருக்காது என்ற வாக்குத்தத்தம் நமக்கு கொடுக்கப்படவில்லை மாறாக பிரச்சனைகளும் போராட்டங்களும் கிறிஸ்துவின் நாமத்தின்-நிமித்தமாகவே வரும் என்றே வாக்குத்தத்தம் கொடுக்கப்பட்டிருக்கிறது.*

- *அவருடைய பிரசன்னத்தை ஆறுதல் - The comfort of His presence*
- *அவருடைய கோலும் தடியும் தரும் ஆறுதல் - His comfort of His rod and staff*
- *அவருடைய ஆவியினால் அனுதினமும் தேற்றப்பட்டு வழிநடத்தப்படுகிறீர்களா? இதை ஒவ்வொரு நாளும் தேடுகிறீர்களா?*

*எதிரிகள் முன் கர்த்தருடைய பிரசன்னம் நமக்கு அளிக்கும் காரியங்கள் என்ன?*

*What provisions does the Lord furnish in the presence of one's enemies?*

- *ஒரு பந்தியை ஆயத்தப்படுத்துகிறார்*
- *தலையை எண்ணெயால் அபிஷேகம் செய்கிறார்*
- *நிரம்பி வழியும் பாத்திரம் அளிக்கிறார்*

*இந்த வாழ்வில் நாம் கெட்டுப்போகாமல் பார்த்துக்கொள்வதற்கு கர்த்தர் என்ன கொடுக்கிறார்?*

Notes:

____________________________________________________

____________________________________________________

____________________________________________________

*What does the Lord provide to ensure that He will preserve us in this life?*

*வாழ்நாள் முழுவதும் நன்மையையும் இரக்கத்தையும் அளிக்கிறார்.*

*நமக்கு நித்தியத்திற்கு கொடுக்கப்படும் ஒரு அருமையான நம்பிக்கை என்ன?*

*What wonderful hope do we have for eternity?*

*கர்த்தருடைய வீட்டிலே சதாகாலங்களும் .*

### தனிப்பட்ட கேள்விகள்

- *நீங்கள் அபிஷேகிக்கப்பட்டிருக்கிரீர்களா?*
- *உங்கள் அழைப்பையும் நோக்கத்தையும் அறிந்திருக்கிறீர்களா?*
- *நீங்கள் இப்போது செய்துகொண்டிருக்கிற காரியங்கள் எந்த அளவுக்கு உங்களை உங்கள் அழைப்பிற்கு அருகில் கொண்டுசெல்கிறது?*



**அப்பொழுது கர்த்தர்: இவன் தான், நீ எழுந்து இவனை அபிஷேகம்பண்ணு என்றார்.**

Notes:

__________________________________________________________
__________________________________________________________
__________________________________________________________

Notes:

_______________________________________________________________

_______________________________________________________________

_______________________________________________________________

## 2. கர்த்தரின் யுத்தம் ... முதல் வெற்றி...

கர்த்தருடைய நாமத்திற்கென்று நிற்கும்போது வரும் வெற்றி புதிய உச்சத்திற்கு நம்மை எடுத்து செல்கிறது.

*When you stand for God's name the victory brings you to new heights.*

*சங்கீதம் 9*

**சூழல்**: வாலிபனாகிய தாவீது மகா பெரிய கோலியாத்தை யுத்தத்தில் தனது கவணை கொண்டு வீழ்த்துகிறான்.

வெற்றியின் ஆரவாரம் இந்த சங்கீதம்

**வேதவாக்கியங்கள்**: 1 சாமுவேல் 17

இந்த சங்கீதம் முழுக்க முழுக்க கர்த்தரை மையமாக கொண்டிருப்பதை நாம் பார்க்கலாம்! இந்த சங்கீதத்தை குறித்து சுருக்கமாக ஒரு வரைவுரை:

1. தனிப்பட்ட முறையில் கர்த்தரை துதிப்பது - வ 1-2
2. எதிரியின் மேல் கர்த்தரின் நியாயத்தீர்ப்பு - வ 3-6
3. கர்த்தரின் நியாயத்தீர்ப்பு தரும் நம்பிக்கை - வ 7-10
4. தேசமாக சேர்ந்து கர்த்தரை துதித்தல் - வ 11-14
5. தேசங்களின்மேல் கர்த்தரின் நியாயத்தீர்ப்பு - வ 15-18
6. கர்த்தரின் நியாயத்தீர்ப்பு தரும் நம்பிக்கை - வ 19-20

இந்த சங்கீதத்தின் வடிவத்தை பார்க்கும்போது ஒரு தனி மனிதனையும் ஒரு தேசத்தையும் கொண்டு அழகாக வடிவமைக்கப்பட்டிருப்பதை பார்க்கலாம்.

*சங்கீதம் 9*

### 1. தனிப்பட்ட முறையில் கர்த்தரை துதிப்பது வ -1-2

*Personal Praise of God V1-2*

**1. கர்த்தாவே, என் முழு இருதயத்தோடும் உம்மைத் துதிப்பேன்; உம்முடைய அதிசயங்களையெல்லாம் விவரிப்பேன்.**
**2. உம்மில் மகிழ்ந்து களிகூருவேன்; உன்னதமானவரே, உமது நாமத்தைக் கீர்த்தனம்பண்ணுவேன்.**

Notes:

________________________________________________________

________________________________________________________

________________________________________________________

தாவீது கர்த்தரோடு தான் என்ன செய்யப்போகிறோம் என்று கூறுவதை பார்க்கலாம்.

ஆங்கிலத்தில் இவை யாவும் *"I Will" (நான் செய்வேன்)* என்ற வார்த்தையை கொண்டே துவங்குகின்றன.

- கர்த்தாவே, என் முழு இருதயத்தோடும் உம்மைத் **துதிப்பேன்**
- உம்முடைய அதிசயங்களையெல்லாம் **விவரிப்பேன்**.
- உம்மில் மகிழ்ந்து களிகூருவேன்
- உன்னதமானவரே, உமது நாமத்தைக் **கீர்த்தனம்பண்ணுவேன்**.

கர்த்தரை துதிப்பது நமது கவலைகளை மறக்கச்செய்து அதே வேளையில் கர்த்தருக்குள் நமது நம்பிக்கையை பெருக்குகிறது. ஆகவே பிரச்சனைகளை பார்க்கும்போது உடனே கர்த்தரை துதிக்க ஆரம்பியுங்கள்.

## 2. எதிரியின் மேல் கர்த்தரின் நியாயத்தீர்ப்பு வ -3-6

*God's Judgement on Enemies V 3-6*

*3. என் சத்துருக்கள் பின்னாகத் திரும்பும்போது, உமது
சமுகத்தில் அவர்கள் இடறுண்டு அழிந்துபோவார்கள்.
4. நீர் என் நியாயத்தையும் என் வழக்கையும் தீர்த்து, நீதியுள்ள
நியாயாதிபதியாய் சிங்காசனத்தின்மேல் வீற்றிருக்கிறீர்.
5. ஜாதிகளைக் கடிந்துகொண்டு, துன்மார்க்கரை அழித்து,
அவர்கள் நாமத்தை என்றென்றைக்கும் இல்லாதபடி
குலைத்துப்போட்டீர்.
6. சத்துருக்கள் என்றென்றைக்கும் பாழாக்கப்பட்டார்கள்;
அவர்கள் பட்டணங்களை நிர்மூலமாக்கினீர்; அவர்கள் பேரும்
அவர்களோடேகூட ஒழிந்துபோயிற்று.*

கர்த்தர் தம்மை எதிர்க்கிறவர்களை விழப்பண்ணுகிறபடியால் தாவீது கர்த்தர்மேல் நம்பிக்கை வைக்கிறார். பல வேளைகளில் நாம் தற்போதைய காரியங்களை பார்த்துவிட்டு, தேவன் என்ன செய்கிறார் என்பதையும் மறந்து வருங்காலத்தை குறித்து பார்க்க தவறிவிடுகிறோம்.

ஒரு நிமிடம் பழைய ஏற்பாட்டில் சொல்லப்பட்ட தேசங்களை எல்லாம் நினைத்துப்பாருங்கள். *(**யாத்திராகமம்** 33:2)*

Notes:

______________________________________________________
______________________________________________________
______________________________________________________

- காானானியர் - *Canaanite*
- அமோரியர் - *Amorite*
- ஏத்தியர் - *Hittite*
- பெர்சியர் - *Perizzite*
- ஏவியர் - *Hivite*
- எபூசியர் - *Jebusite*

அவர்கள் இப்போது எங்கே?

*International Standard Bible Encyclopaedia* என்று சொல்லப்படுகிற வேதாகம களஞ்சியத்தில் "ஏவியர் என்கிற பெயரைக்கூட எகிப்தியர்கள் மற்றும் பாபிலோனியர்களின் பதிவேடுகளில் கண்டுபிடிக்க முடியவில்லை" என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

அவர்கள் ஒரு மாபெரும் தேசமாக பலரை அச்சுறுத்துபவர்களாக இருந்தனர். ஆனால் இப்போது அவர்கள் பெயர்கூட இல்லை.

ஏனென்றால், கர்த்தர் தம்மை எதிர்க்கிற ஜாதிகளை தமது காலத்தின்படி தமது வழிகளில் நிர்மூலமாக்குகிறார்.

### 3. கர்த்தரின் நியாயத்தீர்ப்பு தரும் நம்பிக்கை வ -7-10

*Hope in God's justice V 7-10*

*7. **கர்த்தரோ என்றென்றைக்கும் இருப்பார்; தம்முடைய சிங்காசனத்தை நியாயத்தீர்ப்புக்கு ஆயத்தம்பண்ணினார்.***
*8. **அவர் பூச்சக்கரத்தை நீதியாய் நியாயந்தீர்த்து, சகல ஜனங்களுக்கும் செம்மையாய் நீதிசெய்வார்.***
*9. **சிறுமைப்பட்டவனுக்குக் கர்த்தர் அடைக்கலமானவர்; நெருக்கப்படுகிற காலங்களில் அவரே தஞ்சமானவர்.***
*10. **கர்த்தாவே, உம்மைத் தேடுகிறவர்களை நீர் கைவிடுகிறதில்லை; ஆதலால், உமது நாமத்தை அறிந்தவர்கள் உம்மை நம்பியிருப்பார்கள்.***

ஏழாவது வசனமே இந்த சங்கீதத்தின் உயிர்மூச்சு. துன்மார்க்கமான தேசங்கள் அழியும் ஆனால் "கர்த்தரோ என்றென்றைக்கும் இருப்பார்".

Notes:

________________________________________________________
________________________________________________________
________________________________________________________




நமது நம்பிக்கையின் அச்சாரம் "தேவன் ஆளுகிறார்".

பத்தாவது வசனத்தில் கொடுக்கப்பட்டுள்ள அழகான வார்த்தைகளை கவனிக்க மறந்துவிடாதீர்கள். கர்த்தருடைய நாமத்தை அறிவதே கர்த்தரை அறிவது. *To know God's name is to know God.*

இங்கு "நாமம்" என்று சொல்லப்படுவது அந்த முழு நபரையும் அறிவது என்ற அர்த்தத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. அதாவது, அவருடைய குணங்கள், அவருக்கு பிடித்தவைகள், பிடிக்காதவைகள், அவருடைய ஆசைகள் என்பது போன்றவற்றை அறிந்திருப்பதே அவருடைய நாமத்தை அறிவதாகும். தேவனை அறிந்த ஜனங்கள் "**அவரே ஆளுகிறார்!**" என்பதை அறிந்து அவர் மேல் நம்பிக்கை வைப்பார்கள்.

### 4. தேசமாக சேர்ந்து கர்த்தரை துதித்தல்

*Praising God as a nation V 11-14*

*11.* **சீயோனில் வாசமாயிருக்கிற கர்த்தரைக் கீர்த்தனம்பண்ணி, அவர் செய்கைகளை ஜனங்களுக்குள்ளே அறிவியுங்கள்.**
*12.* **இரத்தப்பழிகளைக்குறித்து அவர் விசாரணை செய்யும்போது, அவைகளை நினைக்கிறார்; சிறுமைப்பட்டவர்களுடைய கூப்பிடுதலை மறவார்.**
*13.* **மரணவாசல்களிலிருந்து என்னைத் தூக்கிவிடுகிற கர்த்தாவே, நான் உம்முடைய துதிகளையெல்லாம் சீயோன் குமாரத்தியின் வாசல்களில் விவரித்து, உம்முடைய இரட்சிப்பினால் களிகூரும்படிக்கு,**

Notes:

____________________________________________________________
____________________________________________________________
____________________________________________________________

*14. **தேவரீர் எனக்கு இரங்கி, என்னைப் பகைக்கிறவர்களால் எனக்கு வரும் துன்பத்தை நோக்கிப்பாரும்.***

சீயோனில் இருப்பவர்களை கர்த்தரை துதிக்கும்படி அழைக்கிறார் .. பின்னர் தாவீது, தான் கர்த்தரை துதிக்கும்படி தன்னை விடுவிக்கவேண்டி கர்த்தரை நோக்கி கூப்பிடுகிறார்.

### 5. தேசங்களின்மேல் கர்த்தரின் நியாயத்தீர்ப்பு

*God's judgement upon Nations V 15-18*

*15. **ஜாதிகள் தாங்கள் வெட்டின குழியில் தாங்களே விழுந்தார்கள்; அவர்கள் மறைவாய் வைத்த வலையில் அவர்களுடைய காலே அகப்பட்டுக்கொண்டது.***
*16. **கர்த்தர் தாம் செய்த நியாயத்தினால் அறியப்படுகிறார்; துன்மார்க்கன் தன் கைகளின் செய்கையிலே சிக்கிக்கொண்டான்.***

***(இகாயோன், சேலா.)***
*17. **துன்மார்க்கரும், தேவனை மறக்கிற எல்லா ஜாதிகளும், நரகத்திலே தள்ளப்படுவார்கள்.***
*18. **எளியவன் என்றைக்கும் மறக்கப்படுவதில்லை; சிறுமைப்பட்டவர்களுடைய நம்பிக்கை ஒருபோதும் கெட்டுப்போவதில்லை.***

தேசம் பாவத்தில் மூழ்கிவிட்டது ஆகவே அதை நிர்மூலமாக்கும்படி தாவீது கர்த்தரை வேண்டிக்கொள்கிறார். ஏனெனில் அதன் பாவம் அதை நிர்மூலமாக்கிவிடும். பாவத்தின் குணம் இதுவே; அவர்களை வருங்காலத்தில் அழிப்பது மாத்திரமல்ல நிகழ்காலத்தையும் பெரும்பாடாக மாற்றிவிடும். கர்த்தர் கிரியைகள் செய்துகொண்டிருக்கிறார் என்பதை தாவீது காண்கிறார். அவருடைய செய்கைகள் வருங்காலம் வரை தொடரும். இதுவே உண்மை ஆகவே, கர்த்தர் மீது நம்பிக்கை கொள்ளுங்கள். கர்த்தர் ஆளுகிறார் என்பதை அறிந்தவர்கள், அநியாயத்தை பார்த்து "**இது பல நாட்கள் நிலைக்காது. ஆகவே அதை நான் நாட மாட்டேன். ஏனெனில் கர்த்தர் அதை ஜெயித்துக்கொண்டிருக்கிறார். அதை ஜெயித்து முடிப்பார் என்று எனக்கு தெரியும். கர்த்தர் கிரியைகள் நடப்பித்து கொண்டிருக்கிறார், அநியாயம் நிச்சயமாக நியாயம் விசாரிக்கப்படும்**" என்று சொல்வார்கள்.

Notes:

____________________________________________________________
____________________________________________________________
____________________________________________________________

இதில் கர்த்தருடைய பெயரும் மதிப்பும் அடங்கியிருக்கிறது! ஆகவே கர்த்தர் தமது நீதியை நிலைநாட்ட அநியாயத்தை முறித்தே தீருவார்.

### 6. கர்த்தருடைய நியாயத்தீர்ப்பின் நம்பிக்கை

*Hope in God's justice V 19-20*

*19.* **எழுந்தருளும் கர்த்தாவே, மனுஷன் பெலன் கொள்ளாதபடி செய்யும்; ஜாதிகள் உம்முடைய சமுகத்தில் நியாயந்தீர்க்கப்படக்கடவர்கள்.**
*20.* **ஜாதிகள் தங்களை மனுஷரென்று அறியும்படிக்கு, அவர்களுக்குப் பயமுண்டாக்கும், கர்த்தாவே.**

**(சேலா.)**

இந்த சங்கீதம் மிக அருமையாக முடிக்கப்பட்டுள்ளது! தேசம் கர்த்தரை அறியும்படி அவர் தேசங்கள் மீது நியாயந்தீர்க்க வேண்டும் என்று தாவீது விரும்புகிறார்.

கர்த்தர் தமது நாமத்தை சகல ஜாதிகளின் முன் நிலைநாட்டுவதற்கு செயல்படுவார், செயல்பட்டேதீருவார்.

## இயேசு கிறிஸ்துவின் வாழ்க்கை

*Life of Jesus*

தேவன் இயேசுவை அபிஷேகித்தபோது இயேசு கிறிஸ்துவின் ஊழியத்தில் அநேக அற்புதங்கள் நிகழ்ந்தன. ஆனால் அவற்றை நமது ஆண்டவர் எப்படி கையாண்டார்?

மாற்கு 1-ஆம் அதிகாரத்தை பார்போம்.

**மாற்கு 1**:29-31, உடனே அவர்கள் ஜெப ஆலயத்தை விட்டுப் புறப்பட்டு, யாக்கோபோடும் யோவானோடுங்கூட, சீமோன் அந்திரேயா என்பவர்களுடைய வீட்டில் பிரவேசித்தார்கள்; 30. அங்கே சீமோனுடைய மாமி ஜுரமாய்க் கிடந்தாள்; உடனே அவர்கள் அவளைக்குறித்து அவருக்குச் சொன்னார்கள். 31. அவர் கிட்டப்போய், அவள் கையைப் பிடித்து, அவளைத் தூக்கிவிட்டார்; உடனே ஜுரம் அவளை விட்டு நீங்கிற்று; அப்பொழுது அவள் அவர்களுக்குப் பணிவிடைசெய்தாள்.

பேதுருவின் மாமி ஜுரத்திலிருந்து விடுதலை பெற்ற செய்தி அந்த ஊர் முழுவதும் பரவிற்று.

Notes:

__________________________________________________________
__________________________________________________________
__________________________________________________________

***மாற்கு 1**: 32-34, 32. சாயங்காலமாகிச் சூரியன் அஸ்தமித்தபோது, சகல பிணியாளிகளையும், பிசாசுபிடித்தவர்களையும், அவரிடத்தில் கொண்டுவந்தார்கள். 33. பட்டணத்தார் எல்லாரும் வீட்டு வாசலுக்கு முன்பாகக் கூடிவந்தார்கள். 34. பலவிதமான வியாதிகளினால் உபத்திரவப்பட்டிருந்த அநேகரை அவர் சொஸ்தமாக்கி, அநேகம் பிசாசுகளையும் துரத்திவிட்டார்; அந்தப் பிசாசுகள் தம்மை அறிந்திருந்தபடியால், அவைகள் பேசுகிறதற்கு அவர் இடங்கொடுக்கவில்லை.*

- *அங்கு பெரிய எழுப்புதல் உண்டானது*
- *பட்டணத்தில் உள்ள அனைவரும் கூடினார்கள்*
- *எல்லாரும் சொஸ்தமானார்கள்*
- *பிசாசு பிடித்திருந்த அனைவரும் விடுதலை பெற்றார்கள்.*

*ஒரு ஊழியத்தை ஆரம்பிப்பதற்கு என்ன ஒரு அருமையான சந்தர்ப்பம். ஆனாலும் இயேசு என்ன செய்தார்?*

***மாற்கு 1**:35-39. அவர் அதிகாலையில், இருட்டோடே எழுந்து புறப்பட்டு, வனாந்தரமான ஓரிடத்திற்குப்போய், அங்கே ஜெபம்பண்ணினார். 36. சீமோனும் அவனோடே இருந்தவர்களும் அவரைப் பின் தொடர்ந்துபோய் (*searched for Him*), 37. அவரைக் கண்டபோது: உம்மை எல்லாரும் தேடுகிறார்கள் என்று சொன்னார்கள். 38. அவர்களை அவர் நோக்கி: **அடுத்த ஊர்களிலும் நான் பிரசங்கம் பண்ணவேண்டுமாதலால், அவ்விடங்களுக்குப் போவோம் வாருங்கள்; இதற்காகவே புறப்பட்டு வந்தேன்** என்று சொல்லி; 39. கலிலேயா நாடெங்கும் அவர்களுடைய ஜெபஆலயங்களில் அவர் பிரசங்கம் பண்ணிக்கொண்டும், பிசாசுகளைத் துரத்திக்கொண்டும் இருந்தார்.*

*அவருடைய ஊழியத்திலும் அழைப்பிலும் எப்படி கருத்தாய் பின்பற்றுகிறார் என்று பாருங்கள்.*

*புகழோ, ஜனங்களோ அல்லது அவர்கள் பாராட்டுவதன் மூலம் கிடைக்கும் பெயரோ வேண்டாம் என்று ஒதுக்கிவிட்டு. தன் கருத்தை தேவனுடைய சித்தத்திற்கும் அவருடைய நோக்கத்திற்கும் ஒப்புக்கொடுக்கிறார்.*

*தேவனும் அவருடைய நோக்கமுமே இயேசுவின் வாழ்வின் மையமாக இருந்தது.*

Notes:

______________________________________________________

______________________________________________________

______________________________________________________

## செயல்படுத்துதல்

*Application*

### கர்த்தர் நமக்கு என்ன செய்கிறார்?

கர்த்தர் நமது எதிரிகளை தடுமாறி ஓடச்செய்து முறியடிக்கிறார். அவர்கள் பெயரையும்கூட அழித்துவிடுகிறார். தாவீது இந்த சங்கீதத்தை எழுதும்போது கர்த்தர் இஸ்ரவேலின் எதிரிகளை முறியடித்துக்கொண்டிருப்பதை தனது இருதயத்தின் கண்கள் மூலமாய் காண முடிந்தது. தனிப்பட்ட பிரச்சனைகளில் தன்னை துரத்துபவர்களும்கூட முக்கப்படுவதை தாவீதால் தன் மனக்கண்கள் மூலமாக பார்க்க முடிந்தது. இதை நம் வாழ்வில் நாம் எதிர்கொள்ளும் எதிரிகளுக்கு ஒப்பிடலாம். கர்த்தர் எப்போதும் அவர்களை முறியடிக்க காரியங்கள் செய்துகொண்டிருக்கிறார். நாம் அவருடைய வழிகளில் நடந்து அவருக்கு கீழ்படிவோமானால் நாம் கண்டிப்பாக வெற்றிபெறுவோம்.

### நாம் எப்படி அவருக்கு நன்றி செலுத்த வேண்டும்?

இதனால்தான் கர்த்தருடைய பிள்ளைகள் அவருக்கு நன்றி செலுத்தி, அவருக்குள் மகிழ்ச்சியாக இருந்து ஸ்தோத்திர பாடல்கள் பாடவேண்டும்.

***பிலிப்பியர் 4:6-7,*** *நீங்கள் ஒன்றுக்குங் கவலைப்படாமல், எல்லாவற்றையுங்குறித்து உங்கள் விண்ணப்பங்களை ஸ்தோத்திரத்தோடே கூடிய ஜெபத்தினாலும் வேண்டுதலினாலும் தேவனுக்குத் தெரியப்படுத்துங்கள். 7. அப்பொழுது, எல்லாப் புத்திக்கும்மேலான தேவசமாதானம் உங்கள் இருதயங்களையும் உங்கள் சிந்தைகளையும் கிறிஸ்து இயேசுவுக்குள்ளாகக் காத்துக்கொள்ளும்.*

அவருக்கு எப்பொழுதும் உங்களால் நன்றி சொல்ல முடிகிறதா!!!

### அவரை ஏன் நம்ப வேண்டும்?

அவருடைய சிங்காசனம் நித்தியத்திற்கும் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறபடியால் அவர் உண்மையாகவே நம்பிக்கைக்கு உரியவர். அவர் எப்போதும் ஒடுக்கப்படுகிறவர்களுக்கு நியாயம் விசாரித்து ஒடுக்குகிறவர்களை தண்டிக்கிறார். அவர் சர்வ வல்லமை

Notes:

____________________________________________________________
____________________________________________________________
____________________________________________________________

உடையவர், ஒரு வார்த்தை சொன்ன மாத்திரத்திலே எதிரிகளும் தேசங்களும் அழிந்துபோகும்.

வரலாற்றை திருப்பி பார்ப்போமானால், தம்மை நம்பின ஜனங்களை அவர் ஒரு நாளும் கைவிட்டதில்லை. தேவன் கரிசனை உடையவர், அவர் சர்வ வல்லமை உடையவர், நீதியானவர், நம்பிக்கைக்குரியவர்.

எப்படி நமது கடினமான நேரங்களில் அவரை நம்பாமல் அவரிடத்தில் தஞ்சம் சேராமல் இருக்க முடியும்?

### *கர்த்தருக்கு எந்தெந்த காரியங்கள் தெரியும்? அவைகளை குறித்தி அவர் என்ன செய்வார்?*

தாழ்த்தப்படுகிறவர்கள் சிந்துகிற ரத்தங்கள் அனைத்தையும் எல்லா கண்ணீரையும் அறிந்திருக்கிறார். இதுவே வேதாகமத்தின் ஒரு பொதுவான பொருளாக வலம் வருகிறது. தேவனுடைய ஜனங்கள் கதறிய போதெல்லாம் அவர்களுக்கு அவர் செவிகொடுத்து அவர்கள் பட்சத்தில் நிற்கிறார். இது எதிரியின் செயல்களை அவமாக்கிப்போடும். தேவனே நமக்கு ஆலோசகர். பொல்லாங்கன் பிறருக்கு விரிக்கிற வலையில் அவனையே விழப்பண்ணுகிறவர். அதே வேளையில் தாழ்வில் உள்ளோர் தேவைகள் உள்ளோர் யாரையும் அவர் மறப்பதில்லை; அவர்களுடைய நம்பிக்கையை அவர் அற்றுப்போக விடுவதில்லை.

கர்த்தர் நிச்சயம் எதிரியை நியாயத்தீர்ப்பில் நிறுத்துவார். இது தேவ ஜனமாகிய நமக்கு ஒரு பாதுகாப்பு உணர்வை அளிக்க வேண்டும். ஏனெனில், நாம் எப்படிப்பட்ட கஷ்டத்திற்குள் சென்றாலும், கர்த்தர் அதை அறிந்திருக்கிறார், நம்மை பார்த்துக் கொள்வார்.

*II நாளாகமம் 16:9* ***தம்மைப்பற்றி உத்தம இருதயத்தோடிருக்கிறவர்களுக்குத் தம்முடைய வல்லமையை விளங்கப்பண்ணும்படி*** *, **கர்த்தருடைய** கண்கள் பூமியெங்கும் உலாவிக்கொண்டிருக்கிறது; இந்த விஷயத்தில் மதியில்லாதவராயிருந்தீர்; ஆகையால் இதுமுதற்கொண்டு உமக்கு யுத்தங்கள் நேரிடும் என்றான்.*

*நாகூம் 1:7, கர்த்தர் நல்லவர், இக்கட்டு நாளிலே அரணான கோட்டை; தம்மை நம்புகிறவர்களை அறிந்திருக்கிறார்.*

Notes:

________________________________________________________________
________________________________________________________________
________________________________________________________________




*கர்த்தர் தமது எதிரிகளை முறியடிக்கிறார்.*

*கர்த்தர் தமது ஜனங்களை பாதுகாக்கிறார்.*

*கர்த்தர் தமது இராஜ்ஜியத்தை ஸ்தாபிக்கிறார்.*

*இந்த காரியம் நான் விரும்புகிறபடி சீக்கிரமாய் நடக்காமல் போகலாம், ஏன் நம் காலம் முடியும்வரை கூட நடக்காமல் போகலாம். எனது சிந்தை தேவனை பற்றியும் அவருடைய நோக்கத்தை பற்றியும் மட்டுமே இருக்கும். ஆனால் நான் கர்த்தருடைய நாமத்தை அறிந்திருக்கிறேன் ஆகவே அவர் மீது நம்பிக்கை வைக்கிறேன்.*

*"கர்த்தர் சதா காலங்களிலும் மாறாதவராயிருக்கிறார்!"*

Notes:

____________________________________________________________
____________________________________________________________
____________________________________________________________

Notes:

____________________________________________________________
____________________________________________________________
____________________________________________________________

Notes:

______________________________________________________________

______________________________________________________________

______________________________________________________________

## 3. என்னை துரத்தும் துரோகி...

### நாம் உதவி செய்த ஒருவனே நம்மை துரத்தும்போது

*சங்கீதம் 59*

**சூழல்**: *சவுல் கூலியாட்களை அனுப்பி தாவீதை கொல்ல தக்க சமயம் பார்க்கசொல்கிறான்.*

**வேதவாக்கியம்**: *1 சாமுவேல் 18:11-18 & 1 சாமுவேல் 19:11-12*

*(சவுல் தாவீதைக் கொள்ளுவதற்காக ஏவலாட்களை அனுப்பினபோது அல்தஷ்கேத் என்னும் வாத்தியத்தில் வாசிக்க தாவீது பாடி இராகத்தலைவனுக்கு ஒப்புவித்த மிக்தாம் என்னும் சங்கீதம்)*

*To the Chief Musician. Set to "Do Not Destroy." A Michtam of David when Saul sent men, and they watched the house in order to kill him.*

*(To understand much easier I am giving this Message Translation)*

*My God! Rescue me from my enemies  defend me from these mutineers.*
*Rescue me from their dirty tricks, save me from their hit men.*

*3-4 Desperadoes have ganged up on me, they're hiding in ambush for me.*
*I did nothing to deserve this, God, crossed no one, wronged no one.*
*All the same, they're after me,  determined to get me.*

*4-5 Wake up and see for yourself! You're God, God-of-Angel-Armies, Israel's God! Get on the job and take care of these pagans, don't be soft on these hard cases.*

*Selah*

*They return when the sun goes down, They howl like coyotes, ringing the city.*

*Then suddenly they're all at the gate, Snarling invective, drawn daggers in their teeth. They think they'll never get caught.*

Notes:

________________________________________________________
________________________________________________________
________________________________________________________

*8-10 But you, God, break out laughing; you treat the godless nations like jokes.*

*Strong God, I'm watching you do it. I can always count on you. God in dependable love shows up on time, shows me my enemies in ruin.*

*11-13 Don't make quick work of them, God, lest my people forget.*

*Bring them down in slow motion, take them apart piece by piece.*

*Let all their mean-mouthed arrogance catch up with them, Catch them out and bring them down*

*—every muttered curse*

*—every barefaced lie.*

*Finish them off in fine style! Finish them off for good!*

*Then all the world will see that God rules well in Jacob, everywhere that God's in charge.*

*Selah*

*They return when the sun goes down, They howl like coyotes, ringing the city.*

*They scavenge for bones, And bite the hand that feeds them.*

*16-17 And me? I'm singing your prowess, shouting at cockcrow your largesse,*

*For you've been a safe place for me, a good place to hide.*

*Strong God, I'm watching you do it, I can always count on you—*

*God, my dependable love.*

*தாவீது கோலியாத்தை முறியடித்து இஸ்ரவேல் தேசத்திற்கு வெற்றியை கொடுத்தான்; சவுல் ராஜாவை சூழ்ந்துகொண்டிருந்த இருள்போன்ற தோல்வியிலிருந்து ராஜாவிற்கு விடுதலையும் கிடைத்தது. தாவீதிற்கு என்ன பரிசு இதற்காக கிடைத்தது?*

*சவுல் கூலியாட்களை தாவீதின் வீட்டிற்கு வெளிய அனுப்பி தாவீதை கொல்ல கட்டளையிட்டான்!!*

Notes:

__________________________________________________________
__________________________________________________________
__________________________________________________________

*சவுலால் ஏன் தாவீதின் வெற்றியை கொண்டாடவோ அவனை உற்சாகப்படுத்தவோ முடியவில்லை? கிறிஸ்தவர்கள் பலரும் கூட இந்த விஷயத்தில் தோற்றுவிடுகிறார்கள். உங்களால் அடுத்தவரின் வெற்றியை கொண்டாடமுடியவில்லை என்றால் உங்களுடைய வெற்றி உங்களுக்கு கிடைக்காது!!*

*சங்கீதம் 59*

*சற்று கற்பனை செய்து பாருங்கள், உங்கள் வீட்டை சுற்றி ஆயுதங்களோடு ஆட்கள் ஒளிந்திருந்து உங்களை கொள்வதற்காக காத்திருக்கிறார்கள்.*

- *காவல்துறையை அழைக்க முடியாது*
- *911-ற்கு அழைக்க முடியாது*
- *நண்பர்களிடம் உதவி கேட்க முடியாது*
- *நீங்கள் தவறு செய்யவில்லை என்று யாரிடமும் முறையிட முடியாது*
- *உங்களை எதிர்த்து தீமையும் துன்மார்க்கமும் நிற்கிறது*

*என்னால் அப்படி ஒரு வாழ்க்கையை கற்பனை செய்து பார்க்க முடியவில்லை. என் கண்கள் எதன்மீது நோக்கமாயிருக்கும்? இரவிலும் நம்மை சுற்றி துன்மார்க்கமான மனிதர்கள் இராஜாவின் கட்டளையோடு நம்மை கொல்ல துணிந்திருக்கிறார்கள் என்றால் எப்படி இருக்கும்?*

*வசனங்கள் 6-7ம் இது எப்படி இருக்கும் என்று நமக்கு சொல்ல உதவுகின்றன.*

*அவர்கள் சாயங்காலத்தில் திரும்பிவந்து, நாய்களைப்போல ஊளையிட்டு, ஊரைச்சுற்றித் திரிகிறார்கள். இதோ, தங்கள் வார்த்தைகளைக் கக்குகிறார்கள்; அவர்கள் உதடுகளில் பட்டயங்கள் இருக்கிறது, கேட்கிறவன் யார் என்கிறார்கள்.*

*மீண்டும் வசனம் 14–15ல்*

*14. அவர்கள் சாயங்காலத்தில் திரும்பிவந்து, நாய்களைப்போல ஊளையிட்டு, ஊரைச்சுற்றித் திரிகிறார்கள். 15. அவர்கள் உணவுக்காக அலைந்து திரிந்து திருப்தியடையாமல், முறுமுறுத்துக் கொண்டிருப்பார்கள்.*

Notes:

______________________________________________________
______________________________________________________
______________________________________________________

*தாவீதை கொல்ல வந்தவர்கள், அடிபட்டு ரத்தம் வடிந்துகொண்டிருக்கிற விலங்கை பசியோடு அடித்து சாப்பிடும்படி சுற்றி வருகிற ரத்தவெறி பிடித்த காட்டுநாய்கள் போன்றவர்கள்.*

## ஜான் மற்றும் பெட்டி ஸ்டாம்-ன் உண்மை வரலாறு

*John and Betty Stam – A real life story*

*டிசம்பர் 6, 1934. சிங்க்டேஹ், சீனா வில் ஜான் மற்றும் பெட்டி ஸ்டாம் கிறிஸ்துக்குள் தங்களது விசுவாசத்தின் நிமித்தம் கொல்லப்பட்டனர். பெட்டி தனது ஒன்பது மாத குழந்தையை குளிக்கவைத்துக் கொண்டிருந்தாள், அப்போது செம்படை (*Red Army*) அந்த இல்லத்தை சூழ்ந்தது. அந்த குடும்பத்தை சிறை பிடித்து மியஷியோ (*Miaosheo*) என்கிற இடத்திற்கு நடைபயணமாக கொண்டு சென்றார்கள். அந்த இரவு ஜான்-ஐ ஒரு கம்பத்தில் கட்டிவைத்தார்கள் . அடுத்த நாள் ஜான்-ஐயும் பெட்டி-ஐயும் உள்ளாடைகள் மாத்திரம் அணியவைத்து அந்த பட்டணத்தின் தெருக்களில் நடக்கவைத்து, அவர்களின் கொலை தண்டனையை ஜனங்களை வந்து பார்க்கும்படி வற்புறுத்தினார்கள். ஊருக்கு வெளியே தேவதாரு மரக்காட்டிலே வைத்து ஜான்-னின் தலையை அவரது மனைவியை பார்க்கவைத்து துண்டித்து கொலைசெய்தார்கள். அவரது மனைவி ஜான்-னின் உடல் மீது விழுந்து அழுகையில் அவரது தலையையும் துண்டித்து கொலைசெய்தார்கள்.*

*ஜான்-உம் பெட்டி-யும் மூடி வேதாகம கழகத்தில் (*Moody Bible Institute*) பயின்றவர்கள். 25 வயது மதிக்கத்தக்கவர்கள், அவர்களுக்கு மூன்று மாதத்தில் ஒரு குழந்தை உள்ளது. ஒரு ஓநாய் கூட்டத்தினால் கொல்லப்பட்டார்கள். எந்த ஒரு காரணமும் கிடையாது; சங்கீதம் 59-ற்கும் கூட எந்த ஒரு காரணமும் கிடையாது.*

Notes:

________________________________________________________
________________________________________________________
________________________________________________________



ஜான் மற்றும் பெட்டி ஸ்டாம் - John and Betty Stam

இப்போது இந்த சங்கீதத்தில் தாவீது என்ன பாடுகிறார் என்று பாப்போம்.

## விடுதலைக்காக ஜெபம்

**வ** *1-2, Prayer for Deliverance*

*1.* ***என் தேவனே, என் சத்துருக்களுக்கு என்னைத் தப்புவியும்; என்மேல் எழும்புகிறவர்களுக்கு என்னை விலக்கி உயர்ந்த அடைக்கலத்திலே வையும்.***

*2.* ***அக்கிரமக்காரருக்கு என்னைத் தப்புவித்து, இரத்தப்பிரியரான மனுஷருக்கு என்னை விலக்கி இரட்சியும்.***

தாவீது ஜெபிக்கையில் கர்த்தரை எப்படி அழைக்கிறார் என்று பாருங்கள்!

- என் தேவனே My God (சங்கீதம் 59:1)
- எனக்கு அடைக்கலம் My defence (சங்கீதம் 59:9, 17)
- கிருபையுள்ள என் தேவன் *My God of mercy (சங்கீதம் 59:10, 17)*
- என் பெலனே *My Strength (சங்கீதம் 59:17, 9)*

இஸ்ரவேல் தேசத்திலே அந்நாட்களில் மிக உயர்ந்த பொறுப்பில் இருந்த சவுல், தாவீதை கொல்வதற்கு ஒரு திட்டம் தீட்டுகிறான்.

Notes:

____________________________________________________________

____________________________________________________________

____________________________________________________________

ஆகவே பலர், தாவீதை கொன்றால் சவுல் கண்களில் தயவு கிடைத்து உயரிய பதவியில் அமரலாம் என்று நினைத்தார்கள். அதனால் தான் தாவீது பலரால் குறிவைக்கப்படுகிறான். இந்த ஆபத்தின் ஆழத்தை தாவீது அறிந்திருந்தபோதும் வேறு யாரிடமும் கேட்காமல் தேவனிடம் அவன் உதவி கேட்கிறான்.

### தேவையை வெளிப்படுத்துதல்

**வ** *3-5, Explaining the need*

*3.* **இதோ, என் பிராணனுக்குப் பதிவிருக்கிறார்கள்; கர்த்தாவே, என்னிடத்தில் மீறுதலும் பாவமும் இல்லாதிருந்தும், பலவான்கள் எனக்கு விரோதமாய்க் கூட்டங்கூடுகிறார்கள்.**

*4.* **என்னிடத்தில் அக்கிரமம் இல்லாதிருந்தும், ஓடித்திரிந்து யுத்தத்துக்கு ஆயத்தமாகிறார்கள்; எனக்குத் துணைசெய்ய விழித்து என்னை நோக்கிப் பாரும்.**

*5.* **சேனைகளின் தேவனாகிய கர்த்தாவே, இஸ்ரவேலின் தேவனே, நீர் சகல ஜாதிகளையும் விசாரிக்க விழித்தெழும்பும்; வஞ்சகமாய்த் துரோகஞ்செய்கிற ஒருவருக்கும் தயை செய்யாதேயும்.**

**(சேலா.)**

தாவீது பாவமற்ற ஒரு முழுமையான வாழ்க்கையை முன்னிறுத்தவில்லை. சவுல் இரத்தவெறி கொண்ட கூலியாட்களை தன் மீது ஏவி விடுவதற்கு எந்த முகாந்திரமும் இல்லை என்று மட்டும் தான் கர்த்தரிடம் முறையிடுகிறான்.

கர்த்தர் தன தேவையை கவனியாமல் போனால், தான் கொல்லப்பட்டுவிடுவோம் என்று தாவீது பயந்தான். அவன் கர்த்தரை தன் காரியத்தை விசாரித்து வருகிற ஆபத்தை பார்க்கும்படி வேண்டுகிறான்.

- அவர் **யாவே** Yahweh, இஸ்ரவேலின் உண்டன்படிக்கையின் தேவன் (ஆண்டவர்)
- அவர் **எலோஹிம் சபயோத்** Elohim Sabaoth, பரலோக சேனைகளின் தளபதி (சேனைகளின் கர்த்தர்)
- அவர் **எலோஹி இஸ்ரயேல்** Elohi Israel, தாம் தெரிந்தெடுத்தவர்களின் ஆண்டவர் (இஸ்ரவேலின் தேவன்)

Notes:

________________________________________________________
________________________________________________________
________________________________________________________

சேலா

- "சேலா", நிச்சயமாகவே கர்த்தர் அவர்களை அவமதிப்பிற்கு ஆளாக்குவார்.
- "சேலா", அவர்கள் எலும்புகளை உலுக்கி, அவர்களின் மேலான நடவடிக்கைகளை உலுக்கி அவர்களின் துஷ்ட எண்ணங்களை அறியும்.
- "சேலா", நிச்சயமாகவே கர்த்த்தரின் கரம் அவர்கள் மேல் பலமாய் இறங்குகிறது, அதினால் அவர்கள் மரித்துப்போகும் மட்டும் அவருடைய கரம் என்பதை அறியாதிருப்பார்கள்
- "சேலா", நிச்சயமாகவே, மெய்யாகவே ஆமென், இது மெய்யான வனையமுடியாத சத்தியம்; கர்த்தர் ஜீவிக்கும்வரை அப்படியே ஆகக்கடவது.

*Selah*

- *"'Selah,' surely God will have them in contempt;*
- *'Selah,' surely God shall shake their bones, shake their best actions, and discover their impurity;*
- *'Selah,' surely God's hand shall be heavy upon them, and they shall not discern it to be His hand till they are consumed.*
- *'Selah,' surely, verily, amen, this is a faithful, an infallible truth; as the Lord lives, it shall be so."*

### எதிரிகளின் மேட்டிமை – திமிர்

**வ** *6-7, Arrogance of the Enemies*

**6. அவர்கள் சாயங்காலத்தில் திரும்பிவந்து, நாய்களைப்போல ஊளையிட்டு, ஊரைச்சுற்றித் திரிகிறார்கள்.**

**7. இதோ, தங்கள் வார்த்தைகளைக் கக்குகிறார்கள்; அவர்கள் உதடுகளில் பட்டயங்கள் இருக்கிறது, கேட்கிறவன் யார் என்கிறார்கள்.**

தாவீது தன் எதிரிகளை கீழ்கண்டவண்ணம் விவரிக்கிறார்:

- ஊளையிடும் நாய்கள்
- ஊரை சுற்றித்திரியும் நாய்கள்
- ஏப்பம்

Notes:

__________________________________________________________
__________________________________________________________
__________________________________________________________

- தேவ பயம் அற்றவர்களாய் இருக்கிறார்கள்

அவர்கள்,

- இஸ்ரவேலர் ஆனால் நடைமுறைப்படி நாத்திகர்கள்.

அல்லது

- பாகாலை வணங்குகிறவர்கள் / சிலை வழிபாடு கொண்டவர்கள்

### தேவன் மேல் தாவீதின் உறுதியான நம்பிக்கை

**வ** *8- 10, David's strong confidence in the Lord*

*8.* **ஆனாலும் கர்த்தாவே, நீர் அவர்களைப் பார்த்து நகைப்பீர்; புறஜாதிகள் யாவரையும் இகழுவீர்.** *9.* **அவன் வல்லமையை நான் கண்டு, உமக்குக் காத்திருப்பேன்; தேவனே எனக்கு உயர்ந்த அடைக்கலம்.**

*10.* **என் தேவன் தம்முடைய கிருபையினால் என்னைச் சந்திப்பார்; தேவன் என் சத்துருக்களுக்கு வரும் நீதிசரிக்கட்டுதலை நான் காணும்படி செய்வார்.**

தன்னை கொல்லவருபவர்கள் மூலம் வரும் ஆபத்து மிகவும் பயங்கரமானது என்று தாவீது அறிந்திருந்தும், அவர்கள் எல்லாரும் கர்த்தருக்கு முன் ஒன்றுமில்லை என்று தாவீது அறிந்திருந்தான்.

கர்த்தர் அவர்களையும், தேவன் தங்கள் செய்கிறதை கண்டுகொள்ளாமலும் கேளாமலும் இருக்கிறார் என்கிற அவர்களுடைய மேட்டிமையான (திமிரான) எண்ணத்தை பார்த்து நகைப்பார்.

தேவனே எனக்கு உயர்ந்த அடைக்கலம், என் கேடகம், எனக்கு நெருக்கமுண்டான நாளிலே நீர் எனக்குத் தஞ்சமும் உயர்ந்த அடைக்கலமுமானீர். எதிரி என்னைக்காட்டிலும் பலவானை இருந்து என்னால் போராட முடியாத வேளையிலே, அவன் என்னை தொடக்கூடாத இடமாகிய எனது வீட்டிற்குள் மறைந்துகொள்வேன்.

இந்த மூன்று பண்புகளை தியானிப்போம்.

Notes:

____________________________________________________________
____________________________________________________________
____________________________________________________________

- அவர் நம்முடைய கிருபையின் தேவன், அவரிடமிருந்து அப்பழுக்கற்ற கிருபை வழிகிறது, கிருபையை தவிர ஏதுமில்லை.
- அவர் நம் உயர்ந்த அடைக்கலம், நமக்கும் நமது எதிரிகளுக்கும் நடுவில் அவரே அடைக்கலம்
- அவரே நம் பெலன், அவரிடமிருந்து நாம் பெலன் பெறுவதில்லை ஆனால் அவரையே நம் பெலனாக முன்னிறுத்துகிறோம்.

### தன் எதிரிகளை வீழ்த்தும்படி தாவீது கர்த்தரை வேண்டிகொள்கிறான்

**வ** *11- 13, David ask the Lord to defeat the enemy*

*11.* **அவர்களைக் கொன்றுபோடாதேயும், என் ஜனங்கள் மறந்துபோவார்களே; எங்கள் கேடகமாகிய ஆண்டவரே, உமது வல்லமையினால் அவர்களைச் சிதறடித்து, அவர்களைத் தாழ்த்திப்போடும்.**

*12.* **அவர்கள் உதடுகளின் பேச்சு அவர்கள் வாயின் பாவமாயிருக்கிறது; அவர்கள் இட்ட சாபமும் சொல்லிய பொய்யும் ஆகிய இவைகளினிமித்தம் தங்கள் பெருமையில் அகப்படுவார்களாக.**

*13.* **தேவன் பூமியின் எல்லைவரைக்கும் யாக்கோபிலே அரசாளுகிறவர் என்று அவர்கள் அறியும்பொருட்டு, அவர்களை உம்முடைய உக்கிரத்திலே நிர்மூலமாக்கும்; இனி இராதபடிக்கு அவர்களை நிர்மூலமாக்கும். (சேலா.)**

தாவீது தன் எதிரிகளை தேவன் வீழ்த்த வேண்டும் என்பது மட்டுமல்ல, தேவனுடைய ஜனத்திற்கு நன்மையுண்டாக அவர்கள் வீழ்த்தப்பட வேண்டும் என்றே ஜெபிக்கிறார். அவர்களை உடனடியாக மடியப்பண்ணாமல், சிதறடிக்கும்போது அந்த சாட்சி பல காலங்கள் பேசப்படும்.

“தேவன் பூமியின் எல்லைவரைக்கும் யாக்கோபிலே அரசாளுகிறவர் என்று அவர்கள் அறியும்பொருட்டு” இந்த வார்த்தைகள் தாவீது கோலியாத்தை வீழ்த்தும்போது

Notes:

________________________________________________________
________________________________________________________
________________________________________________________

1 சாமு 17:46 சொன்ன வார்த்தைகள் போல இருக்கிறது. இது நடந்த வெகு சில காலத்திற்குள்ளாக சவுல் தாவீதை கொல்ல ஆள் அனுப்பினான். இந்த விரோதிகள் கோலியாத்தை போல நடந்துகொள்வதை தாவீது நிதானித்தான்.

### ஆபத்தின் பிரசன்னம்

**வ** *14-15 the presence of Danger*

*14.* **அவர்கள் சாயங்காலத்தில் திரும்பிவந்து, நாய்களைப்போல ஊளையிட்டு, ஊரைச்சுற்றித் திரிகிறார்கள்.**

*15.* **அவர்கள் உணவுக்காக அலைந்து திரிந்து திருப்தியடையாமல், முறுமுறுத்துக்கொண்டிருப்பார்கள்.**

**தாவீது தன்வீட்டின் ஜன்னல் வழியாக பார்த்துதன் எதிரிகள் , பயங்கரமான நாய்களை போல சுற்றி வருவதைகாண்கிறான் . .ஆகவே தான் அந்த வரிகளை மீண்டும் கூறுகிறான்**

அவர்கள் பசியான நாய்கள் உணவுக்கு வேட்டையாடுவதை போல சுற்றுகிறதை தாவீது கவனிக்கிறான்.

### ஆபத்து நிறைந்திருந்தாலும் தேவனை துதித்தல்

**வ** *16-17, Singing Praises to God despite the looming Danger.*

*16.* **நானோ உம்முடைய வல்லமையைப் பாடி, காலையிலே உம்முடைய கிருபையை மகிழ்ச்சியோடு புகழுவேன்; எனக்கு நெருக்கமுண்டான நாளிலே நீர் எனக்குத் தஞ்சமும் உயர்ந்த அடைக்கலமுமானீர்.**

*17.* **என் பெலனே, உம்மைக் கீர்த்தனம்பண்ணுவேன்; தேவன் எனக்கு உயர்ந்த அடைக்கலமும், கிருபையுள்ள என் தேவனுமாயிருக்கிறார்.**

ஊளையிடும் நாய்கள் தெருவிலே, ஆனால் தாவீதோ கர்த்தரின் இரக்கங்களையும் வல்லமையையும் குறித்து பாடுகிறான்.

அவனுக்காக மாலையில் காத்திருக்கிறார்கள் ஆனால், அவனோ தேவன் தனக்கு பாதுகாப்பும் தஞ்சமுமானதால், காலைவரை தான் பிழைப்போம் என்று உறுதியாக இருந்து பாடிக்கொண்டிருக்கிறான்.

Notes:

____________________________________________________________
____________________________________________________________
____________________________________________________________

தன்னை கொல்வதற்கு கட்டளை நாட்டின் உயர்ந்த அரசாங்கத்திடமிருந்து வந்திருக்கிறது, ஆனால் **தாவீதின் இதயமோ துதியின் பாடல்களால் நிறைந்திருக்கிறது, பயத்தின் இருளால் அல்ல**. இந்த சங்கீதத்தை ஆரம்பிக்கும்போது, தனக்கு ஒரு உயர்ந்த அடைக்கலம் தேவை என்று ஆரம்பிக்கிறார். ஆனால் முடிக்கும்போது தேவனே அந்த உயர்ந்த அடைக்கலம் அன்று உறுதியாக முடிக்கிறார்; அவரே அந்த அடைக்கலமாக இருப்பதால் தான் தாவீதால் அதை பாடலாக பாடவும் முடிந்தது.

சவுல் ராஜ தாவீதை கொல்ல ஆள் அனுப்பினபோது வெளிப்படையாகவே அந்த ஆசையை தெரிவித்தார். அதிலிருந்து தாவீது 13 வருடங்கள் தன் வாழ்விற்காக தப்பியோடிக்கொண்டிருந்தார்.

தயவுசெய்து குறித்துக்கொள்ளுங்கள், தாவீது அந்த காலகட்டத்தின் ஆரம்பத்திலும் சரி அந்த காலம் முடியும்போதும் சரி தொடர்ந்து தேவனை துதித்து பாடல் பாடினவனாகவே இருந்தார்.

*Please do note that David entered that period singing praises, and was still able to sing praise God at the end of it.*

### அப்போஸ்தலனாகிய பவுல்

*Apostle Paul*

**அப்** *23:11-24,*

அப்போஸ்தலனாகிய பவுல் கைது செய்யப்பட்டு எருசலேமிற்கு கொண்டு செல்லப்படும் வழியில் அவரை பதுங்கியிருந்து தாக்குவதற்கு ஆட்கள் அவர் எருசலேம் செல்லுகிற வழியிலே கூடியிருந்தார்கள்.

**அப்** *23:12-13,*

12. விடியற்காலமானபோது, யூதரில் சிலர் ஒருமித்து, தாங்கள் பவுலைக் கொலைசெய்யுமளவும் புசிப்பதுமில்லை குடிப்பதுமில்லையென்று சபதம் பண்ணிக்கொண்டார்கள்.

13. இப்படிக் கட்டுப்பாடு பண்ணிக்கொண்டவர்கள் நாற்பதுபேருக்கு அதிகமாயிருந்தார்கள்.

Notes:

____________________________________________________

____________________________________________________

____________________________________________________

*அப்படியிருந்தும் பவுல் சந்தோஷமாயும் திருப்தியாகவும் இருந்தார். ஏன்?*

*Yet Paul was quite happy and content. Why?*

*இதற்கு ஆதாரமான முக்கியமான வசனம், அப் 23:11 "அன்று இராத்திரியிலே கர்த்தர் பவுலின் அருகே நின்று: பவுலே, திடன்கொள்; நீ என்னைக்குறித்து எருசலேமில் சாட்சிகொடுத்ததுபோல ரோமாவிலும் சாட்சி-கொடுக்கவேண்டும் என்றார்."*

*நாம் பலவித சூழ்நிலைகளை சந்திக்கலாம். அவைகளை நாம் எப்படி எதிர்கொள்கிறோம்?*

## செயல்படுத்துதல்

*Application*

*உங்கள் அலுவலகத்தில் வேலை கிடைப்பதற்கு நீங்கள் உதவிய ஒருவர், சில நாட்களில் உங்களை அந்த அலுவலகத்திலிருந்து நீக்கும்படி உங்களுக்கு எதிராக காய்களை நகற்றினால் நீங்கள் எப்படி அதை எதிர்கொள்வீர்கள்?*

*துதியின் பாடல் ஒன்றை உங்களால் பாட முடியுமா?*

*ஜான் மற்றும் பெட்டி ஸ்டாம்-ன் வாழ்வில் நாம் பார்த்தபடி அவர்கள் ஆபத்திலிருந்து காப்பாற்றப்படவில்லை. சுவிசேஷத்திற்காக தங்கள் வாழ்வை இழந்தார்கள். தேவன் உங்களுக்கு பதிலளிக்காமல் நீங்கள் பணம், பெயர், வேலை முதலியவைகளை இழக்க நேரிட்டால் நீங்கள் என்ன செய்வீர்கள்?*

*தாவீதின் நிமித்தமாகவே சவுல் இஸ்ரவேலின்மேல் ராஜாவாக இருந்தார், இல்லாவிட்டால் பெலிஸ்தியரிடம் சவுல் இராஜ்ஜியத்தை இழந்துபோக வேண்டியிருந்திருக்கும். ஆனாலும் சவுல் திரும்ப தாவீதை துன்பப்படுத்துகிறார்.*

*உங்களுக்கு உதவியவர்களுக்கு நீங்கள் நன்றியுள்ளவர்களாக இருக்கிறீர்களா?*

*உங்கள் வாழ்வில் கர்த்தர் கொடுத்திருக்கும் மனிதர்களுக்காக நன்றியுள்ளவர்களாக இருக்கிறீர்களா?*

Notes:

________________________________________________________
________________________________________________________
________________________________________________________

எதிரி இருப்பது உண்மை, ஆபத்து இருப்பது உண்மை உங்கள் கண்களால் அவற்றை காண முடிகிறது; ஆனால் உங்களால் தேவனை உங்கள் உயர்ந்த அடைக்கலமாகவும் அரணாகவும் நிறுத்த முடிகிறதா?

### *The Martyrdom of John and Betty Stam*

*by Gordon Dunn*

*First published in East Asia's Millions, November/December 1984, as "For the Stams No Deliverance"*

*It was a bleak December day in brick-walled Tsingteh [today spelled Jingde] in South Anhwei, China, when rumors began to sift through of a possible bandit attack on the city. Farther to the south the muddied waters of the mighty Yangtze rolled through Wuhu, past Nanking, Chenkiang and Kiangyin to stain the blue waters of the Pacific. But no echo of the world's commerce ruffled the secluded city of Tsingteh this day in 1934. Hidden like a jewel in the heart of rugged natural beauty, Tsingteh was accessible to the outside world only by stone paths cut through the mountains.*

*John and Betty Stam were not the first missionaries to find their way to this isolated community of people, but they were the first to settle there as a family. Their first child, new born Helen Priscilla – beautiful with blue eyes, innocent face, and curly hair – gladdened the hearts of the young couple. A rented shopfront on a stone-flagged street served as their home and preaching chapel as well.*

*John had already demonstrated remarkable facility in speaking Chinese. Fresh from language school in Anking he had attended a spiritual life conference led by Dr. James Graham for Chinese believers. Listening intently, John took careful notes. Immediately afterwards, with surprising effectiveness, the new missionary reproduced these messages in Chinese at a summer conference in nearby Sucheng. Now, however, he was married and wholly on his own for the first time on the mission field.*

*"Do you think we should leave, John?" wondered Betty as she bathed the baby that morning, little realizing that it would be the last time she would do so.*

Notes:

______________________________________________________

______________________________________________________

______________________________________________________

*"We'll wait and see," replied John.*

*The stories were contradictory and confusing, the rumors wild and unconfirmable. No one knew the truth. In the end the authorities were caught off guard. As the bandit horde piled into the city through the unguarded East Gate, the magistrate and his train barely escaped through the West Gate. By this time it was, of course, too late for John and Betty even to think of fleeing. Better stay and weather the storm, they decided.*

*But this storm was different from any Tsingteh had ever seen before. Wildly cheering, the bandits at last broke through the Stams' front door. Urging them to sit down, John served the uninvited guests tea. But such courtesies were lost on the outlaws, who were out to avenge themselves on a thankless society, and John and Betty were ordered to get ready to leave.*

*Although the Stams had been in Tsingteh only a short time, many friends watched silently and helplessly from doorway and roadside as the young foreign couple, stripped of their outer garments, were paraded down the street. John's hands were tightly tied behind his back. Betty, on horseback, held baby Priscilla. No one who saw them dared to lift a finger to help, for the city was in the grip of lawless terror. Wealthy people, landlords, stragglers among government officials and others were also taken captive. The communist bandits, perhaps fearing a counter-attack, urgently herded their "enemies of the people" along the stone-slab road that led to Miaoshou, some twelve miles west of the city.*

*John's arms were probably unbound as the little family was thrust into a mud hut to spend the night, for in those first hours of capitivity John wrote a letter to the China Inland Mission leaders. It said, in substance:*

*"My wife, baby and myself are today in the hands of communist bandits. Whether we will be released or not no one knows. May God be magnified in our bodies, whether by life or by death. Philippians 1:20"*

*And probably sometime during that night of prayer and suspense Betty tucked provision into her little daughter's snuggle bunny*

Notes:

__________________________________________________________
__________________________________________________________
__________________________________________________________

*(hooded sleeping bag) and bundled her into the pile of heavy winter bedding.*

*But what made the little baby sleep for 27 hours without a cry, a silence that saved her? What happened to the parents when the sun broke over the beautiful tree-covered hillside that December morning? These are questions we still ask. If there were eyewitnesses, we do not have their testimony.*

*We do know that the bandits moved on to fresh violence. We know that a courageous Christian, Mr. Lo, something of a lay evangelist, followed the trail as soon as he dared. It was he who found the bodies of John and Betty Stam and, at the risk of being discovered by lingering bandits, obtained coffins and sealed the bodies inside. The danger was by no means over – the times were so chaotic, in fact, that the coffins lay there for 40 days in the long grass of the Miaoshou hillside before even government help could be secured to bring them out for burial.*

*Having cared for the dead, Lo looked for the baby. He presumed she had been ruthlessly killed too – or kidnapped. At any rate there was no sign of the little foreign baby. Quite by accident he eventually discovered her, still sleeping in the little hut, content and carefree, unaware that the sword had made her an orphan for life. But after her long fast she was hungry – that she knew.*

*In the baby's clothing, Lo found the ten-dollar bill, miraculously still where it was placed in faith and love by a tender mother, doubtless with the prayer that it might save her little one's life. That it did. Wonderfully, Lactogen – milk powder of a special brand and a rare commodity in those parts – was found. And the one person in the area who knew the proper formula was Lo's wife. So when Helen Priscilla arrived at the mission compound in Wuhu, carried there in a coolie's vegetable basket, she was puzzled, perhaps, but in good spirits and in good health.*

*When the coffins were finally delivered to the missionary hospital in Wuhu, the heavy coffin lids were lifted to reveal the bodies, lying on their backs, modestly clothed in their underwear, just as they had trod the streets of Tsingteh a month and a half before. Each casket contained probably one hundred pounds of lime. The bodies, wrapped*

Notes:

____________________________________________________________
____________________________________________________________
____________________________________________________________

*in clean, white cotton sheeting, were preserved in good condition. Apart from deep rope bruises on John's wrists, there was no evidence of mutilation or abuse.*

*John's straight, aquiline nose and jutting chin were tilted in his customary posture of candor and open friendliness. His lips were parted in an expectant smile. One could easily believe that when the dagger struck, tearing a savage hold in the front of his throat, that he saw beyond his assassin to the angel hosts at the portals of heaven. Certainly there was no sign of fear or terror, leading us to conclude that the attack was sudden, and death almost immediate. What courage it must have taken for Lo to make even unskilled attempts to stitch up the torn throat to make it more respectable!*

*With Betty it was somewhat different. On her face serenity was blended with terror and consternation. Obviously she had witnessed what happened to her husband. But in the same split second a heavy sword swung across her neck from behind, almost severing head from body. Even here Lo had succeeded in sewing the head back on again so that it appeared almost natural. What struck each of us who saw the bodies and what made the sight unforgettable was the underlying look of quiet peace and expectancy on the faces of the two martyrs.*

*Their bodies lie buried in a little Christian cemetery on a quiet hillside in the rice-bowl city of Wuhu. There they await an Easter deliverance that was denied them on earth. The handful of China Inland Mission missionaries and local Christians at the simple burial service took comfort in God's assurance, "My ways are not your ways; neither are your ways My ways." But more than one was heard to say, "Why were the Stams, with all their gifts, taken at the very beginning of their missionary career? And why was I left?"*

*Only God has the answer.*

Notes:

______________________________________________________
______________________________________________________
______________________________________________________

Notes:

____________________________________________________________
____________________________________________________________
____________________________________________________________

Notes:

______________________________________________________________
______________________________________________________________
______________________________________________________________

## *4. எனக்கு உதவினார்கள்... அவர்களையும் துன்பம் துரத்துகிறது...*

*உங்களை குறித்தும், உங்கள் கஷ்டத்தில் உங்களுக்கு உதவியவர்களை குறித்தும் பிறர் பொய் சாட்சி சொல்கிறார்கள்; காரணம் நீங்கள்.*

*When the people give false witness against you and those who have helped you in trouble because of you –*

*சங்கீதம் 52*

**சூழல்**: *தாவீதுக்கு எதிராகவும், தாவீதுக்கு அப்பத்தையும் மற்றும் கோலியாத்தை தாவீது வீழ்த்தினபோது கோலியாத் பயன்படுத்தின பட்டயத்தையும் கொடுத்த ஆசாரியனாகிய நோப்பிறக்கும் எதிராக ஏதோமியனாகிய தோவேக்கு என்னும் பேருள்ள ஒருவன் பொய் சாட்சி கொடுத்தான். ஆகவே ஆசாரியர்களையும் மற்றும் ஆசாரிப்பு கூடாரத்தில் இருந்த வேறு சிலரையும் கொலை செய்வதற்காக தோவேக்கை அனுப்பினான் சவுல். தோவேக்கு 85 பேரை கொன்றான். ஆசாரியனை கொலை செய்த செய்தி தாவீதின் காதுக்கு எட்டினபோது, அவன் பாடின சங்கீதம் தான் சங்கீதம் 52.*

**வேதவாக்கியங்கள்**: *1 சாமுவேல் 21:1-9 &22:6-23*

*சங்கீதம்* 52:

**தீமை செய்வதையும் பொய் சொல்வதையும் விரும்பும் மனிதன்**

வ *1-4, Man who love to do evil and lying*

*1* **பலவானே, பொல்லாப்பில் ஏன் பெருமைபாராட்டுகிறாய்?**

**தேவனுடைய கிருபை எந்நாளுமுள்ளது.**

*2* **நீ கேடுகளைச் செய்ய எத்தனம்பண்ணுகிறாய்,**

**கபடுசெய்யும் உன் நாவு தீட்டப்பட்ட சவரகன் கத்தியைப்போல் இருக்கிறது.**

*3* **நன்மையைப்பார்க்கிலும் தீமையையும்,**

Notes:

___________________________________________________________
___________________________________________________________
___________________________________________________________

***யதார்த்தம் பேசுகிறதைப்பார்க்கிலும் பொய்யையும் விரும்புகிறாய்.***

*Selah (**சேலா**)*

*4 **கபடமுள்ள நாவே,***

***சங்கரிக்கும் சகல வார்த்தைகளையும் நீ விரும்புகிறாய்..***

ஏதோமியனாகிய தோவேக்கு தீமையான காரியம் ஒன்றை ராஜவாகிய சவுலிடம் அறிவிக்க வந்தான். தாவீது அதை குறித்து கேள்விப்பட்டபோது தோவேக்கின் பொல்லாத வழிகளை குறித்தும், அதை அறிவிக்கும்போது தோவேக்கினுடைய சுபாவத்தில் இருந்த தற்பெருமையும் பெருமகிழ்ச்சியையும் குறித்தும் தாவீது யோசித்தான்.

தோவேக் சாதாரண ஜனங்களில் 85 பேரை கொலை செய்தான், அதில் பலர் போருக்கென்று பயிற்சி பெறாத ஆசாரியர்களாய் இருந்தார்கள் – இது ஒரு உண்மையான வலிமை வாய்ந்த மனிதன் செய்யும் காரியம் அல்ல.

"ஒரு உண்மையான வலிமை வாய்ந்த மனிதன், இதுவரை பட்டயத்தையே தொட்டிறாத ஒருவனையா கொலை செய்வது! அவன் தன் கோழைத்தனத்திற்காக வெட்கப்படவேண்டும்."

## பரலோகத்தின் பதில்

வ 5, *Heavens response*

*5 **தேவன் உன்னை என்றென்றைக்கும் இராதபடி அழித்துப்போடுவார்;***

***அவர் உன்னைப் பிடித்து, உன் வாசஸ்தலத்திலிருந்து பிடுங்கி,***

***நீ ஜீவனுள்ளோர் தேசத்தில் இராதபடிக்கு உன்னை நிர்மூலமாக்குவார்.***

*Selah (**சேலா**)*

தோவேக்கும் அவனுடைய சுபாவம் உடையவர்களும் நித்திய நித்தியத்திற்கும் நிர்மூலமாக்கப்படுவார்கள். இப்படிப்பட்ட

Notes:

____________________________________________________________
____________________________________________________________
____________________________________________________________

அழிவுக்குரிய பொய்யர்கள் ஆள்வதற்கு தேவன் எப்பொழுதும் அனுமதிப்பதில்லை.

தோவேக்கை போல துன்மார்க்கருக்கு எதிரான நீயாயத்தீர்ப்பை குறித்த நான்கு தெளிவான வெளிப்பாட்டை தாவீது பயன்படுத்தினான்:

- The wicked will be demolished- துன்மார்க்கன் அழிக்கப்படுவார்கள்
  (destroy you - அழித்துப்போடுவார்)
- The wicked will be snatched up like a coal from a fire- துன்மார்க்கன் நெருப்பிலிருக்கும் ஒரு நிலக்கரியைப் போல் பொறிந்து போவான்
  (Take you away- உன்னை எடுத்து போடுவார்)
- The wicked will have their abode taken away- துன்மார்க்கனின் உறைவிடம் எடுத்துக்கொள்ளப்படும்
  *(Pluck you out of your dwelling place- உன் வாசஸ்தலத்திலிருந்து உன்னை பிடுங்கி)*
- The wicked will be uprooted like a tree- துன்மார்க்கன் ஒரு மரத்தைப்போல் வேரோடு எடுக்கப்படுவான்
  (uproot you- இராதபடிக்கு உன்னை நிர்மூலமாக்குவார்)

### பொதுவான பதில்

*வ 6-7, General response*

***6 நீதிமான்கள் அதைக் கண்டு பயந்து, அவனைப்பார்த்து நகைத்து:***

***7 இதோ, தேவனைத் தன் பெலனாக எண்ணாமல்,***

***தன் செல்வப்பெருக்கத்தை நம்பி,***

***தன் தீவினையில் பலத்துக்கொண்ட மனுஷன் இவன்தான் என்பார்கள்.***

தோவேகிற்கு எதிராக வரும் நியாயத்தீர்ப்பை தேவனுடைய மக்கள் காண்பார்கள். அது அவர்கள் தேவனை மடிமைப்படுத்துவதற்கும் அவர் மேல் அவர்கள் மதிப்பும் மரியாதையும் செலுத்தவும் தூண்டும்.

Notes:

________________________________________________________

________________________________________________________

________________________________________________________

மக்கள் அநேக நேரத்தில் பொல்லாதவர்களாகவும் பொய்யர்களாகவும் இருக்க இழுக்கப்படுகிறார்கள் ஏனென்றால் தேவனால் எல்லாம் கூடும் என்பதையும் அவர் நன்மையாகவும் உண்மையாகவும் எல்லாவற்றையும் செய்து முடிப்பார் என்பதை அவர்கள் நம்ப தவறுகிறார்கள். இந்த தீய செயலைச் செய்ய வேண்டும் அல்லது இந்த பொய்யை வளர்த்துத்தான் இந்த காரியங்களை செய்து முடிக்க வேண்டும் என்று எண்ணி அவர்களே தங்களிடம் பொய் கூறிக்கொள்கிறார்கள்.

*“செல்வமும் துன்மார்க்கமும் பயங்கரமான தோழர்கள்; அவர்கள் ஒன்றாய் இணையும்போது ஒரு அரக்கனை உருவாக்குகிறார்கள்”*

## தாவீதின் பதில்

*வ 8-9 David's response*

*8 நானோ தேவனுடைய ஆலயத்தில் பச்சையான ஒலிவமரத்தைப் போலிருக்கிறேன்;*

**தேவனுடைய கிருபையை என்றென்றைக்கும் நம்பியிருக்கிறேன்.**

*9 நீரே இதைச் செய்தீர் என்று உம்மை என்றென்றைக்கும் துதித்து உமது நாமத்திற்குக் காத்திருப்பேன்; உம்முடைய பரிசுத்தவான்களுக்கு முன்பாக அது நலமாயிருக்கிறது.*

- “தாவீது கர்த்தருடைய ஆலயத்தில் இருந்தான், அவர்களோ உலகத்தில் இருந்தார்கள்;
- அவன் ஒரு கனிகொடுக்கும் ஒலிவ மரமாக இருந்தான், அவர்களோ கனிகொடாத, ஒன்றுக்கும் உதவாத மரமாய் இருந்தார்கள்.
- அவன் தினந்தோறும் மேலும் மேலும் பெலப்பட்டு, நிறைவுப்பட்டு, குடியேறி, மற்றும் அதிகரித்தவனாக இருந்தான். அவர்களோ வீழ்த்தப்பட்டு உடைக்கப்பட்டு அடிக்கப்பட்டு வெளியேற்றப்பட்டவர்களாய் இருந்தார்கள்.
- இவை அனைத்திற்கும் காரணம் என்னவென்றால் தாவீது தேவனுடைய இரக்கத்தின் மேல் நம்பிக்கையாய்

Notes:

__________________________________________________________
__________________________________________________________
__________________________________________________________

இருந்தான் அவர்களோ தங்களுடைய மிகுதியான ஐசுவரியத்தின் மேல் நம்பிக்கையாய் இருந்தார்கள்."

பராக்கிரமசாலிகள் தற்பெருமைக் கொள்ளட்டும் நாம் கர்த்தருக்குக் காத்திருப்போம்; அவர்களின் அவசரம் அவர்களுக்கு புகழை கொண்டுவந்தாலும், குறித்த காலத்தில் நம்முடைய பொறுமை நமக்கு சிறந்த புகழை கொண்டுவரும்."

## சுருக்கம்

*Summary*

தாவீது இந்த சங்கீதத்தை நன்றியுடன் முடித்தான்; இது தேவனுடைய செயல், அவருடைய நடத்துதல் என்று தாவீது ஒப்புக்கொண்டான்.

தோவேக்கிடமிருந்தும், அதன் பின் வர இருந்த ஆபத்துக்களிலிருந்தும் தப்பிப்பதற்கு முற்றிலும் காரணமாக இருந்தது தெய்வீக பாதுகாப்பு என்று தாவீது அறிவிக்கிறான். மேலும் தாவீது தம்முடைய வாழ்நாள் முழுவதிலும் நன்றியறிதலுள்ள உணர்வைத் தக்கவைத்துக் கொள்வதாக வாக்களிக்கிறான்.

நம்பிக்கையோடு இணைந்த நன்றியறிதலை தாவீது பேசுகிறான். அவனை பொறுத்தவரையில் கர்த்தருக்கு பொறுமையாக காத்திருப்பது என்றால் அவருடைய இரக்கத்தை எதிர்பார்த்திருப்பது; அவருடைய இரக்கம் குறைந்த அளவே காணப்பட்டாலும் அதை குறித்து அவன் கவலைப்படுவதில்லை.

தேவனின் நாமம் நல்லது என்பதை பிரதிபலிப்பதன் மூலம், அவனுடைய நம்பிக்கை வீண் போகாது என்ற நம்பிக்கையில் அவன் தன்னை தானே உற்சாகப்படுத்துகிறான்.

## ஸ்தேவானின் வாழ்க்கை

அப்போஸ்தலர் 6:11-15,

11.அப்பொழுது அவர்கள்: மோசேக்கும் தேவனுக்கும் விரோதமாக இவன் தூஷண வார்த்தைகளைப் பேசக்கேட்டோம் என்று சொல்லும்படியாக மனுஷரை ஏற்படுத்தி.

Notes:

_______________________________________________________
_______________________________________________________
_______________________________________________________

*12.ஜனங்களையும் மூப்பரையும் வேதபாரகரையும் எழுப்பிவிட்டு; அவன்மேல் பாய்ந்து, அவனைப் பிடித்து, ஆலோசனை சங்கத்தாருக்கு முன்பாக இழுத்துக்கொண்டுபோய்.*

*13. பொய்ச்சாட்சிகளையும் நிறுத்தினார்கள். இவர்கள்: இந்த மனுஷன் இந்தப் பரிசுத்த ஸ்தலத்துக்கும் வேதப்பிரமாணத்துக்கும் விரோதமாகத் தூஷண வார்த்தைகளை ஓயாமற் பேசுகிறான்.*

*14. எப்படியென்றால் நசரேயனாகிய அந்த இயேசு இந்த ஸ்தலத்தை அழித்துப்போட்டு, மோசே நமக்குக் கொடுத்த முறைமைகளை மாற்றுவானென்று இவன் சொல்லக் கேட்டோம் என்றார்கள்.*

*15. ஆலோசனை சங்கத்தில் உட்கார்ந்திருந்த அனைவரும் அவன்மேல் கண்ணோக்கமாயிருந்து, அவன் முகம் தேவதூதன் முகம்போலிருக்கக் கண்டார்கள்.*

ஸ்தேவானைக் கொலை செய்ய பொய் சாட்சி ஏற்படுத்தி சதித்திட்டம் தீட்டப்படுவதை மேலே உள்ள வசனங்களிலே நாம் பார்க்கலாம். இத்தகைய சூழ்நிலையை நீங்களும் கடந்திருப்பீர்கள், நீங்கள் எவ்வாறு பதிலளிக்கிறீர்கள்?

## செயல்படுத்துதல்

*Application*

உங்களை சுற்றி நடக்கும் எல்லாவற்றிலும் தேவனுடைய கரத்தை காண்கிறீர்களா?




Notes:

__________________________________________________________________
__________________________________________________________________
__________________________________________________________________

*இந்த சங்கீதத்திலிருந்து நாம் தாவீது பயன்படுத்தும் ஒரு உவமையை பார்க்க முடியும்.*

*தாவீது கர்த்தருடைய ஆலயத்தில் ஓர் ஒலிவ மரம் போல இருக்கிறான் (வ8), அப்படியிருக்க எதிரிகளோ முற்றிலுமாக பிடுங்கப்படும் ஒரு செடியை போல் இருக்கிறார்கள் (வ5). எதிரியின் வேர்கள் பிடுங்கப்பட்டு அழிக்கப்படும். தாவீதின் வேர்களோ நன்கு பயிரிடப்பட்ட ஒலிவ மரம் போலவும், நிரம்பி வழியத்தக்க பலந்தருவதாகவும் இருக்கும்.*

*இங்கே ஒலிவ மரத்தைப் பற்றி தாவீது குறிப்பிடுகிறார். ஒருவேளை அவர் இங்கே காட்ட விரும்பும் முக்கிய விஷயம் ஒரு ஒலிவ மரத்தின் தொடர்ச்சியான, ஏறக்குறைய நித்திய வாழ்க்கையை குறித்து இருக்கலாம்.*

*அவைகள் களைகளைப் போலவும், நூற்றுக்கணக்கான ஆண்டுகளாக வளரும் ஒலிவ மரத்திற்கேதுவான தன்மையுடையவர்கள். ரேடியோ கார்பன் டேட்டிங் (Radio carbon dating) முறைப்படி, போர்ச்சுகல் நாட்டில் அல்கர்கில் நகரில் உள்ள (*Algarve, Portugal*) ஒரு ஒலிவ மரம் 2000 ஆண்டுகள் பழமையானது. சொல்லப்போனால் இன்றும் இஸ்ரவேல் மற்றும் கலிலேயாவிலும் 2000 ஆண்டுகள் ஏறக்குறைய 3000 ஆண்டுகள் பழமையான பல மரங்கள் உள்ளன; ஆயினும் அவை இன்னும் கனி கொடுத்துக் கொண்டிருக்கின்றன!*

*தாவீதின் மனதில் ஒலிவ மரத்தின் கனிகளை குறித்த எண்ணம் இருந்திருக்கலாம். மரங்கள் உண்ணக்கூடிய ஏராளமான பழங்களை அளிக்கின்றன ஆனால் பல சமயங்களில் ஒலிவமரத்தின் கனிகளிலிருந்து எண்ணெய் வார்க்கப்பட்டு சமையலுக்காகவும், விளக்கிற்காகவும், நம் உடலில் (*skin*) தேய்ப்பதற்காகவும் கூட பயன்படுத்தப்படுகின்றன. தாவீது ஒலிவ மரம் போல இருந்தான்; நடைமுறையில் ஒலிவ மரம் நித்தியத்திற்கும் நிலைத்திருப்பதைப்போல. தனக்கு எந்த தீங்கு நேரிடாதபடிக்கு ஒலிவ மரத்தைப்போல ஆழமாக வேரூன்றியிருந்தான். அவன் மிகச்சிறந்த இடமாகிய தேவனுடைய ஆலயத்தில் நாட்டப்படுவதால் அவன் தொடர்ந்து வளர்ந்து செழிப்பான்.*

Notes:

________________________________________________________

________________________________________________________

________________________________________________________

### நீங்கள் தேவனில் வேரூன்றியிருக்கிறீர்களா?

*யோவான் 15:5.*

*5. நானே திராட்சச்செடி, நீங்கள் கொடிகள். ஒருவன் என்னிலும் நான் அவனிலும் நிலைத்திருந்தால், அவன் மிகுந்த கனிகளைக் கொடுப்பான்; என்னையல்லாமல் உங்களால் ஒன்றும் செய்யக்கூடாது.*

உங்கள் உடலின் தேவைகளானாலும், ஆவிக்குரிய தேவைகளானாலும், உள்ளம்/உணர்வு ரீதியான தேவைகளானாலும் நீங்கள் கிறிஸ்துவிடம் இருந்து பெற்றுக்கொள்கிறீர்களா?

*Are you drawing your every need physical, spiritual, emotional needs from Christ, whom you have been joined a branches?*

தாவீதைப் போல் கஷ்டங்களில் நாம் கடந்து செல்லும்போது, கருத்தாய் தேவனை நோக்கி-பார்ப்பதற்கு நாம் நேரம் செலவிடுகிறோமா?

*When we go through such difficulty like David, do we take time to focus upon God?*

Notes:

____________________________________________________________
____________________________________________________________
____________________________________________________________

Notes:

________________________________________________________________
________________________________________________________________
________________________________________________________________

Notes:

_______________________________________________________________
_______________________________________________________________
_______________________________________________________________

## 5. எல்லாருக்கும் அவசியமில்லாதவன் – I

நீங்கள் பிரச்சனையில் இருக்கும்போது எதிரிகளுக்கு கூட நீங்கள் தேவையில்லை. எல்லோரும் உங்களுக்கு எதிராக இருப்பதாக நீங்கள் உணர்கிற தருணம்

*When you are in trouble even the enemies don't want you… when you feel everyone is against you. -.*

*சங்கீதம் 56*

**சூழல்:** தாவீது சவுலுக்குப் பயந்ததினால் காத் என்னும் பெலிஸ்தியப் பட்டணத்திற்குள் தப்பி ஓடினான். அவனுடன் கோலியாத்தின் பட்டயத்தையும் எடுத்து கொண்டு சென்றான். அவனுக்கு காத்தின் இராஜாவின்மேல் ஒரு புதிய பயம் ஏற்பட்டதால் அவர்கள் கண்களுக்கு முன்பாகத் தன் முகநாடியை வேறுபடுத்தி வாசற்கதவுகளிலே கீறிக்கொண்டிருந்து தன் வாயிலிருந்து நுரையைத் தன் தாடியில் விழப்பண்ணிக் கொண்டிருந்தான்.

**வேதவாக்கியங்கள்**: *1 சாமுவேல் 21:10-15 & 29: 1-5*

*சங்கீதம் 56*

**ஆபத்து தொடரும்போது பயமும் விசுவாசமும் வெளிப்படுதல்**

*Exhibiting Fear and Faith to constant Danger-*

இரக்கத்திற்காக கர்த்தரிடம் நோக்குவது

வ *1-2, Looking to God for Mercy-*

*1.* **தேவனே, எனக்கு இரங்கும்; மனுஷன் என்னை விழுங்கப்பார்க்கிறான், நாள்தோறும் போர்செய்து, என்னை ஒடுக்குகிறான்.**

*2.* **என் சத்துருக்கள் நாள்தோறும் என்னை விழுங்கப்பார்க்கிறார்கள்; உன்னதமானவரே, எனக்கு விரோதமாய் அகங்கரித்துப் போர் செய்கிறவர்கள் அநேகர்.**

Notes:

________________________________________________________
________________________________________________________
________________________________________________________

தாவீது சவுலின் ஊழியர்களிடமிருந்தும் பெலிஸ்தரின் எதிரிகளிடமிருந்தும் தொடர்ந்து ஆபத்தில் இருந்தான். எந்த மனிதனும் அவனுக்கு உதவ முடியாது என்பதையும் தேவனை மட்டுமே உதவிக்கு நாட முடியும் என்பதையும் அவன் முழுமையாக அறிந்து தேவனை மாத்திரம் தேடினான். தனக்கு உரிமையானதை கேட்காமல் பரலோக இரக்கத்தின்படியே தனக்கு தேவன் இரங்கும்படி வேண்டுகிறான்.

நீங்கள் ஒரு அலையினால் அடிக்கப்படும்போது மூச்சு விடுவதற்குள்ளாக அடுத்தடுத்து தொடர்ந்து அலைக்கழிக்கப்படுவதை உணர்ந்திருக்கிறீர்களா? இந்த சங்கீதம் அப்படிப்பட்ட உணர்வுகளையே வெளிப்படுத்துகின்றது. தாவீது பயத்திலும் விசுவாசத்திலும் மாறி மாறி தடுமாறிக்கொண்டிருக்கிறான்.

வசனங்கள் 1-2ல் முதல் அலையை பார்க்கிறோம். தாவீதின் சூழ்நிலையையும் அவருடைய உயிரை எடுக்க விரும்பும் மக்களையும் பற்றி சிந்திக்கையில், பயம் அதிகரிப்பதையும் மேகம்போன்ற நிச்சயமற்ற சூழல் அவரது தலையை சூழ்ந்து வட்டமிடுவதையும் காணமுடிகிறது.

தாவீது தேவனிடம் தனது புகாரையோ கவலையையோ கூறவில்லை; ஆனால் அவன் நேரடியாக தனது இதயத்தை தேவனிடம் ஊற்றினார். நான் மிகவும் விரும்புகிறது என்னவென்றால் தாவீது தேவனுக்கு முன்பாக திறந்த மனதோடு பேசுகிறான்.

### பயப்படுவதா இல்லையா

வ 3-4, *Afraid NOT afraid*

**3. நான் பயப்படுகிற நாளில் உம்மை நம்புவேன்.**

**4. தேவனை முன்னிட்டு அவருடைய வார்த்தையைப் புகழுவேன்; தேவனை நம்பியிருக்கிறேன், நான் பயப்படேன்; மாம்சமானவன் எனக்கு என்ன செய்வான்?**

சிங்கத்தையும் மற்றும் கரடியையும் ஒரு காலத்தில் ஆயுதம் எதுவுமின்றி தனது கைகளால் கொன்ற அச்சமற்ற இளைஞன்;

Notes:

____________________________________________________
____________________________________________________
____________________________________________________

மட்டுமல்லாமல் கோலியாத் என்கிற இராட்சத பெலிஸ்தியனை கொன்றவன்;

இஸ்ரவேலின் இராணுவத்தில் ஒரு வெற்றிகரமான இளம் இராணுவ படைத்தலைவன். ஆனாலும் தான் பயப்படுவதை அவன் மறுக்கவில்லை.

அவன் **பயந்த** வேளைகளும் உண்டு.

ஆயினும், அந்த பயத்தோடு என்ன செய்ய வேண்டுமென்று அவன் அறிந்திருந்தான். பயம் இருந்தபோதிலும், **தேவன்மீது இருக்கும் நம்பிக்கையை** அவன் தைரியமாக அறிவித்தான்.

அவன் பயந்தான் ஆனால் அந்த பயம் அவனது மனதின் முழுப் பகுதியையும் நிரப்பவில்லை. அவன் மேலும் சொல்லுகிறான், 'நான் உம்மை நம்புவேன்.' ஆக, பயமும் விசுவாசமும் ஒரே கணத்தில் நம்முடைய மனதை ஆட்கொள்ள முடியும்.



அலை அடிக்கும்போது, நாம் சுவாசத்துக்காக நீரைவிட்டு மேலே வருவதைப் போலவே, பயம் தன்னை சூழும்போது தாவீது மீண்டும் மீண்டும் தேவனையும் அவரிடம் இருக்கும் பாதுகாப்பையும் நினைவுகூர்ந்தான். அவ்வாறு செய்யும்போது, விசுவாசம் அவனுடைய இருதயத்தில் எழும்புகிறது.

“நான் பயப்படுகிற நாளில் உம்மை நம்புவேன்.” இந்த வசனத்தில் அச்சமும் விசுவாசமும் ஒன்றாக இருப்பதைக் காண்கிறோம்.

இப்படித்தான் நம் அனுதின வாழ்க்கையிலும் இருக்கும். முழுதுவதுமாக, உங்கள் கவனம் எங்கு இருக்கிறது என்பதையே சார்ந்திருக்கிறது.

நாம் தேவனை விசுவாசிக்கிறோம் என்று சொல்லுகிறோம், ஆனால் தேவனைப் பற்றி எப்படி உறுதியாக தெரிந்துகொள்கிறோம்? அவருடைய வார்த்தையினாலும்,

Notes:

________________________________________________________
________________________________________________________
________________________________________________________

*நமக்கு அவர் தரும் வெளிப்பாடுகளின் மூலமும், அவரை நாம் அறிகிறோம்.*

*தாவீது இஸ்ரவேலின்மேல் ராஜாவாக இருப்பான் என்று (1* ***சாமுவேல்*** *16:1-13) தேவன் தமது தீர்க்கதரிசியாகிய சாமுவேலின் மூலமாக தாவீதிற்கு அறிவிக்கிறார். இங்கு தாவீது குறிப்பாக தேவன் தனக்கு செய்த வாக்குறுதியை பற்றி யோசித்துக்கொண்டிருந்தான்.*

*நாம் வெறும் மனிதர்களால் நமக்கு வரும் துன்பங்களை குறித்து கேள்விப்படுகிறோம் சிந்திக்கிறோம். ஆனால் இங்கு தாவீது, "மனிதன் எனக்கு என்ன தீங்கு செய்யக்கூடும்?" என்று உறுதியாக கூறுகிறான்.*

## தொடரும் ஆபத்து

வ 5-7 *Constant danger*

*5.* ***நித்தமும் என் வார்த்தைகளைப் புரட்டுகிறார்கள்; எனக்குத் தீங்குசெய்வதே அவர்கள் முழு எண்ணமாயிருக்கிறது.***

*6.* ***அவர்கள் ஏகமாய்க் கூடி, பதிவிருக்கிறார்கள்; என் பிராணனை வாங்க விரும்பி, என் காலடிகளைத் தொடர்ந்து வருகிறார்கள்.***

*7.* ***அவர்கள் தங்கள் அக்கிரமத்தினால் தப்புவார்களோ? தேவனே, கோபங்கொண்டு ஜனங்களைக் கீழே தள்ளும்.***

*'மாம்சமானவன் எனக்கு என்ன செய்வான்?' இது தான் வசனம் 4ன் இறுதியில் தாவீதின் அறிக்கையாய் இருந்தது. ஆனால் 5-7 வசனங்களில், மறுபடியும் 'தான் பார்க்கும் விஷயங்களை' கவனிக்கும்போது, அடுத்ததாக ஒரு சந்தேகத்தின் அலை அவன் மீது வருவதை காண்கிறோம். இது விசுவாசிகள் குறிப்பாக செய்ய கூடாது என்று கூறப்பட்ட ஒன்று! (2 கொரிந்தியர் 4:18 )*

*தாவீது மீதான தாக்குதல்கள் வன்முறையானது மட்டுமல்ல, அவனுடைய வார்த்தைகளையும் எண்ணங்களையும் திரித்துக்கூறக் கூடிய வஞ்சகம் மிகுந்தும் கூட.*

*அவர்களின் தாக்குதல்கள் தொடர்ச்சியாக இருந்தது, அதனால் தான் தாவீது "நாள் முழுதும்" என்று வசனங்கள் 1, 2 மற்றும் 5ல் சொல்லுகிறான்.*

Notes:

___________________________________________________________
___________________________________________________________
___________________________________________________________

தேவபக்தியற்ற மக்கள் தங்களுடைய போராட்டங்களில் உங்கள் வார்த்தையை திரித்துவிடுவார்கள்.

இப்பொழுது உங்கள் மீது ஈட்டி எரிகின்ற பைத்தியம் பிடித்த இராஜாவால் துரத்தப்படாமல் இருக்கலாம். ஆனால் நீங்கள் பயப்படுகிற அல்லது கவலைப்படுகிற சூழ்நிலைகள் இருக்கிறதா?

தாவீது நீதிக்காக தேவனிடம் முறையிட்டான். துன்மார்க்கர்கள், அது சவுலின் ஆட்களானாலும் சரி அல்லது பெலிஸ்தியர்களானாலும் சரி, அவர்கள் வெற்றிபெறுவது சரியல்ல என்று தாவீது உணர்ந்ததான். ஆகவே தாவீது விரும்பியதெல்லாம் தேவனே அவர்களை கீழே தள்ளி விடுவார் என்பதே.

## தாவீதின்மேல் தேவனுடைய அக்கறை

*Gods Care for David-*

### *தேவன் தாவீதின் பிரச்சனைகளை அறிந்திருந்தார்*

*வ8-9, God knew the David troubles*

> 7. **என் அலைச்சல்களை தேவரீர் எண்ணியிருக்கிறீர்; என் கண்ணீரை உம்முடைய துருத்தியில் வையும்; அவைகள் உம்முடைய கணக்கில் அல்லவோ இருக்கிறது?**
>
> 9. **நான் உம்மை நோக்கிக் கூப்பிடும் நாளில் என் சத்துருக்கள் பின்னிட்டுத் திரும்புவார்கள்; தேவன் என் பட்சத்தில் இருக்கிறார் என்பதை அறிவேன்.**

Notes:

__________________________________________________________
__________________________________________________________
__________________________________________________________




*சந்தேகத்திற்கும் குழப்பத்திற்கும் நடுவில் தான் இருந்தாலும் தேவன் தனக்காக இருக்கிறார் என்கிற ஒன்றை மாத்திரம் தாவீது நிச்சயமாய் அறிந்திருந்தான். ஒருவேளை அவனை சுற்றி பல விஷயங்கள் நடப்பதையே அவன் அறியாமல் இருக்கலாம் ஆனால் “தேவன் எனக்காக இருக்கிறார்” என்பதை அவனால் தைரியமாக சொல்லமுடிந்தது.*

*இந்த சூழ்நிலையில் நாம் தாவீதிடம், “**நீர் எப்பொழுது இஸ்ரவேலின் ராஜாவாக ஆவீர்?**” என்று கேட்போமானால், அவனது பதில் சுருக்கமாக, “**எனக்கு தெரியாது**” என்பதாகத்தான் இருந்திருக்கும். ஆனால், “தேவன் எனக்கு இருக்கிறார், அவர் எனக்கு பாதைகளை உண்டாக்குவார் என்ற ஒரு காரியத்தை மாத்திரம் நிச்சயமாக அறிந்திருக்கிறேன், இதுதான் நான் தெரிந்து கொள்ள வேண்டிய காரியமும்கூட” என்றுதான் பதிலளித்திருப்பான்.*

*இந்த சூழ்நிலையில் தாவீது தனியாக இருந்தான், ஆயினும் அவன் தேவனின் அனுதாபத்தையும் அக்கறையையும் மேன்மையாக கருதினான். தேவன் தன்னுடைய துயரத்தை குறித்துவைக்கிறார் என்ற எண்ணத்தில் அவன் மிகுந்த ஆறுதலையும் கண்டான்.*

*தாவீதின் அலைச்சல்களும் கண்ணீரும் தேவன் அவனுக்கு எதிராக இருக்கின்றார் என்று அர்த்தமில்லை. அதற்கு பதிலாக தேவன் தனக்காக இருக்கிறார் என்பதையும் தன்னை மீட்கும்படி தான் ஜெபித்ததற்கு அவர் பதிலளிப்பார் என்பதயும் அறிந்திருந்தான்.*

Notes:

________________________________________________________________
________________________________________________________________
________________________________________________________________

அப்போஸ்தலனாகிய பவுலும் தேவன் எனக்காக இருக்கும் போது எனக்கு விரோதமாக யார் நிற்க கூடுமென்ற அதே வார்த்தைகளை அறிக்கையிட்டார்.

இப்போது, இந்த இடத்தில் "தேவன் எனக்காக இருக்கிறார்" என்று உங்களால் சொல்ல முடியுமா?

அதை அவரது பிரசன்னத்தில் நீங்கள் அறிகிறீர்களா?

உங்களுடைய ஞானத்தில் மட்டுமல்ல, உங்களை சுற்றியுள்ள சூழ்நிலைகள் அதற்கு முற்றிலும் எதிர்மறையாக இருந்தாலும், அந்த எண்ணத்தில் வேரூன்றி நிற்க முடியுமா?

"அதிகமாய் எதுவும் தெரியாமல் இருக்கலாம் ஆனால் எனக்காக அவர் இருக்கிறார் என்று மட்டும் எனக்கு தெரியும். அது எனக்கு போதும். அதில் நான் இளைப்பாறுவேன்!" என்று தாவீது சொல்லியிருப்பான்.

### தேவன் மேல் இருக்கும் நம்பிக்கையை அறிக்கையிடுதல்

வ 10-11 Confidence in God declared-

*10.* **தேவனை முன்னிட்டு அவருடைய வார்த்தையைப் புகழுவேன்; கர்த்தரை முன்னிட்டு அவருடைய வார்த்தையைப் புகழுவேன்.**

*11.* **தேவனை நம்பியிருக்கிறேன், நான் பயப்படேன்; மனுஷன் எனக்கு என்னசெய்வான்?**

இந்த சங்கீதத்தில் மூன்றாவது முறையாக தேவனுடைய வார்த்தையின் மகத்துவத்தை தாவீது அறிவிக்கிறார். தேவன் தனக்காக இருக்கிறார் என்பதை தாவீது இதன்மூலமாகவே அறிந்திருந்தான். இது ஒரு ஆசையோ, ஒரு கனவோ, அல்லது ஒரு நம்பிக்கையோ அல்ல. தேவன் அவரது வார்த்தையில் சொன்னபடியால், அந்த அடித்தளத்தில் வேரூன்றப்பட்ட உண்மை.

இனி தாவீதிற்கு 'வீழ்ச்சி' என்பதே இல்லை!

மீண்டும் அவன்:

- தேவனுடைய வார்த்தையை நினைவுகூருகிறான்.

Notes:

________________________________________________________
________________________________________________________
________________________________________________________

- தேவனுடைய வாக்குறுதிகளை நினைவுகூருகிறான்.
- தேவனுடைய உண்மையை நினைவுகூருகிறான்.

தேவன் மீது நான் என் நம்பிக்கையை வைத்தேன்; நான் பயப்படமாட்டேன். மனிதன் எனக்கு என்ன செய்ய முடியும்: தாவீது இந்த சொற்றொடரை மீண்டும் உரைத்து, தனக்கே நம்பிக்கையைப் பிரசங்கித்துக்கொண்டான்.

தேவன் தாவீதிற்காக இருக்கின்றார் என்பதை தேவனுடைய வார்த்தையினால் உறுதிப்படுத்தினார். மனுஷன் தனக்கு என்ன செய்யக்கூடும் என்று தாவீது அஞ்சவில்லை.

இராஜாவும் போப்பும் தன்னை மிரட்டுகிறார்கள் என்ற செய்தியை கேட்டபொழுது, லூதர் Luther தைரியமாக பதிலளித்தார், தேவனை தலையிடுவதற்கு இனி வேண்டுவதில்லை. நான் அவர்கள் இருவரையும் குறித்து கவலைப்படவில்லை, என்னுடைய நம்பிக்கை யார் மீது உள்ளது என்று எனக்கு தெரியும்.

இப்பொழுது தாவீது மாறாக தேவனிடம் எதையாவது திரும்ப கொடுக்க விரும்பினான். தேவன் உண்மையாக விரும்பும் பரிசும், நாம் கொடுக்க முடிகிற ஒரே சிறந்த பரிசுமாய் இருப்பது என்னவென்றால் நமது ‘நன்றி’ மாத்திரம் தான்.

தாவீது தனது கஷ்டங்களின் மத்தியிலும் இந்த நிலை வரை வந்தான். எல்லாம் இனிமையாக நடக்கும்போது, நாள் முழுவதும் பாடுவது எளிது. ஆனால், விசுவாசத்திற்கும் சற்று மேலாக தேவனுடைய குணத்தில் நம்பிக்கை வைத்து அந்தகாரத்தில் துதித்து பாடும் பாடலாக இருக்கிறது. இது கர்த்தருடைய பார்வையில் மிகவும் அங்கீகரிக்கத்தக்க பலி.

## பொருத்தனையை நிறைவேற்றுதல்

*வ 12-13 Fulfilling the vow –*

*12.* **தேவனே, நான் உமக்குப் பண்ணின பொருத்தனைகள் என்மேல் இருக்கிறது; உமக்கு ஸ்தோத்திரங்களைச் செலுத்துவேன்.**

*13.* **நான் தேவனுக்கு முன்பாக ஜீவனுள்ளோருடைய வெளிச்சத்திலே நடக்கும்படி, நீர் என் ஆத்துமாவை**

Notes:

__________________________________________________________
__________________________________________________________
__________________________________________________________

*மரணத்துக்கும் என் கால்களை இடறலுக்கும் தப்புவியாதிருப்பீரோ?*

தேவன் கொடுப்பார் என்று அறிந்திருந்த மீட்பிற்கென்று கொடுக்கக்கூடிய பலியை பற்றி தாவீது குறிப்பிடுகிறான். தேவனுடைய பலிபீடத்திலிருந்து அவன் நீண்ட தூரத்திலிருந்தான் ஆகையால் இன்னும் பலியை செலுத்தக்கூடாதபடிக்கு இருந்தது. ஆனால் தாவீது தன் இதயத்திலே அந்த பலியை ஏற்கெனவே செலுத்திவிட்டான்; அவன் எதிர்பார்த்திருந்த மீட்பும் அதைப்போலவே ஏற்கனவே முடிக்கப்பட்டிருந்தது.

அந்த விடுதலையானது தேவனிடமிருந்து வரும் என்று அவன் மிகவும் உறுதியாக இருந்தான். எனவே, உண்மையில் அது நடப்பதற்கு முன்னரே அவனுடைய எண்ணங்கள் எல்லாம் நன்றி பலி செலுத்துவதை குறித்ததாகவே இருந்தது.

*“நன்றி செலுத்துதல்” என்பது பலிகளை குறிப்பதற்கும் (லேவி 7:12) நன்றியுணர்வின் பாடல்களை குறிப்பதற்கும் (சங்கீதம் 26:7) பயன்படுத்தப்படும் சொல்.*

காத் ஊருக்கு போகும்வழியிலும், காத் ஊரில் இருக்கும்போதும், காத் ஊரிலிருந்து வரும்போதும் தாவீதினுடைய வாழ்வில் தொடர்ச்சியாக ஆபத்து இருந்தது. தேவன் மாத்திரமே தாவீதை அவனுடைய எதிரிகளிடம் இருந்து அவன் கால்களும்கூட இடராமல் காத்தார்!

தேவன் தாவீதின் உயிரை காத்ததின் காரணம் என்ன என்பதை தாவீது அறிந்திருந்தான். அது தாவீது தன்னுடைய சொந்த காரியத்தைச் செய்யவோ அல்லது தனக்காக வாழ்வதற்காகவோ இல்லை. தேவனுக்கு முன்பாக அவன் நீதியாய் இருப்பதற்காகவே.

## அப்போஸ்தலனாகிய பவுலின் வாழ்க்கை

*Life of Apostle Paul*

*2 **தீமோத்தேயு** 4:16-17, நான் முதல்விசை உத்தரவுசொல்ல நிற்கையில் **ஒருவனும் என்னோடேகூட இருக்கவில்லை, எல்லாரும் என்னைக்கைவிட்டார்கள்**; அந்தக் குற்றம் அவர்கள்மேல் சுமராதிருப்பதாக.[17] **கர்த்தரோ எனக்குத் துணையாக நின்று**, என்னாலே பிரசங்கம்*

Notes:

____________________________________________________________
____________________________________________________________
____________________________________________________________

நிறைவேறுகிறதற்காகவும், புறஜாதியார் கேட்கிறதற்காகவும், **என்னைப் பலப்படுத்தினார்**; சிங்கத்தின் வாயிலிருந்தும் நான் இரட்சிக்கப்பட்டேன்.




அப்போஸ்தலனாகிய பவுலுக்கு பல சகபணியாளர்கள் இருந்தார்கள் ஆனால், அவரை பாதுகாக்க வேண்டிய நேரத்திலோ யாரும் இல்லை. ஆனால் பவுலோ தேவனை தவிர வேறு யாரையும் ஏறெடுத்து பார்க்கவில்லை

பவுல் தேவனிடத்திலிருந்து பலத்தையும் மற்றும் உற்சாகத்தையும் பெற முடிந்தது. அவருடைய கவனம் தேவனிடத்தில் மட்டும் இருந்தது.

### செயல்படுத்துதல்

*Application:*

### இன்றைக்கு தேவனுடைய வாக்குத்தத்தம்

*God's promise today*

**எபிரேயர்** *13:6, அதினாலே நாம் தைரியங்கொண்டு:* ***கர்த்தர்*** *எனக்குச் சகாயர், நான் பயப்படேன், மனுஷன் எனக்கு என்னசெய்வான் என்று சொல்லலாமே.*

Notes:

____________________________________________________________
____________________________________________________________
____________________________________________________________

தாவீது அவருடைய வாழ்க்கையில் பார்த்த மற்றும் நம்பியிருந்த தேவனுடைய மீட்பாகிய வாக்குறுதியே நமக்கும் கொடுக்கப்பட்ட வா க்குறுதியாய் இருக்கிறது .எபிரெயருக்கு எழுதிய கடிதம் தேவன் நமக்கு எவ்வகையான உதவியாளராக இருக்கிறார் என்பதை புரியவைப்பதற்காக இந்த சங்கீதத்தை மேற்கோள் காட்டுகிறது.

ஆதலால் 56-ஆம் சங்கீதத்தின் செய்தி நிச்சயமாக நம் வாழ்விற்கு பொருந்துவதாக இருக்கிறது.

தேவன் மீது நம்பிக்கை வைத்திருப்பீர்களானால், அது எப்படி உங்கள் வாழ்க்கையில் பயத்தை அகற்றுகிறது?

### தேவனுடைய வசனமே நம்முடைய நம்பிக்கையின் ஆதாரமாக இருக்கிறது

*God's Word is our source of confidence*

"வார்த்தையாகிய தேவனை துதிப்பேன்" என்று தாவீது திரும்ப திரும்ப உறுதியாய் சொன்னார். நாம் தாக்கப்படுகையில் எப்பொழுதும் மாறி மாறி வரும் பொதுமக்களின் கண்ணோட்டங்களைவிட தேவனுடைய வார்த்தையின் உறுதியான உத்தரவாதத்தை நாம் பிடித்துக்கொள்ள வேண்டும்.

வேதவசனத்தின் அறிவின்மை கிறிஸ்தவனை முடக்கி போடுகிறது..

இன்று, அதிகமான மக்கள் தங்களது உணர்வுகளை அடிப்படையாகக் கொண்ட விசுவாசத்தை வைத்து உள்ளனர். ஆனால் நம் உணர்வுகள் எப்பொழுதும் மாறிக்கொண்டே இருக்கும் .நாம் தாக்குதலுக்கு ஆளாகிறபோது நமது உணர்வுகள் தோல்வியை தழுவுவது மட்டுமல்லாமல் ஏற்ற-இறக்கம் கொண்ட நிலையற்ற சூழலை அடைகிறது. நாம் தாக்குதலுக்கு உள்ளாகிறபோது நம்முடைய உணர்வுகள் வேதனைக்குள்ளாகிறது. அப்போது நாம் தேவனுடைய வார்த்தையை நாடி அதை மாத்திரம் சார்ந்திருக்க வேண்டும்.

### தேவனுடைய வசனமே நம்முடைய மனதை ஆவிக்குரிய சமநிலையில் வைக்கிறது

*God's Word put our minds on a spiritual plain*

Notes:

____________________________________________________
____________________________________________________
____________________________________________________

இந்த உலகின் பிரச்சினைகளைக் குறித்து நாம் கவனம் செலுத்தும்போது நம்முடைய பரம அழைப்பின் நோக்கத்திலிருந்து நம்முடைய கவனம் சிதறும்போது காரியங்கள் எல்லாம் நமக்கு மிகவும் கடினமாக தோன்றுகிறது.

தேவனை விசுவாசிப்பது என்றால், நான் தேவனுடைய உதவியை நோக்கி பார்ப்பேன், அவரே எல்லாவற்றின் மேலும் அதிகாரியாக இருக்கிறார் என்பதை நான் உணருகிறேன் என்று கருதுவதாகும்.

அநேக முறை நாம் துன்பப்படுகிறபோது அல்லது தாக்குதலுக்கு உட்படும்போது நாம் இன்னும் ஒரு நாள்கூட சகித்துக்கொள்ள முடியாது என்று எண்ணுவதுண்டு. ஆயினும் அநேக முறை தேவன் நம்மை விடுவித்து, நாம் முன்னேறி செல்வதற்கு உதவுகிறார்.

### தேவன் நம்மோடு இருப்பதை அவருடைய வார்த்தை நமக்கு நினைவுபடுத்துகிறது

*God's Word reminds us that God is for us*

தாவீது தனது வாழ்க்கையில் அநேக காரியங்களை கடந்து வந்தபோதிலும் அவன் இந்த கருத்துகளுக்கு திரும்பினான்:

- தேவன் நம்முடைய பட்சத்திலிருந்தால் நமக்கு விரோதமாயிருப்பவன் யார்?
- தேவன் நம் பட்சத்தில் இருக்கும்போது புயல்கள் மத்தியிலும் ஒரு அடைக்கலத்தை கண்டுபிடிக்க முடியும்.
- தற்போதைய துன்பத்தைத் தடுக்க நினைப்பதைவிட தேவனோடு நாம் கொண்ட உறவே அதிக மேன்மையுள்ளது.
- தேவனுடைய கட்டுப்பாட்டிற்குள் நாம் சரணடையவும், நம்முடைய கஷ்டங்களில் சிருஷ்டிகரே நமக்கு உதவவும் நம்மை ஒப்புக்கொடுக்க முடியும்.
- அப்போஸ்தலர்கள் பயங்கரமான துன்பத்தை அனுபவித்ததை நாம் காண முடிந்தது, ஆயினும் இவை எல்லாவற்றையும் அவர்கள் கிறிஸ்துவுக்குள் மகிழ்ச்சியாக எண்ணினார்கள்.

Notes:

__________________________________________________________
__________________________________________________________
__________________________________________________________

- கிறிஸ்தவர்களாக, நாம் துன்பத்தை அனுபவிக்க அழைக்கப்படுகிறோம். ஆனால் துன்பம் என்றால் கடவுளிடமிருந்து கைவிடப்படுவது அல்ல.
- இறுதியில் மேலான நியாயத்தீர்ப்பு இருக்கிறது என்கிற நம்பிக்கை, அதோடு தேவைக்கு கீழ்ப்படிவதில் உள்ள ஆசீர்வாதம்/வெகுமதி நமக்கு உண்டு.

இந்த காரியங்களினிமித்தம் கொடிய காலங்களில் வரும் பயத்திலிருந்து நாம் விடுதலை பெற முடிகிறது.

Notes:

____________________________________________________________
____________________________________________________________
____________________________________________________________

Notes:

_______________________________________________________________
_______________________________________________________________
_______________________________________________________________

## 6. எல்லாருக்கும் அவசியமில்லாதவன் – *II*

நீங்கள் பிரச்சனையில் இருக்கும்போது எதிரிகளுக்கு கூட நீங்கள் தேவையில்லாதவர்கள். நீங்கள் ஒரு எதிரியிடமிருந்து தப்பித்து மற்றும் மறைந்திருந்தபோது.

*When you are in trouble even the enemies don't want you… just when you escaped from one enemies and hiding. –*

*சங்கீதம் 34*

**சூழல்**: சவுலிடமிருந்து தப்பி ஓடிய தாவீது பெலிஸ்திய நகரமான காத்திற்குச் சென்றான், ஆனால் அங்கே ஒரு புகலிடமும் இல்லை, ஆதலால் நூலிலையில் தப்பித்து அதுல்லாம் குகைக்குச் சென்றான். அங்கு பல புறக்கணிக்கப்பட்டவர்கள் அவனைச் சேர்ந்தனர். மகிழ்ச்சியும் ஞானமுள்ள இந்த சங்கீதம் அந்த குகையிலிருந்து எழுதப்பட்டது, அந்த மனிதர்களின் முன்னிலையில் பாடப்பட்டது.

**வேதவாக்கியங்கள்**: *1 சாமுவேல் 21:10- 22:1*

### நிரம்பி வழியும் துதி

*வ 1-3, Overflowing Praise*

*1* **கர்த்தரை நான் எக்காலத்திலும் ஸ்தோத்திரிப்பேன்;**

**அவர் துதி எப்போதும் என் வாயிலிருக்கும்.**

*2* **கர்த்தருக்குள் என் ஆத்துமா மேன்மைபாராட்டும்;**

**சிறுமைப்பட்டவர்கள் அதைக்கேட்டு மகிழுவார்கள்.**

*3* **என்னோடேகூடக் கர்த்தரை மகிமைப்படுத்துங்கள்;**

**நாம் ஒருமித்து அவர் நாமத்தை உயர்த்துவோமாக.**

தாவீது ஒரு மதிமங்கினவனைப்போல நடித்திருக்கலாம், ஆனால் அவன் கர்த்தரைத் துதிக்கும் போது ஞானமுள்ளவனாக இருந்தான். அவரே அவனுடைய ஒரே உண்மையான ஞானமாய் இருந்தார். சரீர ரீதியாக தாவீது குகைக்குள்

Notes:

________________________________________________________
________________________________________________________
________________________________________________________

ஒளிந்துகொண்டிருந்தாலும் ஆவிக்குரிய வகையில் அவன் தேவனுடைய மறைவிடத்திலிருந்தான்.

தேவனின் துதி அவனுடைய இருதயத்தில் மட்டுமல்ல அவனுடைய வாயிலும் கூட இருந்தது.

பெலிஸ்தியர்களிடமிருந்து பைத்தியக்காரத்தனமாக நடந்துகொள்வதன் மூலம் தாவீது புத்திசாலித்தனமாக தனது சுதந்திரத்தை வென்றான், ஆனால் அந்த காரியம் அவனுடைய புத்திசாலித்தனத்தினால் அல்ல தேவனாலே ஆனது என்று அவனுக்கு தெரியும். தாவீது தன்னோடு காத்துக்கு கோலியத்தின் பட்டயத்தை கொண்டு வந்திருந்த போதும் பெலிஸ்தியர்களிடமிருந்து தப்பிப்பதற்காக ஒரு பைத்தியக்காரனைப் போல அவன் தன்னை தாழ்த்தி முட்டாள் தனமாக அவர்கள் மத்தியில் அடைக்கலம் தேடினான்.

இந்த பகுதியில் எனக்கு ஆர்வத்தை தூண்டுகிற வார்த்தை "**எல்லா நேரங்களிலும்**" தேவனை துதிப்பேன் என்று தாவீது அறிக்கையிடுவது.

### தாவீதின் விடுதலையை குறித்த சாட்சி

*வ 4-7, Testimony of David's deliverance*

*4 நான் கர்த்தரைத் தேடினேன், அவர் எனக்குச் செவிகொடுத்து,*

***என்னுடைய எல்லாப் பயத்துக்கும் என்னை***

***நீங்கலாக்கிவிட்டார்.***

*5 அவர்கள் அவரை நோக்கிப்பார்த்துப் பிரகாசமடைந்தார்கள்;*

***அவர்கள் முகங்கள் வெட்கப்படவில்லை.***

*6 இந்த ஏழை கூப்பிட்டான், கர்த்தர் கேட்டு,*

***அவனை அவன் இடுக்கண்களுக்கெல்லாம் நீங்கலாக்கி இரட்சித்தார்.***

*7 கர்த்தருடைய தூதன் அவருக்குப் பயந்தவர்களைச்*

***சூழப் பாளயமிறங்கி அவர்களை விடுவிக்கிறார்.***

Notes:

____________________________________________________
____________________________________________________
____________________________________________________

நாம் இந்த சங்கீதத்தை படிக்கும்போது தாவீதின் வாழ்க்கையின் சூழ்நிலைகளுக்குப் பின்னால் இருக்கும் தகவல்களை தெரிந்துகொள்கிறோம். தாவீது தனது தோல்வியை மறைக்க முயற்சிக்கவில்லை என்பது தெளிவாகத் தெரிகிறது. மாறாக, நாம் இந்த சங்கீதத்தை தாவீதின் தோல்விகளின் கோணத்தில் புரிந்து கொள்வது அவசியம். அவன் ஒருபோதும் தன்னை நல்லவனாக காண்பிக்க முயற்சி செய்யவில்லை!

நம்முடைய ஆண்டவரை குறித்து நாம் எவ்வளவுக்கு எவ்வளவு அதிகமாய் யோசிக்கிறோமோ அவ்வளவுக்கு அவ்வளவு நாம் நம்மை குறித்து குறைவாக யோசிப்போம். உபத்திரவங்களின் ஆழமான தண்ணீரைக் கடக்கும்போது தேவனுடைய சிங்காசனத்தின் வலதுபக்கத்தில் வீற்றிருக்கிற நம்முடைய கர்த்தராகிய இயேசுவை நோக்கிப்பார்க்கும்போது நம்முடைய தலையையும் மற்றும் குறிப்பாக நம்முடைய உறுதியான இருதயத்தையும் அவர் சீரமைக்கிறார் (will keep steady).

தம்மை நம்புகிற ஒருவரையும் தேவன் ஒருபோதும் கைவிட மாட்டார் என்று தாவீது அறிந்திருந்தான். தேவன் அவர்களுக்கு ஏற்ற நேரத்தில் தேவையான நம்பிக்கை அளித்து நீயாயம் செய்வார்.

பெலிஸ்தியர்கள் மத்தியில் பைத்தியக்காரனைப் போல் செயல்பட்ட தாவீது நிச்சயமாக பரிதாபமான மனிதனாக இருந்தான். ஒரு பரிதாபமான மனிதனாக தாவீது தேவனை நோக்கி கூப்பிட்டான் அதற்கு தேவன் கிருபையாக பதிலளித்தார்.

- அழுகையின் கூக்குரல் குறுகியதும் இனிமையற்றதுமாய் இருக்கிறது.
- அழுகையின் கூக்குரல் சுருக்கமானதும் கசப்புள்ளதுமாய் இருக்கிறது.
- அழுகையின் கூக்குரல் வலியின் மொழியாய் இருக்கிறது.
- அழுகையின் கூக்குரல் இயற்கையாக உருவாகிறது.
- அழுகையின் கூக்குரல் இசை இன்றி மிகவும் அர்த்தமுள்ளதாய் இருக்கிறது.

வாழ்க்கையின் முழுமையான தாழ்ந்த நிலையில் ஒருவர் காணப்படுவதுபோல தாவீதும் அந்த நிலையில் காணப்பட்டார்.

Notes:

________________________________________________________

________________________________________________________

________________________________________________________

அழுகை, கற்பாறைகளுக்கு நடுவில் சிக்கிக்-கொண்டவர்களிடம் காணப்படும். இந்த விஷயத்தில் ஒரு புறம் ராஜாவாகிய சவுல் மற்றொரு புறம் ராஜாவாகிய ஆகீஸ். எல்லாமே உங்களுக்கு எதிராக இருப்பதை போல தோன்றும்,"



## தேவன் கொடுப்பதையும் அவருடைய பாதுகாப்பையும் ருசிப்பதில் உற்சாகம்

வ *8-10, An Encouragement to taste God's Provision & Protection-*

*8* ***கர்த்தர் நல்லவர் என்பதை ருசித்துப்பாருங்கள்;***

***அவர்மேல் நம்பிக்கையாயிருக்கிற மனுஷன் பாக்கியவான்!***

*9* ***கர்த்தருடைய பரிசுத்தவான்களே, அவருக்குப் பயந்திருங்கள்!***

***அவருக்குப் பயந்தவர்களுக்குக் குறைவில்லை.***

*10* ***சிங்கக்குட்டிகள் தாழ்ச்சியடைந்து பட்டினியாயிருக்கும்;***

***கர்த்தரைத் தேடுகிறவர்களுக்கோ ஒரு நன்மையுங் குறைவுபடாது.***

பின்வரும் இரண்டு கேள்விகளுக்கு பதிலளிக்கும்போது, இந்த இரண்டு வசனங்களையும் புரிந்து கொள்ளலாம்.

1. தாவீது தன்னுடைய ஆசீர்வாதங்களை பகிர்ந்துகொள்வதற்கு யாரை அழைக்கிறான்?
   *Who is David inviting to share his blessings?*

2. அவர்கள் எந்த ஆசீர்வாதங்களை அவனுடனே கூட அனுபவிப்பதற்காக அழைக்கப்படுகிறார்கள்?
   *What are the blessings which they are invited to enjoy with him?*

Notes:

__________________________________________________________
__________________________________________________________
__________________________________________________________

தனது சொந்த அனுபவத்தை சொல்லிய பிறகு தேவனுடைய நன்மையை நாம் உணர்ந்து அனுபவிக்க இந்த சங்கீதத்தின் மூலம் தாவீது நமக்கு சவாலளிக்கிறார். இது தனிப்பட்ட முறையில் தேவனை சந்திப்பதன் மூலமே ருசிக்கவும், காணவும் முடியும்.




மேலும் தாவீது அவனுடனே இருக்கும் மக்களையும் இதை அனுபவிக்க அழைத்தான்.

கர்த்தருக்கு பயப்படுவது என்பது அவர் மீது நாம் கொண்டுள்ள விசுவாசத்திற்கும் அவருடைய நன்மைகளை நாம் ருசிப்பதற்கும் சமமானது. ஒரு கடவுளுக்கு மனிதன் வெளிப்படுத்தும் நியாயமான மதிப்பும் மரியாதையுமாகும். நீங்கள் உண்மையாகவே தேவனுடைய நன்மைகளை அனுபவித்திருந்தால், உண்மையாகவே அவரை நம்பி வாழ்கின்ற ஆசிர்வாதத்தை அனுபவித்திருந்தால் அதற்கேற்ற தேவ பயம் உங்களுக்குள் காணப்படும்.

பெலிஸ்தியர்களிடமிருந்து விடுதலை பெற்றதில் தாவீது தேவனிடமிருந்து நன்மையை அனுபவித்தான். அது நன்மையானது என்று அவன் அறிந்திருக்கிறான். இது அவனுடைய சுய பெலத்தினாலுமல்ல வல்லமையினா-லுமல்ல, ஆனால் இது கர்த்தரை தேடுவோருக்கு தேவனுடைய நன்மையினாலே உண்டானது;

Notes:

__________________________________________________________
__________________________________________________________
__________________________________________________________

### கர்த்தருக்கு எப்படி பயப்படுவது!

வ *11- 22, Instruction to Fear the Lord-*

*11* பிள்ளைகளே, வந்து எனக்குச் செவிகொடுங்கள்;

கர்த்தருக்குப் பயப்படுதலை உங்களுக்குப் போதிப்பேன்.

*12* நன்மையைக் காணும்படி, ஜீவனை விரும்பி,

நீடித்த நாட்களை அபேட்சிக்கிற மனுஷன் யார்?

*13* உன் நாவைப் பொல்லாப்புக்கும்,

உன் உதடுகளைக் கபட்டுவசனிப்புக்கும் விலக்கிக் காத்துக்கொள்.

*14* தீமையை விட்டு விலகி, நன்மை செய்;

சமாதானத்தைத் தேடி, அதைத் தொடர்ந்துகொள்.

*15* கர்த்தருடைய கண்கள் நீதிமான்கள்மேல் நோக்கமாயிருக்கிறது;

அவருடைய செவிகள் அவர்கள் கூப்பிடுதலுக்குத் திறந்திருக்கிறது.

*16* தீமைசெய்கிறவர்களுடைய பேரைப் பூமியில் இராமல்

அற்றுப்போகப்பண்ண, கர்த்தருடைய முகம் அவர்களுக்கு விரோதமாயிருக்கிறது.

*17* நீதிமான்கள் கூப்பிடும்போது கர்த்தர் கேட்டு,

அவர்களை அவர்களுடைய எல்லா உபத்திரவங்களுக்கும் நீங்கலாக்கிவிடுகிறார்.

*18* நொறுங்குண்ட இருதயமுள்ளவர்களுக்குக் கர்த்தர் சமீபமாயிருந்து,

நருங்குண்ட ஆவியுள்ளவர்களை இரட்சிக்கிறார்.

*19* நீதிமானுக்கு வரும் துன்பங்கள் அநேகமாயிருக்கும்,

கர்த்தர் அவைகளெல்லாவற்றிலும் நின்று அவனை விடுவிப்பார்

*20*அவனுடைய எலும்புகளையெல்லாம் காப்பாற்றுகிறார்;

Notes:

______________________________________________________________

______________________________________________________________

______________________________________________________________

**அவைகளில் ஒன்றும் முறிக்கப்படுவதில்லை.**

*21* **தீமை துன்மார்க்கனைக் கொல்லும்;**

**நீதிமானைப் பகைக்கிறவர்கள் குற்றவாளிகளாவார்கள்.**

*22* **கர்த்தர் தமது ஊழியக்காரரின் ஆத்துமாவை மீட்டுக்கொள்ளுகிறார்;**

**அவரை நம்புகிற ஒருவன்மேலும் குற்றஞ்சுமராது.**

வசனம் 11-ல் இருந்து, தாவீது கர்த்தருக்கு பயப்படுவதை குறித்து மக்களுக்கு பிரசங்கிக்கத் தொடங்கினான். சங்கீதத்தின் பாணி முற்றிலும் மாறுகிறது.

பெலிஸ்தியர்களிடமிருந்து ஜோடிக்கப்பட்ட மதிமயக்கத்திலிருந்து தாவீது விடுவிக்கப்பட்டான். துன்பத்திலும் கடனிலும் அதிருப்தியுடனும் இருந்தவர்கள் அதுல்லாம் குகையில் தாவீதோடு கூடிச் சேர்ந்தனர். தாவீது சமீபத்தில் கற்றுக்கொண்ட விசுவாசத்தை குறித்த பாடங்களையும் அதோடுகூட தேவபயத்தை குறித்தும் அவர்களுக்கு சொல்லிக்கொடுத்தான்.

### கர்த்தருக்குப் பயந்து வாழுங்கள்

வ 11-14, *live in the fear of the Lord –*

*11* **பிள்ளைகளே, வந்து எனக்குச் செவிகொடுங்கள்;**

**கர்த்தருக்குப் பயப்படுதலை உங்களுக்குப் போதிப்பேன்.**

*12* **நன்மையைக் காணும்படி, ஜீவனை விரும்பி,**

**நீடித்த நாட்களை அபேட்சிக்கிற மனுஷன் யார்?**

*13* **உன் நாவைப் பொல்லாப்புக்கும்,**

**உன் உதடுகளைக் கபட்டுவசனிப்புக்கும் விலக்கிக் காத்துக்கொள்.**

*14* **தீமையை விட்டு விலகி, நன்மை செய்;**

சமாதானத்தைத் தேடி, அதைத் தொடர்ந்துகொள்.

Notes:

________________________________________________________

________________________________________________________

________________________________________________________

தாவீது கர்த்தர்மேல் இருக்கும் பயத்தை விவரித்தான், அது செயலில் வேரூன்றியிருந்தது, மத உணர்வுகள் அல்ல. எனவே அவன் தம் மக்களுக்கு போதித்தான்,

- அவர்கள் தீமை பேசக்கூடாது
- பொய்யையும் ஏமாற்றத்தையும் தவிர்க்க வேண்டும்
- தீமையை விட்டு விலகி நன்மை செய்யுங்கள்
- தேவனுடனும் மனிதனோடும் சமாதானமாக இருக்க வேண்டும்

### கர்த்தருடைய கண்காணிப்பின் கீழ்

வ *15- 16, Under the Watchful eyes of the Lord-*

*15* ***கர்த்தருடைய கண்கள் நீதிமான்கள்மேல் நோக்கமாயிருக்கிறது;***

***அவருடைய செவிகள் அவர்கள் கூப்பிடுதலுக்குத் திறந்திருக்கிறது.***

*16* ***தீமைசெய்கிறவர்களுடைய பேரைப் பூமியில் இராமல்***

***அற்றுப்போகப்பண்ண, கர்த்தருடைய முகம் அவர்களுக்கு விரோதமாயிருக்கிறது.***

மேலும் தம் மக்கள் மேல் இருக்கும் தேவனுடைய கண்காணிப்பை குறித்தும் அவருடைய கவனத்தைக் குறித்தும் இன்னும் தாவீது கற்றுக்கொடுத்தான்.

### தேவன் தாழ்மையுள்ளவர்ககளுக்கு உதவி செய்கிறார்

வ *17- 18, God helper of the humble –*

*17* ***நீதிமான்கள் கூப்பிடும்போது கர்த்தர் கேட்டு,***

***அவர்களை அவர்களுடைய எல்லா உபத்திரவங்களுக்கும் நீங்கலாக்கிவிடுகிறார்.***

*18* ***நொறுங்குண்ட இருதயமுள்ளவர்களுக்குக் கர்த்தர் சமீபமாயிருந்து,***

***நருங்குண்ட ஆவியுள்ளவர்களை இரட்சிக்கிறார்.***

Notes:

__________________________________________________________
__________________________________________________________
__________________________________________________________

தேவன் நீதியுள்ளவர்கள் மேல் கவனமுள்ளவரும் அக்கறையுள்ளவருமாய் இருக்கிறார் என்று தாவீது அதுல்லாம் குகையில் அவரது ஆட்களுக்கு நினைவு படுத்தினார். தேவன் தனது அனைத்து துன்பங்களிலிருந்தும் விடுவித்திருந்தார் என்பதே தாவீதின் சாட்சியாக இருந்தது.

தாவீது அதுல்லாம் குகையில் அவனுடைய விடுதலை தேவன் மேல் மட்டுமே சார்ந்திருந்தது என்கிற ஒரு பாடத்தை கற்றுக்கொண்டார். மனித மேதை/புத்திசாலித்தனத்தின் வழிகள் அவனை காப்பாற்றவில்லை. அவன் தேவனுடைய கிருபையால் காப்பாற்றப்பட்டான். ஆதலால், தாவீது தன் ஆட்களை தங்களின் வலிமையை நம்புவதற்கு பதிலாக விடுதலைக்காக தேவனை நோக்கி பார்க்க அறிவுறுத்துகிறார்.

### உண்மையுள்ளவர்கள்மேல் தேவனின் அக்கறை

*வ 19- 22, Gods care for the righteous one-*

*19 **நீதிமானுக்கு வரும் துன்பங்கள் அநேகமாயிருக்கும்,***

***கர்த்தர் அவைகளெல்லாவற்றிலும் நின்று அவனை விடுவிப்பார்***

*20**அவனுடைய எலும்புகளையெல்லாம் காப்பாற்றுகிறார்;***

***அவைகளில் ஒன்றும் முறிக்கப்படுவதில்லை.***

- வசனம் 11 விசுவாசத்தின் அடிப்படையில் இறைவனின் பயம் பற்றி பேசுவது
- வசனங்கள் 13 மற்றும் 14 தேவ பயத்தின் நடவடிக்கை;
- வசனங்கள் 15-18 தேவ பயம் / அவரது அக்கறையின் அடிப்படை.
- வசனங்கள் 19-22 தேவ பயத்தின் பயன்களை விவரிப்பதன் மூலம் தாவீது 12-ஆம் வசனத்தை விரிவாக்குகிறார்.

தேவனுக்கு பயப்படுகிற பயம் நீதிமான்களுக்கு பாதுகாப்பையும் மற்றும் மனுஷனுடைய கோபத்திலிருந்து விடுதலையும் வழங்குவதாக விவரிக்கப்படுகிறது.

தேவனுக்கு பயப்படுகிறவர்களுடைய வாழ்க்கையின் துன்பங்களில் கர்த்தருடைய பாதுகாப்பிற்கு

Notes:

__________________________________________________________
__________________________________________________________
__________________________________________________________

உறுதியளிக்கப்படுவது மட்டுமல்லாமல் தேவ கோபத்திலிருந்தும் தண்டனையிலிருந்தும் காக்கப்படுகிறார்கள்.

தேவன் நீதியுள்ளவர், அவர் துன்மார்க்கனை மேற்கொள்ளுகிறார். அவர் பாவத்தை கவனிக்காமல் இருப்பதில்லை, ஏனெனில் அவர் இறுதியில் தீமை செய்கிறவர்களிடத்தில் நீதியை நிலைநாட்டாமல் அவருடைய நீதிமான்கள் துன்புறுத்தப்படுவதை அவர் அனுமதிக்கமாட்டார்.

தேவன் தற்காலிக சோதனைகளிலும் உபத்திரவங்களிலும் மனிதர்களைக் காக்கின்றவர் மாத்திரம் அல்ல அதோடு அவர்களுடைய பாவங்களிலிருந்து மனிதரை இரட்சிக்கிறார் என்பதையும் தாவீது அறிந்திருந்தான். துன்மார்க்கன் அழிந்து போவான் ஆனால் தேவனுடைய ஊழியக்காரரின் ஆத்துமாக்களோ மீட்கப்படும்.

## அப்போஸ்தலனாகிய பவுல்

*Apostle Paul*

அப்போஸ்தலனாகிய பவுல் கொரிந்து சபைக்கு எழுதும்போது அவன் சுவிசேஷத்திற்க்காகப் பிரவேசித்த எல்லா உபத்திரவங்களையும் பட்டியலிட்டார். ஆனால் அவர் தப்பிப்பதை பற்றி கூறுகையில் அவர் தனது திறமையை குறித்து தற்பெருமை கொள்ளாமல் தேவனை மகிமைப்படுத்தினர்.

*2 **கொரிந்தியர்** 11:30-33, நான் மேன்மைபாராட்ட-வேண்டுமானால், என் பலவீனத்திற்-கடுத்தவைகளைக் குறித்து மேன்மைபாராட்டுவேன். 31 என்றென்றைக்கும் ஸ்தோத்திரிக்கப்பட்ட தேவனும், நம்முடைய **கர்த்தராகிய** இயேசுகிறிஸ்துவின் பிதாவுமானவர் நான் பொய் சொல்லுகிற-தில்லையென்று அறிவார். 32 தமஸ்குபட்டணத்து அரேத்தா ராஜாவினுடைய சேனைத்தலைவன் என்னைப் பிடிக்கவேண்டுமென்று தமஸ்கருடைய பட்டணத்தைக் காவல்வைத்துக் காத்தான்; 33 அப்பொழுது நான் கூடையிலே வைக்கப்பட்டு, ஜன்னலிலிருந்து மதில்வழியாய் இறக்கிவிடப்பட்டு, அவனுடைய கைக்குத் தப்பினேன்.*

*மேலும் நாம் பவுலிடமிருந்து அவர் எப்பொழுதும் மகிழ்ச்சியாயிருந்ததை கற்றுக்கொண்டு அவரை போல நாமும் மகிழ்ச்சியாயிருக்க வேண்டுமென்று விரும்புகிறார்*

Notes:

__________________________________________________________
__________________________________________________________
__________________________________________________________

*1 தெச 5:16, எப்பொழுதும் சந்தோஷமாயிருங்கள்*

## செயல்படுத்துதல்

*Application*

*உங்கள் வாழ்க்கையில் இதேபோன்ற சூழ்நிலை வருமானால் நீங்கள் எப்படிப் பதிலளிப்பீர்கள்?*

*நீங்கள் துன்பத்தில் இருக்கும்போது உங்களுக்கு முதலில் வருகின்ற எண்ணம் என்ன?*

- *உங்கள் நிலைப்பாட்டை நியாயப்படுத்த முயற்சித்தல்*
- *நீங்கள் இதற்கு தகுதி இல்லை*
- *இது உங்கள் தவறல்ல*

*நீங்கள் யாரை நோக்கி அழைக்கிறீர்கள்?*

- *போதகர்*
- *கணவன் (அ) மனைவி*
- *நண்பன்/தோழி/தோழன்*
- *பிள்ளைகள்*

*உங்கள் உணர்வின் நிலை என்ன?*

- *அழுகை*
- *கசப்பு*
- *கோபம்*
- *மகிழ்ச்சி*

Notes:

________________________________________________________
________________________________________________________
________________________________________________________

Notes:

______________________________________________________________

______________________________________________________________

______________________________________________________________

## 7. எங்கே நான் ஒளிவது... இங்கும் எதிரிகள் துரத்துகிறார்கள்..

### உங்கள் உயிருக்காக ஒரு இடத்திலிருந்து வேறொரு இடத்திற்கு ஓடும்போதும் உங்கள் இருதயம் கர்த்தரைத் தொழுதுகொள்ள ஏங்கும் தருணம்...

*Running away for your life from one place to another place … yet your heart longs to worship the Lord…*

சங்கீதம் 63

**சூழல்**: என்கேதியின்(*en Gedi*) வனாந்தரத்தில் ஜெபம். தாவீது எருசலேமிலுள்ள பரிசுத்த ஸ்தலத்தில் கர்த்தரைத் தொழுதுகொள்ள ஏங்குகிறான், ஆனால், அவன் யூதாவின் வனாந்தரத்திலே அவனைக் கொலைசெய்யத் தேடுகிறவர்களை விட்டு தப்பித்து ஓடிப்போக வேண்டும் என்கிற நிலை, ஆனால் அது அவனுக்கு கூடாதக்காரியமாமாய் இருந்தது. அவருடைய நம்பிக்கையானது உறுதியானதும் தேவனின் அன்பாகிய உடன்படிக்கையின்மேல் இருந்தது ஏனென்றால் அது ஜீவனைவிட சிறந்தது. தேவன் தாவீதை அவனுடைய எதிரிகளிடமிருந்து காப்பாற்றுவார் என்று நம்பினான். அதனால் அவன் மீண்டும் கர்த்தருக்குள் மகிழ்ந்து பரிசுத்த ஸ்தலத்தில் கர்த்தரைத் துதிக்கக்கூடும்.

வேத பகுதி:

- *1 சாமுவேல் 22:1-5*
- *2* ***சாமுவேல்*** *23:13*
- *1* ***நாளாகமம்*** *11:15-19*

சங்கீதம் 63

இந்த உலகில் நாம் எல்லோரும் எதிர்கொள்ளும் பிரச்சினைகளை ஒரே வரியில் கூற வேண்டும் என்றால், அது மன அழுத்தமும் நெருக்கமுமே (pressure, stress).

நீங்கள் சிறுவயதில், சிறந்த மாணவராக இருக்க வேண்டும் என்ற அழுத்தம்.

Notes:

__________________________________________________________
__________________________________________________________
__________________________________________________________

உயர்நிலை பள்ளியில், ஒரு நல்ல பல்கலைக் கழகத்திற்குச் செல்லவேண்டும் என்ற அழுத்தம்.

பல்கலைக் கழகத்தில், பட்டப்படிப்பை நிறைவு செய்யவேண்டும் என்ற அழுத்தம்.

கல்வி முடித்ததும், ஒரு நல்ல வேலையில் சேரவேண்டும் என்ற அழுத்தம்.

பணியில் இருக்கும்போது, சரியான துணையை கண்டு-பிடிக்கவேண்டும் என்ற அழுத்தம்.

திருமணம் செய்துகொண்ட பின், வீடு வாகனம் முதலியவற்றை வாங்க வேண்டும் என்ற அழுத்தம்.

திருமணம் செய்துகொண்ட சில வருடங்களுக்குப் பிறகு ஒரு குழந்தை வேண்டுமென்று காத்திருப்பது ஒரு அழுத்தம்.

பிறகு இதே அழுத்தங்கள் உங்கள் குழந்தையின் வாழ்க்கையில் மீண்டும் ஆரம்பிக்கிறது…

இந்த வாழ்க்கையின் முடிவில்லா அழுத்தங்கள் சேர்ந்து மன அழுத்தத்தை (stress) உண்டு பண்ணுகிறது.

தாவீது உலக காரியங்களுக்காக மாத்திரமல்ல தன்னுடைய ஜீவனுக்காகவே அதிகபட்சமான அழுத்தத்தில் இருப்பதை பார்க்கிறோம்.

ஆயினும், தாவீது ஏங்குகிற விஷயங்களை பாருங்கள்:

- தேவனுடைய பிரசன்னம்,
- துதி,
- மனமகிழ்ச்சி,
- கர்த்தரோடு ஐக்கியம்,
- கடவுளின் இரட்சிப்பில் உள்ள நம்பிக்கை.

ஒரு வார்த்தைகூட உலக ஆசீர்வாதங்களையோ அல்லது ஆவிக்குரிய ஆசீர்வாதங்களையோ குறித்து இல்லை.

Notes:

______________________________________________________
______________________________________________________
______________________________________________________

**தேவனே என்னுடைய வாஞ்சை**

**வ** *1-4, My Desire is God –*

*1. தேவனே, நீர் என்னுடைய தேவன்;*

*அதிகாலமே உம்மைத் தேடுகிறேன்; வறண்டதும் விடாய்த்ததும் தண்ணீரற்றதுமான நிலத்திலே*

*என் ஆத்துமா உம்மேல் தாகமாயிருக்கிறது,*

*என் மாம்சமானது உம்மை வாஞ்சிக்கிறது.*
*2. இப்படியே பரிசுத்த ஸ்தலத்தில் உம்மைப்பார்க்க ஆசையாயிருந்து,*

*உமது வல்லமையையும் உமது மகிமையையும் கண்டேன்.*
*3. ஜீவனைப்பார்க்கிலும் உமது கிருபை நல்லது;*

*என் உதடுகள் உம்மைத் துதிக்கும்.*
*4. என் ஜீவனுள்ளமட்டும் நான் உம்மைத் துதித்து,*

*உமது நாமத்தைச் சொல்லிக் கையெடுப்பேன்.*




Notes:

________________________________________________________________
________________________________________________________________
________________________________________________________________

தேவனை நெருக்கமான தனிப்பட்ட முறையில் தாவீது அறிந்திருந்தார். ஒரு நபரைப் பற்றி தெரிந்துகொள்வதற்கும் உண்மையில் அந்த நபரை அறிந்துகொள்வதற்கும் பெரிய வேறுபாடு உள்ளது.

உங்களுக்கு பிடித்த நபரை பற்றி நீங்கள் நிறைய தெரிந்துவைத்திருக்கலாம். அந்த நபரின் வாழ்க்கையைக் குறித்த செய்தி கட்டுரைகள் மற்றும் புத்தகங்களை படிக்க முடியும். அவர்களுடைய ஆளுமை, தனிப்பட்ட பழக்கங்கள், குடும்ப வாழ்க்கை ஆகியவற்றைப் பற்றி நீங்கள் தெரிந்துகொள்ளலாம். எவ்வளவு தெரிந்துவைத்திருந்தாலும் தனிப்பட்ட முறையில் அந்த நபரை அறிந்துகொள்ள முடியாது.

உங்கள் பாவத்திலிருந்து மனந்திரும்பி உங்களுக்காக ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து மரித்தார் என்று விசுவாசம் வைத்து நீங்கள் தேவனிடத்தில் வரும்போது அவரை அறிகிறீர்கள். அவர் உங்களுக்கு நித்திய ஜீவனை இலவசமாக பரிசளிக்கிறார்.

பின்னர் உங்களுடைய புதிய நண்பருடன் (தேவனுடன்) பல வாரங்கள், மாதங்கள், சூழ்நிலைகளில் நேரம் செலவழிப்பதன் மூலம் அவருடனான உறவை வளர்த்துக் கொள்ள வேண்டும். தேவனுடைய குமாரன் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் மூலம் தேவனை சந்தித்தவர்கள் அவரோடு தனிப்பட்ட உறவை வளர்த்துக்கொள்ள முற்படுவதுதான் "தேவனைத் தேடுதல்" (Seeking after God).

தாவீதை பொறுத்தவரை தேவனை தேடுவதே ஒரு நாளின் மிக முக்கியத்துவம் வாய்ந்த காரியம். தாவீதின் இந்த ஆத்தும தாகம், அதிகாலை நேரமே தேவனை தேடச்செய்து அந்த தாகத்தை திருப்திப்படுத்த வற்புறுத்துகிறது.

வறண்டதும் விடாய்த்ததுமான நிலத்தில் உண்மையாகவே தாகத்தில் தண்ணீரை நாடுகிற ஒருவன் எப்படி தேடுவானோ அப்படியே தாவீதும் ஆசரிப்புக்கூடாரத்தில் தேவனை தேடுகிறான். தாவீது பெரும்பாலும் பாலைவனமாக உள்ள யுதாவின் வனாந்திரத்தில் சுற்றி ஓடி திரிந்தான், எனவே இந்த உவமையை நமக்கு படம்பிடித்துக்காட்டுகிறான்.

தாவீது இந்த சங்கீதத்தை பாடும்போது வனாந்தரத்திலே ஓடினான் ஆசாரிப்புக்கூடாரத்திலே அல்ல. ஆயினும் தேவனின்

Notes:

______________________________________________________
______________________________________________________
______________________________________________________

பிரசன்னம் அவருடைய வல்லமையையும் மகிமையையும் வெளிப்படுத்தும் என்பதை அவன் அறிந்திருந்தான். நாம் எந்த இடத்தில் இருந்தாலும் ஆவிக்குரிய முறையில் (ஆவியில்) தேவனுடைய பிரசன்னத்தில் இருக்க முடியும் என்பதை இது நமக்கு காட்டுகிறது.

## தேவனே என்னுடைய மகிழ்ச்சி

*V5-8, My Delight is God –*

5. நிணத்தையும் கொழுப்பையும் உண்டதுபோல

என் ஆத்துமா திருப்தியாகும்;

என் வாய் ஆனந்தக்களிப்புள்ள உதடுகளால்

உம்மைப் போற்றும்.
6. என் படுக்கையின்மேல் நான் உம்மை நினைக்கும்போது, இராச்சாமங்களில் உம்மைத் தியானிக்கிறேன்.
7. நீர் எனக்குத் துணையாயிருந்ததினால்,

உமது செட்டைகளின் நிழலிலே களிகூருகிறேன்.
8. என் ஆத்துமா உம்மைத் தொடர்ந்து பற்றிக்கொண்டிருக்கிறது;

உமது வலதுகரம் என்னைத் தாங்குகிறது.

நம் வாழ்வில் தேவனுடைய அன்பு இருப்பதற்கும் இல்லாமல்போவதற்கும் உள்ள வேறுபாடுகளை தெளிவாக நாம் பார்க்க முடிகிறது.

மக்கள் வாழ்வாக கருதுவது:

- இயற்கை - *Natural*
- வாழ்க்கையை அனுபவிப்பது - *Enjoy life*
- விட்டுக்கொடுத்து வாழ்தல் - *Sacrifice to live*
- அன்பு செலுத்தும் ஆள் இல்லாமையால் வரும் அவநம்பிக்கை - *Despair without sense of love*

Notes:

__________________________________________________________
__________________________________________________________
__________________________________________________________

தேவனுடைய பெரிதான அன்பையே இயற்கை என்று தாவீது கருதினான்.

தேவனுடைய மகத்துவத்தையும் நற்குணத்தையும் குறித்து நினைத்துப்பார்ப்பதற்கு போதுமான நேரம் ஒரு நாளில் இல்லை என்று யோசித்தான். ஆகையால் இரவிலும் கூட அவன் தேவனை தியானித்தான்.

தாவீதின் அநேக சங்கீதங்கள் தேவனிடமிருந்து உதவிக்காக கூக்குரலிடும் சங்கீதங்களாக காணப்படும். தாவீது இன்னும் யுதாவின் வனாந்திரத்தில் இருந்தபடியால் அவன் மீண்டும் உதவிக்காக அழுதிருக்க வேண்டும் ஆனால் அங்கு உதவிக்காக அவன் அழுததைப்போல் தெரியவில்லை. மாறாக, தாவீது நன்றிகளையும் தேவனுடைய உண்மையினிமித்தம் அவருக்கு துதிகளையும் செலுத்தினான்.

தாவீதின் ஆத்துமா தேவனிடம் நெருங்கியிருந்தது, ஒருவன் தன் எஜமானன் அல்லது ஆசிரியரை பின்பற்றுவதை போல் தேவனை அது பின்பற்றியது. அதற்காக தேவன் தாவீதிற்கு அக்கறையும் வலிமையுடனும் பதிலளித்தார். அவருடைய வலுவான வலக்கரத்தாலே அவனுக்கு ஆதரவளித்தார்.

### தேவனே எனக்கு பாதுகாப்பு

**வ** *9-11, My Defense is God-*

*9. என் பிராணனை அழிக்கத் தேடுகிறவர்களோ,*

*பூமியின் தாழ்விடங்களில் இறங்குவார்கள்.*
*10. அவர்கள் பட்டயத்தால் விழுவார்கள்;*

*நரிகளுக்கு இரையாவார்கள்.*
*11. ராஜாவோ தேவனில் களிகூருவார்;*

*அவர்பேரில் சத்தியம்பண்ணுகிறவர்கள்*

*யாவரும் மேன்மைபாராட்டுவார்கள்;*

*பொய் பேசுகிறவர்களின் வாய் அடைக்கப்படும்.*

தாவீது தேவனை நெருங்கியிருந்தாலும் அவனுடைய பிரச்சனைகள் குறைந்ததாக தெரியவில்லை. அவனை கொல்ல

Notes:

______________________________________________________________
______________________________________________________________
______________________________________________________________

விரும்புகிற மக்கள் அதேபோல் இன்னும் அவனை தொடர்ந்துகொண்டு தான் இருக்கிறார்கள்.

தாவீது தன்னுடைய எதிரிகள் யாவரையும், குறிப்பாக இராஜாவாகிய சவுலை சமாளிப்பதற்கு தேவனையே நம்பினான், அவர் குறித்த நேரத்தில் அவருடைய வழியில். சவுல் எப்படி தன் சொந்த பட்டயத்தினால் கொலை செய்யப்பட்டு விழுந்தான் என்பதை நினைவுகூறுங்கள்.

## முடிவுரை

*Conclusion*

**உறவை ஸ்தாபிக்க வேண்டும்**: தேவனே, நீர் என்னுடைய தேவன்.

*Relationship must be established: O God, You are my God*

**ஐக்கியத்தை வளர்த்துக்கொள்ள வேண்டும்**: அதிகாலமே உம்மைத் தேடுகிறேன்; வறண்டதும் விடாய்த்ததும் தண்ணீரற்றதுமான நிலத்திலே என் ஆத்துமா உம்மேல் தாகமாயிருக்கிறது, என் மாம்சமானது உம்மை வாஞ்சிக்கிறது.

*Fellowship must be cultivated: Early will I seek You; My soul thirsts for You; My flesh longs for You*

## இயேசு கிறிஸ்து

*Jesus Christ:*

இயேசு எப்பொழுதுமே தேவனிடம் தனியாக நேரம் செலவழித்தார். அவருடைய கவனம் எல்லாம் தேவன் தான்.

**மாற்கு** *1:35, அவர் அதிகாலையில், இருட்டோடே எழுந்து புறப்பட்டு, வனாந்தரமான ஓரிடத்திற்குப்போய், அங்கே ஜெபம்பண்ணினார்.*

Notes:

__________________________________________________________
__________________________________________________________
__________________________________________________________



***மாற்கு*** *6:45-46, அவர் ஜனங்களை அனுப்பிவிடுகையில், தம்முடைய சீஷர்கள் படவில் ஏறி, அக்கரையில் பெத்சாயிதாவுக்கு எதிராக, தமக்கு முன்னே போகும்படி அவர்களைத் துரிதப்படுத்தினார். 46 அவர் ஜனங்களை அனுப்பிவிட்டபின்பு, ஜெபம்பண்ணும்படி ஒரு மலையின்மேல் ஏறினார்*

## அப்போஸ்தலனாகிய பவுல்

*Apostle Paul:*

இன்னும் எவ்வளவு அதிகமாய் தேவனை தெரிந்துகொள்ள விரும்புவதை பவுல் தன் ஜெபங்களில் குறிப்பிட்டார்.

அவர் பிலிப்பியர் சபைக்கு கடிதம் எழுதுகிற போது தனது தனிப்பட்ட தகுதிகளை (personal qualifications) அடுக்கிவைக்கிறார், அடுக்கின அடுத்த வார்த்தை இயேசுவை அறிகிற அறிவை பார்க்கும்போது அந்த தகுதிகளெல்லாம் குப்பை என்று கூறுகிறார்.

***பிலிப்பியர்*** *3:7-8, 7 ஆகிலும், எனக்கு லாபமாயிருந்த-வைகளெவைகளோ அவைகளைக் கிறிஸ்துவுக்கு நஷ்டமென்று எண்ணினேன். 8 அதுமாத்திரமல்ல, என் கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவை அறிகிற அறிவின் மேன்மைக்காக எல்லாவற்றையும் நஷ்டமென்று எண்ணிக்கொண்டிருக்கிறேன்.*

Notes:

____________________________________________________________
____________________________________________________________
____________________________________________________________

## செயல்படுத்துதல்

*Application:*

என் தினசரி அட்டவணை தேவனைத் தேடுவதை முதல் காரியமாக வைத்திருக்கிறதா?

*Did my schedule reflect that seeking God was my number one priority?"*

நீங்கள் எதை குறித்து மன அழுத்தத்திற்குள் செல்கிறீர்கள் என்பதே உங்கள் உண்மையான முன்னுரிமைகளை வெளிப்படுத்துகிறது. அழுத்தம் இருக்கும் போது அத்தியாவசிய தேவை தவிர எல்லாமே ஒதுக்கி வைக்கப்படுகிறது.

*Pressure is what reveals your true priorities. When the pressure is on, everything but the essential gets set aside.*

நாம் தனியாக தேவனிடம் நேரம் செலவழிப்பதற்கு எப்படி முன்னுரிமை கொடுக்க முடியும்?

*How can we make time alone with God a priority?*

தேவன் மேல் இருக்கும் பற்றையும் ஆர்வத்தையும் வைராக்கியத்தையும் இழந்த ஒரு கிறிஸ்தவன் எவ்வாறு அதை மீட்டெடுக்க முடியும்?

*How can a Christian who has lost the passion for God regain it?*

Notes:

________________________________________________________
________________________________________________________
________________________________________________________

*யார் உங்கள் வாஞ்சையாக இருக்கிறார்கள்? தேவனா??*

*Who is your desire? God??*

*யார் உங்கள் மகிழ்ச்சியாக இருக்கிறார்கள்? தேவனா??*

*Who is your delight? God??*

*யார் உங்கள் அரணாக இருக்கிறார்கள்? தேவனா??*

*Who is your defense? God ??*

Notes:

____________________________________________________________
____________________________________________________________
____________________________________________________________

Notes:

____________________________________________________________

____________________________________________________________

____________________________________________________________

Notes:

________________________________________________________________

________________________________________________________________

________________________________________________________________

## 8. துரோகிதான்... ஆனாலும் உதவுவேன்...

அவர்கள் உங்களுக்கு துரோகம் செய்கிறார்கள் என்று உங்களுக்கு தெரிந்திருந்த போதும் நீங்கள் ஒருவருக்கு உதவி செய்கிறீர்கள்.

*You help a person who is in trouble but when you know you will betray you…*

*சங்கீதம் 36*

**சூழல்**: தாவீது கிலியாவின் மக்கள் அவரைக் காட்டிக் கொடுக்க போவதாக கண்டபோது அவர் இப்படித்தான் நினைத்தான்

வேதபகுதி: *1 சாமுவேல் 23:12*

**துன்மார்க்கனுடைய குணம்**

*V 1-4 character of a wicked Man*

*1.* **துன்மார்க்கனுடைய துரோகப்பேச்சு என் உள்ளத்திற்குத் தெரியும்; அவன் கண்களுக்குமுன் தெய்வபயம் இல்லை.**

*2.* **அவன், தன் அக்கிரமம் அருவருப்பானதென்று காணப்படுமளவும், தன் பார்வைக்கேற்றபடி தனக்குத்தானே இச்சகம் பேசுகிறான்.**

*3.* **அவன் வாயின் வார்த்தைகள் அக்கிரமமும் வஞ்சகமுமுள்ளது; புத்தியாய் நடந்துகொள்வதையும் நன்மை செய்வதையும் விட்டுவிட்டான்.**

*4.* **அவன் தன் படுக்கையின்மேல் அக்கிரமத்தை யோசித்து, நல்லதல்லாத வழியிலே நிலைத்து, பொல்லாப்பை வெறுக்காதிருக்கிறான்.**

- தேவனுக்கு பயப்படுகிற பயம் இல்லாதிருப்பான் - No fear of God
- அவன் தீமைகளை நன்மை என்று சொல்லுகிறான் - He calls evil good
- மனந்திரும்ப மறுத்து தொடர்ந்து தீய செயல்களை செய்கிறான் - He refuse to turn back but continues to do evil

Notes:

____________________________________________________________

____________________________________________________________

____________________________________________________________

- அவன் ஒரு மாயக்காரன் - He is a hypocrite
- அவன் தீமை செய்வதற்கு தீர்மானித்திருக்கிறான் - He is determined to do evil
- துன்மார்க்கத்தில் தேர்ந்தவன் - He masters himself in wickedness

## தேவனின் பொறுமையும் இரக்கமும்

**வ** *5-8 God's patience and mercy -*

*5. கர்த்தாவே, உமது கிருபை வானங்களில் விளங்குகிறது; உமது சத்தியம் மேகமண்டலங்கள் பரியந்தம் எட்டுகிறது.*

*6. உமது நீதி மகத்தான பர்வதங்கள்போலவும், உமது நியாயங்கள் மகா ஆழமாகவும் இருக்கிறது; கர்த்தாவே, மனுஷரையும் மிருகங்களையும் காப்பாற்றுகிறீர்.*

*7. தேவனே, உம்முடைய கிருபை எவ்வளவு அருமையானது! அதினால் மனுபுத்திரர் உமது செட்டைகளின் நிழலிலே வந்தடைகிறார்கள்.*

*8. உமது ஆலயத்திலுள்ள சம்பூரணத்தினால் திருப்தியடைவார்கள்; உமது பேரின்ப நதியினால் அவர்கள் தாகத்தைத் தீர்க்கிறீர்.*

- தேவன் எல்லாருக்கும் இரக்கமுள்ளவராய் இருக்கிறார், எல்லா உயிரினங்களுக்கும் கூட - *God is Merciful to all, even all creatures*
- அவர் இரக்கமுள்ளவர், குறிப்பாக தாம் நேசிக்கிற தம்முடைய ஜனங்களுக்கு மிகவும் இரக்கமுள்ளவர் - *God is so merciful particularly to His people, which he admires.*
- அவருடைய மக்கள் அவருடைய உண்மையின்மீது சார்ந்திருக்கலாம் – *His people can rely upon His faithfulness*
- அவருடைய மக்கள் நம்புகிறவர்கள் - *His people Trust*
- அவர் மக்கள் திருப்தியடைகிறார்கள் - *His people are satisfied*
- பேரின்ப நதிக்கு அணுகல் - *Access to the river of joy*

Notes:

________________________________________________________
________________________________________________________
________________________________________________________

## தாவீது ஜெபிக்கிறார்

**வ** *9-12 David Prays*

*9.* **ஜீவஊற்று உம்மிடத்தில் இருக்கிறது; உம்முடைய வெளிச்சத்திலே வெளிச்சம் காண்கிறோம்.**

*10.* **உம்மை அறிந்தவர்கள்மேல் உமது கிருபையையும், செம்மையான இருதயமுள்ளவர்கள்மேல் உமது நீதியையும் பாராட்டியருளும்.**

*11.* **பெருமைக்காரரின் கால் என்மேல்வராமலும், துன்மார்க்கருடைய கை என்னைப் பறக்கடியாமலும் இருப்பதாக.**

*12.* **அதோ அக்கிரமக்காரர் விழுந்தார்கள்; எழுந்திருக்கமாட்டாமல் தள்ளுண்டுபோனார்கள்.**

- தேவனே ஒளியின் ஆதாரமும் வாழ்வின் ஆதாரமுமாக இருக்கிறார் - *God is the source of light and life*
- ஜீவ நீரூற்று - *Fountain of life*
- அவரது ஒளி பிரகாசிக்கும் - *His light will shine upon*
- தேவனுடைய ஜனங்கள் மேல் - *On God's people*
- தன் (தாவீதின்) மேல் - *On himself*
- அவருடைய வல்லமை சூழ்நிலைகளை மாற்றிவிடும் - *His power will change the circumstances*

கர்த்தாவே, உமது கிருபை வானங்களில் விளங்குகிறது; உமது சத்தியம் மேகமண்டலங்கள் பரியந்தம் எட்டுகிறது.

தாவீது இந்த சங்கீதத்தில் தேவனின் அன்புள்ள இரக்கத்தை (கிருபை - loving kindness) மூன்று முறை குறிப்பிடுகிறார்.

வ 5, எல்லையில்லா ;

வ 7 ல் , அதன் மதிப்பு; மற்றும்

வ 10. தேவன் அந்த கிருபையை, அன்பின் இரக்கத்தை தொடர்ந்து வழங்குவாராக என்று தாவீது ஜெபிக்கிறார்.

Notes:

________________________________________________________
________________________________________________________
________________________________________________________

Notes:

________________________________________________________________
________________________________________________________________
________________________________________________________________

## 9. உதவினேன்.. ஆனாலும் அவர்கள்...

நீங்கள் பாதுகாக்கிற நபர்களே உங்களுக்கு துரோகம் செய்ய இருக்கிறார்கள். ஆயினும் நீங்கள் இன்னும் அவர்களிடம் ஏதாவது சொல்ல விரும்புவது...

*The persons whom you protect going to betray still you want to say something to them... -*

சங்கீதம் 62

**சூழல்**: தாவீது கேகிலாவின் பட்டணத்திலிருந்து புறப்படும்போது அந்த பட்டணத்தாருக்கு சொல்லப்பட்ட வார்த்தைகள். அவர்கள் தங்களையோ மற்றவர்களையோ அல்ல, கர்த்தரிடத்தில் நம்பிக்கையாயிருக்கவேண்டும் என்று அவர்களுக்கு தாவீது சொன்னார்.

**வேதவாக்கியம்**: *1 சாமுவேல் 23:1-13*

சங்கீதம் 62

தேவன் உங்கள் இரட்சிப்பும் அடைக்கலமுமாக இருக்கும்போது அச்சுறுத்தும் நேரங்களின் மத்தியிலும் நீங்கள் சமாதானமாக இருப்பீர்கள்!

*V1-4, If God is your salvation and refuge you will be at peace in the midst of threatening times!*

1. **தேவனையே நோக்கி என் ஆத்துமா அமர்ந்திருக்கிறது; அவரால் என் இரட்சிப்பு வரும்.**

2. **அவரே என் கன்மலையும், என் இரட்சிப்பும், என் உயர்ந்த அடைக்கலமுமானவர்;**

**நான் அதிகமாய் அசைக்கப்படுவதில்லை.**

3. **நீங்கள் எதுவரைக்கும் ஒரு மனுஷனுக்குத் தீங்குசெய்ய நினைப்பீர்கள்,**

**நீங்கள் அனைவரும் சங்கரிக்கப்படுவீர்கள், சாய்ந்த மதிலுக்கும் இடிந்த சுவருக்கும் ஒப்பாவீர்கள்.**

Notes:

____________________________________________________________
____________________________________________________________
____________________________________________________________

*4. **அவனுடைய மேன்மையிலிருந்து அவனைத் தள்ளும்படிக்கே அவர்கள் ஆலோசனைபண்ணி, அபத்தம்பேச விரும்புகிறார்கள்; தங்கள் வாயினால் ஆசீர்வதித்து, தங்கள் உள்ளத்தில் சபிக்கிறார்கள்.** (சேலா.)*

*God's Word Translation*

*My soul waits calmly for God alone.*
*My salvation comes from him.*
*2 He alone is my rock and my saviour—my stronghold.*
*I cannot be severely shaken.*

*3 How long will all of you attack a person?*
*How long will you try to murder him,*
*as though he were a leaning wall or a sagging fence?*
*4 They plan to force him out of his high position.*
*They are happy to lie.*
*They bless with their mouths,*
*but in their hearts they curse. Selah*

பொதுவாக உங்களை கொல்ல சதிசெய்வோர் யாரும் இருக்கமாட்டார்கள் என்று நம்புகிறோம். ஆனால் நீங்கள் தேவாலயத்திலோ அல்லது வியாபாரத்திலோ ஏதேனும் தலைமை பொறுப்பில் இருந்தால், நீங்கள் தாக்குதலுக்கு உள்ளாகும் நேரம் வரும். நீங்கள் விமர்சிக்கப்படுவீர்கள், அவமானப்படுத்தப்படுவீர்கள்.

ஆனால் அத்தகைய தாக்குதல்களிலிருந்து உங்களுக்கு விலக்கு அளிப்பதாக வேதம் ஒருபோதும் வாக்குறுதி அளிப்பதில்லை. மாறாக, நீங்கள் தாக்குதலுக்கு உட்பட்டால் என்ன செய்ய வேண்டும் என்பதை இது காட்டுகிறது.

நீங்கள் தாக்குதலுக்கு உட்பட்டிருக்கும்போது தேவன் மட்டுமே உங்கள் இரட்சிப்பும் அடைக்கலமுமாக இருக்கிறார் என்பதை உறுதிப்படுத்திக்கொள்ளுங்கள்.

சமர்ப்பணம் / ஒப்புக்கொடுத்தல்

கடினமான காரியங்கள் நமக்கு நேரிடும்போது "நான் ஏன் இந்த கஷ்டத்திற்குள் செல்ல வேண்டும்\!" என்று நாம் கோபமாக தேவனிடம் புகார் செய்யலாம். அல்லது, நாம் அவரிடம் நம்மை ஒப்புக்கொடுக்க முடியும். அவரது வாக்குறுதிகளை

Notes:

__________________________________________________________
__________________________________________________________
__________________________________________________________

ஏற்றுக்கொண்டு, அவரது வார்த்தைக்கு மேலதிகாரங்கொடுத்து, அவரது இறையாண்மையின் முன் பனிந்து, புலம்பலையும் முருமுருப்பையும் கைவிடவேண்டும்.

இதை விளக்குவதற்கு யோபுவைவிட சிறந்த எடுத்துக்காட்டு என்னால் நினைத்துப்பார்க்க முடியவில்லை. தேவன் யோபுவின் உடைமைகளையும், பத்து பிள்ளைகளையும், அவருடைய உடல்நலத்தையும், தவிர்க்கமுடியாதபடி எடுத்துக் கொண்ட போதும், யோபு தாழ்மையுடன்:

*(Job 1:21), "The Lord gave and the Lord has taken away. Blessed be the name of the Lord."* **கர்த்தர்** கொடுத்தார், **கர்த்தர்** எடுத்தார்; **கர்த்தருடைய** நாமத்துக்கு ஸ்தோத்திரம்." என்று பிரகடனம் செய்கிறார்.

யோபுவின் புத்தகத்தில் பின்வரும் காரியங்கள் அவருடைய வேதனைகளையும் புகார்களையும் (pain and his complaints) கொண்டு தேவனோடு அவர் எப்படி போராடினார் என்பதையும் காட்டுகிறது. புத்தகத்தின் முடிவில், யோபு மீண்டும் தேவனை ஆராதிக்கும் நிலையில், தேவனுடைய மகத்துவமான கரத்தின் முன்பாக பணிவதை காணலாம்.

அவர் உங்கள் இரட்சிப்பின் ஒரே ஆதாரமாக இருக்கும்போது உங்கள் இளைப்பாறுதல் தேவனுக்குள் பாதுகாக்கப்படுகிறது

*V5-7, Your rest is secured in God when He is your only source of salvation*

5. **என் ஆத்துமாவே, தேவனையே நோக்கி அமர்ந்திரு; நான் நம்புகிறது அவராலே வரும்.**

6. **அவரே என் கன்மலையும், என் இரட்சிப்பும், என் உயர்ந்த அடைக்கலமுமானவர்;**

**நான் அசைக்கப்படுவதில்லை.**

7. **என் இரட்சிப்பும், என் மகிமையும் தேவனிடத்தில் இருக்கிறது;**

**பெலனான என் கன்மலையும் என் அடைக்கலமும் தேவனுக்குள் இருக்கிறது.**

*[5] Wait calmly for God alone, my soul,*
*because my hope comes from him.*

Notes:

________________________________________________________
________________________________________________________
________________________________________________________

*[6] He alone is my rock and my saviour—my stronghold.*
*I cannot be shaken.*

*[7] My salvation and my glory depend on God.*
*God is the rock of my strength, my refuge.*

தாவீது தன்னை மீண்டும் உறுதிப்படுத்த முதல் இரண்டு வசனங்களை மீண்டும் சொல்கிறார்.

தேவன் யார் என்பதற்கு ஒன்றின்மேல் ஒன்றாக அவர் விளக்கத்தை வைத்திருக்கிறார். தேவனுக்கு அமைதியாக காத்திருக்க வேண்டும் என்று தனக்கு சொல்லிக்கொண்டவுடன் (62:5), "நான் நம்புகிறது அவராலே வரும். அவரே என் கன்மலையும், என் இரட்சிப்பும், என் உயர்ந்த அடைக்கலமுமானவர்; நான் அசைக்கப்படுவதில்லை." என்று காத்திருப்பதோடு இணைக்கிறார்.

"நான் அசைக்கப்படுவதில்லை." எப்பொழுதும் அசைக்கப்படுவதே இல்லை! மீண்டும் "என் இரட்சிப்பும், என் மகிமையும் தேவனிடத்தில் இருக்கிறது; பெலனான என் கன்மலையும் என் அடைக்கலமும் தேவனுக்குள் இருக்கிறது." என்று கூறுகிறார்.

வசனங்கள் 5-7ல் "என்" என்று 8 முறை சொல்லப்பட்டிருக்கிறதை கவனித்தீர்களா?.

**தேவனை நம்புவதற்கு மற்றவர்களுக்கு கற்றுக்கொடுத்தல்.**




*V8, Teaching others to Trust God*

Notes:

__________________________________________________________
__________________________________________________________
__________________________________________________________

*8. ஜனங்களே, எக்காலத்திலும் அவரை நம்புங்கள்; அவர் சமுகத்தில் உங்கள் இருதயத்தை ஊற்றிவிடுங்கள்; தேவன் நமக்கு அடைக்கலமாயிருக்கிறார். (சேலா.)*

*8 Trust him at all times, you people.*
*Pour out your hearts in his presence.*
*God is our refuge. Selah*

தான் கற்றது தனக்கு மட்டுமல்ல பிறருக்கும் நன்மையாக இருக்கும் என்று தான் கற்றுக்கொண்டதை குறித்து பிறருக்கு அறிவிக்கிறார். தேவனுடைய மக்களின் தலைவராக அவன் அவர்களிடம் ஞானத்தை குறித்து பேசினான். அவர்கள் எல்லா நேரங்களிலும் தேவனை நம்புவதற்கு அவர் தகுதியுள்ளவர் என்று அவர்களுக்கு நினைப்பூட்டினான்.

மனிதரையோ பணத்தையோ அல்ல; தேவனை நம்பு

*9-12, Trust in God not in men or in riches*

*9. கீழ்மக்கள் மாயையும், மேன்மக்கள் பொய்யுமாமே; தராசிலே வைக்கப்பட்டால் அவர்களெல்லாரும் மாயையிலும் லேசானவர்கள்.*

*10. கொடுமையை நம்பாதிருங்கள்; கொள்ளையினால் பெருமை பாராட்டாதிருங்கள்; ஐசுவரியம் விருத்தியானால் இருதயத்தை அதின்மேல் வைக்காதேயுங்கள்.*

*11. தேவன் ஒருதரம் விளம்பினார், இரண்டுதரம் கேட்டிருக்கிறேன்;*

வல்லமை தேவனுடையது என்பதே.

*12. கிருபையும் உம்முடையது, ஆண்டவரே! தேவரீர் அவனவன் செய்கைக்குத் தக்கதாகப் பலனளிக்கிறீர்.*

*9 Common people are only a whisper in the wind.*
*Important people are only a delusion.*
*When all of them are weighed on a scale, they amount to nothing.*
*They are less than a whisper in the wind.*
*10 Do not count on extortion to make you rich.*
*Do not hope to gain anything through robbery.*
*When riches increase, do not depend on them.*

Notes:

__________________________________________________________
__________________________________________________________
__________________________________________________________

*11 God has spoken once.*
*I have heard it said twice:*
*"Power belongs to God.*
*12 Mercy belongs to you, O Lord.*
*You reward a person based on what he has done."*

மனிதர் மீது ஏன் நம்பிக்கை வைக்கக்கூடாது என்று அவர்கள் தெரிந்துகொள்வது அவசியம் என்பதை தாவீது விளக்கினார். அவர்கள் குறைந்தவர்களோ அல்லது உயர்ந்தவர்களோ, அவர்கள் நீராவியை விட முற்றிலும் இலகுவாக இருக்கிறார்கள் என்று தாவீது அறிந்துகொண்டான்.

முக்கியமாக மூன்று வழிகளில் ஒருவன் ஐஸ்வரியத்தின் மீது இதயத்தை வைக்கலாம்

- வாழ்வின் மகிழ்ச்சியின் ஆதாரமாக செல்வத்தை கொண்டு அதை உருவாக்குவதில் அதிக இன்பம் பெறலாம்
- தனது நம்பிக்கையும் பாதுகாப்பையும் செல்வத்தில் வைப்பது
- தன் செல்வத்தின் காரணமாக திமிரையும் பெருமையையும் வளர்த்துக்கொள்வது

மாறாக நாம் புரிந்துகொள்ளும்படி தாவீது விரும்புகிறது:

தேவன் வல்லமையுள்ளவர்.

தேவன் அன்பானவர்.

எனவே தேவன் நம் எதிரிகளை நியாயமாக நியாயந்தீர்ப்பார். யாராவது தேவனுடைய வல்லமையையும் அவருடைய அன்பையும் எதிர்த்து நின்றால் அவருடைய நியாயத்தீர்ப்பை அறிந்து கொள்வார்கள். நாம் சோதனைகளை சந்திக்கும்போது சாத்தான் எப்பொழுதும் சொல்லுகிற காரியம்: "தேவன் வல்லமையுள்ளவராக இருந்தால் அவர் இந்த சோதனைகளைத் தடுத்திருக்கலாமே, எனவே தேவன் உங்கள்மேல் அன்பாக இல்லை" என்பதுதான். இந்த கருத்தின் மூலம் அவன் நம்மை மயக்கி சோதனைக்குட்படுத்துகிறான். இந்த நேரத்தில்தான் நாம் விசுவாசத்தில் யோசேப்புடன் சேர்ந்துகொள்ள வேண்டும்; தன்னை அடிமைத்தனத்திற்கு விற்ற சகோதரர்களிடம் யோசேப்பு சொன்னதை நினைவுகூற வேண்டும்.

Notes:

________________________________________________________
________________________________________________________
________________________________________________________

வல்லமை தேவனுடையது வேறு யாருடையதும் அல்ல என்பதை தாவீது புரிந்திருந்தான். எனவேதான் தேவனை மாத்திரம் நம்புவதில் தாவீது உறுதியாக இருந்தான்.

மனிதன் நமக்கு உதவுவதும் இல்லை நமக்கு வெகுமதி அளிப்பதுமில்லை; தேவன் இந்த இரண்டையும் செய்பவர்.

## இயேசு கிறிஸ்து

**யோவான்** *13-ம்* அதிகாரத்தில் இயேசு கிறிஸ்து தம்முடைய சீஷர்களின் கால்களைக் கழுவுகிறார்; தம்மை காட்டிக்கொடுக்கப் போகிறவனுடைய கால்கள் உட்பட.

**யோவான்** *12:6,* அவன் தரித்திரரைக் குறித்துக் கவலைப்பட்டு இப்படிச் சொல்லாமல், அவன் திருடனானபடியினாலும், பணப்பையை வைத்துக்கொண்டு அதிலே போடப்பட்டதைச் சுமக்கிறவனானபடியினாலும் இப்படிச் சொன்னான்.

யூதாஸ் அவரை கொள்ளையடிகிறான் என்பதையும் அவரை காட்டிக்கொடுக்கிறான் என்றும் இயேசு நன்கு அறிந்திருந்தும் அவர் யூதாஸின் கால்களை கழுவினார். ஏன்? இது எப்படி சாத்தியமாகும்? ஏனென்றால் இயேசு எந்த ஒரு மனிதன் மேலும் அல்லாமல் தேவன் மேல் மாத்திரமே முழு நம்பிக்கையையும் வைத்திருந்தார்

## அப்போஸ்தலனாகிய பவுல்

அப்போஸ்தலனாகிய பவுல் அறியப்படாத யூதர்களால் காட்டிக்கொடுக்கப்பட்டார். அதுவே அவரை எருசலேமில் கைது செய்ய வழிவகுத்தது.

**அப்போஸ்தலர்** *21:27,* " அந்த ஏழுநாட்களும் நிறைவேறி வருகையில், ஆசியாநாட்டிலிருந்து வந்த யூதர்கள் அவனை தேவாலயத்திலே கண்டு, ஜனங்களெல்லாரையும் எடுத்துவிட்டு, அவன்மேல் கைபோட்டு."

மீண்டும் அப்போஸ்தலர் **24:5-9** ல் நீங்கள் காண்பது என்னவென்றால், இந்த மனுஷன் கொள்ளைநோயாகவும், பூச்சக்கரத்திலுள்ள சகல யூதர்களுக்குள்ளும் கலகமெழுப்புகிறவனாகவும், நசரேயருடைய மதபேதத்துக்கு முதலாளியாகவும் இருக்கிறானென்று கண்டறிந்தோம். **6**இவன் தேவாலயத்தையும்

Notes:

________________________________________________________

________________________________________________________

________________________________________________________

*தீட்டுப்படுத்தப் பார்த்தான். நாங்களோ இவனைப்பிடித்து
எங்கள் வேதப்பிரமாணத்தின்படியே நியாயந்தீர்க்க
மனதாயிருந்தோம். 7அப்பொழுது சேனாபதியாகிய லீசியா
வந்து, மிகுந்த பலாத்காரமாய் இவனை எங்கள்
கைகளிலிருந்து பறித்துக்கொண்டுபோய், 8இவன்மேல்
குற்றஞ்சாட்டுகிறவர்கள் உம்மிடத்தில் வரும்படி
கட்டளையிட்டார். இவனிடத்தில் நீர் விசாரித்தால் நாங்கள்
இவன்மேல் சாட்டுகிற குற்றங்கள் யாவையும்
அறிந்துகொள்ளலாம் என்றான். 9யூதர்களும் அதற்கு
இசைந்து, இவைகள் யதார்த்தந்தான் என்றார்கள்.*

**பயன்பாடு**

நம்முடைய இலக்கு நம் சமாதானம் அல்ல ஆனால் தேவனுடைய மகிமை தான் நமது சமாதானம் என்று மனதில் வைத்திருப்பது ஏன் முக்கியமானது?

*Why is it important to keep in mind that the goal is not our peace, but God's glory?*

நாம் விடுதலை பெற நாமே திட்டங்கள் தீட்டுவதற்கும் தேவனை நம்புவதற்கும் உள்ள சமநிலை எங்கே?

*Where is the proper balance between trusting in God alone versus using plans and methods for deliverance?*

மற்றவர்கள் நம்மை தாக்குவதால் வரும் கவலையை நாம் எப்படி மேற்கொள்வது?

*How do you overcome the anxiety from the attack of others?*

Notes:

__________________________________________________________
__________________________________________________________
__________________________________________________________

எல்லாமே வேறு வழியில் செல்லுவதைப் போல் தோன்றும்போதும் நாம் தேவன் மீது நம் கவனத்தை செலுத்துவது எப்படி?

*How to keep the focus on God when everything seems to be going the other way?*

Notes:

__________________________________________________________

__________________________________________________________

__________________________________________________________

Notes:

____________________________________________________________

____________________________________________________________

____________________________________________________________

# காலை தியானம் – வாழ்க்கையை சமநிலைப்படுத்துதல்

*Devotion: Balancing Physical life.*

*Ecclesiastes 7:16, Do not be overly righteous, Nor be overly wise: Why should you destroy yourself?*

**பிரசங்கி** 7:16, மிஞ்சின நீதிமானாயிராதே, உன்னை அதிக ஞானியுமாக்காதே; உன்னை நீ ஏன் கெடுத்துக்கொள்ளவேண்டும்?

நாம் உலக மனிதர்கள் ஆவிக்குரிய வாழ்க்கை உள்ளவர்கள் அல்ல; ஆவிக்குரிய மனிதர்கள் உலக வாழ்வில் கடந்து செல்கிறோம்.



*We are not a physical being going through human experience rather we are spiritual being going through this physical experience.*

இந்த கூடுகை அமெரிக்காவில் நடப்பதால் மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன். அமெரிக்கா – கடனாளி தேசம், உலகில் அதிக கடன் வாங்குபவர்கள் உள்ள தேசம். தங்களால் இப்போது விலை கொடுக்க முடியாவிட்டாலும் ஜனங்கள் அவர்கள் விரும்பிய பொருளை வாங்குகிறார்கள். எல்லாவற்றையும் கடன் அட்டை (credit card) கொண்டு வாங்கி விடலாம்.

இப்போது வாங்கி பின்னர் பணம் செலுத்துங்கள்!! நாம் அதிகமாக கேட்டது!!

***Buy now pay later!! Very familiar one!!!***

Notes:

________________________________________________________
________________________________________________________
________________________________________________________

*உங்கள் வங்கி கணக்கை (*bank account*) பாருங்கள், மிகைப்பற்று (*overdraft*). அப்படி செலவழிப்பதற்கு மிகைப்பற்று (*overdraft facility*) வசதி. ஆகவே உங்கள் கணக்கில் எப்பொழுதும் வரவுக்கு மீறி செலவு சென்று கொண்டேதான் இருக்கிறது. வருடா வருடம் வங்கிகள் செய்ய வேண்டிய ஒரு காரியம் கணக்குகளை சமநிலைப்படுத்துதல் (*balancing the books*). அதென்னவெனில், உங்கள் வரவுகளையும் செலவுகளையும் சமநிலைப்படுத்தி உங்கள் கணக்கை ஒழுங்குபடுத்த வேண்டும்.*

*Well look into your bank account you are overdrawn, you have called overdraft facility. You have many credit cards. So you are always overdrawn or spent beyond you can pay. Every year the bank has to do an exercise called balancing the books. That's they have to tally your income and borrowing and the outstanding so that the books are in order.*

*நாம் உடலிலும், உணர்விலும், ஆவியிலும் வரவுக்கு மீறின செலவு செய்கிறோம். ஆகவே நாம் இப்பொழுது உங்கள் கணக்கை சமநிலைப்படுத்தி ஒழுங்கு படுத்தப்போகிறோம்!*

*You are also overdrawn emotionally, physically and spiritually. So we are going to balance your physical book now!*

*மிகைப்பற்று (*overdrawn*) – என்றால் என்ன?*

*First what is overdrawn?*

*நீங்கள் கணக்கில் செலுத்தும் வரவைக்காட்டிலும் அதிகமாக கணக்கில் இருந்து எடுப்பது. நமக்கு வரும் வரவை காட்டிலும் அதிகமாக செலவிடுவது.*

*You withdraw more than you put in.*

*ஒரு சில வினாடிகள் எடுத்து நம் வாழ்கையை ஆராய்ந்து பார்ப்போம். இந்த கேள்விகளை உங்களிடம் நீங்களே கேளுங்கள்.*

- *என்* ***ஆவிக்குரிய*** *(*Spiritual*) கணக்கில் நான் செலுத்தும் அளவிற்கு அதிகமாக செலவு செய்கிறேனா?*
- *என்* ***சரீர*** *(*Physical*) கணக்கில் நான் செலுத்தும் அளவிற்கு அதிகமாக செலவு செய்கிறேனா?*

Notes:

______________________________________________________

______________________________________________________

______________________________________________________

- என் **உணர்வு** (Emotional) கணக்கில் நான் செலுத்தும் அளவிற்கு அதிகமாக செலவு செய்கிறேனா?

- *Am I spending more from my Spiritual account than I put in?*
- *Am I spending more from my Physical account than I put in?*
- *Am I spending more from my Emotional account than I put in?*

நீங்கள் எல்லாருக்கும் எல்லாவற்றிலும் உதவியாக இருக்க முடியாது, உங்களை நீங்களே கவனித்துக்கொள்ள வேண்டியது அவசியம். நீங்கள் தொடர்ந்து செலவு செய்ய விரும்பினால், உங்கள் கணக்கில் தொடர்ந்து செலுத்திக்கொண்டே இருக்க வேண்டும்.

*You cannot be all things to all people and you must take time to replenish the accounts if you expect to be able to keep spending.*

நீங்கள் எப்பொழுதும் சோர்வடைய மாட்டீர்கள் என்றும் , மன அழுத்தத்திற்குள்ளாக போக மாட்டீர்கள் என்பது இல்லை, ஆனால் எப்பொழுதும் வரவுக்கு மீறி செலவு செய்கிறீர்கள் என்றால் எங்கோ ஒரு பிரச்சனை இருக்கிறது என்றே அர்த்தம்.

- முன்னுரிமை அளிப்பதில் குழப்பம் - *Priorities confused*
- ஒழுக்கம் தவறுதல் - *Discipline broken*
- எப்பொழுதும் எதாவது ஒரு அலுவல் - *Calendar is full*
- இந்த தீய சுழலை எப்படி நிறுத்துவது என்றே தெரியவில்லை - *Don't know to stop this vicious cycle*

### உலக (சரீர) வாழ்வு

*Physical life*

*Romans 8:6-8, Obsession with self in these matters is a dead end; attention to God leads us out into the open, into a spacious, free life. Focusing on the self is the opposite of focusing on God. Anyone completely absorbed in self ignores God, ends up thinking more about self than God. That person ignores who God is and what he is doing. And God isn't pleased at being ignored. (MSG)*

**ரோமர்** *8:6-8*, மாம்சசிந்தை மரணம்; ஆவியின் சிந்தையோ ஜீவனும் சமாதானமுமாம். எப்படியென்றால், மாம்சசிந்தை

Notes:

________________________________________________________
________________________________________________________
________________________________________________________

தேவனுக்கு விரோதமான பகை; அது தேவனுடைய நியாயப்பிரமாணத்துக்குக் கீழ்ப்படியாமலும், கீழ்ப்படியக்கூடாமலும் இருக்கிறது. மாம்சத்துக்குட்-பட்டவர்கள் தேவனுக்குப் பிரியமாயிருக்க மாட்டார்கள்.

*MSG ஆங்கில மொழிபெயர்ப்பு இந்த வசனங்களை இப்படியாக மொழிபெயர்க்கிறது – மாம்ச சிந்தையில் மூழ்கியிருப்பவன் தேவனை புறக்கணிக்கிறான். நாளடைவில் தேவனை காட்டிலும் தன்னை குறித்து அதிகமாக யோசிக்க ஆரம்பிக்கிறான்.*

ஆக, உங்கள் மாம்சத்தை குறித்து கவனம் செலுத்துவீர்களேயானால், தேவனில் உள்ள கவனத்தை புறக்கணிப்பீர்கள், தேவன் அதை விரும்புகிறதில்லை.

சில வேளைகளில் சிலர் தேவனுக்கடுத்த காரியங்களில் அதிக கவனமாயிருந்து மாம்ச வாழ்வை விட்டுவிடுவார்கள். இதுவும் தவறு. யாக்கோபு இதை அழகாக தனது கடிதத்தில் எழுதுகிறார்.

**யாக்கோபு** 2:15-16, ஒரு சகோதரனாவது சகோதரியாவது வஸ்திரமில்லாமலும் அநுதின ஆகாரமில்லாமலும் இருக்கும்போது, உங்களில் ஒருவன் அவர்களை நோக்கிநீங்கள் : சமாதானத்தோடே போங்கள், குளிர்காய்ந்து பசியாறுங்களென்று சொல்லியும், சரீரத்திற்கு வேண்டியவைகளை அவர்களுக்குக் கொடாவிட்டால் பிரயோஜனமென்ன?

*James 2:15-16, Suppose you see a brother or sister who has no food or clothing,[16] and you say, “Good-bye and have a good day; stay warm and eat well”—but then you don’t give that person any food or clothing. What good does that do? (NLT)*

ஆதாம் படைக்கப்பட்டபோது சரீரத்தினால் செய்யக்கூடிய வேலை அவனுக்கு கொடுக்கப்பட்டது.

**ஆதியாகமம்** 2:15, தேவனாகிய கர்த்தர் மனுஷனை ஏதேன் தோட்டத்தில் அழைத்துக்கொண்டு வந்து, அதைப் பண்படுத்தவும் காக்கவும் வைத்தார்.

*Genesis 2:15, Then the Lord God took the man and put him in the garden of Eden to tend and keep it.*

ஆக கர்த்தரே மனிதனுக்கு ஒரு வேலையை கொடுக்கிறார். அதேபோல கிறிஸ்தவனாக நீங்கள் கர்த்தர் உங்களுக்கு கொடுத்த

Notes:

________________________________________________________
________________________________________________________
________________________________________________________

வேலையில் சிறந்து விளங்க வேண்டும் என்பது தேவனுடைய விருப்பம்.

*பிரசங்கி 9:10, செய்யும்படி உன் கைக்கு நேரிடுகிறது எதுவோ, அதை உன் பெலத்தோடே செய்; நீ போகிற பாதாளத்திலே செய்கையும் வித்தையும் அறிவும் ஞானமும் இல்லையே.*

*2 கொரி 8:7, அல்லாமலும், விசுவாசத்திலும், போதிப்பிலும், அறிவிலும், எல்லாவித ஜாக்கிரதையிலும், எங்கள்மேலுள்ள உங்கள் அன்பிலும், மற்றெல்லாக் காரியங்களிலும், நீங்கள் பெருகியிருக்கிறதுபோல, இந்தத் தர்மகாரியத்திலும் பெருகவேண்டும்.*

நீங்கள் பெரிய பணியில் இருந்தாலும் சரி சாதாரண ஒரு வேலை செய்தாலும் சரி உங்கள் முழு பெலத்தையும் அதில் செலுத்தி அதில் சிறந்து விளங்குங்கள்; இதுவே கர்த்தர் எதிர்பார்க்கிற காரியம்.

அதே வேளையில் நீங்கள் சிறந்து விளங்குவதின் காரணத்தை மறந்துவிடாதீர்கள்.

### செய்யக்கூடாதவை - Don't

- மேன்மையை மாத்திரம் எண்ணி சிறப்பாக செயல்படாதீர்கள் - Pursue excellence for the sake of superiority
- கொடுக்கப்பட்ட வேலையை மாத்திரம் செய்வேன் என்ற எண்ணம் -Don't be limited by the task
- அரை மனதோடு சிறந்து விளங்க நினைக்காதீர்கள் -Pursue excellence half-hearted effort

பணி செய்யாமல் உங்கள் குடும்பத்தை கவனிக்காமல் இருப்பீர்களானால் அவிசுவாசிகளைவிட மோசமானவர்கள் என்று வேதம் சொல்லுகிறது.

*1 Timothy 5:8, But if anyone does not provide for his own, and especially for those of his household, he has denied the faith and is worse than an unbeliever.*

*1தீமோ 5:8, ஒருவன் தன் சொந்த ஜனங்களையும், விசேஷமாகத் தன் வீட்டாரையும் விசாரியாமற்போனால், அவன்*

Notes:

____________________________________________________________

____________________________________________________________

____________________________________________________________

விசுவாசத்தை மறுதலித்தவனும், அவிசுவாசியிலும் கெட்டவனுமாயிருப்பான்.

மேலே உள்ள வசனங்களிலிருந்து சில காரியங்கள் தெளிவாகிறது

- நாம் வேலை செய்ய வேண்டும் - *We ought to work*
- வேலை செய்வதற்கு தேவனால் கட்டளையிடப்பட்டிருக்கிறோம் - *We have been commanded by the Lord*
- நம் வேளையில் சிறந்து விளங்க வேண்டும் - *We ought to excel in work*
- நம் குடும்பத்தை கவனிக்க வேண்டும் - *We ought to provide for the home*

## ஆவிக்குரிய வாழ்க்கை

*Spiritual life*

**கலாத்தியர்** 5:16, பின்னும் நான் சொல்லுகிறதென்னவென்றால், ஆவிக்கேற்றபடி நடந்துகொள்ளுங்கள், அப்பொழுது மாம்ச இச்சையை நிறைவேற்றாதிருப்பீர்கள்.

ஆவிக்கேற்றபடி நடந்துகொள்ளுங்கள் - Walk in the spirit!

**ரோமர்** 8:6, மாம்சசிந்தை மரணம்; ஆவியின் சிந்தையோ ஜீவனும் சமாதானமுமாம்.

ஜீவனும் சமாதானமும் தேவையென்றால் ஆவியின் சிந்தை நமக்கு வேண்டும்.

*To have life and peace you ought to be spiritually minded.*

ஆபிரகாம் பழங்கால நகரமாகிய எருசலேமை கடந்து பலமுறை சென்றதுண்டு. ஆனால் ஒருமுறை கூட அந்த பட்டணத்திற்குள் சென்று அதின் மதில்களை முத்தமிட்டதுபோல் எந்த குறிப்பும் இல்லை.

**எபிரெயர்** 11:10, ஏனெனில், தேவன் தாமே கட்டி உண்டாக்கின அஸ்திபாரங்களுள்ள நகரத்துக்கு அவன் காத்திருந்தான்.

கொரிந்தியருக்கு எழுதின கடிதத்தில் அப்போஸ்தலனாகிய பவுல் இவ்வாறு குறிப்பிடுகிறார்.

Notes:

____________________________________________________________
____________________________________________________________
____________________________________________________________

*2 **கொரி** 4: 1**7**, 18,*

*மேலும் காணப்படுகிறவைகளையல்ல, காணப்படாதவைகளை நோக்கியிருக்கிற நமக்கு அதிசீக்கிரத்தில் நீங்கும் இலேசான நம்முடைய உபத்திரவம் மிகவும் அதிகமான நித்திய கனமகிமையை உண்டாக்குகிறது. ஏனெனில், காணப்படுகிறவைகள் அநித்தியமானவைகள், காணப்படாதவைகளோ நித்தியமானவைகள்.*

### மாம்ச வாழ்க்கையும் ஆவிக்குரிய வாழ்க்கையும்

*Physical and Spiritual*

இந்த இரண்டையும் எப்படி நாம் ஒன்றிணைப்பது?

*1 கொரி 15:46,*

*ஆகிலும் ஆவிக்குரிய சரீரம் முந்தினதல்ல, ஜென்மசரீரமே முந்தினது; ஆவிக்குரிய சரீரம் பிந்தினது.*

இயேசு அருமையாக நமக்கு இந்த இரண்டையும் எப்படி இணைப்பது என்பதை குறித்து கட்டளை கொடுத்திருக்கிறார்.

***மத்தேயு** 22:37-40,*

*இயேசு அவனை நோக்கிஉன் தேவனாகிய கர்த்தரிடத்தில் உன் : முழு இருதயத்தோடும், உன் முழு ஆத்துமாவோடும் உன் முழு மனதோடும் அன்புகூருவாயாக; இது முதலாம் பிரதான கற்பனை. இதற்கு ஒப்பாயிருக்கிற இரண்டாம் கற்பனை என்னவென்றால், உன்னிடத்தில் நீ அன்புகூருவதுபோலப் பிறனிடத்திலும் அன்புகூருவாயாக என்பதே. இவ்விரண்டு கற்பனைகளிலும் நியாயப்பிரமாணம் முழுமையும் தீர்க்கதரிசனங்களும் அடங்கியிருக்கிறது என்றார்.*

நீங்கள் மறுபடியும் பிறந்த பிறகு நீங்கள் முன்னுரிமை கொடுக்கவேண்டியது தேவனுக்கு, பிறகு மாம்சத்திற்கு. அதே வேளையில் உங்கள் மாம்ச வாழ்க்கை நீங்கள் ஆவிக்குரியவர் என்பதை காட்ட வேண்டும்.

இயேசு கிறிஸ்து தமது வாழ்வில் இதை அற்புதமாக நடுநிலைப்படுத்தி செய்து காட்டியிருப்பதை நாம் பார்க்க முடியும். தேவனுடைய ஒரே குமாரனாகிய இயேசு கிறிஸ்து, தெய்வீக தன்மை கொண்டபோதிலும், ஒரு குமாரனாக தாய்

Notes:

_____________________________________________________________
_____________________________________________________________
_____________________________________________________________

*மரியாளிடம் பிறந்து, சாதாரண குழந்தையாக பருவம் வரும் வரை வளர்ந்தார்.*

*தமது தகப்பனுடன் தச்சு வேலை செய்து தம் ஜீவனத்துக்காக சம்பாதித்தார்.*

*தமது ஊழியத்தை ஆரம்பித்தபோது இயற்கைக்கு அப்பாற்பட்ட வல்லமையையும், ஆவிக்குரிய ஆழமான ஞானத்தையும் வெளிப்படுத்தினார். ஆனாலும், பட்ட பகலில் சூரியனில் நடந்து பசியுற்றார், சோர்வடைந்தார். தமது ஊழியத்தின் பெரும்பகுதி, ஜனங்களுக்கு உதவி செய்து, உபதேசித்து, வியாதிகளை சுகமாக்கி, சில வேளைகளில் அற்புதமான வழிகளில் அவர்களுக்கு உணவு கொடுத்தார். ஆனால் ஒருமுறை கூட அந்த வல்லமையை பயன்படுத்தி தான் புசிக்கவோ, தமது மாம்ச தேவைகளை பூர்த்தி செய்யவோ இல்லை.*

*இயேசுவே ஆவியும் மாம்சமும் கலந்த சிறந்த கலவை.*

*1* **பேதுரு** *2:21,*

*இதற்காக நீங்கள் அழைக்கப்பட்டுமிருக்கிறீர்கள்; ஏனெனில், கிறிஸ்துவும் உங்களுக்காகப் பாடுபட்டு, நீங்கள் தம்முடைய அடிச்சுவடுகளைத் தொடர்ந்துவரும்படி உங்களுக்கு மாதிரியைப் பின்வைத்துப்போனார்.*

*அவர் இந்த உலகத்தில் வாழ்ந்தபொழுது அவர் வாழ்ந்து காண்பித்ததை நாமும் வாழ அழைக்கப்படுகிறோம்.*

*We are commanded to imitate his earthly pattern.*

*ஒரு அற்புதமான காரியம், இயேசு சிலுவையில் அறையப்பட்டு மனுக்குலம் அனைத்திற்காகவும் தெய்வீக கடமையை நிறைவேற்றுகிற வேளையிலும், தமது தாயை பொறுப்பெடுத்துக்கொள்ளும்படி பிரத்தியேகமான குறிப்புகளை சொல்கிறார். இதன் மூலம், இயற்கையான மனித தேவைகளால் இடையூறு செய்யப்படகூடாத ஆவிக்குரிய காரியமே இல்லை என்று சொல்லலாம். இந்த இடையூறுகள் நம் ஆவிக்குரிய காரியங்களுக்கு இணையான முக்கியத்துவம் பெற்றிருக்கிறது என்பதை நாம் உணர வேண்டும்.*

*நமது பெலனை சோர்வடையச் செய்வது எது?*

Notes:

__________________________________________________________
__________________________________________________________
__________________________________________________________

### *What would drain our strength?*

1. **நம்மால் செய்யக்கூடிய காரியங்களை காட்டிலும் அதிகமாக நாம் செய்யும்போது நாம் பெலன் அற்றுப்போகிறோம்**

*Our strength is used up when we try to do more than we can do.*

கர்த்தர் நம்மை எல்லாருக்கும் எல்லாமுமாக இருக்க நம்மை இந்த உலகத்திற்கு அனுப்பவில்லை. இயேசு தமது ஊழியத்தில் இதைக்குறித்து தெளிவாக இருந்தார். அவர் இந்த பூமியில் உள்ள எல்லா ஊர்களுக்கும் சென்று எல்லாரையும் குணப்படுத்தி எல்லாருக்கும் பிரசங்கிக்க வில்லை. ஆனாலும் தமது ஊழியத்தின் முடிவில், தமது பிதா அனுப்பின நோக்கத்தை நிறைவேற்றிவிட்டதாக அவரால் உறுதியாக தைரியமாக கூற முடிந்தது.

நீங்கள் எல்லாருக்கும் எல்லாமுமாக இருந்து எதையாகிலும் நிரூபித்துவிடலாம் என்று எண்ணுகிறீர்களா?

*Are you trying to prove something to yourself by being all things to all people?*

ஒரு வேளை “நோ – No / இயலாது” என்று சொல்ல நீங்கள் கூச்சப்படுபவராக இருக்கலாம். இதுவே நீங்கள் அளவுக்கு மீறி காரியங்களை ஒப்புக்கொள்வதற்கு காரணமாக இருக்கலாம். என்னவாக இருந்தாலும், இதை நமது கட்டுப்பாட்டிற்குள் வைத்துக்கொள்ள வேண்டும்.

*Maybe you have a hard time saying "No." Whatever it is that causes you and me to over-commit, we need to get this area under control.*

2. **செய்ய வேண்டிய காரியங்கள் ஏராளமாக இருக்கும்போது நாம் பெலன் அற்றுப்போகிறோம்**

*Our strength is used up when we have too much stuff.*

நீங்கள் நிறைய காரியங்கள் செய்வதற்கு நிறைய பெலன் தேவைப்படுகிறது என்பது உங்களுக்கு தெரியுமா? உங்கள் அறையை சமீபத்தில் சுத்தம் செய்தீர்களா?

*Did you know that the more you have the more energy it takes out of you? Cleaned your closet out lately?*

Notes:

________________________________________________________
________________________________________________________
________________________________________________________

உங்கள் வீட்டில் நிறைய "பொக்கிஷங்கள்" (treasures) இருக்குமானால் அது உங்கள் பெலனை வடியச்செயும். நீங்கள் விரும்புகிற பொருட்களை உங்கள் வீட்டில் வைக்கக்கூடாது என்று சொல்லவில்லை, ஆனால் அது உங்களை மகிழ்விக்கிறதா அல்லது உங்கள் பெலனையும் / ஆற்றலையும் நேரத்தையும் விரையம் செய்கிறதா?

*A home or apartment full of valued "treasures" is a real drainer of energy. Now I'm not suggesting we can't have things that we enjoy, but the question is, do you enjoy them or are they just sapping your time and energy?*

3. **பணக்கஷ்டங்கள் இருக்குமானால் அதுவும் உங்கள் பெலனை உருக்கிவிடும்**

*Our strength is used up when we have money problems.*

கடன் அட்டைகள் நமது வீழ்ச்சிக்கு வித்திடலாம். உங்கள் வாழ்வை உருக்கும் இந்த காரியத்தை நிறுத்தி உங்கள் செலவை கட்டுப்பாட்டிற்குள் வைத்துக்கொள்ள வேண்டும். அதே மாதத்தில் அந்த பணத்தை செலுத்த முடியாவிட்டால் நான் கடன் அட்டையை உபயோகிப்பதில்லை. கடன் அட்டையோ சேமிப்பு அட்டையோ கொண்டு உங்களிடம் இல்லாத பணத்தை செலவு செய்யாதீர்கள்.

*Credit cards can be our downfall. Maybe some of you need to get on a budget and stop this drain on our lives. I don't use my credit card unless I can pay fully in the same month. Either credit card or debit card ... don't spend when you don't have.*

4. **நமது வாழ்வில் ஒழுக்கத்தை கடைபிடிக்காதபோது நாம் பெலன் அற்றுப்போகிறோம்**

*Our strength is used up when our lives are not disciplined.*

ஒழுக்ககுறைவால் நாம் மாண்டுபோகிறோம் என்று நீதிமொழிகள் கூறுகிறது. உண்மையாகவே நம்மில் பலர் இந்த ஒழுக்கக்கேட்டை சரிசெய்வதற்கு புறக்கணிப்பதால் தான் நமது ஆற்றல் வீணாகிறது என்று நான் கருதுகிறேன்.

Notes:

__________________________________________________________
__________________________________________________________
__________________________________________________________

*Proverbs says that we die from lack of discipline, and I believe with all my heart that many of us are drained of energy because we refuse the needed discipline in our lives*

## சரிசெய்தல்

*Let us see how we can balance it.*

எப்படி நம் வாழ்வை சமநிலைப்படுத்தலாம் என்று பார்ப்போம்.

1. **கர்த்தருடைய வார்த்தையை கொண்டு**

*From Word of God*

**சங்கீதம்** 119:28,

சஞ்சலத்தால் என் ஆத்துமா கரைந்துபோகிறது; உமது வசனத்தின்படி என்னை எடுத்து நிறுத்தும்

*Psalms 119:28,*

*My soul melts from heaviness; Strengthen me according to Your word.*

சோர்வையும் துன்ப நகலையும் கடந்து செல்வதற்கு நமக்கு **"கர்த்தருடைய வார்த்தை"** ஒரு மகத்தான வளம்.

*The Word of God is our resource to get us through times of weariness and sorrow.*

**யோவான்** *15:7,*

நீங்கள் என்னிலும், **என் வார்த்தைகள் உங்களிலும் நிலைத்திருந்தால்,** நீங்கள் கேட்டுக்கொள்வதெதுவோ அது உங்களுக்குச் செய்யப்படும்.

இந்த வசனம் ஆண்டவர் நமக்கு கொடுத்த காசோலை (பிளான்க் செக் - blank cheque). நம்முடைய தேவை எவ்வளவோ அதை நிரப்பி எப்போதுவேண்டுமானாலும் பெற்றுக்கொள்ளலாம்.

*The above verse is the real blank cheque what the Lord had given us. Whatever the amount may be you can bank it on any time.*

கர்த்தருடைய வார்த்தையை தியானிப்பதற்கு ஒரு நாளில் எவ்வளவு நேரம் செலவழிக்கிறீர்கள்?

Notes:

________________________________________________________
________________________________________________________
________________________________________________________

*அதை எண்ணி பசியோடும் தாகத்தோடும் இருக்கிறீர்களா?*

நினைவில் வைத்துக்கொள்ளுங்கள், கர்த்தருடைய வார்த்தை சீரான அளவு (டயட் - steady diet) உங்களுக்குள் செல்லாதவரை உங்கள் வாழ்வு நிலைகுலைந்தே இருக்கும்.

*Remember your life will always be out of balance until you have a steady diet of the Bible in your life.*

அவருடைய வார்த்தையை வந்து எல்லா நாளும் எல்லா சூழ்நிலையிலும் விருந்து உண்டு திருப்தியாகுங்கள்.

*Come feast on His words every day and on every occasion.*

2. ***கர்த்தருக்குள் மகிழ்ச்சி***

*Joy of the Lord*

நெகேமியா 8:10,

*விசாரப்படவேண்டாம்; கர்த்தருக்குள் மகிழ்ச்சியாயிருப்பதே உங்களுடைய பெலன்*

*Nehemiah 8:10, Do not sorrow, for the joy of the Lord is your strength.*

மனநிறைவு (contentment), சமாதானம் (peace) மற்றும் திருப்தி (fulfilment) ஆகிய இந்த மூன்றும் இணைந்ததுதான் மகிழ்ச்சி. நாம் நினைவில் கொள்ள வேண்டிய காரியம், மகிழ்ச்சியும் (joy) சந்தோசமும் (happiness) ஒன்றல்ல. சந்தோஷம் நீங்கள் இருக்கிற சூழ்நிலையை பொறுத்தது. நீங்கள் கேள்விப்படுகிற செய்தியை பொறுத்து நீங்கள் சந்தோசமாக இருக்கலாம் அல்லது துக்கமாக இருக்கலாம்.

அனால், மகிழ்ச்சி ஆழமானது. எந்த சூழ்நிலையானாலும் ஒரு முழுமையின் உணர்வு அந்த மகிழ்ச்சிக்குள் இருக்கும்.

*But Joy is that deeper, abiding sense of completeness which is present even when circumstances are not happy or enjoyable.*

நீதிமொழிகள் 17:22,

*மனமகிழ்ச்சி நல்ல ஔஷதம்; முறிந்த ஆவியோ எலும்புகளை உலரப்பண்ணும்.*

Notes:

__________________________________________________________
__________________________________________________________
__________________________________________________________

*Proverbs 17:22, A joyful heart is good medicine, But a broken spirit dries up the bones.*

“உமது இரட்சணியத்தின் சந்தோஷத்தைத் திரும்பவும் எனக்குத் தாரும்” என்று தாவீது வேண்டுகிறார். நாம் பாவம் செய்து நமது ஆண்டவருடைய உறவில் இருந்து தள்ளிப்போகும்போது, நமது மன மகிழ்ச்சியை இழக்கிறோம்; அதுவே நமது கணக்கை அதிகமாக கரைத்துவிடுகிறது.

*David prayed, "Restore to me the joy of my salvation." When we’ve sinned and are out of fellowship with the Lord, we lose our joy and that really drains our account.*

### 3. விசுவாசிகளின் ஐக்கியம்

*Fellowship with believers*

அப்போஸ்தலர் 2:42,

அவர்கள் அப்போஸ்தலருடைய உபதேசத்திலும், அந்நியோந்நியத்திலும், அப்பம் பிட்குதலிலும், ஜெபம்பண்ணுதலிலும் உறுதியாய்த் தரித்திருந்தார்கள்.

*Acts 2:42, And they continued steadfastly in the apostles’ doctrine and fellowship, in the breaking of bread, and in prayers.*

நம்மைப்போல் இயேசு கிறிஸ்துவின் மேல் விசுவாசம் வைத்து அன்பு செலுத்துபவர்களோடு இல்லாமல் வேறு நபரோடு வாழும்போது, அதுவும் நமது உள்ளான வளங்களை கரைத்துவிடும். நமக்கு தெம்பூட்டும் விதமாக விசுவாசிகளின் பெல்லோஷிப் (ஐக்கியம் fellowship)-ல் நேரம் செலவழிப்பது அவசியம். நமக்கு ஆலயம் ஒவ்வொரு வாரமும் அவசியம். அதோடு சிறு குழுக்களாக வேத தியானம் மற்றும் ஜெபிக்கும் குழுக்களும் அவசியம்.

*Living and working with those who do not share our faith and our love of Jesus will drain on our inner resources. We need times of fellowship to give us strength. We need church every week. We need small support groups of Bible study and prayer.*

சிறு குழுக்களாக உங்கள் வீடுகளிலோ உங்கள் சகோதரர் வீடுகளிலோ தவறாமல் கூடி ஜெபிப்பது நான் தனிப்பட்ட முறையில் உற்சாகப்படுத்துகிற ஒரு காரியம். இதை ஒரு

Notes:

__________________________________________________________

__________________________________________________________

__________________________________________________________

வழக்கமாக கொள்வது நலமாக இருக்கும். நீங்கள் வெளிப்படையாகவும் உண்மையாகவும் பேசிக்கொள்ளக்கூடிய ஒரு கூட்டம், நீங்கள் சொல்லுகிறவைகளை ஏற்றுக்கொள்ளகூடிய கூட்டம் உங்களுக்கு அவசியம். நடு ஜாமத்திலும் அழைத்து தேவைப்படுமானால் ஜெபிக்கும்படி கேட்பதற்கு அப்படிப்பட்ட நண்பர்கள் அவசியம். அதை போல் ஒருவர் அல்லது இரண்டுபேர் உங்கள் வாழ்வில் இருந்தாலும் கூட, அது உங்கள் வாழ்வில் அநேகமான பெலனை / ஆற்றலை உங்கள் சரீர-உலக வாழ்விலும், மனதளவிலும், ஆவிக்குரிய வாழ்விலும் கொடுப்பதை நீங்கள் காண்பீர்கள்.

*I personally encourage a small care group or a home group where you can have it in your home or in a fellow brother's/sisters home on a regular basis. You need a few people that you regularly interact with, where you can be open and honest, where you are accountable, and where you are totally accepted. People you can call in the middle of the night, if necessary, for prayer support. If you have one or two people like that in your life, it will pour enormous strength into you, spiritually, emotionally and mentally.*

Notes:

________________________________________________________
________________________________________________________
________________________________________________________

Notes:

---------------------------------------------------------------
---------------------------------------------------------------
---------------------------------------------------------------

Notes:

____________________________________________________________
____________________________________________________________
____________________________________________________________

## *10.    எதிரியும்... நானும்... வித்தியாசம்*

*உங்கள் எதிரி உங்களை கொல்ல நினைக்கிறான் ஆனாலும் அவனை கொல்ல மறுக்கிறீர்கள்...ஏன்?.. இன்னும் தேவ நீதியின்மேல் நம்பிக்கை இருப்பதால்...*

*You refuse to kill your enemy even when he is trying to kill you … still trusting God is just…*

*சங்கீதம் 57 & 142*

***சூழல்:*** *தாவீதின் ஞானதிருஷ்டிக்காரனாகிய காத், தாவீதை அதுல்லாம் கெபியில் சந்திக்க வருகிறான். தாவீது சவுலின் நிமித்தம் ஓடி அதுல்லாம் கெபியில் ஒளிந்து-கொண்டிருக்கிறான்.*

*வேத பகுதிகள்:*

- *1 சாமுவேல் 22:1-5*
- *2 சாமுவேல் 23:13*
- *1 நாளாகமம் 11:15-19*

*சங்கீதம்* 57

*ஒருமுறை இங்கிலாந்து மற்றும் வேல்ஸ் நாடுகளின் வடக்கே ஒரு பண்ணை வீட்டில் விடுமுறையை கழிக்க சென்றிருந்தேன். அங்கு உள்ள செம்மறி ஆடுகளும் ஆட்டுக்கடாக்களும் பசும் புல்வெளியில் மேய்வது பார்ப்பதற்கு மிக அருமையான காட்சியாக இருந்தது. அவைகளை வழிகாட்டும் நாய் (*guide dog*) அங்கு வந்து குரைத்து அந்த ஆடுகளை மந்தையுடன் சேர்க்கும் காட்சி மிகவும் குறிப்பிடத்தக்கது. அங்கு ஒரு தொட்டியில் அந்த ஆடுகளுக்காக நோய் எதிர்ப்பு சக்தி (*anti-septic*) கொண்ட திரவியத்தால் நிரப்பப்பட்டிருந்தது. அந்த ஆடுகள் அனைத்தும் அந்த தொட்டிக்குள் வழிநடத்தப்பட்டன. தொட்டிக்குள் சென்ற ஆடுகள், மற்ற பாதை வழியாக வெளியே வரும்போது, அங்கு மேய்ப்பன் இருந்து அந்த ஆடுகளையும் கடாக்களின் கொம்புகளையும் பிடித்து அந்த தொட்டிக்குள் இன்னும் சில நிமிடங்கள் இருக்கும்படி தள்ளிவிடுவான். அந்த ஆடுகளை*

Notes:

________________________________________________________
________________________________________________________
________________________________________________________

எந்த வியாதியும் தாக்காமல் இருப்பதற்கு அந்த தொட்டியில் அவை இன்னும் சில நிமிடங்கள் இருப்பது மிகவும் அவசியம்.

அப்போது நான் அந்த மேய்ப்பனை நோக்கி, “நீர் அந்த ஆடுகளை தள்ளிவிடுகிறீரே, இது எதற்கென்று அந்த ஆடுகளுக்கு தெரியுமா?” என்று கேட்டேன். அதற்கு அந்த மேய்ப்பன், “சற்றும் அவைகளுக்கு தெரியாது (They haven’t got a clue)” என்று பதிலளித்தான்.

நீங்களும் நானும் அந்த கடாக்களை பார்த்து பரிதபிக்கக்கூடிய தருணங்கள் போல நம் வாழ்விலும் சந்தித்தது உண்டு. நாம் நம்பிய மேய்ப்பனிடமிருந்து ஏன் இப்படிப்பட்ட காரியம் நமக்கு வருகிறது என்று அறியாமல் திகைத்த நேரங்கள் உண்டு. நமது தலைமை மேய்ப்பனாகிய தேவன் ஒரு சிறு விளக்கமும் கொடுக்கவில்லை.

தாவீதின் வாழ்வில் அச்சடித்தது போல் அதே மாதிரியான ஒரு நிலை.

உங்களை துரத்தி கொல்வதற்கு ஒரு சேனை சுற்றிக்கொண்டிருக்கும் நேரத்தில் ஒரு குகையில் வாழ்வதோ ஒளிந்துகொள்வதோ நல்லதல்ல! ஒரு பைத்தியக்காரனுக்கும் அவன் சேனைக்கும் விலகி நீங்கள் ஒரு குகையில் ஒளிந்திருக்கிறீர்கள், உங்களால் நம்பமுடியாத அளவுக்கு தேவன் ஒரு வாக்குத்தத்தம் கொடுக்கிறார். அந்த சூழ்நிலையில் நீங்கள் என்னென்னவோ செய்தாலும், ஒரு துதியின் பாடலையா எழுதுவீர்கள்?

ஆனாலும் இதோ தாவீது ஒரு குகையிலிருந்து பாடுகிறான்! அதுவும் ஒரு புலம்பலின் பாடல் அல்ல! கர்த்தரை உயர்த்தி பாடுகிற பாடல்! நம் வாழ்விலும் ஒரு குகையில் நாம் சிக்கிக்கொள்ளும் வேளையில், குறிப்பாக தேவனுடைய வாக்குத்தத்தம் நிறைவேறுவதற்கான அறிகுறியே தெரியாதபொழுது நம் சிந்தனையும் செய்கையும் எப்படி இருக்க வேண்டும் என்று தாவீது இந்த சங்கீதத்தின் மூலம் கற்றுத் தருகிறார்.

Notes:

________________________________________________________
________________________________________________________
________________________________________________________

தாவீது யோசித்திருக்கலாம்:

- தேவனே, இந்த காரியம் எனக்கு நடக்க ஏன் அனுமதித்தீர்? நீர் தானே என்னை ராஜாவாக அபிஷேகம் பண்ணினீர்?
- நான் இதை தெரிந்துகொள்ளவில்லை - I didn't choose the job
- நீர் ஏன் சவுலை தள்ளி என்னை இராஜாவாக அபிஷேகிக்கக்கூடாது?

ஆனால் சங்கீதம் 57ல், தாவீது அதைக்காட்டிலும் ஒரு ஆழமான காரியத்தை அறிந்திருந்தான் என்று விளக்குகிறது. கர்த்தர் தன்னை ஏன் இந்த கஷ்டத்தில் செல்ல அனுமதித்தார் என்பதை அவன் அறியாதிருந்தாலும், அப்படி ஒரு கஷ்டத்தில் செல்லும்போது தான் என்ன செய்யவேண்டும் என்பதை அறிந்திருந்தான்.

"ஏன்" என்கிற கேள்வி தவறானது என்று தாவீது புரிந்துகொண்டான். மாறாக "ஆண்டவரே, இந்த போராட்டத்தின் மத்தியிலும் இதன் விளைவாகவும் என் வாழ்விலிருந்து உமக்கு என்ன வேண்டும்?" ("God, what do You want from my life in the midst of this trial and as a result of this trial?"). இதற்கு பதில், "தேவன் மகிமைப்பட வேண்டும்" ("God wants to be glorified."). இதுவே சங்கீதம் 57ன் கருப்பொருள்.

உங்கள் கஷ்டங்களில் தேவனை விசுவாசிப்பது அவருக்கு மகிமையை கொண்டுவரும்.

**வ** *1-6, Trust God in your trials glorifies Him*

**கர்த்தரை மாத்திரமே சார்ந்திருங்கள்**

*Rely upon God alone V1*

*1.* **எனக்கு இரங்கும், தேவனே, எனக்கு இரங்கும்;**

**உம்மை என் ஆத்துமா அண்டிக்கொள்ளுகிறது; விக்கினங்கள் கடந்துபோகுமட்டும்**

உமது செட்டைகளின் நிழலிலே வந்து அடைவேன்.

கோழி தன் குஞ்சுகளை எப்படி பொல்லாங்கிலிருந்தும் ஆபத்துகளிலிருந்தும் காப்பாற்றி தன் சிறகின் அடியில்

Notes:

____________________________________________________________
____________________________________________________________
____________________________________________________________

சேர்த்துக்கொள்கிறதோ, அதே போல் நாமும் தேவனை மாத்திரமே நம்ப வேண்டும் மனிதர்களை அல்ல.

தேவனிடத்தில் ஜெபிப்பது விசுவாசத்தின் அடையாளம்

*Trusting means going to God in prayer V2*

***2. எனக்காக யாவையும் செய்து முடிக்கப்போகிற***

***தேவனாகிய உன்னதமான தேவனை நோக்கிக் கூப்பிடுவேன்.***

***3. என்னை விழுங்கப்பார்க்கிறவன் என்னை***

***நிந்திக்கையில்,***

***அவர் பரலோகத்திலிருந்து ஒத்தாசை அனுப்பி,***

***என்னை இரட்சிப்பார் .***

***(.சேலா)***

***தேவன் தமது கிருபையையும் தமது சத்தியத்தையும்***

***அனுப்புவார்.***

நம்முடைய தேவைகளுக்கு நாம் அரைகுறையாக அல்ல முழுமையாக தேவனை சார்ந்து இருக்கிறோம் என்பதற்கு ஜெபம் பெரும் சான்று. Prayer is an acknowledgment that our need is not partial, but total. தேவனுக்கும் நம்மை சுற்றி இருப்பவர்களுக்கும் "நான் தேவனை சார்ந்த மனிதன். நான், என் சுயமாய் காரியங்களை செய்ய முடியாது. என் சுய பெலத்தினால் இந்த சூழ்நிலையை மேற்கொள்ள முடியாது ஆனால் ஆண்டவரே உம்முடைய பெலத்தினால் மேற்கொள்வேன்." என்று வெளிப்படுத்துவதாகும்.

*Prayer says to God and to anyone else around, "I am a dependent person. I am not self‑sufficient. I cannot handle this situation in my own strength, but only in Your strength, Lord!"*

தேவன் உங்கள் பிரச்சனைகள் எல்லாவற்றைக்காட்டிலும் பெரியவர் என்று விசுவாசிப்பது!

*Trust that God is greater than all your problems V4-6*

***4. என் ஆத்துமா சிங்கங்களின் நடுவிலிருக்கிறது;***

Notes:

__________________________________________________________
__________________________________________________________
__________________________________________________________

***தீயை இறைக்கிற மனுபுத்திரருக்குள்ளே கிடக்கிறேன்; அவர்கள் பற்கள் ஈட்டிகளும் அம்புகளும்,***

***அவர்கள் நாவு கருக்கான பட்டயமுமாயிருக்கிறது.***

*5.* ***தேவனே, வானங்களுக்கு மேலாக உயர்ந்தருளும்;***

***உமது மகிமை பூமியனைத்தின்மேலும்***

***உயர்ந்திருப்பதாக.***

*6.* ***என் கால்களுக்குக் கண்ணியை வைத்திருக்கிறார்கள்;***

***என் ஆத்துமா தொய்ந்துபோயிற்று;***

***எனக்கு முன்பாகக் குழியை வெட்டி,***

***அதின் நடுவிலே விழுந்தார்கள் .***

***(.சேலா)***

கவிதை நடையில் எதிரிகளை குறித்து:

- சிங்கங்கள் - Lions
- தீயை இறைக்கிற மனுபுத்திரர் - fire-breathing dragons
- அவர்கள் பற்கள் ஈட்டிகளும் அம்புகளும் - *whose teeth are spears and arrows,*
- அவர்கள் நாவு கருக்கான பட்டயம் - *Whose tongues are sharp swords*

**சேலா** *Selah*

இப்போது சங்கீதத்தின் கவனம் மாறுகிறது, . தன் பிரச்சனைகள் எல்லாவற்றைக் காட்டிலும் தேவன் பெரியவர் என்று தாவீது உணருகிறார்.

Notes:

________________________________________________________
________________________________________________________
________________________________________________________




நான் எப்பொழுதும் சொல்வதைப்போல, உங்கள் பிரச்சனை பெரிதாக இருந்தால், அவர் மீது நம்பிக்கை வைக்கும்போது தேவன் மகிமைப்படுவதற்கு அதிக வாய்ப்பு உள்ளது.

உங்கள் கஷ்டத்தில் தேவனை துதிப்பது அவருக்கு மகிமை சேர்க்கிறது

**வ** *7-11, Praising God in your trial glorifies Him*

*7. **என் இருதயம் ஆயத்தமாயிருக்கிறது; தேவனே,***

***என் இருதயம் ஆயத்தமாயிருக்கிறது;***

***நான் பாடிக்கீர்த்தனம்பண்ணுவேன்.***
*8. **என் மகிமையே, விழி;***

***வீணையே, சுரமண்டலமே, விழியுங்கள்;***

***அதிகாலையில் விழித்துக்கொள்வேன்.***
*9. **ஆண்டவரே, ஜனங்களுக்குள்ளே உம்மைத் துதிப்பேன்;***

***ஜாதிகளுக்குள்ளே உம்மைக் கீர்த்தனம்பண்ணுவேன்.***
*10. **உமது கிருபை வானபரியந்தமும்,***

***உமது சத்தியம் மேகமண்டலங்கள்பரியந்தமும்***

Notes:

___________________________________________________________
___________________________________________________________
___________________________________________________________

எட்டுகிறது.

*11. தேவனே, வானங்களுக்குமேலாக உயர்ந்தருளும்;*

**உமது மகிமை பூமியனைத்தின்மேலும்**

**உயர்ந்திருப்பதாக.**

பிரத்தியேகமாக கவனம் செலுத்தி கர்த்தரை துதிப்பது

*Deliberate focus to Praise God V 7-9*

*7. என் இருதயம் ஆயத்தமாயிருக்கிறது; தேவனே,*

**என் இருதயம் ஆயத்தமாயிருக்கிறது;**

**நான் பாடிக்கீர்த்தனம்பண்ணுவேன்.**
*8. என் மகிமையே, விழி;*

**வீணையே, சுரமண்டலமே, விழியுங்கள்;**

**அதிகாலையில் விழித்துக்கொள்வேன்.**
*9. ஆண்டவரே, ஜனங்களுக்குள்ளே உம்மைத் துதிப்பேன்;*

பிரச்சனைகள் வரும்போது இயற்கையாகவே கர்த்தர் மீது கோபப்படவும் குறைகள் கூறவும் ஆரம்பித்துவிடுவோம். இல்லாவிட்டால் மன அழுத்தத்திற்கு சென்றுவிடுவோம். ஆனால் எதிரி தனக்காக வலை விரித்திருக்கிறபோதும், தாவீதோ கர்த்தரை துதிக்கும்படி தன் இருதயத்தில் நியமித்துக்கொண்டான்.

கர்த்தரை துதிப்பது பிறருக்கு நமது சாட்சி

*Praise of God's goodness is testimony to others V 10-11*

*10. உமது கிருபை வானபரியந்தமும், உமது சத்தியம் மேகமண்டலங்கள்பரியந்தமும் எட்டுகிறது.*

*11. தேவனே, வானங்களுக்குமேலாக உயர்ந்தருளும்; உமது மகிமை பூமியனைத்தின்மேலும் உயர்ந்திருப்பதாக.*

Notes:

_________________________________________________________
_________________________________________________________
_________________________________________________________

*தான் கடுமையான பிரச்சனைகளில் சென்றாலும், தாவீது பிறர் கேட்க கர்த்தரை மகிமைப்படுத்தும்படி அவருடைய நன்மைகளை குறித்து பாடுகிறான்.*

- *அவருடைய நன்மைகள்* - His goodness
- *அவருடைய கிருபைகளும் சத்தியமும்* - *His loving kindness and His faithfulness*

*தேவனுடைய அன்பையும் உண்மையையும் குறித்து உங்கள் கஷ்ட நேரங்களில் துதிப்பதற்கு உங்கள் கவனத்தை செலுத்துவது மிகவும் முக்கியமானது. ஏனெனில் கஷ்டங்கள் வரும்போது சாத்தான் தேவனுடைய அன்பையும் சத்தியத்தையுமே நாம் சந்தேகிக்கும்படி செய்வான்.*

*"தேவன் என்னை நேசிக்கிறார் என்றால், எனக்கு ஏன் இது நடக்கிறது" என்று நீங்கள் சிந்திப்பதற்கு தூண்டப்படுவீர்கள்.*

*ஆனால் தாவீது கெபியின் வெளியே வந்து உரத்த சத்தமாய் "உமது கிருபை வானபரியந்தமும், உமது சத்தியம் மேகமண்டலங்கள்பரியந்தமும் எட்டுகிறது. தேவனே, வானங்களுக்குமேலாக உயர்ந்தருளும்; உமது மகிமை பூமியனைத்தின்மேலும் உயர்ந்திருப்பதாக." என்று பாடுகிறான்.*

*சங்கீதம் 142*

*நான் ஒரு குகையிலே ராஜாவுக்கு பயந்து ஒளிந்துகொண்டிருக்கும்போது, தேவன் எனக்கு வாக்குகொடுத்தவைகளை நிறைவேற்ற தாமதிக்கிறபோது, துதி பாடல்களை பாடுவது எனக்கு மிகவும் தூரமான காரியமாக இருக்கும்!*

Notes:

__________________________________________________________
__________________________________________________________
__________________________________________________________



கர்த்தர் உங்களை நெருக்கத்தின் பாதையில் கொண்டுசெல்லும்போது, நீங்கள் சிக்கிக்கொண்டு தவிக்கும்போது, விசுவாசத்தோடு அவரை நோக்கி கதறி ஜெபியுங்கள்.

## தாவீதின் கதறல்

**வ** *1, David's cry*

*1. கர்த்தரை நோக்கிச் சத்தமிட்டுக் கூப்பிடுகிறேன்; கர்த்தரை நோக்கிச் சத்தமிட்டுக் கெஞ்சுகிறேன்.*

**தன்னை சுற்றியிருக்கும் ஜனங்கள் பாகால் தெய்வங்களை வணங்குகிறார்கள் என்பது தாவீதுக்கு நன்றாய் தெரியும்ஆனால் . அவைகளை நோக்கி கதறுவதில்லை, தேவனை நோக்கி மாத்திரமே ஜெபிப்பேன் என்று தாவீது தன் இருதயத்தில் நியமித்துக்கொண்டான். இது கர்த்தரை நோக்கி வின்னப்பம் .செய்வதை விட மேலான காரியம்**

Notes:

__________________________________________________________
__________________________________________________________
__________________________________________________________

## தாவீதின் புகார்கள்

**வ** *2 David's complaint*

*2. **அவருக்கு முன்பாக என் சஞ்சலத்தை ஊற்றுகிறேன்;***
***அவருக்கு முன்பாக என் நெருக்கத்தை அறிக்கையிடுகிறேன்.***

***கர்த்தரிடம் தாவீது தெரிவிக்கும் புகார்கள்தேவன் அறியாததை ,***
***அறிவிப்பதற்காக அல்ல. தாவீது அவற்றை தேவனிடம்***
***) கூறுவதன்மூலம் ஆறுதலடைகிறான்*relief*நாம் மிகவும் .(***
***மனங்கசந்து இருக்கிற வேளைகளிலே மாயக்காரரைப்போல்***
*)polished and polite prayer* ***வீண் வார்த்தைகளால் (***
***ஜெபிக்கவேண்டிய அவசியமில்லை; ஏனெனில் நாம் எவ்வளவு***
***வருந்துகிறோம் என்று அவர் அறிந்திருக்கிறார் அவரிடம்***
***.மறைப்பதற்கு ஒன்றும் இல்லை***

## தாவீதின் ஜெபம்

**வ** *3-4 David's Prayer*

*3. **என் ஆவி என்னில் தியங்கும்போது**, **நீர் என் பாதையை***
***அறிந்திருக்கிறீர்**; **நான் நடக்கிற வழியில் மறைவாக எனக்குக்***
***கண்ணி வைத்தார்கள்.***
*4. **வலதுபுறமாய்க் கண்ணோக்கிப்பாரும்**, **என்னை அறிவார்***
***ஒருவரும் இல்லை**; **எனக்கு அடைக்கலம் இல்லாமற்போயிற்று**;*
***என் ஆத்துமாவை விசாரிப்பார் ஒருவரும் இல்லை.***

தாவீது தாங்கமுடியாத பாரத்தில் இருந்தாலும், கர்த்தர் தனது வழிகளையும் அவல நிலையையும் அறிந்திருக்கிறார் என்கிற காரியம். அவனுக்கு மேலும் நம்பிக்கை கொடுத்தது. தனக்கு எதிராக கண்ணிகள் காத்துக் கொண்டிருக்கின்றன என்று அவனுக்கு தெரியும். ஆனால் அவை எங்கு இருக்கின்றன என்று தெரியாது. தான் தேவனை சார்ந்திருப்பதால் அவர் அவனை எதிரிகளின் தந்திரங்களுக்கு விளக்கி காத்துக்கொள்வார் என்று அறிந்திருந்தான்.

தாவீது கைவிடப்பட்டு தனிமையில் வாடுகிற காலம். தாவீதின் இந்த ஒரு விண்ணப்பம், தான் மனிதரால் கைவிடப்பட்டாலும், தேவன் தன்னை கைவிடவில்லை என்று அறிக்கையிடுவதை நம்மால் காண முடிகிறது. மற்ற அனைத்து தஞ்சமும் கைவிட்டாலும் கர்த்தரிடம் தாவீது தஞ்சம் கண்டிருந்தான், அவர் நிச்சயம் தனது விண்ணப்பத்திற்கு செவிகொடுப்பார்.

Notes:

____________________________________________________________
____________________________________________________________
____________________________________________________________

### கர்த்தரை மாத்திரமே நம்பிய தாவீது

**வ** *5 David's trust in God alone*

**5. கர்த்தாவே, உம்மை நோக்கிக் கூப்பிடுகிறேன்; நீரே என் அடைக்கலமும், ஜீவனுள்ளோர் தேசத்திலே என் பங்குமாயிருக்கிறீர் என்றேன்.**

அழுகை நின்றது, சொல்லப்பட்ட வார்த்தைகளை கவனியுங்கள்!!

- என் தேவனே - My God
- என் அடைக்கலம்- My refuge
- என் பங்கு - *My portion*

இஸ்ரவேலில் சில காரணங்களுக்காக அடைக்கலப் பட்டணங்கள் இருந்தன. ஆனால் தாவீது எந்த அடைக்கல பட்டணத்தையும் நாடவில்லை, தேவனிடமே அடைக்கலம் தேடினான்.

### விடுதலைக்காக தாவீதின் ஜெபம்

**வ** *6-7 David's Prayer for deliverance*

**6. என் கூக்குரலுக்குச் செவிகொடும், நான் மிகவும் தாழ்த்தப்பட்டேன்; என்னைப் பின்தொடருகிறவர்களுக்கு என்னைத் தப்புவியும், அவர்கள் என்னிலும் பலவான்களாயிருக்கிறார்கள்.**

**7. உமது நாமத்தை நான் துதிக்கும்படி, என் ஆத்துமாவைக் காவலுக்கு நீங்கலாக்கிவிடும்; எனக்கு நீர் தயவுசெய்யும்போது நீதிமான்கள் என்னைச் சூழ்ந்துகொள்ளுவார்கள்.**

தாவீது மீண்டும் கூக்குரலிட்டு தனது தாழ்ச்சியை அறிக்கையிடுகிறான். கோலியாத்தை கொன்ற பெலவான் இப்போது பலவீனமாக உணருகிறான்; இது அவனுக்கு நலமானதாக இருக்கும். ஏனெனில் கூடிய விரைவில் தேவனுடைய பெலன் அவன் வாழ்வில் கரைபுரண்டோடும்.

### முடிவுரை

*Conclusion:*

Notes:

________________________________________________________________

________________________________________________________________

________________________________________________________________

தாவீதின் கூக்குரலின் தாழ்ச்சியின் உச்சத்திலும் பெலவீனத்திலும் ஆரம்பிக்கப்பட்ட சங்கீதம் பெரும் நம்பிக்கையோடு முடிகிறது.

| ஆரம்பம் | முடிவு |
|---|---|
| புகாரில் ஆரம்பிக்கப்பட்டது *(V2)* | நம்பிக்கையோடு கர்த்தரின் துதியில் முடிகிறது |
| தனிமையின் உச்சத்தில் பாடுகிறான் *(V4)* | கர்த்தர் மேலும் அவர் நீதியின் மேலும் நம்பிக்கை |
| தாழ்ச்சியிலும் பெலவீனத்திலும் பாடுகிறான் | கர்த்தர் வருங்காலத்தில் அபரிவிதமாக நன்மையினால் ஆசீர்வதிப்பார் என்ற நம்பிக்கை |

## அப்போஸ்தலனாகிய பவுல்

*Apostle Paul*

**பிலிப்பியர்** 4:6, நீங்கள் ஒன்றுக்குங் கவலைப்படாமல், எல்லாவற்றையுங்குறித்து உங்கள் விண்ணப்பங்களை ஸ்தோத்திரத்தோடே கூடிய ஜெபத்தினாலும் வேண்டுதலினாலும் தேவனுக்குத் தெரியப்படுத்துங்கள்.

*The Christian Pilgrim by Jonathan Edwards*

ஜோனத்தன் எட்வர்ட்ஸ் எழுதிய *"தி கிறிஸ்டியன் பில்க்ரிம் (கிறிஸ்தவ யாத்ரீகன்)"*

தேவனே மனிதன் அடையக்கூடிய உயர்ந்த நன்மை; அவரை அனுபவிக்கும் மகிழ்ச்சியே நமது ஆத்துமாவிற்கு திருப்தியை அளிக்கிறது.

பரலோகத்திற்கு சென்று அவரை அனுபவிப்பது, இங்கு அனுபவிக்கும் மிக உயர்ந்த வசதிகளைக்காட்டிலும் எண்ணிமுடியாத அளவுக்கு மேலானது.

Notes:

________________________________________________________
________________________________________________________
________________________________________________________

*தகப்பன், தாய், கணவன், மனைவி, பிள்ளைகள், உலக சிநேகிதர்கள் யாவருடைய உறவும் ஒரு நிழல் போன்றதே; தேவனில் நமக்கு கிடைக்கும் இன்பமே மெய்யானது.*

*இவைகள் யாவும் சிதறிய சூரியகதிர்கள் போல, தேவனே சூரியன்.*

*இவைகள் யாவும் ஓடைகள் போல, தேவனே ஊற்று.*

*இவைகள் யாவும் துளிகள் போல, தேவனே கடல்.*

*ஆகவே இந்த வாழ்வு நாம் பரலோகத்திற்கு பயணிக்கும் பாதையில் செலவழிக்கும் வாழ்வாகும். நம் மொத்த வாழ்வில் செய்த காரியங்கள் யாவும் நம்முடைய அந்த மேலான நன்மையை நாடுவதில் நோக்கமாகிவிடுகிறது. அந்த நன்மைக்குள்ளாக நம் வாழ்வின் பிற தேவைகளை உள்ளடக்க வேண்டும்.*

*நாம் ஏன் கடினப்பட்டு, நம் இதயத்தை ஏதோ ஒரு காரியத்தில் வைக்க வேண்டும்? நம்முடைய உண்மையான முடிவாகிய பரலோகத்தையும் மெய்யான சந்தோஷத்தையும் தவிர்த்து வேறு எதை நாடி கடினப்பட வேண்டும்?*

*God is the highest good of the reasonable creature; and the enjoyment of him is the only happiness with which our souls can be satisfied.*

*To go to heaven, fully to enjoy God, is infinitely better than the most pleasant accommodations here.*

*Fathers and mothers, husbands, wives, or children, or the company of earthly friends, are but shadows; but the enjoyment of God is the substance.*

*These are but scattered beams; but God is the sun.*

*These are but streams; but God is the fountain.*

*These are but drops; but God is the ocean.*

*Therefore it becomes us to spend this life only as a journey towards heaven, as it becomes us to make the seeking of our highest end and*

Notes:

____________________________________________________
____________________________________________________
____________________________________________________

*proper good, the whole work of our lives; to which we should subordinate all other concerns of life.*

*Why should we labour for, or set our hearts on, anything else, but that which is our proper end, and true happiness?*

### செயல்படுத்துதல்

*Applications:*

*கர்த்தர் ஏன் தாவீதையும் தாம் தெரிந்துகொண்டவர்களையும் குகையிலும் காவலிலும் வைக்க வேண்டும்?*

*Why does God allowed David, His chosen one and other saints to spend time in caves or prisons?*

*நீங்கள் ஒரு கெபியின் அனுபவத்திற்குள் சென்றதுண்டா? அதில் என்ன கற்றுக்கொண்டீர்கள்?*

*Have you been to a cave experience? What have you learned from your cave experiences?*

*ஆண்டவரிடம் என்றாவது அளவுக்குமீறி முறையிட்டு அது தேவனுக்கு விரோதமாக முறுமுறுப்பாக மாறியதுண்டா?*

*Have you crossed the line from permissible complaining to God to sinful railing/murmuring against Him?*

*"என் தேவன்" என்று முழு நம்பிக்கையை உங்களால் சொல்ல முடியுமா?*

*Can you say confidently 'My God'?*

*"என் அடைக்கலம்" என்று?*

Notes:

________________________________________________________
________________________________________________________
________________________________________________________

*How about God is 'My refuge'?*

*"என் தேவன் என் பங்கு" – இது உண்மையா அல்லது உங்கள் வேலையோ, வியாபாரமோ மற்ற காரியங்களோ உங்கள் பங்காக இருக்கிறதா?*

*'My God is my portion' is it true or your job, business or etc?*

*உங்கள் உண்மையான மகிழ்ச்சி கர்த்தருடைய மகிமையின் வெளிப்பாட்டில் இருக்கிறதா அல்லது உலகப்பிரகாரமான காரியங்களில் இருக்கிறதா?*

*True happiness is warped in God's glory or from the worldly things?*

Notes:

______________________________________________________________

______________________________________________________________

______________________________________________________________

Notes:

______________________________________________________________
______________________________________________________________
______________________________________________________________

## *11. எல்லாருக்கும் அவசியமில்லாதவன் – III*

*நான் யாருக்கும் தேவையில்லாதவன்... என் நண்பர்களுக்கு, எதிரிகளுக்கு, என் உடன் இருந்த தோழர்களுக்கு, யாருக்கும் நான் தேவையில்லை. எல்லாரும் என்னை கல்லெறிந்து கொல்ல தேடுகிறார்கள்... நான் எங்கு போவது?*

*Your friends don't want you…*

*Your enemies don't want you…*

*The very persons who are your companions don't want you…*

*They want to stone you to death… where do you turn…*

*சங்கீதம் 22*

**சூழல்**: *சிக்லாக்கில் (Ziklag) தாவீதோடு உடன் இருந்த யாவரின் மனைவி பிள்ளைகள் அனைவரையும் அமலேக்கியர் கடத்தி சென்றுவிட்டனர் .ஆகவே அவர்கள் யாவரும் தாவீதை கொல்ல எத்தனிக்கிறார்கள். தாவீதோ தேவனை நோக்கி பார்க்கிறார்.*

**வேத பகுதி**: 1 சாமுவேல் 30




Notes:

____________________________________________________________
____________________________________________________________
____________________________________________________________

*தாவீதின் இந்த சங்கீதத்தை “**குருசின் சங்கீதம்**” (*The Psalm Of The Cross*) என்று நாம் கூறலாம். தாவீது இந்த பாடுகளை அனுபவித்திருந்தாலும், இதில் பாடப்பட்ட எல்லா பாடுகளையும் கிறிஸ்துவும் சிலுவையில் அனுபவித்தார்.*

*இயேசு சிலுவையிலிட்ட கூக்குரலோடு இந்த சங்கீதம் தொடங்குகிறது (மத்தேயு* 27:46*). இந்த சங்கீதத்தின் முதல் பகுதி, எதிரிகள் சூழ்ந்திருக்கும் வேளையில் தேவனால் கைவிடப்பட்டதுபோல் காணப்படுகிற ஒருவன் படும் பாடுகளை குறித்து எழுதப்படிருக்கிறது. இதில் சொல்லப்பட்ட சில காரியங்கள் உவமானமாக இருந்தாலும் (அநேகம் காளைகள் என்னைச் சூழ்ந்திருக்கிறது), பல காரியங்கள் நிதர்சனமாகவே நிறைவேறின.*

*இதில் இயேசுவின் வார்த்தைகள் (வ 1) மாத்திரமல்ல,* 8*-ம் வசனத்தில் பிரதான ஆசாரியரும் வேதபாரகரும் இயேசு சிலுவையில் தொங்கினபோது நிந்தித்த அதே வார்த்தைகள் எழுதப்பட்டிருக்கின்றன (மத்தேயு* 27:43*).*

*கரங்களும் கால்களும் குத்தப்படுவதும், வஸ்திரம் பங்கிடப்படுவதும் இதில் குறிப்பிடப்பட்டுள்ளன (மத்தேயு* 27:35*).*

*சங்கீதக்காரன் தன்னை காப்பாற்றும்படி கதறுகிற அதே வேளையில், தேவன் முந்தின நாட்களில் தன்னை காத்ததினாலே அவருடைய உண்மையினிமித்தம் நம்பிக்கையும் வெளிப்படுத்துகிறான். இந்த சங்கீதத்தின் முதல் பாதியின் முடிவில், கர்த்தர் தனக்கு பதிலளித்துவிட்டார் என்று அறிவிக்கிறான்.*

*சங்கீதத்தின் இரண்டாவது பகுதி, “வெற்றிகரமாய் சோதனையை கடந்தவர்”-களுக்கு உண்டாகும் மனமகிழ்ச்சியை குறித்து எழுதப்பட்டிருக்கிறது.*

*வெற்றிகரமாய் சோதனையை கடந்தவன்:*

- *தன் கூப்பிடுதலை அவர் கேட்டு விடுவித்ததின் நிமித்தம் அவன் ஆனந்தத்தோடே கர்த்தரை துதிப்பான்.*
- *கர்த்தருக்கு பயப்படுகிற யாவரும் கர்த்தரை துதித்து மகிமைப்படுத்தும்படி அவர்களை அவன் உற்சாகப்படுத்துவான்.*

Notes:

__________________________________________________________
__________________________________________________________
__________________________________________________________

- கர்த்தருடைய ஆசீர்வாதம் பல தேசங்களையும், இன்னும் பிறவாத பிள்ளைகளையும் சேரும் என்று உறுதியாய் நம்புகிறான்.
- ஏனெனில், ராஜ்ஜியம் கர்த்தருடையது அவரே சகல தேசத்தையும் ஆளுகிறார்.

### தனிமையின் கதறல்

**வ** *1-2, Lonely Cry*

*1.* **என் தேவனே, என் தேவனே, ஏன் என்னைக் கைவிட்டீர்?**

**எனக்கு உதவி செய்யாமலும்,**

**நான் கதறிச் சொல்லும் வார்த்தைகளைக் கேளாமலும்**

**ஏன் தூரமாயிருக்கிறீர்?**

*2.* **என் தேவனே, நான் பகலிலே கூப்பிடுகிறேன், உத்தரவுகொடீர்;**

**இரவிலே கூப்பிடுகிறேன், எனக்கு அமைதலில்லை.**

- கர்த்தர் ஏன் என்னை கைவிட்டார்?

*Why God has forsaken?*

- கர்த்தர் ஏன் எனக்கு உதவவில்லை?

*Why God does not help?*

- கர்த்தர் ஏன் எனக்கு செவிகொடுக்கவில்லை?

*Why God does not hear?*

### அவருடைய நன்மையின் துதிகள்

**வ** *3-5, Praise of His goodness*

*3.* **இஸ்ரவேலின் துதிகளுக்குள் வாசமாயிருக்கிற**

**தேவரீரே பரிசுத்தர்.**

Notes:

________________________________________________________
________________________________________________________
________________________________________________________

*4. எங்கள் பிதாக்கள் உம்மிடத்தில் நம்பிக்கை வைத்தார்கள்;*

***நம்பின அவர்களை நீர் விடுவித்தீர்.***

*5. உம்மை நோக்கிக் கூப்பிட்டுத் தப்பினார்கள்;*

***உம்மை நம்பி வெட்கப்பட்டுப்போகாதிருந்தார்கள்.***

- இஸ்ரவேலின் துதிகளில் தேவன் வீற்றிருக்கிறார்

*God enthrones in the praises of Israel*

- முற்பிதாக்கள் அவரை நம்பினார்கள், அவர்களை அவர் விடுவித்தார்

*Forefathers trusted Him and He delivered them*

- அவர்கள் கதறினபோது அவர்களை அவர் வெட்கப்படுத்தவில்லை

*When they cried God did not disappoint them*

**பிறர் கொடுக்கும் வேதனை**

**வ** *6-8, Torment from others*

*6. நானோ ஒரு புழு, மனுஷனல்ல;*

*மனுஷரால் நிந்திக்கப்பட்டும், ஜனங்களால் அவமதிக்கப்பட்டும் இருக்கிறேன்.*

*7. என்னைப் பார்க்கிறவர்களெல்லாரும் என்னைப் பரியாசம்பண்ணி,*

*உதட்டைப் பிதுக்கி, தலையைத் துலுக்கி:*

*8. கர்த்தர்மேல் நம்பிக்கையாயிருந்தானே, அவர் இவனை விடுவிக்கட்டும்;*

*இவன்மேல் பிரியமாயிருக்கிறாரே, இப்பொழுது இவனை மீட்டுவிடட்டும் என்கிறார்கள்.*

- புழுவைப்போல ஆனான்

*Reduced like a worm*

Notes:

____________________________________________________________

____________________________________________________________

____________________________________________________________

- ➢ பிறரால் வெறுக்கப்பட்டான்

*Despised by others*

- ➢ தேவனை நம்பியதால் பரிகாசிக்கப்பட்டான்

*Ridiculed because he trusted in God*

**தேவனிடம் அவன் விசுவாசம்**

**வ** *9-11, His faith in God*

*9.* **நீரே என்னைக் கர்ப்பத்திலிருந்து எடுத்தவர்;**

**என் தாயின் முலைப்பாலை நான் உண்கையில் என்னை உம்முடையபேரில் நம்பிக்கையாயிருக்கப்பண்ணினீர்.**

*10.* **கர்ப்பத்திலிருந்து வெளிப்பட்டபோதே உமது சார்பில் விழுந்தேன்;**

**நான் என் தாயின் வயிற்றில் இருந்ததுமுதல் நீர் என் தேவனாயிருக்கிறீர்.**

*11.* **என்னை விட்டுத் தூரமாகாதேயும்; ஆபத்து கிட்டியிருக்கிறது, சகாயரும் இல்லை.**

- ➢ அவன் பிறந்ததுமுதல் தேவன் அவனோடு இருந்தார்

*God has been with him since he is born*

- ➢ தேவனே அவனுக்கு ஒரே சகாயர்

*God is his only helper*

**அவனுடைய வேதனைகள் விரிவாக**

**வ** *12-18, His suffering in detail*

*12.* **அநேகம் காளைகள் என்னைச் சூழ்ந்திருக்கிறது;**

**பாசான் தேசத்துப் பலத்த எருதுகள் என்னை வளைந்துகொண்டது.**

*13.* **பீறி கெர்ச்சிக்கிற சிங்கத்தைப்போல்,**

**என்மேல் தங்கள் வாயைத் திறக்கிறார்கள்.**

Notes:

__________________________________________________________
__________________________________________________________
__________________________________________________________

*14.* ***தண்ணீரைப்போல ஊற்றுண்டேன்;***

***என் எலும்புகளெல்லாம் கட்டுவிட்டது,***

***என் இருதயம் மெழுகுபோலாகி,***

***என் குடல்களின் நடுவே உருகிற்று.***

*15.* ***என் பெலன் ஓட்டைப்போல் காய்ந்தது;***

***என் நாவு மேல்வாயோடே ஒட்டிக்கொண்டது;***

***என்னை மரணத்தூளிலே போடுகிறீர்.***

*16.* ***நாய்கள் என்னைச் சூழ்ந்திருக்கிறது;***

***பொல்லாதவர்களின் கூட்டம் என்னை வளைந்துகொண்டது;***

***என் கைகளையும் என் கால்களையும் உருவக் குத்தினார்கள்.***

*17.* ***என் எலும்புகளையெல்லாம் நான் எண்ணலாம்;***

***அவர்கள் என்னை நோக்கிப் பார்த்துக்கொண்டிருக்கிறார்கள்.***

*18.* ***என் வஸ்திரங்களைத் தங்களுக்குள்ளே பங்கிட்டு,***

***என் உடையின்பேரில் சீட்டுப்போடுகிறார்கள்.***

- பாசான் தேசத்துப் பலத்த எருதுகள் போல வளைந்துகொண்டது

*Surrounded him like strong bulls of Bashan*

- பீறி கெர்ச்சிக்கிற சிங்கத்தைப்போல் வாயைத் திறக்கிறார்கள்

*Mouths opened like raging and roaring lion*

- தண்ணீரைப்போல ஊற்றுண்டேன்

*Poured like water*

- எலும்புகளெல்லாம் கட்டுவிட்டது

*Bones out of joint*

Notes:

____________________________________________________________
____________________________________________________________
____________________________________________________________

- ➢ இருதயம் மெழுகுபோலாகி குடல்களின் நடுவே உருகிற்று

*Heart like wax, melted within him*

- ➢ பெலன் காய்ந்தது, நாவு மேல்வாயோடே ஒட்டிக்கொண்டது

*Strength dried up, tongues clinging to his jaws*

- ➢ நாய்கள் போல் பொல்லாதவர்களின் கூட்டம் வளைந்துகொண்டது

*Like dogs evil doers encircle him*

- ➢ கைகளையும் கால்களையும் உருவக் குத்தினார்கள்

*Pierced his hands and feet*

- ➢ மரணத்தூளிலே போடப்படுகிறேன்

*Brought to the dust of death*

- ➢ என் வஸ்திரங்களைத் தங்களுக்குள்ளே பங்கிட்டு, என் உடையின்பேரில் சீட்டுப்போடுகிறார்கள்.

*They divide his garments and cast lots for his clothing*

## இறுதி கதறல்

**வ** *19-21, His final cry*

*19.* **ஆனாலும் கர்த்தாவே, நீர் எனக்குத் தூரமாகாதேயும்;**

**என் பெலனே, எனக்குச் சகாயம்பண்ணத் தீவிரித்துக்கொள்ளும்.**

*20.* **என் ஆத்துமாவைப் பட்டயத்திற்கும்,**

**எனக்கு அருமையானதை நாய்களின் துஷ்டத்தனத்திற்கும் தப்புவியும்.**

*21.* **என்னைச் சிங்கத்தின் வாயிலிருந்து இரட்சியும்;**

**நான் காண்டாமிருகத்தின் கொம்புகளில் இருக்கும்போது**

Notes:

________________________________________________________________
________________________________________________________________
________________________________________________________________

எனக்குச் செவிகொடுத்தருளினீர்.

- கர்த்தாவே தூரமாகாதேயும் - *For God not to be far off*
- சகாயம்பண்ணத் தீவிரித்துக்கொள்ளும் - *Come quickly to help*
- ஆத்துமாவைப் பட்டயத்திற்கு தப்புவியும் - *Deliver his life from the sword*
- சிங்கத்தின் வாயிலிருந்து இரட்சியும் - *Save him from the lions mouth*

**வ** *22-25, His final cry*

22. உம்முடைய நாமத்தை என் சகோதரருக்கு அறிவித்து,

சபைநடுவில் உம்மைத் துதிப்பேன்.

23. கர்த்தருக்குப் பயப்படுகிறவர்களே, அவரைத் துதியுங்கள்;

யாக்கோபின் சந்ததியாரே, நீங்கள் எல்லாரும் அவரைக் கனம்பண்ணுங்கள்;

இஸ்ரவேலின் வம்சத்தாரே, நீங்கள் எல்லாரும் அவர்பேரில் பயபக்தியாயிருங்கள்.

24. உபத்திரவப்பட்டவனுடைய உபத்திரவத்தை அவர் அற்பமாயெண்ணாமலும் அருவருக்காமலும்,

தம்முடைய முகத்தை அவனுக்கு மறைக்காமலுமிருந்து,

தம்மை நோக்கி அவன் கூப்பிடுகையில் அவனைக் கேட்டருளினார்.

25. மகா சபையிலே நான் உம்மைத் துதிப்பேன்;

அவருக்குப் பயப்படுகிறவர்களுக்கு முன்பாக என் பொருத்தனைகளைச் செலுத்துவேன்.

கர்த்தர் துதிக்கப்படுவாராக

*God be Praised*

- வேதனை அனுபவித்தவன் கர்த்தரை துதிப்பான் - *The sufferer will praise God*

Notes:

________________________________________________________
________________________________________________________
________________________________________________________

- சகோதரருக்கு நாமத்தை அறிவிப்பான் - *Proclaiming His name to his brothers*
- சபைநடுவில் தேவனை துதிப்பான் - *Praising Him in the middle of the assembly*
- **கர்த்தருக்குப்** பயப்படுகிறவர்களே, அவரைத் துதியுங்கள் - *Let those who fear God praise Him*
- யாக்கோபின் சந்ததியாரே, அவரைக் கனம்பண்ணுங்கள் - *Let the descendants of Jacob honour Him*
- இஸ்ரவேலின் வம்சத்தாரே அவர்பேரில் பயபக்தியாயிருங்கள் - *Let the descendants of Israel stand in awe of Him*
- உபத்திரவப்பட்டவனுடைய உபத்திரவத்தை அவர் அற்பமாயெண்ணாமலும் அருவருக்காமலும் - *God has not despised or abhorred his affliction*
- தம்முடைய முகத்தை அவனுக்கு மறைக்காமலுமிருந்து, தம்மை நோக்கி அவன் கூப்பிடுகையில் அவனைக் கேட்டருளினார் - *God has not hidden His face from him, but hearkened to his cry*
- உபத்திரவப்பட்டவன் மகா சபையின் முன்னே கர்த்தரை துதிப்பான் - *The sufferer will praise God and pay his vows in the great assembly*
- அவருக்குப் பயப்படுகிறவர்களுக்கு முன்பாக பொருத்தனைகளைச் செலுத்துவான் - *Before them that fear Him*

தேவன் ஆராதிக்கப்படுவாராக

**வ** *26-31 God be worshipped*

*26.* ***சாந்தகுணமுள்ளவர்கள் புசித்துத் திருப்தியடைவார்கள்;***

***கர்த்தரைத் தேடுகிறவர்கள் அவரைத் துதிப்பார்கள்;***

**உங்கள் இருதயம் என்றென்றைக்கும் வாழும்.**

*27.* **பூமியின் எல்லைகளெல்லாம்**

***நினைவுகூர்ந்து கர்த்தரிடத்தில் திரும்பும்;***

Notes:

____________________________________________________________
____________________________________________________________
____________________________________________________________

ஜாதிகளுடைய சந்ததிகளெல்லாம் உமது சமுகத்தில் தொழுதுகொள்ளும்.

*28.* ராஜ்யம் கர்த்தருடையது;

அவர் ஜாதிகளை ஆளுகிறவர்.

*29.* பூமியின் செல்வவான்கள் யாவரும் புசித்துப் பணிந்துகொள்வார்கள்;

புழுதியில் இறங்குகிறவர்கள் யாவரும்

அவருக்கு முன்பாக வணங்குவார்கள்.

ஒருவனும் தன் ஆத்துமா அழியாதபடி அதைக் காக்கக்கூடாதே.

*30.* ஒரு சந்ததி அவரைச் சேவிக்கும்;

தலைமுறை தலைமுறையாக அது ஆண்டவருடைய சந்ததி என்னப்படும்.

*31.* அவர்கள் வந்துஅவரே இவைகளைச் செய்தார் என்று : பிறக்கப்போகிறவர்களுக்கு அவருடைய நீதியை அறிவிப்பார்கள்.

- சாந்தகுணமுள்ளவர்கள், **கர்த்தரைத்** தேடுகிறவர்கள் - *By the meek, and those that seek the Lord*
- புசித்துத் திருப்தியடைவார்கள் - *They shall be eat and be satisfied*
- அவரைத் துதிப்பார்கள் - *They shall praise Him*
- இவைகளை நினைவுகூர்ந்து **கர்த்தரிடத்தில்** திரும்புபவன் யார் - *Who shall bear these things in mind and return to the Lord*
- எல்லா தேசத்தின் சந்ததிகளும் அவரை பணிந்துகொள்ளும் - *All families of the nations will bow down before Him*
- ராஜ்யம் **கர்த்தருடையது**; அவர் ஜாதிகளை ஆளுகிறவர் - *For the kingdom is the Lord's, and He is the Ruler among the nations*
- பூமியின் செல்வவான்களும் புழுதியில் இறங்குகிறவர்களும் வணங்குவார்கள் - *By the prosperous and the dead*

Notes:

________________________________________________________
________________________________________________________
________________________________________________________

- பூமியின் செல்வவான்கள் புசித்துப் பணிந்துகொள்வார்கள் - *The prosperous will eat, and worship Him*
- புழுதியில் இறங்குகிறவர்கள் அவருக்கு முன்பாக வணங்குவார்கள் - *The dying shall bow before Him*
- வரும் சந்ததி அவரைச் சேவிக்கும் - *By the generations to come*
- கர்த்தர் செய்ததை ஜனங்கள் அறிவிப்பார்கள் - *For men shall tell of what God has done*
- பிறக்கப்போகிறவர்கள் அவருடைய நீதியை கேட்பார்கள் - *People yet born shall hear of God's justice*

### முடிவுரை

*Conclusion:*

*சிலுவையில் ஒரு அற்புதமான பரிசுத்த பரிவர்த்தனை (*holy transaction*) நடைபெற்றது. பிதாவாகிய தேவன் குமாரனை பாவியாக கருதினார். அப்போஸ்தலனாகிய பவுல் பின்னர் எழுதியபடி* ***2 கொரி 5:21, நாம் அவருக்குள் தேவனுடைய நீதியாகும்படிக்கு, பாவம் அறியாத அவரை நமக்காகப் பாவமாக்கினார்.***

*இயேசு பிதாவாகிய தேவனை ஒவ்வொரு முறையும் பிதா என்றே அழைக்கிறார் ஆனால் சிலுவையில் மாத்திரம் "என் தேவனே, என் தேவனே" என்று அழைக்கிறார். இயேசு சிலுவையில் ஏறும்வரை நாம் பிதாவை "தேவனே" என்று அழைத்தோம் ஆனால் அதன் பிறகு நாம் "அப்பா" என்று அழைக்கிறோம். இதுவே மனுக்குலத்திற்காக அங்கு நடந்த பரலோக பரிவர்த்தனை (*divine exchange*).*

**யோவான்** 20:17, 17 *இயேசு அவளை நோக்கி: என்னைத் தொடாதே, நான் இன்னும் என் பிதாவினிடத்திற்கு ஏறிப்போகவில்லை; நீ என் சகோதரரிடத்திற்குப் போய், நான் என் பிதாவினிடத்திற்கும் உங்கள் பிதாவினிடத்திற்கும், என் தேவனிடத்திற்கும் உங்கள் தேவனிடத்திற்கும் ஏறிப்போகிறேன் என்று அவர்களுக்குச் சொல்லு என்றார்.*

*மீண்டும் பிதாவை குறிப்பிடும் வார்த்தையை தாவீதும் ஏசுவும் பயன்படுத்துவதை பாருங்கள்!*

Notes:

__________________________________________________________
__________________________________________________________
__________________________________________________________

### இயேசு கிறிஸ்து

இயேசு கிறிஸ்து சிலுவைக்கு செல்லும் முன், மேலறையிலே சீஷர்களோடு சொன்ன காரியம்:

> யோவான் 16:32, இதோ, நீங்கள் சிதறுண்டு, அவனவன் தன்தன் இடத்துக்குப் போய், என்னைத் தனியே விட்டுவிடுங்காலம் வரும்; அது இப்பொழுது வந்திருக்கிறது; ஆனாலும் நான் தனித்திரேன், பிதா என்னுடனேகூட இருக்கிறார்.

- இருபதாயிரம் பேருக்குமேல் அப்பமும் மீனும் உண்டனர் - *Over 20,000 people came to eat the bread and fish*
- அனேக ஜனங்கள் சொஸ்தமானார்கள் - *Multitudes were healed*
- மரித்தவர்கள் உயிர் பெற்றனர் - *People were raised from the dead*
- பார்வையற்றவர்கள் பார்வையடைந்தனர் - *Blind eyes were opened*
- கேட்க முடியாத செவிகள் சுகமாயின - *Deaf ears could hear*
- முடமானவர்கள் நடந்தார்கள் - *Lame could walk*
- *12 சீஷர்கள் மட்டும் இருந்தனர் - Left with 12 disciples*
- இப்போது அதில் ஒருவன் அவரை காட்டிக்கொடுத்தான் - *Now one had betrayed Him*
- இறுதியில் *11* பேர் மாத்திரம் இருந்தனர் *Left with the final 11*
- இப்போது அவர்களும் ஓடும் நிலை - *Now even they are going to leave*

ஆனாலும் இயேசு கிறிஸ்துவின் வார்த்தைகளை பாருங்கள்!

Notes:

____________________________________________________________
____________________________________________________________
____________________________________________________________




ஆனாலும் நான் தனித்திரேன்,

பிதா என்னுடனேகூட இருக்கிறார்

*And yet I am not alone,*

*because the Father is with Me.*

இப்படிப்பட்ட அருமையான தேவன் நம்மோடு இருப்பது நமக்கு எவ்வளவு உறுதி அளிக்கிறது!

**What a confidence in having such a wonderful God with us!**

**அப்போஸ்தலனாகிய பவுல்**

*Apostle Paul*

- அப்போஸ்தலனாகிய பவுல் தனது ஊழியத்தில் பல இணை-ஊழியர்களோடு பணியாற்றினார்
- பல சபைகளை நிறுவினார்
- அநேகர் அவரது ஊழியத்தால் பயனடைந்தனர்

ஆனாலும் தனது ஆவிக்குரிய மகனான தீமோத்தேயுவிற்கு அவர் எழுதும் இறுதி கடிதத்தில் யாவரும் தன்னை விட்டுவிட்டு சென்றதாக இப்படி எழுதுகிறார்!!

2 தீமோத்தேயு *4:16-17*

Notes:

__________________________________________________________

__________________________________________________________

__________________________________________________________

*16. நான் முதல்விசை உத்தரவுசொல்ல நிற்கையில்* **ஒருவனும் என்னோடேகூட இருக்கவில்லை, எல்லாரும் என்னைக்கைவிட்டார்கள்**; *அந்தக் குற்றம் அவர்கள்மேல் சுமராதிருப்பதாக. 17.* **கர்த்தரோ எனக்குத் துணையாக நின்று**, *என்னாலே பிரசங்கம் நிறைவேறுகிறதற்காகவும், புறஜாதியார் கேட்கிறதற்காகவும்,* **என்னைப் பலப்படுத்தினார்**; *சிங்கத்தின் வாயிலிருந்தும் நான் இரட்சிக்கப்பட்டேன்.*

*2 Timothy4:16-17, [16]* ***At my first defense*** *no one stood with me, but all forsook me.* ***May it not be charged against them. [17] But the Lord stood with me and strengthened me, so that the message might be preached fully through me, and that all the Gentiles might hear. Also I was delivered out of the mouth of the lion.***

## செயல்படுத்துதல்

*Application:*

*தாவீது ராஜா இந்த சூழலில் இருப்பதை நாம் எளிதாக கற்பனை செய்ய முடியும். பல சமயங்களில் அவர் இக்கட்டான சூழலில் சிக்கி, தேவன் ஏன் என்னை விடுவிக்கவில்லை என்று எண்ணுகிறார்.*

*இப்படிப்பட்ட எண்ணங்களிலிருந்து நாம் எப்படி விடுதலை பெறுவது?*

*தாவீதும் ஏசுவும், தேவனை "ஏன் என்னை கைவிட்டீர்?" என்று கேட்கிறார்கள். நீங்கள் உங்கள் வாழ்வில் "எனக்கு ஏன் ஆண்டவரே இது நிகழ்கிறது?" என்று கேட்டதுண்டா? (*Have you asked God why me??*).*

*தேவனுடைய பிரசன்னத்தின் அனுபவமும் விடுதலையின் அனுபவமும் தாவீதிற்கு நன்றாக தெரியும், பல முறை அவற்றை அனுபவித்திருக்கிறார். தாவீது கடந்து செல்கின்ற இந்த கடினம் அந்த பழைய அனுபவங்களை மறக்கச்செய்தது, கர்த்தருடைய பிரசன்னம் இல்லாதிருப்பது அவரை நொறுக்கியது. எல்லாவற்றிலும் கொடுமையான விஷயம், ஏன் கர்த்தர் இன்னும் உதவவில்லை என்பதற்கு எந்த விளக்கமும் இல்லை. ஆகவே தான் அவர் "ஏன்?" என்று கேள்வி எழுப்புகிறார்.* **இதை உங்கள் வாழ்வோடு எப்படி ஒப்பிட்டு பார்க்கிறீர்கள்?**

Notes:

________________________________________________________
________________________________________________________
________________________________________________________

வேதனையின் ஆழத்தில் அமிழ்ந்திருக்கும்போதும், அறவே கைவிடப்பட்ட நிலையிலும் கர்த்தருடைய முந்தின நன்மைகளை நினைத்து அவரிடம் வேண்டுதல் செய்ய முடியும் என்பதை தாவீது நன்கு உணருகிறார். கர்த்தர் உங்கள் வாழ்வில் செய்த நன்மையை குறித்த சாட்சி உங்களுக்கு நினைவிருக்கிறதா?

தாவீதின் வேதனையை இன்னொரு கோணத்தில் பார்ப்போமானால், தாவீது மீண்டும் மீண்டும் கர்த்தரை வேண்டிக்கொண்டபோதிலும் கர்த்தர் செவிகொடுத்ததாக அவன் உணரவில்லை. அவன் கலக்கங்கள் பதிலளிக்கப்படவில்லை, அவன் கதறல் புறக்கணிக்கப்பட்டது (ignored). நீங்கள் இதே போல் உணர்ந்திருக்கிறீர்களா?

தாவீதை சுற்றி பரிதபிக்கும் நண்பர்கள் இருந்திருந்தாலும் அவனுடைய பிரச்சனை பெரிதாகவே இருந்திருக்கும். அவன் வேதனைகள் பல மடங்கு பெருகியதற்கு காரணம் அவனை சுற்றிலும் துன்மார்க்கமான மனிதர்களும் வன்முறையாளர்களும் இருந்ததே. உங்களை சுற்றிலும் அப்படிப்பட்ட மக்கள் இருந்ததை நீங்கள் உணர்ந்திருக்கிறீர்களா?

கர்த்தருடைய பிரசன்னத்தில் தொடர்ந்து இருக்கும்போது எப்படிப்பட்ட பிரச்சனையையும் எதிர்கொள்ள முடியும் என்று தாவீது நம்பினான். அவனுடைய ஜெபமெல்லாம் சூழ்நிலை மாற வேண்டும் என்பது அல்ல, அந்த சூழ்நிலையிலும் தேவனுடைய பிரசன்னம் வேண்டும் என்பதே. உங்கள் ஜெபம் தேவனுடைய பிரசன்னத்தை நோக்கி இருக்கிறதா அல்லது சூழ்நிலைகளை தேவன் மாற்றும்படி இருக்கிறதா?

### நடைமுறை உதவிகள்

*Practical help:*

- கிருபை நிறைந்த வாழ்க்கை வாழ்பவர்களுடைய நம்பிக்கை தேவனிடத்தில் இருப்பதை பார்க்கலாம் - *In a truly grace-filled man, his trust in God is known.*
- மனிதர்களை நம்பும் உலகத்தால் இந்த விசுவாசத்தை குறித்து புரிந்துகொள்ள முடியாது - *This trust by believing men is not understood by the world.*

Notes:

____________________________________________________________
____________________________________________________________
____________________________________________________________

- உண்மையான விசுவாசம் உலகத்தால் என்றாவது ஒருநாள் பரிகாசம் செய்யப்படும் - *This true faith will almost certainly be mocked at some time or another.*
- கர்த்தரின்மேல் நம்பிக்கை வைத்தவன் நிச்சயமாகவே நீதியாக உயர்த்தப்படும் காலம் வரும் - *The time shall come when the man of faith who has trusted in God shall be abundantly justified.*

தேவனாலும் மனிதர்களாலும் கைவிடப்பட்ட நிலையிலும் கூட, தாவீது கர்த்தர் முன்பு செய்த நன்மைகளை நினைத்து உற்சாகமடைவதை பார்க்கிறோம். எதிரிகளின் கரங்களில் எவ்வளவாய் பாடுகள் அனுபவித்தபோதிலும், தொடர்ந்து தேவனை நோக்கி ஜெபித்து இறுதியில் தன்னுடைய உதவியின் கூக்குரலிற்கு கர்த்தர் செவிகொடுத்ததை கண்டான்.

கர்த்தர் விசுவாசிகளின் ஜெபத்திற்கு ஏற்கனவே பதில் அளித்துவிட்டார் என்பதை இப்போது நாம் உணர்வதில்லை. வருங்கலத்தில் நாம் அதை உணர்ந்துகொள்வோம். ஆனால் அவர்களுடைய எல்லா கவலைகளும் தேவனுடைய பிரசன்னத்தின் மகிழ்ச்சியில் அமிழ்ந்துபோகும்; அது மாத்திரமல்ல, அவர் எப்படி தமது மகத்தான ஞானத்தால் செயல்பட்டார் என்பதை உணரும் மகிழ்ச்சியிலும் கவலைகள் கரைந்துபோகும்.

Notes:

_______________________________________________________

_______________________________________________________

_______________________________________________________

Notes:

______________________________________________________________
______________________________________________________________
______________________________________________________________

Notes:

___________________________________________________________________
___________________________________________________________________
___________________________________________________________________

## 12. வாக்குத்தத்தம் நிறைவேறும் காலம் – I (சில பகுதிகள்)

காத்திருப்பின் காலம் முடிந்தது… கர்த்தரின் வாக்குத்தத்தத்தில் சில பகுதிகள் நிறைவேறியது.

*The wait is over… what God promised is been fulfilled… partially… - Psalms 60*

**சூழல்**: இஸ்ரவேலின் ராஜாவாயிருந்த சவுல் மரித்துப்போனான். தாவீது மெசொப்பொத்தாமியாவையும் (Mesopotamia) சோபாவின் சீரியாவையும் (Syria of Zobah) எதிர்த்துப் போராடி வெற்றிகொண்டான். யோவாப் உப்புக்கடலின் பள்ளத்தாக்கிலே ஏதோமியர் பன்னீராயிரம்பேரைக் கொன்று வெற்றிகொண்டு திரும்பிவந்தபோது தாவீது இந்த சங்கீதத்தை எழுதினார்.

2சாமுவேல்8:1-8 – பெலிஸ்தியா, மோவாப், சிரியா ஆகியவற்றின்மீது தாவீதின் வெற்றிகளை பதிவு செய்கிறார்.

2சாமுவேல்10:1-19அம்மோன் மற்றும் சிரியாவின் மீது தாவீதின் வெற்றிகளை பற்றி கூறுகிறான்

1நாளகமம் 18:11-13மோவாப், அம்மோன், பெலிஸ்தியா, அமலேக்கியர். ஏதோம் மீது தாவீதின் வெற்றிகளை எங்களுக்குக் கொடுங்கள் (மற்றும் குறிப்பாக உப்பு பள்ளத்தாக்கில்)

வேதவாக்யங்கள்: 2 சாமுவேல் 3, 4 & 21:1-14 and 1 நாளாகமம் 17:16 - 19:19

சங்கீதம் 60

### தேசத்தின் இரக்கத்திற்காக தேவனிடம் வேண்டுதல் செய்

*V 1-5 Petition to God for mercy for the nation-*

1. தேவனே, நீர் எங்களைக் கைவிட்டீர், எங்களைச் சிதறடித்தீர், எங்கள்மேல் கோபமாயிருந்தீர்; மறுபடியும் எங்களிடமாய்த் திரும்பியருளும்.

2. பூமியை அதிரப்பண்ணி, அதை வெடிப்பாக்கினீர்; அதின் வெடிப்புகளைப் பொருந்தப்பண்ணும்; அது அசைகின்றது.

Notes:

___________________________________________________________
___________________________________________________________
___________________________________________________________

3. உம்முடைய ஜனங்களுக்குக் கடினமான காரியத்தைக் காண்பித்தீர்; தத்தளிப்பின் மதுபானத்தை எங்களுக்குக் குடிக்கக் கொடுத்தீர்.

4. சத்தியத்தினிமித்தம் ஏற்றும்படியாக, உமக்குப் பயந்து நடக்கிறவர்களுக்கு ஒரு கொடியைக் கொடுத்தீர். (சேலா.)

5. உமது பிரியர் விடுவிக்கப்படும்படி, உமது வலதுகரத்தினால் இரட்சித்து, எனக்குச் செவிகொடுத்தருளும்.

தாவீதும், இஸ்ரவேலின் படைகளும் அந்நிய படைகளோடு போராடி தோல்வியை சந்தித்தனர். கர்த்தர் இஸ்ரவேலுக்காக போராடின நாட்களில் அவர்கள் கண்டிப்பாக வெற்றிபெற்றனர். ஆனால் இப்போது தோல்வி என்றால், தோல்வியின் காரணம் என்ன? தேவனுடைய அதிருப்தியாக இருக்கலாம்.

ஆதலால், தாவீது தேவனிடம் தோல்விக்காக முறையிடாமல் தேவனின் அதிருப்திக்காக வேண்டிக்கொள்கிறார்.

தேவனுடைய அனுக்கிரகாம் மீண்டும் அவர்களிடம் திரும்பும்படி மன்றாடுகிறார். இது அவர்களின் இந்த சூழ்நிலையில் ஒரு நம்பிக்கையை உண்டாக்குகிறது.

தேவனுக்கும் இஸ்ரவேலுக்கும் இடையே உள்ள உறவை தாவீது உணர்கிறார்.

- ➢ தேவன் எங்களை நிராகரித்தார்
- ➢ தேவன் எங்களை உடைத்து விட்டார்
- ➢ தேவன் கோபமடைந்தார்
- ➢ தேவன் அவர்களுடைய நிலத்தில் பூகம்பம் உண்டாக்கினார்
- ➢ தேவன் நிலத்தை பிளவுபடுத்தினார்
- ➢ தேவன் அவரது மக்களை துன்பங்களை அனுபவிக்க செய்தார்
- ➢ தேவன் அவர்களை திராட்சை இரசத்தினால் மதி மயங்க செய்தார்.

Notes:

________________________________________________________
________________________________________________________
________________________________________________________

- ➢ God has rejected us
- ➢ God has broken us
- ➢ God has been angry
- ➢ God has made the land quake
- ➢ God has made the land split open
- ➢ God has made His people experience hardship
- ➢ God has given them over to drunkenness

### தேவனின் வெற்றி வார்த்தை

*V 6-8, God's word of triumph -*

**6. தேவன் தமது பரிசுத்தத்தைக்கொண்டு விளம்பினார்; ஆகையால் களிகூருவேன்; சீகேமைப் பங்கிட்டு சுக்கோத்தின் பள்ளத்தாக்கை அளந்துகொள்ளுவேன்.**

**7. கீலேயாத் என்னுடையது, மனாசேயும் என்னுடையது, எப்பிராயீம் என் தலையின் பெலன், யூதா என் நியாயப்பிரமாணிகன்.**

**8. மோவாப் என் பாதபாத்திரம், ஏதோமின்மேல் என் பாதரட்சையை எறிந்துபோடுவேன்; பெலிஸ்தியாவே, என்னிமித்தம் ஆர்ப்பரித்துக்கொள்.**

இஸ்ரவேல் ஜனங்கள் மற்ற தேசங்கள் மீது வெற்றிபெறும்போது தேவன் தாமே தம்முடைய ஆளுகையின் நிமித்தம் களிகூருகிறார். அவர்களை சுற்றியுள்ள தேசங்களுக்கு மேலாக தம்மை உயர்த்துவதாக தேவன் தாமே கூறினார். மோவாபும் ஏதோமும் மேட்டிமையானவர்கள் (ஏசாயா 16:6; ஒபதிய 1:3).

தாவீது தீர்க்கதரிசனமாக தேவனுடைய பதிலை பேசுகிறார்:

- ➢ நான் மகிழ்ச்சியடைவேன்
- ➢ நான் பங்கிடுவேன்
- ➢ நான் அளவிடுவேன்
- ➢ கீலேயாத் என்னுடையவர்
- ➢ மனாசே என்னுடையவர்
- ➢ என் தலையின் தலைக்கவசம்
- ➢ என் செங்கோல்
- ➢ என் காலணியை வீசுவேன்

Notes:

__________________________________________________________
__________________________________________________________
__________________________________________________________

➢ என் நிமித்தம் உரத்த சத்தமிடுங்கள்

இங்கே குறிப்பிடப்பட்டுள்ள சீகேம், சுக்கோத்தின் பள்ளத்தாக்கு, கீலேயாத், இந்த இடங்களை யோசுவா ஒதுக்கினார் .

மூன்று கோத்திரங்கள்: மனாசே, எப்பிராயீம் & யூதா

மூன்று முறியடிக்கப்பட்ட கானானிய தேசங்கள்: மோவாப், ஏதோம் & பெலிஸ்தியா

### சாத்தியமற்ற வெற்றி தேவனால் சாத்தியமாகும்

*V 9-12, Impossible victory possible by God*

**9. அரணான பட்டணத்திற்குள் என்னை நடத்திக்கொண்டுபோகிறவர் யார்? ஏதோம் மட்டும் எனக்கு வழிகாட்டுகிறவர் யார்?**

**10. எங்கள் சேனைகளோடே புறப்படாமலிருந்த தேவரீர் அல்லவோ? எங்களைத் தள்ளிவிட்டிருந்த தேவரீர் அல்லவோ?**

**11. இக்கட்டில் எங்களுக்கு உதவிசெய்யும்; மனுஷனுடைய உதவி விருதா.**

**12. தேவனாலே பராக்கிரமம் செய்வோம்; அவரே எங்கள் சத்துருக்களை மிதித்துப்போடுவார்.**

முந்திய தோல்வியின் காரணம் தேவன் அவர்களுக்காகப் போராடவில்லை என்பதை தாவீது அறிந்திருந்தான். ஆனால் இம்முறை வலுவான நகரத்தின் மீது வெற்றி பெற இஸ்ரவேலை தேவன் வழிநடத்துவார் என்று அவன் நம்பினான்.

யுத்தத்தில் எதிரிகளை வீழ்த்தி பெரிய காரியங்களை சாதித்த வீரமுள்ளவர்களை கண்டு அந்த காட்சியை ருசித்து பார்த்திருந்தான். ஆயினும் தாவீதை பொறுத்தவரையில் வீரமுள்ளவர்களிடம் இருந்து வரும் உதவி போதுமானதும் அல்ல பயனுள்ளதும் அல்ல. தேவனிடம் இருந்து வரும் உதவியே வெற்றிக்கு வழிநடத்தும்.

நம் பங்கிற்கு நாம் எல்லா தைரியமான செயல்களையும் செய்வோம், ஆனால் தேவனுடைய பங்கு அவருடைய கைகள்

Notes:

________________________________________________________
________________________________________________________
________________________________________________________

நம் கைகளின் மேல் இருப்பது மாத்திரம் அல்ல, அவருடைய பாதங்கள் எதிரிகளின் மேல் இருக்கிறது.

God’s part is to not only place His hands in ours but also to place His foot on the enemies.

சங்கீதம் தோல்வியுடன் தொடங்குகிறது ஆனால் மகத்தான வெற்றியாக முடிகிறது.

## இயேசு கிறிஸ்து

பிதா இல்லாமல் எதுவும் செய்ய முடியாது என்று இயேசு அறிந்திருந்தார்.

**யோவான்** *5:19, அப்பொழுது இயேசு அவர்களை நோக்கி: மெய்யாகவே மெய்யாகவே நான் உங்களுக்குச் சொல்லுகிறேன் பிதாவானவர் செய்யக் குமாரன் காண்கிறதெதுவோ, அதையேயன்றி, வேறொன்றையும் தாமாய்ச் செய்யமாட்டார்; அவர் எவைகளைச் செய்கிறாரோ, அவைகளைக் குமாரனும் அந்தப்படியே செய்கிறார்.*

*யோவான் 5:30, நான் என் சுயமாய் ஒன்றுஞ்செய்கிறதில்லை; நான் கேட்கிறபடியே நியாயந்தீர்க்கிறேன்; எனக்குச் சித்தமானதை நான் தேடாமல், என்னை அனுப்பின பிதாவுக்குச் சித்தமானதையே நான் தேடுகிறபடியால் என் தீர்ப்பு நீதியாயிருக்கிறது.*

**யோவான்** *8:28, ஆதலால் இயேசு அவர்களை நோக்கி: நீங்கள் மனுஷகுமாரனை உயர்த்தின பின்பு, நானே அவரென்றும், நான் என்சுயமாய் ஒன்றும் செய்யாமல், என் பிதா எனக்குப் போதித்தபடியே இவைகளைச் சொன்னேன் என்றும் அறிவீர்கள்.*

பிதா இல்லாமல் ஒன்றும் செய்ய முடியாது என்பதை நாமும் அறிந்துகொள்ள வேண்டும் என்று இயேசு விரும்பினார்.

**யோவான்** *15:5, நானே திராட்சச்செடி, நீங்கள் கொடிகள். ஒருவன் என்னிலும் நான் அவனிலும் நிலைத்திருந்தால், அவன் மிகுந்த கனிகளைக் கொடுப்பான்; என்னையல்லாமல் உங்களால் ஒன்றும் செய்யக்கூடாது.*

Notes:

________________________________________________________
________________________________________________________
________________________________________________________

### அப்போஸ்தலனகிய பவுல்

*அப்போஸ்தலனாகிய பவுலின் வாழ்க்கையை குறித்து அறிந்துகொள்ள மிகவும் சிறந்த இடம் ரோமர் 7-ஆம் அதிகாரம். அவர் செய்யவிரும்பாததை செய்யவேண்டிதாகிற்று ஆனால் செய்யவேண்டியதை செய்யமுடியவில்லை என்று கூறுகிறார்.*

*எனவே பிலிப்பாயில் உள்ள சபைக்கு எழுதின கடிதத்தில் தன்னுடைய வாழ்க்கையை சுருக்கமான விதத்தில் கூறுகிறார்.*

***பிலிப்பியர்** 4:13, என்னைப் பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையுஞ்செய்ய எனக்குப் பெலனுண்டு.*

### செயல்படுத்துதல்

தேவனுக்கு எதிராக இஸ்ரவேல் முறுமுறுத்த காலத்திலும்கூட தேவன் இஸ்ரவேலின் மேல் எப்படி அக்கறையாக இருந்தார் என்பதை தாவீது யோசித்துப்பார்த்தான். தேவன் அவர்களை காப்பாற்றி அவர்களை மீண்டும் தம்மோடு சேர்த்துக் கொண்டார். உங்கள் வாழ்க்கையில் இதை எப்படி தொடர்புபடுத்துவது?

David thought of how God had cared for Israel down through the years even in time of rebellion. God had preserved them and brought them back to Himself. How do you relate this to your life?

தேவன் வாக்குத்தத்தை நிறைவேற்றும் தேவன் என்ற உண்மையை உங்கள் வாழ்வில் நீங்கள் அனுபவிக்கிறீர்களா??

In your life, do you experience the truth that God is a promise-keeping God?

Notes:

________________________________________________________
________________________________________________________
________________________________________________________

*தாவீது தன் பலத்தில் தோல்வி அடைந்து தேவனைக் கூப்பிட்டபோது தேவன் அவருக்கு வெற்றியின் பாதையைக் காட்டினார். நீங்கள் உங்கள் வாழ்வில் எப்படி காரியங்களை செய்ய நினைக்கிறீர்கள், வலிமையிலா அல்லது தேவனின் வலிமையிலா?*

When David faced failure in his own strength and called on God, God showed him the way to victory. Do you tend to do things with your strength or God's strength?

*உங்கள் வாழ்வின் எல்லா சாதனைகளுக்காக நீங்கள் தேவனை மகிமைப்படுத்துகிறீர்களா? அல்லது நான் சுயமாய் இதை செய்தேன் என்று சொல்ல முற்படுகிறீர்களா??*

Do you give God the glory for all your achievements? Or do you call yourself a self-made person?

Notes:

__________________________________________________________

__________________________________________________________

__________________________________________________________

Notes:

_______________________________________________________________

_______________________________________________________________

_______________________________________________________________

## *13.* வாக்குத்தத்தம் நிறைவேறும் காலம் – *II* (முழுமையாக)

காத்திருப்பின் காலம் முடிந்தது... கர்த்தரின் வாக்குத்தத்தத்தம் முழுமையாக நிறைவேறிவிட்டது...

*The wait is over... what God promised is been fulfilled... Fully...*

*சங்கீதம் 30*

**சூழல்:** தாவீது தன்னை இஸ்ரவேலின்மேல் ராஜாவாக மேம்படுத்தினதற்காக எல்லா புகழையும் கர்த்தருக்கு செலுத்தினார். தேவனை துதிப்பதற்கு தாவீது நமக்கு நினைவுபடுத்துகிறார். மேலும் கர்த்தரே நம்முடைய எல்லா ஆசீர்வாதங்களுக்கும் ஆதாரமாக இருக்கிறார் என்பதையும் தாவீது நினைவுபடுத்துகிறார்.

**வேதவாக்கியம்:** *2 சாமுவேல் 5*

*சங்கீதம் 30*

*மரணத்திலிருந்து விடுவித்ததற்காக தாவீது தேவனை துதித்தான்*
*V 1-3 David praises God for deliverance from death -*

**1 கர்த்தாவே, என் சத்துருக்கள் என்னை மேற்கொண்டு மகிழவொட்டாமல்,**

**நீர் என்னைக் கைதூக்கி எடுத்தபடியினால், நான் உம்மைப் போற்றுவேன்.**

**2 என் தேவனாகிய கர்த்தாவே, உம்மை நோக்கிக் கூப்பிட்டேன், என்னை நீர் குணமாக்கினீர்.**

**3 கர்த்தாவே, நீர் என் ஆத்துமாவைப் பாதாளத்திலிருந்து ஏறப்பண்ணி, நான் குழியில் இறங்காதபடி என்னை உயிரோடே காத்தீர்.**

தேவன் தன்னை கல்லறையிலிருந்து வெளியே கொண்டு வந்தார் என்றும், தான் குழியில் இறங்குவதிலிருந்து அவர் விலக்கி காத்தார் என்றும் தாவீது பாடுகிறார். தாவீது அனுபவித்த மோசமான சூழ்நிலைகளை இது நமக்கு அறிவிக்கிறது. தாவீது தன் வாழ்வில் அனைத்தையும் இழந்து தேவனுடைய

Notes:

_____________________________________________________________________________
_____________________________________________________________________________
_____________________________________________________________________________

உதவியைவிட வேறே எந்த உதவியின்மேலும் நம்பிக்கை-யற்றவனாக காணப்படுகிறான்.

## தேவனுடைய கோபம் மாறி அனுக்கிரகம் கிடைத்ததற்காக தேவனுக்கு துதி

*V 4-5 Praising God for His Anger to Favour-*

**[4]கர்த்தருடைய பரிசுத்தவான்களே, அவரைக் கீர்த்தனம்பண்ணி, அவருடைய பரிசுத்தத்தின் நினைவுகூருதலைக் கொண்டாடுங்கள்.**
**[5]அவருடைய கோபம் ஒரு நிமிஷம், அவருடைய தயவோ நீடிய வாழ்வு; சாயங்காலத்தில் அழுகை தங்கும், விடியற்காலத்திலே களிப்புண்டாகும்.**

கர்த்தருடைய கோபம் சில வினாடிகள் மாத்திரமே இருப்பதற்காக கர்த்தரை ஸ்தோத்தரிக்கிறேன்!

நம் வாழ்வில் நாம் எத்தனை முறை பாவம் செய்து, தவறான முடிவுகள் எடுத்து நாம் தேவனை கோபப்படுத்துகிறோம்?

நம் மீறுதல்கள், பாவங்கள், துரோகங்கள் யாவற்றின் நிமித்தம் தேவன் தம்முடைய கோபத்தால் நம்மை தண்டிக்க அவருக்கு உரிமை உண்டு.

ஆனாலும், தேவனின் தயவு நம் வாழ்நாள் முழுவதும் நீடிக்கும்.

தேவனுக்கு விரோதமாக நாம் காரியங்கள் செய்தாலும், செயல்பட்டாலும், இன்னும் நாம் அவரது இரக்கத்தை காண முடிகிறது. இப்படிப்பட்ட நற்குணமுடையவரை நாம் இந்த உலகில் என்றும் காணமுடியாது. அப்படி காண்பது சாத்தியமே இல்லை!!

இந்த இரவில் அழுகையில் இருந்தாலும், நாம் கர்த்தருக்குள் மகிழ்ந்து களிகூரும்படிக்கு வருகிற புதிய நாளை தாவீது எதிர்நோக்குகிறார். நம் குற்றவுணர்வு நம்மை பாரத்தில் தள்ளி தொடர்ந்து தேவனுக்காக வாழமுடியாமல் செய்துவிடக்கூடாது. நம் கர்த்தரிடமிருந்து புதிய கிருபை காணவும் அவரில் மகிழ்ந்து களிகூறவும் புதிய நாள் புதிய வாய்ப்புகளை கொண்டு-வருகிறதென்று தாவீது பாடுகிறார்.

Notes:

________________________________________________________
________________________________________________________
________________________________________________________

## கலக்கத்திலிருந்து பாதுகாப்பிற்குள்

*V 6-7 Terror to Security-*

***6 நான் ஒருக்காலும் அசைக்கப்படுவதில்லையென்று என்
வாழ்விலே சொன்னேன்.
7 கர்த்தாவே, உம்முடைய தயவினால் நீர் என் பர்வதத்தைத்
திடமாய் நிற்கப்பண்ணியிருந்தீர்; உமது முகத்தை நீர்
மறைத்துக்கொண்டபோதோ நான் கலங்கினவனானேன்.***

தேவன் இல்லாதபோது கலக்கம்.

தேவன் தன் முகத்தை மறைத்திருக்கும்போது கலக்கம் தாவீதின் மேல் விழுந்தது.

தேவனோடு கிடைக்கும் பாதுகாப்பு

"நான் ஒருபோதும் அசைக்கப்படுவதில்லை" என்று தாவீதால் சொல்ல முடிந்தது; ஏனென்றால் தேவனுடன் இருப்பது தாவீதை பெலப்படுத்துகிறது. ஒருவரும் அவனுக்கு எதிராக நிற்கக்கூடாதபடி அவனை அவ்வளவாய் பலப்படுத்துகிறது.

## அழிவிலிருந்து பாதுகாப்பிற்குள்

*V 8-9, Destruction to Security*

***8 நான் குழியில் இறங்குகையில் என் இரத்தத்தால் என்ன
லாபமுண்டு? புழுதி உம்மைத் துதித்து, உமது சத்தியத்தை
அறிவிக்குமோ?
9 கர்த்தாவே, நீர் எனக்குச் செவிகொடுத்து என்மேல்
இரக்கமாயிரும்; கர்த்தாவே, நீர் எனக்குச் சகாயராயிரும் என்று***

தாவீது மரணத்தின் விளிம்பில் இருந்து விடுவிக்கும்படி தேவனிடம் கதறுகிறார். தேவனை கூப்பிடுவதற்கு எந்நேரமும் தாமதமல்ல!! **Never too late to call on God!!**

- ➢ தேவன் அவனை செழிப்பாக்கினார்.
- ➢ தேவன் அவனை ஸ்திரப்படுத்தினார்.
- ➢ தேவன் அவனை பெலப்படுத்தினார்.
- ➢ தேவன் அவனுடைய ஜெபத்திற்கு பதிலளித்தார்.
- ➢ தேவனுடைய உண்மையின் நிமித்தம் அவரை துதிக்கும்படி மரணத்திலிருந்து அவனை பாதுகாத்தார்,

Notes:

______________________________________________________________

______________________________________________________________

______________________________________________________________

தேவனிடம் பதிலளிக்கமாட்டார் என்று அறிந்து இரண்டு வித்தியாசமான (**rhetorical**) கேள்விகளை தாவீது கேட்டான்:

- நான் மரிப்பதாலும், குழியில் இறங்குவதாலும் தேவனே உமக்கு என்ன கிடைக்கும்?
- என் தூசி உம்மை துதிக்கக்கூடுமோ? அது உம்முடைய உண்மையை சொல்ல கூடுமோ?

### அழிவிலிருந்து இரக்கம்

*V 10-12, Destruction to Mercy-*

***10 கர்த்தாவே, உம்மை நோக்கிக் கூப்பிட்டேன்; கர்த்தரை நோக்கிக் கெஞ்சினேன்.***

***11 என் புலம்பலை ஆனந்தக் களிப்பாக மாறப்பண்ணினீர்; என் மகிமை அமர்ந்திராமல் உம்மைக் கீர்த்தனம்பண்ணும்படியாக நீர் என் இரட்டைக் களைந்துபோட்டு, மகிழ்ச்சியென்னும் கட்டினால் என்னை இடைகட்டினீர்.***
***12 என் தேவனாகிய கர்த்தாவே, உம்மை என்றென்றைக்கும் துதிப்பேன்.***

தாவீதிடம் இருந்து மூன்று கோரிக்கைகள்:

- எனக்கு செவிகொடுங்கள்
- கிருபையாய் இருங்கள்
- என் உதவியாளராக இருங்கள்

கர்த்தருடைய பதில் தாவீதை நடனமாட செய்தது:

- துயரை நடனமாக மாற்றியது.
- இரட்டுகளின் கட்டை அவிழ்த்து, மகிழ்ச்சியை அணியச்செய்தது.
- எந்நேரமும் ச்தொத்தொரம் செலுத்தி துதிக்க செய்தது.
- நித்தியக்காலமும் அவனை நன்றி சொல்ல வைத்தது.

### Conclusion

தேவன் நம் வாழ்க்கையை எப்படி மாற்றியிருக்கிறார் என்பதற்கு எப்போதும் நன்றியுள்ளவர்களாய் இருக்க வேண்டும் என்று கூறி இந்த சங்கீதத்தை தாவீது முடிக்கிறார். இன்று நாம் இருக்கும் இந்த இடத்தில் தேவன் நம்மை வைத்திருப்பதற்காக நன்றி

Notes:

________________________________________________________
________________________________________________________
________________________________________________________

சொல்ல கடமைப்பட்டிருக்கிறோம். கர்த்தருடைய வழிநடத்துதலும் பாதுகாப்பும் நம் வாழ்க்கையில் இல்லையென்றால் நாம் எங்கு இருப்போம் என்று யாருக்கு தெரியும்!

ஒரு முறை மட்டும் நன்றி சொல்லாமல், மீண்டும் மீண்டும் நாம் மரிக்கும் வரை நன்றி சொல்லவேண்டும், ஏனென்றால் அவர் நம்மை அவ்வளவு மிகுதியாக ஆசீர்வதித்திருக்கிறார்!!

## இயேசு கிறிஸ்து




இயேசு தமக்கு முன் இருக்கும் மகிழ்ச்சியின் நிமித்தமே சிலுவையின் பாடுகளை தாங்க முடிந்தது.

***எபிரெயர் 12:2,***

*அவர் தமக்குமுன் வைத்திருந்த சந்தோஷத்தின்பொருட்டு, அவமானத்தை எண்ணாமல், சிலுவையைச் சகித்து, தேவனுடைய சிங்காசனத்தின் வலதுபாரிசத்தில் வீற்றிருக்கிறார்.*

## அப்போஸ்தலனாகிய பவுல்

தெசலோனி சபைக்கு எழுதியபோது பவுல் தான் கடந்து செல்கிற துயரத்தை பற்றி பவுல் கூறினார்.

***1 தெசலோனிக்கேயர் 3:1-4,***

*ஆகையால், நாங்கள் இனிப் பொறுத்திருக்கக்கூடாமல், அத்தேனே பட்டணத்தில் தனித்துவிடப்படுகிறது நன்மையென்று நினைத்து,*
*2 இந்த உபத்திரவங்களினாலே ஒருவனும் அசைக்கப்படாதபடிக்கு உங்களைத் திடப்படுத்தவும், உங்கள் விசுவாசத்தைப்பற்றி உங்களுக்குப் புத்திசொல்லவும், நம்முடைய சகோதரனும் தேவ ஊழியக்காரனும் கிறிஸ்துவின் சுவிசேஷத்தில் எங்கள் உடன்வேலையாளுமாகிய தீமோத்தேயுவை அனுப்பினோம்.*
*3 இப்படிப்பட்ட உபத்திரவங்களைச் சகிக்க நாம் நியமிக்கப்பட்டிருக்கிறோமென்று நீங்கள் அறிந்திருக்கிறீர்களே.*
*4 நமக்கு உபத்திரவம் வருமென்று நாங்கள்*

Notes:

________________________________________________________
________________________________________________________
________________________________________________________

*உங்களிடத்திலிருந்தபோது, உங்களுக்கு முன்னறிவித்தோம்; அப்படியே வந்து நேரிட்டதென்றும் அறிந்திருக்கிறீர்கள்.*

தேவனோடு நடப்பதால் உபத்திரவங்களை தாங்கிக்கொள்ள-கூடிய விசுவாசம் தனக்கு இருந்ததை பவுல் கூறுகிறார்.

தேவனின் வாக்குத்தத்தம் நிறைவேறும்போது வருகிற ஆனந்தத்தை நம்மால் பார்க்க முடிந்தால், நாம் கடந்துசெல்லும் எல்லா உபத்திரவங்களும் இலகுவானதாக தோன்றும். ஆகையால், உபத்திரவம் இரவு வேளை மட்டுமே, விடியற்காலத்திலே களிப்புண்டாகும் என்று நம்மை பாடவும் தூண்டும். **பதிமூன்று வருட உபத்திரவம் ஒரு இரவைப்போல தெரியும்!!**

***If we could see the joy that comes with the fulfilment of God's promise, then all our present afflictions will look easy and simple, enabling us to sing that sorrow only lasts but for a night but joy comes in the morning.*** *Thirteen long years of afflictions look like a night!!*

### செயல்படுத்துதல்

*Application*

*தாவீதின் வாழ்வில் இது எவ்வளவு உண்மையாயிருக்கிறது! தன்னுடைய வேசித்தனத்தை மறைக்க, தேவனுடைய படையில் ஒரு அப்பாவியான போர் வீரனை கொன்று, அந்த வீரனின் மனைவியை மனம்முடித்தான் தாவீது. ஆனால் தேவன் தாவீதைக்குறித்து சொல்லுகிற காரியம், "என் இருதயத்திற்கேற்ற தாவீது". ஒரு வினாடி கோபம், வாழ்நாள் முழுதும் கிருபை. இன்று உங்களை தேவனிடம் செல்ல தடுப்பது ஏதேனும் உண்டா?*

How true is this in David's life! David kills an innocent warrior of the Lord's army so he could marry his wife Bathsheba to cover up his sin of adultery. But what does God record of David's character? That David was a man after His own heart. Anger for a moment, favour for a lifetime. Is there something holding you back from going closer to God today?

Notes:

__________________________________________________________
__________________________________________________________
__________________________________________________________

பிரச்சனையில் இருக்கும்போது எல்லோரும் கர்த்தரிடம் வருவார்கள், ஜெபிப்பார்கள். ஆனால், தாவீது பிரச்சனையில் இருக்கும்போதும், தன் உயிருக்காக ஓடும்போதும், அதோடு மட்டுமல்ல வெற்றிபெற்ற போதும், இராஜாவான போதும், கர்த்தர் மேல் இருந்த கவனம் துளியளவும் சிதறவில்லை. உங்கள் கவனம் எப்படி இருக்கிறது?

Everyone remembers God and comes to Him in prayer when in trouble; however, David was focused on God when he was in trouble, running for his life, and also after he was delivered and made king, never wavering in his focus of God. How about you?

தேவன் நம்மை ஒரு நோக்கத்துடன் இங்கு வைத்திருக்கிறார், எல்லாம் அவருடைய ஆளுகைக்குள்ளாக இருக்கிறது என்று நாம் உணருகையில், நம்முடைய சுபாவமும் அணுகுமுறையும் என்றும் மாறாது. இதை நோக்கி நீங்கள் நடைமுறையில் செய்யக்கூடிய காரியங்கள் என்ன?

If we perceive that God has placed us here for a purpose and everything has been ordained by Him, then our behaviour and attitude will not change be it victory or failure. What are the practical steps you can take towards this?

உபாகம புத்தகத்தை நான் சுருக்கமாக ஒரு வரி பிரசங்கத்தில் சொல்ல முடியும் என்றால், 'நீ ஏராளமான நிலத்தில் இருப்பாய், ஆனால் உன்னை ஆசீர்வதித்த கர்த்தரை மறக்காதே'

***உபாகமம் 8:7-11***, *7 உன் தேவனாகிய கர்த்தர் உன்னை நல்ல*
*தேசத்திலே பிரவேசிக்கப்பண்ணுகிறார்; அது*
*பள்ளத்தாக்குகளிலும் மலைகளிலுமிருந்து புறப்படுகிற*
*ஆறுகளும் ஊற்றுகளும் ஏரிகளுமுள்ள தேசம்; 8 அது*
*கோதுமையும் வாற்கோதுமையும் திராட்சச் செடிகளும்*
*அத்திமரங்களும் மாதளஞ்செடிகளுமுள்ள தேசம்; அது*
*ஒலிவமரங்களும், எண்ணெயும் தேனுமுள்ள தேசம்; 9 அது*

Notes:

________________________________________________________
________________________________________________________
________________________________________________________

*தாழ்ச்சியில்லாமல் அப்பம் புசிக்கத்தக்கதும் ஒன்றும் உனக்குக் குறைவுபடாததுமான தேசம்; அது கல்லுகள் இரும்பாயிருக்கிறதும், செம்பு வெட்டி எடுக்கத்தக்க மலைகளுள்ளதுமான தேசம். [10] ஆகையால், நீ புசித்துத் திருப்தியடைந்திருக்கையில், உன் தேவனாகிய கர்த்தர் உனக்குக் கொடுத்த அந்த நல்ல தேசத்துக்காக அவரை ஸ்தோத்திரிக்கக்கடவாய் [11] உன் தேவனாகிய கர்த்தரை மறவாதபடிக்கும், நான் இன்று உனக்கு விதிக்கிற அவருடைய கற்பனைகளையும் நியாயங்களையும் கட்டளைகளையும் கைக்கொள்ளாமற்போகாதபடிக்கும் எச்சரிக்கையாயிரு.*

## இப்போது நான் உங்களிடம் இதை கேட்கிறேன்,

*இந்தியாவிலிருந்து உங்களை வெளியே கொண்டுவருவதற்கு நீங்கள் தேவனுக்கு என்ன செய்தீர்கள்?*

What have you done for God to bring you here out of India?

*இந்தியாவிலும் / இலங்கையிலும் உள்ள மற்றவர்களை விட நீங்கள் தகுதிவாய்ந்தவர் என்று நினைக்கிறீர்களா?*

Do you think you are more qualified than those who are in India/Sri Lanka?

*தேவன் உங்களை நோக்கத்துடனே இங்கு கொண்டுவந்ததை உங்கள் வாழ்க்கை பிரதிபலிக்கிறதா?*

Does your life portray that God has brought you here with a purpose?

*உங்கள் இருதயம் மேட்டிமையினால் நிறைந்திருக்கிறதா?*

Notes:

___________________________________________________________
___________________________________________________________
___________________________________________________________

Is your heart filled with pride?

தயவு செய்து இன்று உங்களை ஆராய்ந்து பாருங்கள்

Examine yourself today.

Notes:

____________________________________________________________

____________________________________________________________

____________________________________________________________

Notes:

________________________________________________________________

________________________________________________________________

________________________________________________________________

# 14. வாக்குத்தத்தம் நிறைவேறும் காலம் – III (எதிரிகள் தாக்கினாலும் வெற்றி)

வாக்குத்தத்தம் நிறைவேறியது .... எதிரிகள் தாக்குதலை தொடங்குகிறார்கள் ... வெற்றி ...

*Promise is fulfilled … the enemies starts attack… Victory…*

*சங்கீதம் 21*

**சூழல் :** எல்லா இஸ்ரவேலின்மேல் ராஜாவான பின் பெலிஸ்தியர்களால் தாக்கப்பட்டபோது தாவீது எழுதிய ஒரு வெற்றியின் பாடல். ***சங்கீதம் 20*** பொது வெற்றி வழிபாட்டு பாடலாய் இருக்கிறது அதனால் இரண்டு சங்கீதமும் ஒன்றாக இணைத்து வாசிக்க முடியும்.

**வேதவாக்கியம்**: *2 சாமுவேல் 5 & 12*

தாவீது தன்னை ஒரு மூன்றாம் நபராக கருதியும் ராஜாவாக கருதியும் இந்த சங்கீதத்தை எழுதியிருக்கிறார். தாவீது இந்த சங்கீதத்தை தன் சொந்த பாடலாக அல்ல, ஜனங்கள் யாவரும் சேர்ந்து பாடும் பாடலாக இயற்றினார். உண்மையில் சொல்லப்போனால் இது ஒரு தேசிய கீதமாய் இருக்கிறது. தாவீதின் மகிமையும் மாட்சிமையும் கொண்டாடி இந்த பாடல் இருந்தாலும், அந்த மகிமையையும் மாட்சிமையையும் தேவனுக்கு ஏறெடுக்கிறார். இந்த சங்கீதம் தாவீதின் வருங்காலத்தின் மேல் நம்பிக்கை வைப்பதாக இருந்தாலும், அந்த நம்பிக்கையை தேவன் மேல் மாத்திரமே வைத்து எழுதப்பட்டிருக்கிறது. பெற்ற வெற்றிக்காகவும், மிகவும் ஆர்வத்தோடு எதிர்பார்த்திருந்ததை வழங்கியதற்காகவும் நன்றி செலுத்தும் ஒரு சங்கீதம்.

கேட்கப்பட்ட வின்னப்பங்களுக்காக தேவனுக்கு நன்றி

*V 1-3 Thanking God for what had been asked*

***1 கர்த்தாவே, உம்முடைய வல்லமையிலே ராஜா
மகிழ்ச்சியாயிருக்கிறார்; உம்முடைய
இரட்சிப்பிலே எவ்வளவாய்க் களிகூருகிறார்!
2 அவருடைய மனவிருப்பத்தின்படி நீர் அவருக்குத் தந்தருளி,
அவருடைய உதடுகளின் விண்ணப்பத்தைத் தள்ளாதிருக்கிறீர்.***

Notes:

__________________________________________________________
__________________________________________________________
__________________________________________________________

*(சேலா.)*

*3 உத்தம ஆசீர்வாதங்களோடு நீர் அவருக்கு எதிர்கொண்டுவந்து, அவர் சிரசில் பொற்கிரீடம் தரிப்பிக்கிறீர்..*

தாவீதின் இருதயம் எதிரியை வெல்வதற்காகவும் தேவன் தாவீதின் ராஜ்ஜியத்தை ஸ்தாபிப்பதற்காகவும் ஏங்கியது. தன்னுடைய வலிமை அல்ல தேவனே அவனுக்கு கனத்தையும் மகிமையையும் கொண்டுவந்தார் என்று தாவீது ஒப்புகொள்கிறார். தேவன் அந்த மகிமையை பரிசளித்தார்.

இராஜா எதிரியை போரில் வெல்லுகிற போதெல்லாம் அவனுடைய தலைக்கு மேல் கிரீடம் சூட்டப்படும்.

*V 4-7, Blessings were made permanent and eternal* ஆசீர்வாதங்கள் நிரந்தரமாகவும் நித்தியமாகவும் உருவாக்கப்பட்டிருக்கிறது

*4 அவர் உம்மிடத்தில் ஆயுசைக்கேட்டார்; நீர் அவருக்கு என்றென்றைக்குமுள்ள தீர்க்காயுசை அளித்தீர்.*
*5 உமது இரட்சிப்பினால் அவர் மகிமை பெரிதாயிருக்கிறது; மேன்மையையும் மகத்துவத்தையும் அவருக்கு அருளினீர்.*

*6 அவரை நித்திய ஆசீர்வாதங்களுள்ளவராக்குகிறீர்; அவரை உம்முடைய சமுகத்தின் மகிழ்ச்சியினால் பூரிப்பாக்குகிறீர்.*
*7 ராஜா கர்த்தர்மேல் நம்பிக்கையாயிருக்கிறார்; உன்னதமானவருடைய தயவினால் அசைக்கப்படாதிருப்பார்.*

- ➢ தேவன் நன்மையான ஆசிர்வாதங்களுடன் அவனை சந்திக்கிறார்
- ➢ தேவன் தாவீதின் ராஜ்ஜியத்தை மீண்டும் உறுதிப்படுத்துவதற்கு அவனுடைய தலையில் கிரீடத்தால் அலங்கரிக்கிறார்.
- ➢ தேவன் அவனுடைய வாழ்க்கையை அவனுக்கு தந்தார்
- ➢ தேவன் தாவீதின் மீது சிறப்புகளை வைத்தார்
- ➢ தேவன் மாட்சிமையை வைத்தார்
- ➢ தேவன் அவனை நீண்ட கால ஆயுசுக்காக ஆசிர்வதித்தார்
- ➢ தாவீது அவருடைய பிரசன்னத்தில் மகிழ்ச்சியாக இருப்பார்.

Notes:

________________________________________________________
________________________________________________________
________________________________________________________

*V 8-12, Comprehensive victory over his enemies* எதிரிகளின் மீது வெற்றி

***[8] உமது கை உமது சத்துருக்களெல்லாரையும் எட்டிப்பிடிக்கும்;***
***உமது வலதுகரம் உம்மைப் பகைக்கிறவர்களைக் கண்டுபிடிக்கும்.***
***[9] உமது கோபத்தின் காலத்திலே அவர்களை அக்கினிச்***
***சூளையாக்கிப்போடுவீர்; கர்த்தர் தமது கோபத்திலே அவர்களை***
***அழிப்பார்; அக்கினி அவர்களைப் பட்சிக்கும்.***

***[10] அவர்கள் கனியை பூமியிலிராதபடி நீர் அழித்து, அவர்கள்***
***சந்ததியை மனுபுத்திரரிலிராதபடி ஒழியப்பண்ணுவீர்.***
***[11] அவர்கள் உமக்கு விரோதமாய்ப் பொல்லாங்கு நினைத்தார்கள்;***
***தீவினையை எத்தனம்பண்ணினார்கள்; ஒன்றும்***
***வாய்க்காமற்போயிற்று.***
***[12] அவர்களை இலக்காக வைத்து, உம்முடைய அம்புகளை***
***நாணேற்றி அவர்கள் முகத்திற்கு நேரே விடுகிறீர்.***

அவர்கள் அவருக்கு உண்மையுள்ளவர்களாய் நிலைத்திருந்தால் தேவனின் நிபந்தனையின்பேரில் உண்டாகும் வாக்குத்தத்தம்:

- ➢ உங்கள் எதிரிகளின் மீது அதிகாரம்
- ➢ உங்கள் எதிரிகள் அழிக்கப்படுவார்கள்
- ➢ உங்கள் எதிரிகள் மற்றும் அவர்களின் சந்ததியினர் வெட்டப்படுவார்கள், எதிரிகள் இனிமேல் தெறிவதில்லை.
- ➢ உங்கள் எதிரிகள் அவர்களுடைய திட்டங்களில் வெற்றி கொள்வதில்லை
- ➢ உங்கள் எதிரிகள் போரில் பின்னடைவார்கள்.

தேவன் இந்த இறுதி வெற்றியில் மகிமைப்படுவார்.

*V 13, God be glorified in this final Victory*

***[13] கர்த்தாவே, உம்முடைய பலத்திலே நீர் எழுந்தருளும்;***
***அப்பொழுது உம்முடைய வல்லமையைப்***
***பாடிக்கீர்த்தனம்பண்ணுவோம்.***

தாவீது கர்த்தருடைய வலிமையின் நிமித்தம் ஜனங்களுடன் சேர்ந்து தேவனை உயர்த்துகிறார். தொடர்ந்து ஆசீர்வாதத்தை

Notes:

__________________________________________________________
__________________________________________________________
__________________________________________________________

கொண்டு வந்திருந்த அவரது வல்லமைக்காக அவரை தொடர்ந்து ஆராதித்தார்கள்.

- தேவன் உயர்த்தப்பட்டார்.
- தேவன் மட்டுமே உயர்த்தப்பட்டார்.
- தேவன் அவரது சொந்த வல்லமையின் நிமித்தம் உயர்த்தப்பட்டார்.
- அவரது மக்கள் அவரது புகழை பாடுகின்றனர்.

## முடிவுரை

*Conclusion:*

தேவன் ஏற்படுத்தின ராஜா ஜெபிக்கிறபடியால் வெற்றி பெறுகிறார்.

- *1* நாளாகமம், தாவீதின் ராணுவம் சிறந்த வகையில் இருந்தது என்பதை பற்றி கூறினாலும்,
- அவனுக்கு சிறந்த ராணுவம் இருந்ததால் அவன் வெற்றி பெற வில்லை.
- அவனிடம் யுக்த்திகளாலும் கனத்தினாலும் வெற்றி பெற வில்லை.
- அவனுடைய எதிரிகள் பலவீனமாக அல்லது முட்டாள்களாக இருந்த படியால் அவன் வெற்றி பெற வில்லை.
- தேவன் அவனுக்கு வெற்றியை தந்ததாலும், ராஜா ஜெபம் செய்ததாலும் வெற்றி பெறுகிறார்.

## அப்போஸ்தலனாகிய பவுல்

*Apostle Paul*

அப்போஸ்தலனாகிய பவுலின் வாழ்க்கையில் இரட்சிப்பை கொண்டு வந்த மகத்தான வெற்றியை பாருங்கள்.

***அப்போஸ்தலர்16: 25-30,*** *25 நடுராத்திரியிலே பவுலும் சீலாவும்
ஜெபம்பண்ணி, தேவனைத் துதித்துப் பாடினார்கள்; காவலில்
வைக்கப்பட்டவர்கள் அதைக் கேட்டுக்கொண்டிருந்தார்கள்.
26 சடிதியிலே சிறைச்சாலையின் அஸ்திபாரங்கள்
அசையும்படியாக பூமி மிகவும் அதிர்ந்தது; உடனே
கதவுகளெல்லாம் திறவுண்டது; எல்லாருடைய கட்டுகளும்*

Notes:

________________________________________________________
________________________________________________________
________________________________________________________

கழன்றுபோயிற்று. [27]சிறைச்சாலைக்காரன்
நித்திரைதெளிந்து, சிறைச்சாலையின் கதவுகள்
திறந்திருக்கிறதைக் கண்டு, கட்டுண்டவர்கள்
ஓடிப்போனார்களென்று எண்ணி, பட்டயத்தை உருவித்
தன்னைக் கொலைசெய்து கொள்ளப்போனான். [28]பவுல் மிகுந்த
சத்தமிட்டு; நீ உனக்குக் கெடுதி ஒன்றுஞ் செய்துகொள்ளாதே;
நாங்கள் எல்லாரும் இங்கேதான் இருக்கிறோம் என்றான்.
[29] அப்பொழுது அவன் தீபங்களைக் கொண்டுவரச்சொல்லி,
உள்ளே ஓடி, நடுநடுங்கி, பவுலுக்கும் சீலாவுக்கும் முன்பாக
விழுந்து, [30]அவர்களை வெளியே அழைத்துவந்து:
ஆண்டவன்மாரே, இரட்சிக்கப்படுவதற்கு நான் என்ன
செய்யவேண்டும் என்றான்.

நாம் மேற்கண்ட பத்தியிலிருந்து அவர்கள் எதற்காக ஜெபிக்கவில்லை என்பதை பார்க்க முடியும்

- சிறையிலிருந்து விடுதலை பெற ஜெபிக்கவில்லை
- அழுகவில்லை
- துன்பங்கள் இலகுவாக மாற ஜெபிக்கவில்லை
- தப்பிப்பதற்கு ஜெபிக்கவில்லை
- பவுலும் சீலாவும் தொடங்கினாலும், எல்லோரும் சேர்ந்துகொண்டார்கள்
- கதவுகள் திறக்கப்பட்டபோதும் அவர்கள் அங்கேயே தங்கினர்.

இரட்சிப்பின் சுவிசேஷத்தை பிரசங்கிக்க தேவன் கொடுத்த வாய்ப்பிற்காக தேவனை துதித்தார்கள்!

இங்கே உள்ள *சங்கீதம் 21:5, உமது இரட்சிப்பினால் அவர் மகிமை பெரிதாயிருக்கிறது; மேன்மையையும் மகத்துவத்தையும் அவருக்கு அருளினீர்.*

எனவே சுவிஷேத்தை பகிர்ந்து கொள்வதற்காகவும் மக்கள் இரட்சிக்கப்படவும் ஒவ்வொரு வாய்ப்பையும் பயன்படுத்துவோம்.

### செயல்படுத்துதல்

*Application:*

Notes:

_______________________________________________________
_______________________________________________________
_______________________________________________________

*[2] You have given him his heart's desire,*
*And have not withheld the request of his lips.*

*அவருடைய மனவிருப்பத்தின்படி நீர் அவருக்குத் தந்தருளி, அவருடைய உதடுகளின் விண்ணப்பத்தைத் தள்ளாதிருக்கிறீர். (சேலா.)*

நான் இந்த வசனத்தால் மிகவும் ஈர்க்கப்பட்டேன்; தேவன் எந்த வேண்டுகோளையும் நிறுத்தி வைக்கவில்லை

*Can you say this?* நீங்கள் இதை சொல்ல முடியுமா?

*Where is your focus on your prayer?*

உங்கள் ஜெபத்தில் உங்கள் கவனம் எங்கே இருக்கிறது?

Take time to ponder and correct yourself as to why your prayers were not answered?

உங்கள் ஜெபம் ஏன் பதிலளிக்கப்படவில்லை என்று சற்று சிந்தித்துப்பார்த்து உங்களை சரிபடுத்துங்கள்

*Not abiding in Jesus (John 15:7)*

இயேசுவில் நிலைத்திருக்கவில்லை *(யோவான் 15:7)*

*Unbelief (Matthew 17:20-21)* அவிசுவாசம் *(மத்தேயு 17:20-21)*

*Failure to Fast* - உபவாசிக்கவில்லை *(மத்தேயு 17:21)*

*A Bad Marriage Relationship (1 Peter 3:7)* சரியில்லாத திருமண உறவு *(1 பேதுரு 3:7)*

Notes:

____________________________________________________________
____________________________________________________________
____________________________________________________________

*Not Asking (James 4:2) விண்ணப்பிக்கவில்லை (யாக்கோபு 4:2)*

*Selfish Praying - சுயநலமான ஜெபம் (யாக்கோபு 4: 3)*

*Disobedience (1 John 3:22) கீழ்ப்படியாமை (1 யோவான் 3:22)*

*Not Praying in God's Will (1 John 5:14-15) - அவருடைய சித்தத்தின் படி ஜெபிக்கவில்லை (1 யோவான் 5:14-15)*

*Unconfessed Sin - அறிக்கையிடப்படாத பாவம் (யாக்கோபு 5:16)*

*Cold, Passionless Prayer (James 5:16-18; 2 Kings 20:5) – குளிர்ந்த உற்சாகமற்ற ஜெபம் (யாக்கோபு 5:16-18; 2 இராஜா 20:5)*

Prayerlessness and lack of persistence in prayer *(Luke 18:1-7; Psalm 55:17)*

ஜெபமில்லாமை அல்லது என்றாவது ஒருநாள் ஜெபித்தல் *(லூக்கா 18:1-7; சங்கீதம் 55:17)*

*Sin against Others (Matthew 5:23-24) பிறருக்கு எதிரான பாவம் (மத்தேயு 5:23-24)*

*Lack of Unity - ஒற்றுமை இல்லாமை (மத்தேயு 18:19)*

Notes:

__________________________________________________________
__________________________________________________________
__________________________________________________________

*Not Praying in the Name of Jesus (John 14:13-14)* இயேசுவின் நாமத்தில் ஜெபிக்காதது *(யோவான் 14:13-14)*

*Pride (James 4:6, 1 Peter 5:5, Proverbs 3:34)*

பெருமை *(யாக்கோபு 4:6, 1 பேதுரு 5:5, நீதிமொழிகள் 3:34)*

*Lying and Deceitfulness (Psalm 17:1)*

பொய் மற்றும் ஏமாற்றும் குணம் *(சங்கீதம் 17:1)*

*Lack of Bible Reading and Bible Teaching (Proverbs 28:9)* வேத வாசிப்பு மற்றும் வேத போதனை இல்லாதது *(நீதி 28:9)*

*Trusting in the Length or Form of Prayer (Matthew 6:7)* ஆழமான ஜெபத்தின் முறையில் நம்புவது *(மத்தேயு 6:7)*

Notes:

__________________________________________________________
__________________________________________________________
__________________________________________________________

Notes:

______________________________________________________________

______________________________________________________________

______________________________________________________________

Notes:

_______________________________________________________________
_______________________________________________________________
_______________________________________________________________

## *15. வாக்குத்தத்தம் நிறைவேறும் காலம் – IV (எதிரிகள் யாவரையும் ஜெயித்தேன்)*

### வாக்குத்தத்தம் நிறைவேறியது... எதிரிகள் யாவரையும் ஜெயித்தேன்...

*Promise is fulfilled … ALL the enemies' won…*

சங்கீதம் 139

**சூழல்**: தாவீது இஸ்ரவேலின்மேல் ராஜாவாக அமர்த்தப்பட்டபோது அந்த வெற்றிக்கும் உயர்வுக்கும் தேவனை துதிக்கிறார்.

**வேத பகுதி**: 1 நாளா 13

இந்த சங்கீதத்தை தவிர வேதாகமத்தில் வேறு எந்த பகுதியிலும் கர்த்தரை இந்த அளவுக்கு பெரியவராக மகத்துவமானவராக சித்தரிக்கவில்லை. தேவனை குறித்த மேலான எண்ணங்களும் கவிதை நயமும் இந்த சங்கீதத்தை ஒரு அற்புதமான கவிதையாக மாற்றுகிறது.

நான்கு பகுதிகளாக – பகுதிக்கு ஆறு வசனங்கள் இருக்கின்றன.

**வ** 1-6, **கர்த்தரின் சர்வஞானம் -** God's Omniscience

வ 7-12, எங்கும் வியாபித்திருக்கும் தேவன் - God's Omnipresence

**வ** 13-18, **கர்த்தரின் சர்வ வல்லமை** - God's Omnipotence

வ 19-24, கர்த்தரை துதிக்கும்படி தாவீதின் விசுவாசம் - Davis's loyalty to Praise God

### கர்த்தரின் சர்வஞானம்

**வ** *1-6, God's Omniscience*

*1. **கர்த்தாவே, நீர் என்னை ஆராய்ந்து, அறிந்திருக்கிறீர்.***
*2. **என் உட்காருதலையும் என் எழுந்திருக்குதலையும் நீர் அறிந்திருக்கிறீர்; என் நினைவுகளைத் தூரத்திலிருந்து அறிகிறீர்.***
*3. **நான் நடந்தாலும் படுத்திருந்தாலும் என்னைச் சூழ்ந்திருக்கிறீர்; என் வழிகளெல்லாம் உமக்குத் தெரியும்.***
*4. **என் நாவில் சொல் பிறவாததற்குமுன்னே, இதோ, கர்த்தாவே,***

Notes:

________________________________________________________
________________________________________________________
________________________________________________________

***அதையெல்லாம் நீர் அறிந்திருக்கிறீர்.***
***5. முற்புறத்திலும் பிற்புறத்திலும் நீர் என்னை நெருக்கி, உமது கரத்தை என்மேல் வைக்கிறீர்.***
***6. இந்த அறிவு எனக்கு மிகுந்த ஆச்சரியமும், எனக்கு எட்டாத உயரமுமாயிருக்கிறது.***




கர்த்தர் என்னை குறித்து எல்லாவற்றையும் அறிந்துவைத்திருக்கிறார்.

என் செய்கைகள் எல்லாவற்றையும் அறிந்திருக்கிறார்:

- என் உட்காருதலையும் என் எழுந்திருக்குதலையும் When I sit down and when I get up
- நான் நடந்தாலும் படுத்திருந்தாலும்

*When I go somewhere and when I lie down*

- என் வழிகளெல்லாம் நெருக்கமாக அவர் அறிந்திருக்கிறார்

*He is intimately acquainted with all my ways!*

- என் வார்த்தைகளை அறிந்திருக்கிறார்

*He knows my words*

- என் நாவில் சொல் பிறவாததற்குமுன்னே, அதையெல்லாம் அறிந்திருக்கிறார்

Notes:

__________________________________________________________
__________________________________________________________
__________________________________________________________

*He even knows what I am going to say before I say it*

- என் நினைவுகளைத் தூரத்திலிருந்து அறிகிறீர்.

*He even knows my thoughts from afar*

- முற்புறத்திலும் பிற்புறத்திலும் நீர் என்னை நெருக்கி சூழ்ந்திருக்கிறீர்

*Like a caged bird, He's got me surrounded,*

- உமது கரத்தை என்மேல் வைக்கிறீர்

*With His hand upon me*

- அவருடைய ஊடுருவும் இந்த ஞானத்திலிருந்து நான் தப்பிக்க வழியில்லை

*There is no escape from His thorough, penetrating knowledge.*

ஆகவே தாவீது வியந்து "இந்த அறிவு எனக்கு மிகுந்த ஆச்சரியமும், எனக்கு எட்டாத உயரமுமாயிருக்கிறது"

### எங்கும் வியாபித்திருக்கும் தேவன்

**வ** *7-12, God's Omnipresence*

*7.* **உம்முடைய ஆவிக்கு மறைவாக எங்கே போவேன்? உம்முடைய சமுகத்தைவிட்டு எங்கே ஓடுவேன்?**
*8.* **நான் வானத்திற்கு ஏறினாலும், நீர் அங்கே இருக்கிறீர்; நான் பாதாளத்தில் படுக்கை போட்டாலும், நீர் அங்கேயும் இருக்கிறீர்.**
*9.* **நான் விடியற்காலத்துச் செட்டைகளை எடுத்து, சமுத்திரத்தின் கடையாந்தரங்களிலே போய்த் தங்கினாலும்,**
*10.* **அங்கேயும் உமது கை என்னை நடத்தும், உமது வலதுகரம் என்னைப் பிடிக்கும்.**
*11.* **இருள் என்னை மூடிக்கொள்ளுமென்றாலும், இரவும் என்னைச் சுற்றி வெளிச்சமாயிருக்கும்.**
*12.* **உமக்கு மறைவாக இருளும் அந்தகாரப்படுத்தாது; இரவும் பகலைப்போல வெளிச்சமாயிருக்கும்; உமக்கு இருளும் வெளிச்சமும் சரி.**

Notes:

________________________________________________________
________________________________________________________
________________________________________________________




கர்த்தர் எல்லா இடங்களிலும் நிறைந்திருக்கிறார், பூலோகமானாலும் பாதாளமானாலும் எந்த இடத்திலும் எந்த மூலையிலும் அவரிடமிருந்து மறைந்திருக்கிற இடம் எதுவும் இல்லை என்று தாவீது அறிக்கையிடுகிறான். வானம் மிகுந்த உயரமும் இல்லை, பாதாளம் மிகவும் தாழ்ந்ததும் இல்லை; கர்த்தர் எல்லா இடத்திலும் இருக்கிறார்.

யாராக இருந்தாலும் கர்த்தருடைய பிரசன்னத்திலிருந்து ஓடுவது கூடாத காரியம்.

- ஆதாமும் ஏவாளும் அவருடைய பிரசன்னதிலிருந்து விலகி ஒளிந்துகொள்ள நினைத்தார்கள், ஆனால் அவர்களால் முடியவில்லை. Adam and Eve tried to hide from God, but found they could not do so.
- ஆகான் கொள்ளையில் சிலவற்றை மறைத்துவைத்தான். ஆனால் கர்த்தரிடத்திலிருந்து அவனால் மறைத்துவைக்க முடியவில்லை. *Achan tried to hide stolen goods from God, but found he could not do so.*
- யோனா ஓடினான், ஆனால் கர்த்தரிடத்திலிருந்து அவனால் ஓட கூடாமற்போனது. Jonah tried to run from God, but found he could not do so.
- மேலே சென்றாலும், கீழே சென்றாலும், கிழக்கே சென்றாலும், மேற்கே சென்றாலும், ஆழத்தின் மறைவில் சென்றாலும், அவருடைய பிரசன்னத்திலிருந்து

Notes:

________________________________________________________

________________________________________________________

________________________________________________________

தப்பிக்கவே முடியாது. It is impossible to escape God's presence by going up or down, east or west, or by trying to hide in the cover of the deepest darkness.

- மரணமானாலும், தூரமானாலும், இருளானாலும் தப்பிக்க முடியாது. மரித்தாலும் அவரிடமிருந்து ஓட முடியாது. அவர் கல்லறையின் இருபுறத்திலும் இருக்கிறார். We cannot escape God by death. He is on both sides of the grave.
- கர்த்தரை பின்னுக்கு தள்ளிவிட்டு வேகமாக ஓடக்கூடியவன் யாருமில்லை. No man can run fast enough to leave God behind.
- இருள் மனிதர்களை மனிதர்களிடமிருந்து மறைக்கலாம். ஆனால் இருள் மனிதர்களை தேவனிடமிருந்து மறைக்க முடியாது. Darkness may hide men from men, but it cannot hide men from God.

மனிதன் எந்த இடத்திற்கு ஓடினாலும், கர்த்தர் ஏற்கனவே அங்கு இருக்கிறார்!

### கர்த்தரின் சர்வ வல்லமை

*V 13-18, God's Omnipotence*

*13.* **நீர் என் உள்ளிந்திரியங்களைக் கைக்கொண்டிருக்கிறீர்; என் தாயின் கர்ப்பத்தில் என்னைக் காப்பாற்றினீர்.**
*14.* **நான் பிரமிக்கத்தக்க அதிசயமாய் உண்டாக்கப்பட்டபடியால், உம்மைத் துதிப்பேன்; உமது கிரியைகள் அதிசயமானவைகள், அது என் ஆத்துமாவுக்கு நன்றாய்த் தெரியும்.**
*15.* **நான் ஒளிப்பிடத்திலே உண்டாக்கப்பட்டு, பூமியின் தாழ்விடங்களிலே விசித்திர விநோதமாய் உருவாக்கப்பட்டபோது, என் எலும்புகள் உமக்கு மறைவாயிருக்கவில்லை.**

*16.* **என் கருவை உம்முடைய கண்கள் கண்டது; என் அவயவங்களில் ஒன்றாகிலும் இல்லாதபோதே அவைகள் அனைத்தும், அவைகள் உருவேற்படும் நாட்களும், உமது புஸ்தகத்தில் எழுதியிருந்தது.**
*17.* **தேவனே, உமது ஆலோசனைகள் எனக்கு எத்தனை அருமையானவைகள்; அவைகளின் தொகை எவ்வளவு அதிகம்.**
*18.* **அவைகளை நான் எண்ணப்போனால், மணலைப்பார்க்கிலும் அதிகமாம்; நான் விழிக்கும்போது இன்னும் உம்மண்டையில் இருக்கிறேன்.**

Notes:

__________________________________________________________
__________________________________________________________
__________________________________________________________

கர்த்தருடைய சர்வ ஞானமும் சர்வ வல்லமையும் தாயின் கருவறை வரை செல்கிறது. கரு உருவாகுவதிலிருந்து ஒரு உயிர் வளருவதையும் கர்த்தர் கவனமாகவும் திறமையாகவும் கருவின் இருளிலிருந்து வேலைப்பாடுகள் செய்கிறார். ஒரு மனித உயிரை உருவாக்குவதற்கு தேவனுக்கு மாத்திரமே வல்லமை உண்டு என்று தாவீது ஒப்புக்கொள்கிறார்.

16-வது வசனத்தை இரண்டு வழிகளில் புரிந்துகொள்ளலாம்; சிலர், கர்த்தர் நமது உருவத்தை ஒரு வடிவமைப்பாளரைபோல (architect) நாம் உருவாகும்முன்னே வடிவமைத்தார் என்று கூறுவார்கள்; வேறுசிலர், கர்த்தருக்கு நமது ஆய்சு நாட்கள் நாம் பிறப்பதற்கு முன்னமே தெரியும் என்று கூறுவார்கள்.




கர்த்தர் எப்பொழுதும் நம்மைப்பற்றி சிந்தித்துக் கொண்டிருக்கிறார். நாம் எண்ணிப்பார்க்க முடியாத அளவுக்கு நம்மை குறித்த அவருடைய எண்ணங்கள் எண்ணிலடங்காதவை.

நம்மை குறித்த அவரது நினைவுகள் சுலபமாக மணலிலும் அதிகமானவையாக இருக்கும்.

- நாம் ஒவ்வொரு நாளும் படுக்கைக்கு செல்லும்போது, கர்த்தர் நம்மை குறித்து நினைத்திருக்கிறார் என்ற நிச்சயத்துடன் செல்லலாம். - We can go to bed at night with the assurance that God is thinking about us.

Notes:

________________________________________________________
________________________________________________________
________________________________________________________

- ஒவ்வொரு காலையும் அதே நம்பிக்கையுடன் நாம் எழுந்திருக்கலாம் - We can wake up in the morning with the same assurance.

கர்த்தர் நம்மைகுறித்து சிந்திப்பதையும் அக்கறை கொள்வதையும் நிறுத்துவதே இல்லை

*God never stops thinking about us or being concerned about us*

### கர்த்தரை துதிக்கும் தாவீதின் விசுவாசம்

**வ** *19-24, Davis's loyalty to Praise God*

*19.* **தேவனே, நீர் துன்மார்க்கனை அழித்தீரானால்**
**நலமாயிருக்கும்; இரத்தப்பிரியரே, நீங்கள் என்னைவிட்டு**
**அகன்றுபோங்கள்.**
*20.* **அவர்கள் உம்மைக் குறித்துத் துன்மார்க்கமாய்ப்**
**பேசுகிறார்கள்; உம்முடைய சத்துருக்கள் உமது நாமத்தை வீணாய்**
**வழங்குகிறார்கள்.**
*21.* **கர்த்தாவே, உம்மைப் பகைக்கிறவர்களை நான்**
**பகையாமலும், உமக்கு விரோதமாய் எழும்புகிறவர்களை**
**அருவருக்காமலும் இருப்பேனோ?**
*22.* **முழுப்பகையாய் அவர்களைப் பகைக்கிறேன்; அவர்களை**
**எனக்குப் பகைஞராக எண்ணுகிறேன்.**
*23.* **தேவனே, என்னை ஆராய்ந்து, என் இருதயத்தை**
**அறிந்துகொள்ளும்; என்னைச் சோதித்து, என் சிந்தனைகளை**
**அறிந்துகொள்ளும்.**
*24.* **வேதனை உண்டாக்கும் வழி என்னிடத்தில் உண்டோ என்று**
**பார்த்து நித்திய வழியிலே என்னை நடத்தும்.**

கர்த்தரை குறித்து ஆச்சரியப்படுவதையும் வணங்குவதையும் கடந்து திடீரென ஆழ்ந்த ஜெபத்திற்குள் இந்த சங்கீதம் செல்கிறது. துன்மார்க்கருக்கும் இரத்தப்பிரியருக்கும் எதிரான ஜெபம்.

இவர்கள் தாவீதுக்கு எதிராக இருக்கிறார்கள் என்பதற்காக அவர் ஜெபிக்கவில்லை. அவர்கள் தேவனுக்கு விரோதமாக இருக்கிறார்கள் என்பதற்காகவே தாவீது ஜெபிக்கிறார். கர்த்தருக்கு விரோதமாக அவர்கள் துன்மார்க்கம் பேசுகிறார்கள். கர்த்தரை குறித்து ஆச்சரியப்பட்டு அவரை வணங்கும்போது, கர்த்தருடைய கனத்தினிமித்தம் தாவீது வைராக்கியம் கொள்கிறார்.

Notes:

________________________________________________________
________________________________________________________
________________________________________________________

*தாவீது தன்னை கர்த்தருடைய பட்சத்தில் வைத்துக்கொண்டு, கர்த்தருக்கு விரோதமாய் இருப்பவர்களை தனக்கும் விரோதியாக தாவீது எண்ணுகிறார். "முழுப்பகையாய் அவர்களைப் பகைக்கிறேன்; அவர்களை எனக்குப் பகைஞராக எண்ணுகிறேன்" என்று தாவீது பெருமையாக கூறுகிறார்.*

*கர்த்தருடைய பண்புகளை குறித்த இறையியல் கருத்துக்களை தாவீது புரிந்துகொண்டு, அவற்றை தான் சீஷனாக மாறுவதற்கு பயன்படுத்துகிறார். கர்த்தருடைய குணங்களும் பண்புகளும் இறையியல் கருத்து மாத்திரமல்ல, தாவீதுக்கு அவை ஆவிக்குரிய வாழ்வில் முன்னேறுவதற்கான வழிகாட்டியாக இருக்கிறது.*

*தனது உள்ளத்தின் ஆழத்தை தானே அறிந்துகொள்ள முடியாது என்று தாவீது அறிந்திருந்தபடியால், அவர் கர்த்தரை அறிந்துகொள்ளும்படி கேட்கிறார்.*

*தனது ஆத்துமாவை தேவனுக்கு முன்பாக பட்டவர்த்தனமாக (வெளிப்படையாக) தாவீது திறந்துவைக்கிறார். தனது ஆத்துமாவில் தான் அறியாத பாவங்கள் இருக்கின்றனவா என்று கர்த்தரை ஆராயும்படி கேட்கிறார். தாவீது தன் வாழ்வில் எவ்வளவாய் பரிசுத்தத்தை நாடுகிறார் என்பது புரிகிறது. அதோடு, அறியாத பாவங்கள் இருக்குமோ என்று ஆராய்வதில் உள்ள தாழ்மையும் நமக்கு புரிகிறது.*

*தாவீது இந்த சங்கீதத்தை மகத்துவமான வார்த்தைகால் முடிக்கிறார். தனது இலக்கு நித்திய வாழ்வு என்று தாவீது அறிக்கையிடுகிறார். தேவனின் சர்வ ஞானமும் தொடர்ச்சியான பிரசன்னமும் தன்னை அந்த நித்திய வாழ்வுக்கு அழைத்து செல்லும் என்று தாவீது நம்புகிறார்.*

## முடிவுரை

*Conclusion:*

*பெரும் போரை வென்று இராஜாவாக அமர்த்தப்படுவது எவ்வளவு இன்பமான காரியம், ஆனாலும் தாவீதின் கவனம் தன்னை ராஜாவாக ஆக்கின ஆண்டவரை விட்டு அகலவில்லை.*

*தனது இராஜ பதவியின்மேல் தாவீது பிரமிக்கவில்லை ஆனால் தேவனை குறித்து பிரமிக்கிறார்.*

Notes:

__________________________________________________________
__________________________________________________________
__________________________________________________________

*தனது வெற்றியை குறித்தோ, தன பதவியை குறித்தோ தாவீது பெருமைபாராட்டவில்லை ஆனால் தேவனையே மகிமைப்படுத்துகிறார்.*

## செயல்படுத்துதல்

*Application:*

*கர்த்தர் சகல வியாபி என்பதை உணரும்போது நாம் பரிசுத்த வாழ்க்கை வாழ உந்தப்படுகிறோம். கர்த்தர் நம்மை கவனிக்கிறார் என்கிற எண்ணம் நமது செயல்பாடுகள் அவருடைய வார்த்தையின்படி இருக்கும்படி நாம் அறிந்திருக்கிறோம். "***உங்கள் செய்கைகள் கர்த்தருடைய பார்வையில் எப்படி இருக்கிறது***?"*

*கர்த்தர் நம்முடைய வார்த்தைகளை நாம் பேசுவதற்கு முன்னமே அறிந்திருக்கிறார் என்று ஞானம், நாம் பேசும்முன்னர் சற்று கவனம் செலுத்த நம்மை வற்புறுத்தும்.* **உங்கள் நாவு எப்படி இருக்கிறது***?*

*கர்த்தர் நம்மைகுறித்து எல்லாவற்றையும் அறிந்திருக்கிறார் என்று நாம் அறியும்போது பாவத்தைக்குறித்து நமது சிந்தையை அது மாற்ற வேண்டும். கிரேக்க மற்றும் ரோம விளையாட்டு வீரர்கள் பிறர் அவர்களை பார்வையிடுகிறார்கள் என்கிற எண்ணத்துடனே தான் அவர்களுக்கு ஓடுவதற்கும் மல்யுத்தத்திற்கும் பயிற்சி கொடுப்பார்கள். நாமும் நமது ஓட்டத்தில் கர்த்தர் நம்மை காண்கிறார் என்கிற நம்பிக்கையில் ஓட வேண்டும்.*

*Knowing that God knows everything about us should have an impact on our attitude toward sin. The athletes of Greece and Rome were inspired to run and wrestle by the knowledge that a vast assembly of spectators surrounded them. We too, should be inspired to run with confidence the course set before us by the knowledge that God is watching us.*

*கர்த்தருடைய பிரசன்னத்தை விட்டு எந்த மனிதனும் எங்கும் ஓட முடியாது. அவர் நேற்றும் இன்றும் நாளையும் இருக்கிறார். பாவிகள் அவருடைய பிரசன்னத்தை விட்டு ஓடும்போது, விசுவாசிகள் அவருடைய பிரசன்னத்தில் ஆறுதல்*

Notes:

__________________________________________________________
__________________________________________________________
__________________________________________________________

*அடைகிறார்கள். கர்த்தர் எங்கும் நிறைந்திருப்பது நாம் பரிசுத்த வாழ்க்கை வாழ தூண்டுகிறது. மனிதன் செய்யும் அனைத்தும், நன்மையையும் தீமையும் அவருடைய பிரசன்னத்தில் தான் நடைபெறுகிறது.* **இந்த ஒரு விழிப்புணர்வோடு நாம் வாழ்கிறோமா***?*

*There is absolutely no place where men can go to escape the presence of God. He inhabits yesterday, today, and tomorrow. While sinners try to escape God's presence, believers take comfort in His presence. God's omnipresence should also motivate us to live holy lives. Everything that men do, good and evil alike, is done in the presence of God. Are you living with that awareness?*

*கர்த்தரை குறித்த எண்ணங்களால் தங்கள் நினைவுகளை நிரப்புபவார்கள் கீழான அவசியமில்லாத காரியங்களை குறித்த எண்ணம் ஏற்படாது. பவுல் கூறுவதுபோல் "பூமியிலுள்ளவைகளையல்ல, மேலானவைகளையே நாடுங்கள்." (கொலோசெயர் 3:2). நாம் கர்த்தரிடம் தனியாக தியானிப்பதற்கும் அவருடைய வார்த்தையை படிப்பதற்கும் அமைதியான நேரம் ஒதுக்க வேண்டும். நடைமுறையில் நீங்கள் அப்படி நேரம் ஒதுக்குவதற்கு செய்யக்கூடிய காரியங்கள் என்ன?*

*Men who fill their minds with thoughts about God do not have room for lesser or petty thoughts. Paul wrote, "Set your mind on the things above, not on the things that are on earth" (Colossians 3:2). We should set aside time to be alone with God in quiet meditation or in the study of His Word. What are the practical steps you can take?*

*நாம் தேவன் விரும்புகிற காரியங்களையே விரும்ப வேண்டும். அதேபோல், தேவன் வெறுக்கிற காரியங்களை நாமும் வெறுக்க வேண்டும். கர்த்தர் வெறுக்கிற காரியங்களை நாம் விரும்பினால், நமது வாழ்வில் பிரச்சனைகள் வரும். கர்த்தர் விரும்புவதை நாம் வெறுத்தால் அதுவும் பிரச்சனைகள் கொண்டு வரும். யாக்கோபு எழுதுகிறார் "விபசாரரே, விபசாரிகளே, உலக சிநேகம் தேவனுக்கு விரோதமான பகையென்று அறியீர்கள்ளா? ஆகையால் உலகத்துக்குச் சிநேகிதனாயிருக்க விரும்புகிறவன் தேவனுக்குப் பகைஞனாகிறான்." (***யாக்கோபு *4:4*).*

Notes:

______________________________________________________
______________________________________________________
______________________________________________________

*We should love the things that God loves. We should, however, also hate the things God hates. When we love things that God hates, we will have problems in our lives. When we hate things that God loves, we will also have problems in our lives. James wrote, "You adulteresses, do you not know that friendship with the world is hostility toward God? Therefore whoever wishes to be a friend of the world makes himself an enemy of God" (James 4:4).*

தேவனோடு நாம் நடப்பதற்கு விரோதமாக / தடையாக வரக்கூடிய எந்த ஒரு காரியத்தையும் நாம் பொறுத்துக்கொள்ளக்கூடாது. தேவன் வெறுக்கிற பல "சிறிய" காரியங்களை பொறுத்துக்கொள்வது மனிதனுக்கு மரணத்தை வருவிக்கிறது. இந்த காரியங்களை அனுமதிக்கிறவன் உள்ளிருந்து வெளிப்புறமாக (inside out) நிர்மூலமாவான். நம்மை கர்த்தர் ஆராய்ந்து அறிவதற்கு நாம் அவருக்கு அனுமதி அளிக்க வேண்டும். அதோடு அவருக்கு பிரியமில்லாத காரியங்களை தூக்கி எறியவும் நாம் ஆயத்தமாக இருக்க வேண்டும்.

*We should not tolerate anything in our lives that hinders or impairs our walk with God. Tolerating many "little" things that are displeasing to God can easily destroy men. Men who allow such things in their lives will be destroyed from the inside out. We must give God permission to search us daily and be willing to remove anything that can impede our walk with Him.*

இதுவே நமது ஜெபமாக இருக்கட்டும்.

*Let this be our prayer,*

*23. தேவனே, என்னை ஆராய்ந்து, என் இருதயத்தை அறிந்துகொள்ளும்; என்னைச் சோதித்து, என் சிந்தனைகளை அறிந்துகொள்ளும்.*

*24. வேதனை உண்டாக்கும் வழி என்னிடத்தில் உண்டோ என்று பார்த்து நித்திய வழியிலே என்னை நடத்தும்.*

Notes:

____________________________________________________
____________________________________________________
____________________________________________________

Notes:

______________________________________________________________

______________________________________________________________

______________________________________________________________

# *16.* செழிப்பு + மனநிறைவு + சோம்பல் = பாவம்

*Prosperity + Complacency+ Lethargy = Sin*

*சங்கீதம்* 51

**சூழல்***: ஏத்தியனாகிய உரியாவையும் பத்சேபாளையும் குறித்து தீர்க்கதரிசி நாத்தான் தாவீதை எதிர்கொண்ட போது.*

வேத பகுதி: 2 *சாமுவேல்* 11 & 12

*சங்கீதம்* 51

*தாவீது பத்சேபாளிடம் விபச்சாரம் செய்து அவள் கணவன் உரியாவை கொன்றபோது நாத்தான் தாவீதை எதிர்கொண்டு தாவீது எழுதின சங்கீதம் (*2 *சாமுவேல்* 11:1- 12:15*).*

*பாவத்தை அறிக்கையிடுகிற சங்கீதங்களில் (சங்கீதம் 6, 38, 130) சிறந்த சங்கீதம் இது; இந்த சங்கீதத்தில் தன் பாவத்தை அறிக்கையிட்டு பாவ மன்னிப்புக்கென்று ஜெபிக்கிற சங்கீதம். "பாவங்களை அறிக்கையிடுகிற கலை"-யை இந்த சங்கீதத்திலிருந்து நாம் கற்றுக்கொள்ளலாம்; நமது பாவங்களை நாம் அறிக்கையிட அது உதவியாக இருக்கும்* (1 **யோவான்** 1:9).

*கர்த்தர் தம்மை மன்னிக்கும்படி தாவீது வேண்டுதல் செய்து இந்த சங்கீதத்தை ஆரம்பிக்கிறார். தேவனுடைய கிருபையையும் இரக்கத்தையும் முன்னிட்டு இந்த வேண்டுதலை முன்வைக்கிறார்.*

*தான் செய்த நன்மையான காரியங்களின் நிமித்தம் தேவனிடம் மன்னிப்பை எதிர்பார்க்காமல், கர்த்தருடைய அளவற்ற இரக்கத்தை நம்பியே மன்னிப்பு கேட்கிறார். மன்னிப்பது மாத்திரமல்ல, தன்னை கழுவும்படியும் தேவனை நோக்கி கேட்கிறார். தன்னை கழுவி இரட்சிப்பின் சந்தோசத்தை மீண்டும் நிலைநிறுத்தும்படி வேண்டுகிறார்.*

*பாவிகள் தேவனிடத்தில் திரும்பலாம் என்று நம்பிக்கையை கற்றுக்கொடுக்கிற சங்கீதம். தாவீது வாக்களிக்கிற விஷயம், கர்த்தருடைய நீதியை குறித்து பாடும்போது கர்த்தர் அதில் மகிழ்ச்சியடைகிறார். கர்த்தர் அதில் மகிழ்ச்சியடைகிறது*

Notes:

__________________________________________________________
__________________________________________________________
__________________________________________________________

மாத்திரமல்ல, உடைந்து வருந்துகிற ஜனங்களின் இதயங்களிலிருந்து வரும் துதிகள் கர்த்தருடைய இதயத்தை ஸ்தோத்தரிக்கின்றன.

சங்கீதத்தை முடிக்கும்போது கர்த்தர் சீயோனிற்கும் எருசலேமிற்கும் நன்மை செய்யும்படி தாவீது வேண்டி இந்த சங்கீதத்தை நிறைவுசெய்கிறார். தேவனை பிரியப்படுத்தும்படி கர்த்தருடைய பலிபீடத்தில் தகனபலி கொடுப்பதாக தாவீது உறுதியளிக்கிறார்.

தாவீது தனக்காக ஜெபிக்கும்போதும் கர்த்தருடைய வாஞ்சையை குறித்து ஜெபிக்க மறப்பதில்லை!!

*David never forgets to pray for God's interest while he was praying for his!!*

### வேண்டுதல்

**வ** *1-6, Plea*

*1.* **தேவனே, உமது கிருபையின்படி எனக்கு இரங்கும், உமது மிகுந்த இரக்கங்களின்படி என் மீறுதல்கள் நீங்க என்னைச் சுத்திகரியும்.**
*2.* **என் அக்கிரமம் நீங்க என்னை முற்றிலும் கழுவி, என் பாவமற என்னைச் சுத்திகரியும்.**
*3.* **என் மீறுதல்களை நான் அறிந்திருக்கிறேன்; என் பாவம் எப்பொழுதும் எனக்கு முன்பாக நிற்கிறது.**
*4.* **தேவரீர் ஒருவருக்கே விரோதமாக நான் பாவஞ்செய்து, உமது கண்களுக்கு முன்பாகப் பொல்லாங்கானதை நடப்பித்தேன்; நீர் பேசும்போது உம்முடைய நீதி விளங்கவும், நீர் நியாயந்தீர்க்கும்போது உம்முடைய பரிசுத்தம் விளங்கவும் இதை அறிக்கையிடுகிறேன்.**
*5.* **இதோ, நான் துர்க்குணத்தில் உருவானேன்; என் தாய் என்னைப் பாவத்தில் கர்ப்பந்தரித்தாள்.**
*6.* **இதோ, உள்ளத்தில் உண்மையிருக்க விரும்புகிறீர்; அந்தக்கரணத்தில் ஞானத்தை எனக்குத் தெரியப்படுத்துவீர்.**

- கர்த்தருடைய கிருபையின்படி இரக்கம் - *Mercy according to God's loving kindness*
- கர்த்தருடைய அளவற்ற இரக்கத்தின்படி மன்னிப்பு - *Forgives according to God's tender mercies*

Notes:

____________________________________________________________
____________________________________________________________
____________________________________________________________

- தனது பாவத்திலிருந்து கழுவி சுத்தம் செய்ய வேண்டுதல் - *Washing him and cleansing him from his sins*

### பாவ அறிக்கை

*Confession:*

- தேவன் முன் தமது பாவத்தை ஒப்புக்கொள்கிறான் - *Admission of his sins before him*
- தேவனுக்கு எதிராக பாவம் - *Sin against God*
- தேவன் நீதியும் குற்றமற்றவருமானவர் - *God is just and blameless*

### ஒப்புக்கொள்ளுதல்

*Acknowledging:*

- தான் பாவமுள்ளவன் - *He is sinful*
- தான் பாவத்தில் பிறந்தவன் - *He was born in sin*
- தேவன் தன்னில் உண்மையை எதிர்பார்க்கிறார் - *God wants truth in him*

### ஜெபம்

**வ** *7-11, Prayer*

*7.* **நீர் என்னை ஈசோப்பினால் சுத்திகரியும், அப்பொழுது நான் சுத்தமாவேன்; என்னைக் கழுவியருளும், அப்பொழுது நான் உறைந்த மழையிலும் வெண்மையாவேன்.**
*8.* **நான் சந்தோஷமும் மகிழ்ச்சியும் கேட்கும்படி செய்யும், அப்பொழுது நீர் நொறுக்கின எலும்புகள் களிகூரும்.**
*9.* **என் பாவங்களைப் பாராதபடிக்கு நீர் உமது முகத்தை மறைத்து, என் அக்கிரமங்களையெல்லாம் நீக்கியருளும்.**
*10.* **தேவனே, சுத்த இருதயத்தை என்னிலே சிருஷ்டியும், நிலைவரமான ஆவியை என் உள்ளத்திலே புதுப்பியும்.**
*11.* **உமது சமுகத்தை விட்டு என்னைத் தள்ளாமலும், உமது பரிசுத்த ஆவியை என்னிடத்திலிருந்து எடுத்துக்கொள்ளாமலும் இரும்.**

- மன்னிப்பு வேண்டி - *For forgives*
- ஈசோப்பினால் சுத்திகரிக்க வேண்டி *Hyssop to purge him*

Notes:

________________________________________________________
________________________________________________________
________________________________________________________

- பணியிலும் வெண்மையாய் கழுவும்படி - *Wash him to be whiter than snow*
- தன் முகத்தை பாவத்திற்கு மறைக்கும்படி - *Hide his face from sins*
- அக்கிரமங்களையெல்லாம் நீக்கியருளும் - *Blot out all his iniquities*
- சந்தோஷமும் மகிழ்ச்சியும் திரும்பும்படி - *Restoration of joy and gladness*
- சுத்த இருதயத்தை சிருஷ்டியும் - *Create in him a clean heart*
- நிலைவரமான ஆவியை உள்ளத்திலே புதுப்பியும் - *Renew steadfast spirit*
- சமுகத்தை விட்டு தள்ளாதிரும் - *Not to cast him from his presence*
- உமது பரிசுத்த ஆவியை என்னிடத்திலிருந்து எடுத்துக்கொள்ளாமலும் இரும் - *Not to take away the Holy Spirit in him*
- இரட்சிப்பின் சந்தோஷத்தை திரும்பச்செய்யும் - *Restore the joy of salvation*
- உற்சாகமான ஆவி தாங்கும்படி செய்யும் - *Uphold him in generous spirit*

## வாக்குறுதி

*V 12-13, Promise*

*12.* **உமது இரட்சணியத்தின் சந்தோஷத்தைத் திரும்பவும் எனக்குத் தந்து, உற்சாகமான ஆவி என்னைத் தாங்கும்படி செய்யும்.**
*13.* **அப்பொழுது பாதகருக்கு உமது வழிகளை உபதேசிப்பேன்; பாவிகள் உம்மிடத்தில் மனந்திரும்புவார்கள்.**

- பாதகருக்கு உமது வழிகளை உபதேசிப்பேன் - *He will teach sinners the way of God*
- பாவிகள் தேவனிடத்தில் மனந்திரும்புவார்கள் - Sinners will be converted to God

Notes:

________________________________________________________
________________________________________________________
________________________________________________________

## துதி

**வ** *14-17, Praise*

*14.* **தேவனே, என்னை இரட்சிக்குந் தேவனே,**
**இரத்தப்பழிகளுக்கு என்னை நீங்கலாக்கிவிடும்; அப்பொழுது என் நாவு உம்முடைய நீதியைக் கெம்பீரமாய்ப் பாடும்.**
*15.* **ஆண்டவரே, என் உதடுகளைத் திறந்தருளும்; அப்பொழுது என் வாய் உம்முடைய புகழை அறிவிக்கும்.**
*16.* **பலியை நீர் விரும்புகிறதில்லை, விரும்பினால்**
**செலுத்துவேன்; தகனபலியும் உமக்குப் பிரியமானதல்ல.**
*17.* **தேவனுக்கேற்கும் பலிகள் நொறுங்குண்ட ஆவிதான்;**
**தேவனே, நொறுங்குண்டதும் நருங்குண்டதுமான இருதயத்தை நீர் புறக்கணியீர்.**

- உம்முடைய நீதியைக் கெம்பீரமாய்ப் பாடுவேன் - *Will sing aloud the God's righteousness*
- வாய் உம்முடைய துதியால் நிரம்பும் - *His mouth will be filled with praise*
- தேவன் விரும்புகிற காரியத்தை தாவீது அறிந்திருந்தான் - He knows what delights God
- பலியை நீர் விரும்புகிறதில்லை ஆனால் நொறுங்குண்ட ஆவியை விரும்புகிறீர் - Not the offerings but a broken heart




Notes:

______________________________________________________________
______________________________________________________________
______________________________________________________________

## சீயோனுக்கும் எருசலேமுக்கும் ஜெபம்

**வ** *18-19, Prayer for Zion and Jerusalem*

*18. **சீயோனுக்கு உமது பிரியத்தின்படி நன்மைசெய்யும்;***
***எருசலேமின் மதில்களைக் கட்டுவீராக.***
*19. **அப்பொழுது தகனபலியும் சர்வாங்க தகனபலியுமாகிய***
***நீதியின்பலிகளில் பிரியப்படுவீர்; அப்பொழுது உமது***
***பீடத்தின்மேல் காளைகளைப் பலியிடுவார்கள்.***

- சீயோனுக்கு தேவன் தமது பிரியத்தின்படி நன்மைசெய்வார் - God will do His good pleasure on Zion
- எருசலேமின் மதில்களைக் கட்டுவார் - *God will build the walls of Jerusalem*
- நீதியின் பலிகளில் பிரியப்படுவார் - *God will be pleased with sacrifice of Righteousness*
- தகனபலியும் சர்வாங்க தகனபலியையும் விரும்புகிறீர் - *God will be pleased with sacrifice of burnt offerings*

## செயல்படுத்துதல்

*Application*

கர்த்தருடைய இருதயத்திற்கு எற்றவனாகிய தாவீதின் தேவனை குறித்தும் பாவத்தை குறித்தும் என்ன நிலைப்பாடு கொண்டிருந்தான்?

தாவீது இராஜாவாக இருக்கிறான். நாத்தான் தாவீதை கண்டிக்கிறார். தாவீது தனிமையில் நாத்தானிடமும் தேவனிடமும் ஒப்புரவாக்கிக்கொள்ள முடியும்.

ஆனால் தாவீது அந்த பாவத்தை குறித்து ஒரு பாடல் இயற்றி அதை இராகத்தலைவனுக்கு (choir master) கொடுத்து சபையை பாடச்சொல்கிறான்.

நீங்கள் அதை செய்வீர்களா?

நீங்கள் இராஜா அல்ல.

நீங்கள் எந்த ஒரு பெரிய பதவியும் வகிக்கவில்லை.

Notes:

___________________________________________________________
___________________________________________________________
___________________________________________________________

ஆனாலும் நாம் அதை செய்ய தயங்குவோம், ஆனால் தாவீது அப்படியல்ல.

கர்த்தருடைய பரிசுத்த ஆவியானவர் விசுவாசிகளை எப்பொழுதும் விட்டு விலகுவதில்லை.

*God's Holy Spirit will never leave believers*

ஒரு விசுவாசி பரிசுத்த ஆவியினால் ஞானஸ்நானம் பெற்ற பிறகு (அப் 1:5; 11:16; 1 கொரி 12:13), பரிசுத்த ஆவியானவர் அவர்களுக்குள் வாசம் செய்கிறார் (ரோமர் 5:5; 8:9, 11; 1 கொரி 2:12; 6:19-20; 12:13; கலா 4:6; 1 John 3:24; 4:13). இதை மாற்றக்கூடிய காரியம் இல்லைவே இல்லை, இது நிரந்தரமானது. அதாவது பரிசுத்த ஆவியானவரை உங்கள் இருதயத்திலிருந்து எடுத்துப்போட யாராலும் முடியாது.

விசுவாசிகள் பரிசுத்த ஆவியின் முத்திரையை (sealed) பெற்றிருக்கிறார்கள் (2 கொரி 1:22; எபேசியர் 1:13; 4:30). இந்த முத்திரை:

- நம்முடைய இரட்சிப்பிற்கு உத்தரவாதமளித்து (guarantees),
- பரிசுத்த ஆவியானவரின் ஞானஸ்நானம்பண்ணி - Holy Spirit's baptizing work
- பரிசுத்த ஆவியானவர் விசுவாசிகளுக்குள் வாசம் செய்வது நிரந்தரமானது - current indwelling in believers is permanent

ஆகிய மூன்று காரியங்களுக்கும் உத்தரவாதமாக இருக்கிறது.

*Believers have been "sealed" by the Holy Spirit (2 Corinthians 1:22; Ephesians 11:13; 4:30). This seal guarantees their salvation and attests that the Holy Spirit's baptizing work and current indwelling in believers is permanent.*

Notes:

________________________________________________________
________________________________________________________
________________________________________________________

## தேவனுடைய தவறாத அன்பு

*God's love is unfailing*

விசுவாசிகளின்மேல் தேவன் கொண்டுள்ள அன்பு நிரந்தரமானது, பொய்க்காது *(*God's love for them is unfailing*)* என்று இந்த சங்கீதம் நமக்கு கற்றுத்தருகிறது.

"தேவனே, உமது கிருபையின்படி எனக்கு இரங்கும், உமது மிகுந்த இரக்கங்களின்படி என் மீறுதல்கள் நீங்க என்னைச் சுத்திகரியும். என் அக்கிரமம் நீங்க என்னை முற்றிலும் கழுவி, என் பாவமற என்னைச் சுத்திகரியும்." என்று எழுதுகிறார்.

இந்த வசனத்தில் கிருபை என்று மொழி பெயர்க்கப்பட்டதன் மூல எபிரேய வார்த்தை "חֶסֶד 'checed' ஹெசெட்" என்பதாகும். அதன் பொருள்:

- அன்பு – love
- விசுவாசமான அன்பு - loyal love,
- நன்றியுள்ள அன்பு - *faithful love,*
- தவறாத / பொய்க்காத அன்பு - unfailing kindness.

*The Hebrew word used here is* חֶסֶד *'checed' which can mean "love, loyal love, faithful love, unfailing kindness."*

கர்த்தருக்கு கீழ்படிவதே அவர் விரும்பும் காரியம் (நாம் செய்ய வேண்டியதும் இதுவே)

*Obedience to God is what God wants (We Should)*

தேவனுடைய வழிகள் பாதகருடைய வழிகளுக்கு முற்றிலும் மாறுபாடானது (வ 13)

*God's ways are contrary to the ways of rebels (V13).*

கர்த்தர் பலிகளையும் தகன பலிகளையும் விரும்புகிறதில்லை; நொறுங்குண்ட ஆவி நருங்குண்டதும் மனதிரும்புகிறதுமான இருதயத்தையே விரும்புகிறார் (வ17).

*God does not want a sacrifice or burnt offering; he wants a broken spirit, a broken heart, and a repentant heart (V17).*

Notes:

____________________________________________________________
____________________________________________________________
____________________________________________________________

*உண்மையான இருதயத்தோடு செலுத்தும் பலிகளையே கர்த்தர் விரும்புகிறார் (வ 19).*

*தம்முடைய விசுவாசிகள் கீழ்படிந்தவர்களாக இருக்கவேண்டும் என்று அவர் விரும்புகிறார். விசுவாசிகள் பாவம் செய்யவதை அவர் விரும்புகிறதில்லை. உத்தமமாய் தம்மீது அன்பு செலுத்தி தம்மை பின்பற்றுகிறவர்களை கர்த்தர் விரும்புகிறார்.*

*God wants believers to be obedient to him. He does not want believers sinning. He wants loyal and loving followers of him.*

*கர்த்தர் மன்னிப்பதற்கும் நம்மை சீரமைப்பதற்கும் வல்லமை உள்ளவர்*

*God Has Power to Forgive and Restore*

*சங்கீதம் 51:12-வது வசனம் "திரும்ப தாரும்' (*restore*) என்று வலிமையான வார்த்தையோடு தொடங்குகிறது. தேவன் தன்னுடைய இரட்சிப்பின் சந்தோஷத்தை திரும்பத்தரும்படி தாவீது வேண்டுகிறார் (வ* 12*). பத்சேபாளிடம் தான் செய்த பாவத்தை நாத்தான் கூறுகையில், தான் இத்தனை நாட்கள் உழைத்து பெற்ற யாவையும் இழந்துவிடுவோம் என்ற பயம் தாவீதை சூழ்ந்தது. ஏனெனில், இந்த பாவத்தின் நிமித்தம் தாவீது எல்லாவற்றையும் இழக்க நேரிடும்.*

*இந்த பாவத்தின் நிமித்தம் தாவீதின் வீட்டில் தீய காரியங்கள் நடைபெற்றது, தாமாரின் பிரச்சனை -* rape of Tamar *(2 சாமு 13), அப்சலோமின் கிளர்ச்சி -* Absalom's rebellion *(2 சாமு* 15*) இன்னும் பல. ஆயினும் தேவன் தாவீதை சீரமைத்து அவனது சிங்காசனத்தில் மீண்டும் அமரச்செய்தார்.*




Notes:

_______________________________________________________________

_______________________________________________________________

_______________________________________________________________

Notes:

_________________________________________________________________
_________________________________________________________________
_________________________________________________________________

# *17.* பாவ மன்னிப்பும் நாம் கற்றுக்கொள்வதும்

*Forgiveness of Sin and the reflections*

**சங்கீதம் 32**

**சூழல்:**

பத்சேபாளிடம் செய்த பாவத்தை நினைத்துப்பார்த்து , கர்த்தருடைய அளவற்ற இரக்கத்தை எண்ணி தாவீது துதித்து இந்த சங்கீதத்தை இயற்றினார்.

வேத பகுதி: 2 சாமுவேல் 11&12

தாவீது கர்த்தரிடம் பாவ மன்னிப்பு வேண்டி சங்கீதம் 51ல் ஜெபிக்கும்போது, கர்த்தருடைய வழிகளை பாவிகளுக்கு கற்றுக்கொடுப்பதாக தாவீது வாக்களிக்கிறார்.

**ரோமர்** *4:6-8,*

*6. அந்தப்படி, கிரியைகளில்லாமல் தேவனாலே நீதிமானென்றெண்ணப்படுகிற மனுஷனுடைய பாக்கியத்தைக் காண்பிக்கும் பொருட்டு; 7. எவர்களுடைய அக்கிரமங்கள் மன்னிக்கப்பட்டதோ, எவர்களுடைய பாவங்கள் மூடப்பட்டதோ, அவர்கள் பாக்கியவான்கள்.*
*8. எவனுடைய பாவத்தைக்* ***கர்த்தர்*** *எண்ணாதிருக்கிறாரோ, அவன் பாக்கியவான் என்று தாவீது சொல்லியிருக்கிறான்.*

இந்த சங்கீதம் நன்னடத்தையை கற்பிக்கிற சங்கீதமாக இருக்கிறது.

*This psalm is moral and instructive Psalm.*

ஒருவனுடைய பாவம் மன்னிக்கப்படும்போது, அந்த மன்னிப்பின் மனமகிழ்ச்சியை வெளிப்படுத்துவது என்ன அருமையான வார்த்தைள் பாருங்கள்! தன்னுடைய சரீர அழுத்தத்தையும் மன அழுத்தத்தையும் தாவீது வெளிப்படுத்துகிறார். இதில் பாதி அழுத்தம் பாவத்தின் குற்ற உணர்வினால் (guilt of sin) வந்தவை, அதோடு கர்த்தருடைய சிட்சிக்கும் கரத்தை (chastening hand) பற்றியும் கூறுகிறார்.

Notes:

__________________________________________________________
__________________________________________________________
__________________________________________________________

*தாவீது தன்னுடைய பாவத்தை அறிக்கையிட்டு தேவன் அதை மன்னித்தவுடன், கர்த்தரை ஸ்தோத்தரித்து தன் ஆபத்தில் தனக்கு பாதுகாப்பு என்று கர்த்தரை போற்றுகிறார்.*

*தங்களுடைய வாழ்வில் ஒவ்வொருவரும் எந்த வழியில் செல்ல வேண்டும் என்று கூறி தாவீது இந்த சங்கீதத்தை நிறைவு செய்கிறார். ஒருவன் குதிரையை போலவும் கோவேறு கழுதையைப்போலவும் மந்தமான அறிவோடு இருக்கக்கூடாது என்று எச்சரிக்கிறார். (*But with a clear caution that they shouldn't be like a mule or a horse which lacks understanding.*). துன்மார்க்கர் படும் துன்பங்களையும் கர்த்தர்மேல் நம்பிக்கைவைக்கிறவர்களை சூழ்ந்திருக்கும் இரக்கத்தையும் சுட்டிக்காட்டி இரண்டிற்கும் உள்ள வித்தியாசங்களை கோடிட்டு காட்டுகிறார். இதினிமித்தம் நீதிமான்கள் கர்த்தருக்குள் மகிழ்ச்சியடைவார்கள், இருதயத்தில் சுத்தமுள்ளவர்கள் ஆனந்த சத்தமிடுவார்கள்.*

### பாவ மன்னிப்பின் மகிழ்ச்சி

**வ** *1-2, The Joy of forgiveness*

***1. எவனுடைய மீறுதல் மன்னிக்கப்பட்டதோ, எவனுடைய பாவம் மூடப்பட்டதோ, அவன் பாக்கியவான்.***

***2. எவனுடைய அக்கிரமத்தைக் கர்த்தர் எண்ணாதிருக்கிறாரோ, எவனுடைய ஆவியில் கபடமில்லாதிருக்கிறதோ, அவன் பாக்கியவான்.***

*பாக்கியவான்:*

*Blessed is a person when*

- *மீறுதல் மூடப்பட்டவன் -Whose transgression is forgiven*
- *பாவம் மன்னிக்கப்பட்டவன்* - Whose sin is covered
- *எவனுடைய அக்கிரமத்தைக் **கர்த்தர்** எண்ணாதிருக்கிறாரோ* - Whose iniquity Lord does not impute them

Notes:

__________________________________________________________
__________________________________________________________
__________________________________________________________

- ➢ **மீறுதல்** – அதிகாரத்தை எதிர்த்து எல்லையை கடந்துபோவது
- ➢ **பாவம்** – வீழ்ச்சி, தன் இருக்க வேண்டிய நிலையிலிருந்து தவறுதல்
- ➢ **அக்கிரமம்** – கோணலான சிதைந்த வழிகள்

- ***Transgression*** *is crossing a line, defying authority*
- ***Sin*** *is falling short of or missing a mark*
- ***Iniquity*** *is of crookedness and distortion*

எப்போது ஒருவன் தனக்கு பாவமில்லை என்று சொல்லலாம்:

*Guiltless is a person when*

- ➢ பாவங்கள் மன்னிக்கப்பட்டவன் - Whose sin is forgiven
- ➢ கபடமில்லாதவனுடைய ஆவி - *Whose spirit is no deceit*

மன்னிப்பு – கடனையோ பாரத்தையோ எடுத்துப்போடுதல்

மூடப்படுதல் – பலியாகிய இரத்தத்தினால் பாவம் மூடப்படுதல்

எண்ணாதிருத்தல் – குறித்துவைக்காதிருத்தல்

*Forgiven is the lifting of a burden or a debt*

*Covered is that of sacrificial blood covering sin*

*Does not impute is bookkeeping; it does not count against*

அமைதியின் சாபம்

**வ** *3-4, The curse of silence*

*3.* **நான் அடக்கிவைத்தமட்டும், நித்தம் என் கதறுதலினாலே என் எலும்புகள் உலர்ந்துபோயிற்று.**
*4.* **இரவும் பகலும் என்மேல் உம்முடைய கை பாரமாயிருந்ததினால், என் சாரம் உஷ்ணகால வறட்சிபோல வறண்டுபோயிற்று(.சேலா) .**

பாவத்தின் விளைவுகள் - Effects of sin

- ➢ தாவீது அமைதியாக இருந்தான் - David remained silent

Notes:

______________________________________________________
______________________________________________________
______________________________________________________

- ➢ நாள் முழுதும் கதறினான் - Groaned all day long
- ➢ அவன் எலும்புகள் உலர்ந்துபோயிற்று - His bones wasting away

சீர்திருத்தும் தேவன் - Correction of the Lord

- ➢ நாள் முழுதும் கர்த்தருடைய பாரமான கரம் தாவீதின் மேல் இருந்தது - Heavy hand of the Lord was upon him all day (சங்கீதம் 38:1-11 and 39:10-11 வாசிக்க)
- ➢ கோடைக்கால வெயிலினால் அவனுடைய பலன் வற்றிப்போனது. *His strength is exhausted in the summer because of the heat*

### பாவ அறிக்கை செய்வதன் நன்மைகள்

**வ** *5-7, The Benefit of Confession*

*5.* **நான் என் அக்கிரமத்தை மறைக்காமல், என் பாவத்தை உமக்கு**
**அறிவித்தேன்; என் மீறுதல்களைக் கர்த்தருக்கு**
**அறிக்கையிடுவேன் என்றேன்; தேவரீர் என் பாவத்தின்**
**தோஷத்தை மன்னித்தீர்(.சேலா) .**
*6.* **இதற்காகச் சகாயங்கிடைக்குங் காலத்தில்**
**பக்தியுள்ளவனெவனும் உம்மை நோக்கி**
**விண்ணப்பஞ்செய்வான்; அப்பொழுது மிகுந்த ஜலப்பிரவாகம்**
**வந்தாலும் அது அவனை அணுகாது.**
*7.* **நீர் எனக்கு மறைவிடமாயிருக்கிறீர்; என்னை நீர் இக்கட்டுக்கு**
**விலக்கிக்காத்து, இரட்சணியப் பாடல்கள் என்னைச்**
**சூழ்ந்துகொள்ளும்படி செய்வீர்(.சேலா) .**

- ➢ தேவனுக்கு எதிரான தனது பாவத்தை ஒப்புக்கொள்கிறார் - *Acknowledges his sin is against God*
- ➢ தன் பாவத்தை இனிமேலும் மறைக்க விரும்பவில்லை - *Chose not to hide any longer*
- ➢ தேவனிடத்தில் தன் பாவத்தை அறிக்கையிடுகிறார் - *Confessed his sin to the Lord*
- ➢ தேவன் பாவத்தை மன்னிக்கிறார் - *Lord forgave his sin*
- ➢ தாவீது தைரியமாக கர்த்தரை ஸ்தோத்தரிக்கிறார் - *David will boldly blesses the Lord*
- ➢ தேவனே அவரது மறைவிடம் - *God is his hiding place*

Notes:

________________________________________________________
________________________________________________________
________________________________________________________

➢ கர்த்தர் ஆபத்திலே அவரை பாதுகாப்பார் - *God will preserve him from trouble*
➢ இரட்சிப்பின் (விடுதலையின்) பாடல்களால் கர்த்தர் சூழ்ந்துகொள்கிறார் - *God will surround him with songs of deliverance*
➢ நீங்கள் ஆபத்திலிருக்கும்போது கர்த்தரை கண்டடைவீர்கள் - *God will be found when you are in trouble*

### விசுவாசத்தின் மதிப்பு / பலன்

**வ** *8-11, The Value of Trust*

8. **நான் உனக்குப் போதித்து, நீ நடக்கவேண்டிய வழியை**
**உனக்குக் காட்டுவேன்; உன்மேல் என் கண்ணை வைத்து, உனக்கு**
**ஆலோசனை சொல்லுவேன்.**
9. **வாரினாலும் கடிவாளத்தினாலும் வாய் கட்டப்பட்டாலொழிய,**
**உன் கிட்டச் சேராத புத்தியில்லாக் குதிரையைப்போலவும்**
**கோவேறு கழுதையைப்போலவும் இருக்கவேண்டாம்.**
10. **துன்மார்க்கனுக்கு அநேக வேதனைகளுண்டு; கர்த்தரை**
**நம்பியிருக்கிறவனையோ கிருபை சூழ்ந்துகொள்ளும்.**
11. **நீதிமான்களே, கர்த்தருக்குள் மகிழ்ந்து களிகூருங்கள்;**
**செம்மையான இருதயமுள்ளவர்களே, நீங்கள் எல்லாரும் ஆனந்த**
**முழக்கமிடுங்கள்.**




ஜனங்களுக்கு கற்றுக்கொடுக்கும்படி தாவீது எத்தணிக்கிற காரியம்:

Notes:

____________________________________________________________
____________________________________________________________
____________________________________________________________

*David propose to instruct the people*

- *அவர்கள் நடக்க வேண்டிய வழியை கற்றுக்கொடுக்கிறார்* - Teach the way they should go
- *கண்களினால் அவர்களை வழிநடத்துதல்* - To guide them with his eye
- *குதிரையை போலவும் கோவேறு கழுதையை போலவும் இருக்க வேண்டாம் என்று எச்சரிக்கிறார்* -Caution them not to be like mule or horse

*விசுவாசத்தின் மதிப்பு / பலன்*

*Value of trusting*

- *துன்மார்க்கருக்கு வரும் அநேக வருத்தங்கள்* - Many sorrows to the wicked
- *கர்த்தரை நம்புபவர்களுக்கு இரக்கம் - Mercy to the one who trust the Lord*
- *கர்த்தரிடம் மகிழ்ந்து களிகூருதல்* - Be glad in the Lord and rejoice
- *ஆனந்த முழக்கமிடுதல்* - Shout for joy

*செயல்படுத்துதல்*

*Application*

*உங்கள் வாழ்வில் இதுவரை சந்தித்திராத மிகப்பெரும் பிரச்சனைக்குள் சென்றுகொண்டிருக்கிறீர்கள். ஜாமீன் கிடைக்காதபடி ஒரு கொலை வழக்கில் சிறையில் இருக்கிறீர்கள் என்று எண்ணிக்கொள்ளுங்கள். நீதிமன்றத்தில் வழக்கு வாரங்களும் மாதங்களுமாக இழுத்துக்கொண்டிருக்கிறது, உங்கள் மீது பாரத்தை போட்டு பெலனை வடியச்செய்து மனக்கிலேசத்தை உண்டுபண்ணுகிறது. இறுதியாக தீர்ப்பின் நாள் வருகிறது. கைகளில் விலங்கு பூட்டி, நீதிமன்ற காவலர் உங்களை அழைத்து வருகிறார், நீதிபதி குழு (jury) பல நாட்கள் ஆராய்ந்து தங்கள் தீர்ப்பை கூற ஆயத்தமாக இருக்கிறார்கள். நீதிபதி சபையை ஒழுங்குக்கு கட்டளையிடுகிறார், நீதிமன்றம் அமைதியில் மூழ்குகிறது. நீதிபதி நீதி குழுவை (jury) பார்த்து "ஒரு தீர்வுக்கு வந்துவிட்டீர்களா?" என்று கேட்கிறார். நீதி குழு தலைவர் எழும்புவதை கண்டு உங்கள் நாவு வறண்டு, இருதயம் படபடவென்று அடிக்கிறது. அவர் சொல்லப்போகும் மறு வார்த்தையில்தான் உங்கள் வாழ்வு மொத்தமும்*

Notes:

___________________________________________________________
___________________________________________________________
___________________________________________________________

*அடங்கியிருக்கிறது. "கணம் நீதிபதி அவர்களே, இந்த நீதி குழு குற்றம்சாட்டப்பட்ட நபரை குற்றமற்றவர் என்று தீர்ப்பளிக்கிறது".*

*குற்றமற்றவர்! ஒரு மாபெரும் நிவாரணம் உங்கள் இருதயத்தில் கரை புரண்டு ஓடுவதை உணருகிறீர்கள், ஆனந்த கண்ணீர் உங்கள் கண்களில் வழிகிறது. குற்றமற்றவர்! ஒரு மாபெரும் பாரம் உங்கள் தோள்களிலிருந்து இறங்குகிறது! நீதிமன்ற காவலர் உங்கள் விலங்குகளை அவிழ்க்கிறார், நீதிபது "நீங்கள் விடுவிக்கப்பட்டீர்கள், நீங்கள் போகலாம்" என்று அறிவிப்பதை கேட்கிறீர்கள்.*

*தண்டனையிலிருந்து விடுதலை!*

*வாழ்வில் ஒரு புதிய நோக்கம்.*

*சிறைவாசத்திலிருந்து விடுதலை, தொடர்ச்சியான அழுத்தத்திலிருந்து விடுதலை, உங்களுக்கு எதிரான எல்லா குற்றச்சாட்டுகளிலுமிருந்து விடுதலை செய்யப்பட்டதால் ஒரு புதிய வாழ்விற்குள்ளாக செல்கிறீர்கள்.*

*அந்த உணர்வு எப்படி இருக்கும் என்று உங்களால் கற்பனை செய்ய முடிகிறதா?*

*You have never been so tense in your life. You have been held in custody without bail on a murder charge. The courtroom battle has dragged on for weeks and months, draining your vitality and weighing upon you with increasing anxiety. Finally, the big moment has arrived. With your hands manacled, the bailiff leads you into the courtroom. The jury files in after several days of deliberations. The courtroom falls silent as the judge calls the court to order. He asks, "Mr./Ms… , do you have a verdict?" Your heart is pounding and your mouth is dry as you watch him rise. The rest of your life depends upon his words. "Your honour, the jury finds the defendant not guilty."*

*Not guilty! A flood of relief sweeps over you and tears of joy well up in your eyes. Not guilty! It's as if a heavy weight has dropped from your shoulders! The bailiff unlocks your handcuffs and you hear the judge declare, "You are free to go."*

*Freedom from condemnation!*

Notes:

________________________________________________________
________________________________________________________
________________________________________________________

*Life suddenly takes on new meaning.*

*You are free from confinement, free from the constant pressure of the charges against you, free to begin a new life, because you have been released from those charges.*

*Can you imagine how that would feel?*




நீங்கள் பாவத்தில் சிக்கித் தவிக்கிறோம் என்பதை உணரும்போது உங்களுக்கு எப்படி இருக்கிறது? நீங்கள் மன்னிக்கப்பட்டீர்கள் என்பதை உணரும்போது உங்களுக்கு எப்படி இருக்கிறது? பாவத்தின் மத்தியில் இருக்கிற உங்கள் நெருங்கிய நண்பரிடம், அவர்களையும் அவர்கள் சூழ்நிலையையும் மாற்றக்கூடிய இந்த கிருபையையும் இரக்கத்தையும் குறித்து என்ன சொல்வீர்கள்?

*How it feels to know that you are stuck in sin. Describe how it feels to know that you are forgiven. What would you tell your best friend who is in the midst of sin about the grace and mercy of God to change them and their situation?*

பாவத்தின் ஈர்ப்பை தாவீது உணர்ந்தபோது , யாருக்கு எதிராக பாவம் செய்தேன் என்று தாவீது கூறுகிறார்? போத்திபாரின் மனைவி அவனை மயக்க நினைத்தபோது அதே வார்த்தைகளைத்தான் யோசேப்பும் சொன்னான்.

Notes:

__________________________________________________________
__________________________________________________________
__________________________________________________________

**ஆதி** 39:9 ,"இந்த வீட்டிலே என்னிலும் பெரியவன் இல்லை; நீ அவருடைய மனைவியாயிருக்கிறபடியால் உன்னைத்தவிர வேறொன்றையும் அவர் எனக்கு விலக்கி வைக்கவில்லை; இப்படியிருக்க, **நான் இத்தனை பெரிய பொல்லாங்குக்கு உடன்பட்டு, தேவனுக்கு விரோதமாய்ப் பாவம் செய்வது எப்படி** என்றான்".

நம் பாவங்கள் யாவும் தேவனுக்கு விரோதமானவை என்று உணருகிறீர்களா?

*Do you realise all our sin against God?*

தேவனின் பாவ மன்னிப்பை தாவீது எப்படி ஏற்றுக்கொள்கிறார்? என்றாவது உங்கள் வாழ்வை சீரழித்த பாவத்தை மேற்கொள்வதை குறித்து நீங்கள் யாருக்காவது கற்றுக் கொடுத்திருக்கிறீர்களா? பிறருக்கு கற்றுக் கொடுத்திருந்தால், அவர்கள் அதை எப்படி ஏற்றுக்கொண்டார்கள் என்று உங்களுக்கு தெரியுமா?

*How does David respond to God's forgiveness of his sin? Have you ever had an opportunity to teach someone to avoid the sins that trapped and devastated your life? If you have, how was your instruction received?*

***சவால்:*** பாவமும் தோல்வியும் உங்களை தழுவும்போது, எங்கு செல்வீர்கள்? என்ன செய்வீர்கள்? ஆண்டவரிடமிருந்தும், அவருடைய பிரசன்னத்திடமிருந்தும் எங்கு ஓடுவீர்கள்? அவரை நோக்கி ஓடி அவருடைய மன்னிப்பையும் சீர்திருத்தத்தையும் நாடுவீர்களா?

சிலுவையில் இயேசு நமக்கு தரும் செய்தி, நாம் பாவத்தில் விழுகிற தருணங்களில் ஆண்டவரிடம் ஓடினால், நம்மை மன்னித்து, திரும்பவும் நம்மை ஸ்திரப்படுத்தி, அவரோடு சரியான உறவில் நம்மை நிறுத்துகிறார்.

Notes:

____________________________________________________________
____________________________________________________________
____________________________________________________________

*Challenge: In moments of sin and failure, where will you go and what will you do? Will you run away from God and hide from his presence? Will you run to him and seek forgiveness and restoration?*

*The message of the cross of Jesus is that we can run to God in those times when we have sinned and we can know that he is faithful to forgive us and restore us into a right relationship with him. May you run to God NOW and seek refuge in him!*

*ஒப்புவித்தல்*

*நான் இந்த பாவத்தில் போராடிக்கொண்டிருக்கிறேன்: ___________________________________.*

*தாவீதைப்போல மனந்திரும்பி ஆண்டவரிடம் என்னை சுத்தமாக கழுவி, திரும்பவும் ஸ்திரப்படுத்தும்படி ஜெபிப்பேன்.*

*Commitment:*

*I am dealing with this sin: __________________.*

*I will repent and I will pray, like David, for God to wash me clean and restore me.*

*அடுத்த நடவடிக்கைகள்*

*பாவத்தின் கொடுமையையும் அதன் பாழாக்கும் பேரழிவின் விளைவுகளையும் புரிந்துகொண்டேன்.*

*பாவத்தின் விளைவுகள் / சம்பளத்தை குறித்தும் மன்னிப்பு கிடைப்பதற்கான வாய்ப்பையும் பிறருக்கு கற்றுக்கொடுப்பேன் (ரோமர் 6:23).*

*கர்த்தருடைய இரக்கத்தையும் அவர் மீட்பையும் பாடுவேன்.*

*Next Steps:*

Notes:

__________________________________________________________
__________________________________________________________
__________________________________________________________

*I understand the magnitude of sin and its devastating consequences and destructive characteristics.*

*I will teach others about the wages of sin and the opportunity for forgiveness (Rom 6:23).*

*I will praise God for his mercy and restoration.*

Notes:

____________________________________________________________
____________________________________________________________
____________________________________________________________

Notes:

__________________________________________________________________

__________________________________________________________________

__________________________________________________________________

## குடும்பமாக எழும்பி பிரகாசித்தல்

*Devotion: 3 Rising & Shining as a family*

**ஆமோஸ்** 3:3, இரண்டுபேர் ஒருமனப்பட்டிருந்தாலொழிய ஒருமித்து நடந்துபோவார்களோ?

*Amos 3:3, Can two people walk together without agreeing on the direction?(NLT)*

இந்த 21-ஆம் நூற்றாண்டில் ஆண்டவரை சேவிப்பதில் கிறிஸ்தவ குடும்பங்களுக்குள் உள்ள பெரும் பிரச்சனை குடும்பமாக அவரை சேவிப்பது.

*One of the biggest challenges in our Christians home in this 21st century is serving God together as family.*

கணவன் ஆண்டவரை சேவிக்க வேண்டும் அவரை மகிமைப்படுத்த காரியங்கள் செய்ய வேண்டும் என்று நினைக்கலாம், மனைவியோ பிள்ளைகள், குடும்பம், படிப்பு, வரவு செலவு ஆகியவற்றில் நோக்கமாக இருக்கலாம். ஒருசில குடும்பங்களில் மனைவி ஆண்டவரை சேவிக்க நாடுவார், கணவனோ மற்ற காரியங்களில் கவனம் செலுத்துவார்.

*Either the husband wants to serve and glorify god whereas his wife so engrossed with home, children, finance, education etc., Or it's the other way.*

சில வேளைகளில் பிள்ளைகள் ஆண்டவரை சேவிக்க நாடுவார்கள், ஆனால் பெற்றோர்களோ அதற்கு மாறாக இருப்பார்கள்.

*Some case the children want to serve the lord or the parents.*

குடும்பமாக நாம் எழும்புவது எப்படி?

*How do we Arise as a family?*

நாம் ஒருவரை ஒருவர் சார்ந்து வாழ வேண்டும் என்பதே தேவனுடைய நோக்கம் என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும்.

Notes:

____________________________________________________
____________________________________________________
____________________________________________________

*We need to understand that God wants us to live depend on one another.*

***பிரசங்கி** 4;12,*

*ஒருவனை யாதாமொருவன் மேற்கொள்ள வந்தால் இருவரும் அவனுக்கு எதிர்த்துநிற்கலாம்; முப்புரிநூல் சீக்கிரமாய் அறாது.*

*Ecclesiastes 4;12, Though one may be overpowered by another, two can withstand him. And a threefold cord is not quickly broken.*

புதிய ஏற்பாட்டில் "ஒருவரை ஒருவர்" ஆங்கிலத்தில் *'one another'* என்கிற பதம் சுமார் *157* முறை எழுதப்பட்டிருக்கிறது.

*The New Testament has the term 'one another' over 157 times!*

தரிசனம்

*Vision:*

இன்று ஏராளமான குடும்பங்கள் கர்த்தருக்கென்று இணைந்து செயல்பட முடியாததன் காரணம் சரியான தரிசனம் இல்லை.

தரிசனம் குறைவுபடும்போது தரிசனத்தை குறித்த புரிதலும் குறைகின்றது. ஆகவே குடும்பத்தில் ஒவ்வொருவருக்கும் ஆண்டவருடைய அழைப்பு என்ன, நோக்கம் என்ன, ஏன் இருவரையும் ஒன்றாக ஆண்டவர் இணைத்தார் என்கிற புரிதலும் குறைகிறது.

*Today for too many homes are not able to work together in unity in the kingdom of God because of lack of vision.*

*When you lack in vision then you start lacking in understand each other call and the purpose in which God has brought you both together.*

குடும்பத்திற்கென்று ஒரு பொதுவான தரிசனம் அவசியம்.

*A common vision for the family is essential.*

ஒரு நிமிடம் உங்கள் குடும்பத்தின் தரிசனம் என்ன என்பதை சிந்தித்துப்பாருங்கள்.

*Just for a moment think, does your family have vision?*

Notes:

__________________________________________________________
__________________________________________________________
__________________________________________________________

*உங்கள் தரிசனத்தை குறித்த அறிக்கை (விஷன் ஸ்டேட்மென்ட் -* vision statement*) வைத்திருக்கிறீர்களா?*

*பெருநிறுவனங்கள் ஒவ்வொன்றும் ஒரு புதிய நபரை தங்கள் நிறுவனத்தில் பணியமர்த்தும்போது, தங்கள் நிறுவனத்தின் தரிசனத்தையும் (*vision*) செயல்திட்டம் (*mission*) குறித்து அறிவிப்பார்கள்.* ISO *(ஐ.எஸ்.ஓ)-வின் செயல்முறைகளில் ஒன்று, ஒவ்வொரு பணியாளரும் தங்கள் நிறுவனத்தின் தரிசனத்தையும் (*vision*) செயல்திட்டம் (*mission*) எப்பொழுதும் தங்கள் சட்டைப்பை-யில் வைத்துக்கொள்ள வேண்டும் என்று கூறுகிறது. இதை பல ஜப்பானிய நிறுவனங்களும் பின்பற்றுகின்றன.*

*தரிசன அறிக்கை (*vision statement*) உங்கள் குடும்பத்திற்கு இல்லாதிருக்குமானால், தயவுசெய்து நீங்கள் சேர்ந்து அமர்ந்து ஜெபித்து ஒரு அறிக்கையை பெற்றுக்கொள்ளுங்கள். தரிசன அறிக்கையை நீங்கள் பெற்றுக்கொண்ட பிறகு அந்த தரிசனத்தை எப்படி பூர்த்திவது என்பது குறித்த செயல்திட்ட அறிக்கையை (*mission statement*) நீங்கள் தயாரிக்கலாம்.*

*If you don't have I would earnestly request all of you to sit together and pray and get a vision statement. Once you have vision statement then you will be able to create a mission statement to achieve them.*

*சரியான தரிசன இல்லாமையால் நேரிடும் காரியங்களை வேதம் நமக்கு விளக்குகிறது.*

The Bible talks about what would ensue if there is no proper vision.

Notes:

________________________________________________________

________________________________________________________

________________________________________________________




*சில வேதாகம குடும்பங்களை நாம் இப்போது தியானிக்கலாம்.*

*ஆக்கில்லா மற்றும் பிரிஸ்கில்லா*

*Aquila and Priscilla*

- ஆக்கில்லா பொந்து-வில் பிறந்தவர் - *Aquila born in Pontus*
- அவர்கள் ரோமாபுரியில் வசித்தவர்கள்; கிலவுதியு, யூதர்கள் வெளியேறும்படி கட்டளையிட்டபோது அவர்களும் வெளியேறினார்கள் - *They used to live in Rome but left when Claudius made Jews leave*
- அவர்கள் யூதர்கள் - *They were Jews*
- பவுலைப்போல் கூடாரம் பண்ணும் தொழில் செய்கிறவர்கள் - *They were tentmakers like Paul*
- பவுல் அவர்களோடு இருந்து பணி செய்கிறார் - *Paul stayed with them, worked with them*

Notes:

__________________________________________________________
__________________________________________________________
__________________________________________________________

**சார்ந்து வாழ அறிந்தவர்கள்**

*Good leaners*

**அப்** *18:1-4,*

*அதன்பின்பு பவுல் அத்தேனே பட்டணத்தை விட்டு, கொரிந்து பட்டணத்துக்கு வந்து;*

*2. யூதரெல்லாரும் ரோமாபுரியை விட்டுப்போகும்படி கிலவுதியுராயன் கட்டளையிட்டபடியினாலே, இத்தாலியாவிலிருந்து புதிதாய் வந்திருந்த பொந்துதேசத்தானாகிய ஆக்கில்லா என்னும் நாமமுள்ள ஒரு யூதனையும் அவன் மனைவியாகிய பிரிஸ்கில்லாவையும் அங்கே கண்டு, அவர்களிடத்திற்குப் போனான்.*

*3. அவர்கள் கூடாரம்பண்ணுகிற தொழிலாளிகளாயிருந்தார்கள்; தானும் அந்தத் தொழில் செய்கிறவனானபடியினாலே அவர்களிடத்தில் தங்கி வேலைசெய்துகொண்டுவந்தான்.*

*4. ஓய்வுநாள் தோறும் அவன் ஜெபஆலயத்திலே சம்பாஷணைபண்ணி, யூதருக்கும் கிரேக்கருக்கும் புத்திசொன்னான்.*

எல்லா கணவன் மனைவியாலும் இப்படி ஒன்று சேர்ந்து வேலை செய்ய முடியாது. இப்படி பணி செய்வதற்கு ஒரு தேர்ந்த உறவு (mature relationship) தேவை; குறிப்பாக சில வேளைகளில் அந்த பணி கொண்டுவரக்கூடிய அழுத்தத்திலும் இணைந்து பணியாற்ற வேண்டும். ஆனால் நடந்ததை பார்க்கும்போது ஆக்கில்லாவும் பிரிஸ்கில்லாவும் அப்படிப்பட்ட தேர்ந்த உறவில் இருந்தார்கள் என்று நமக்கு தெரிகிறது. அவர்கள் இருவரும் துணையும் காதலரும் மாத்திரமல்ல, நல்ல நண்பர்களும் தோழர்களும்கூட.

*Not every husband and wife can work together like this. It takes a mature relationship to work closely under the kind of pressure a job sometimes generates. But that is evidently the kind of relationship Aquila and Priscilla had. They were not only mates and lovers, they must have been good friends and companions.*

அப்போஸ்தலனாகிய பவுல் அவர்களோடு 18 மாதம் (1 கொரி 18:11) இருந்ததாக கூறுகிறார். ஆகவே அவர்கள் இருவரும்

Notes:

__________________________________________________________
__________________________________________________________
__________________________________________________________

கர்த்தருடைய வார்த்தையில் பெலப்பட்டிருப்பார்கள். அவர்களுக்கு கிடைத்த மாபெரும் சலுகை, மாபெரும் வேத ஆசிரியராகிய பவுலிடமிருந்து வேதத்தை கற்றுக்கொள்ள வாய்ப்பு கிடைத்தது.

பவுல் கொரிந்துவைவிட்டு எபேசுவுக்கு சென்றபோது அவர்களையும் கூட்டிக்கொண்டு செல்கிறார். அவர் எருசலேமிற்கு செல்லும்போது, அவர்கள் எபேசுவிலே தங்கி அப்பல்லோவிற்கு கர்த்தருடைய வார்த்தையை பிரசங்கித்தார்கள்.

### கற்றுக்கொடுத்து சீஷராக்குதல்

*Discipling and taught others*

**அப்** *18:24-28,*

*24. அப்பொழுது அலெக்சந்திரியா பட்டணத்தில் பிறந்தவனும் சாதுரியவானும் வேதாகமங்களில் வல்லவனுமான அப்பொல்லோ என்னும் பேர்கொண்ட ஒரு யூதன் எபேசு பட்டணத்துக்கு வந்தான். 25. அவன் கர்த்தருடைய மார்க்கத்திலே உபதேசிக்கப்பட்டு, யோவான் கொடுத்த ஸ்நானத்தைமாத்திரம் அறிந்தவனாயிருந்து, ஆவியில் அனலுள்ளவனாய்க் கர்த்தருக்கு அடுத்தவைகளைத் திட்டமாய்ப் போதகம்பண்ணிக்கொண்டுவந்தான். 26. அவன் ஜெபஆலயத்தில் தைரியமாய்ப் பேசத்தொடங்கினபோது, ஆக்கில்லாவும் பிரிஸ்கில்லாளும் அவன் பேசுகிறதைக் கேட்டு, அவனைச் சேர்த்துக்கொண்டு, தேவனுடைய மார்க்கத்தை அதிக திட்டமாய் அவனுக்கு விவரித்துக்காண்பித்தார்கள். 27. பின்பு அவன் அகாயா நாட்டிற்குப் போகவேண்டுமென்றிருக்கையில், சீஷர்கள் அவனை ஏற்றுக்கொள்ளும்படி சகோதரர் அவர்களுக்கு எழுதினார்கள். 28. அவன் அங்கே வந்தபின்பு வெளியரங்கமாக யூதர்களுடனே பலமாய்த் தர்க்கம்பண்ணி, இயேசுவே கிறிஸ்து என்று வேதவாக்கியங்களைக்கொண்டு திருஷ்டாந்தப்படுத்தினபடியால், கிருபையினாலே விசுவாசிகளானவர்களுக்கு மிகவும் உதவியாயிருந்தான்.*

அப்பல்லோவை “வேதாகமங்களில் வல்லவன்” (man of words) என்று லூக்கா கூறுகிறார். இது, அப்பல்லோ நன்கு கற்றவன், வாக்கில் பயிற்றுவிக்கப்பட்டவன் (trained in rhetoric) என்று புரிகிறது. அவன் சாதுரியமாய் பேசுகிறவன் என்றும் எபிரேய

Notes:

______________________________________________________
______________________________________________________
______________________________________________________

வேதத்தில் கற்று தேர்ந்தவன் என்று லூக்கா அப்பல்லோவை குறித்து எழுதுகிறார். அவன் தொடர்ந்து சுவிசேஷத்தை அற்புதமாக பிரசங்கிக்கிறவனாக மாறுகிறான்.

அப்பல்லோவை தயார்படுத்திய அற்புத பணி

*Effective work on Appollos*

- தங்கள் வீட்டிற்கு அவனை அழைத்தார்கள் - *Invited him to their home*
- முழு காரியத்தையும் அவனுக்கு விவரித்தார்கள் - *Explained to him the whole picture*
- இன்னும் அதிகமாய் முழுமையான காரியங்களை அவனுக்கு அளித்தார்கள் - *Gave him more total information*
- அப்பல்லோவிற்கு திருத்தம் தேவையில்லை – அவன் தவறாக எதையும் புரிந்துகொள்ளவில்லை *Appollos didn't need correction – it wasn't that he was wrong,*
- அவனுக்கு சங்கதியின் பிற்பகுதி மாத்திரமே தேவைப்பட்டது - *He needed the rest of the story*

அப்பல்லோவின் வாழ்வில் அவர்கள் கற்றுக்கொடுத்தவை அவன் வாழ்வில் ஆக்கப்பூர்வமான தாக்கத்தை ஏற்படுத்தியது. இதற்கு சான்று:

- அங்கு உள்ள விசுவாசிகள் அப்பல்லோவை குறித்து பக்கத்து ஊருக்கு எழுதி அவனிடம் கொடுத்தனுப்பிய கடித்தத்தில் குறிப்பிட்ட அங்கீகாரங்கள் - *Got the approval of local believers when they wrote him a letter of reference to take with him to the next town*
- அவன் விசுவாசிகளுக்கு பெரும் உதவியாக இருந்தான் - *Was a great help to believers*
- யூதர்களை தீவிரமாக பொது தர்க்கங்களில் எதிர்த்தான் - *Vigorously refuted Jews in public debate*
- பிறருக்கு இயேசுவே மேசியா என்று நிரூபித்தான் - *Proved to others that Jesus was the Messiah*

### தியாக வாழ்வு

*Self-Sacrificing life*

ரோமர் *16:3-4,*

Notes:

__________________________________________________________
__________________________________________________________
__________________________________________________________

*கிறிஸ்து இயேசுவுக்குள் என் உடன்வேலையாட்களாகிய பிரிஸ்கில்லாளையும் ஆக்கில்லாவையும் வாழ்த்துங்கள். அவர்கள் என் பிராணனுக்காகத் தங்கள் கழுத்தைக் கொடுத்தவர்கள்; அவர்களைப்பற்றி நான்மாத்திரமல்ல, புறஜாதியாரில் உண்டான சபையாரெல்லாரும் நன்றியறிதலுள்ளவர்களாயிருக்கிறார்கள்.*

அவர்கள் இருவரும்,

- உடன் வேலையாட்கள் - *Fellow workers*
- கிறிஸ்து இயேசுவுக்குள் - *In Christ Jesus*
- தங்கள் வாழ்வை கொடுக்க துணிந்தவர்கள் - *Risked their lives*
- சபை அவர்களுக்கு நன்றியறிதலுள்ளவர்களா-யிருக்கிறார்கள் - *The churches were grateful to them*

### தங்கள் இல்லத்தை திறந்துகொடுத்தார்கள்

*Opened their home*

**ரோமர்** 16:5, அவர்களுடைய வீட்டிலே கூடிவருகிற சபையையும் வாழ்த்துங்கள்

*1 கொரிந்தியர் 16:19,*

*ஆசியா நாட்டிலுள்ள சபையார் உங்களை வாழ்த்துகிறார்கள் . ஆக்கில்லாவும் பிரிஸ்கில்லாளும் தங்கள் வீட்டிலே கூடுகிற சபையோடுங்கூடக் கர்த்தருக்குள் உங்களை மிகவும் வாழ்த்துகிறார்கள்.*

இந்த குடும்பத்தார் வாழ்ந்த இடங்கள்:

- ரோமாபுரி - *Rome (Acts 18:2)*
- கொரிந்து - *Corinth (Acts 18:2)*
- எபேசு - *Ephesus (Acts 18:19)*
- மீண்டும் ரோமாபுரி - *Rome again (Romans 16:3)*

### செயல்படுத்துதல்

*Application:*

Notes:

__________________________________________________________
__________________________________________________________
__________________________________________________________

வேதத்தில் ஆக்கில்லா மற்றும் பிரிஸ்கில்லா என்ற பெயர்கள் 6 முறை எழுதப்பட்டிருக்கிறது. மூன்று முறை ஆக்கில்லா முதலில் எழுதப்பட்டிருக்கிறது அதை தொடர்ந்து பிரிஸ்கில்லா எழுதப்பட்டிருக்கிறது. மூன்று முறை பிரிஸ்கில்லா முதலில் எழுதப்பட்டிருக்கிறது அதை தொடர்ந்து ஆக்கில்லா எழுதப்பட்டிருக்கிறது.

ஊழியத்தில் அவர்கள் இருவரின் பங்கு சமமாக இருப்பதை இது குறிக்கிறது.

**அப்** *18:2,*

*யூதரெல்லாரும் ரோமாபுரியை விட்டுப்போகும்படி கிலவுதியுராயன் கட்டளையிட்டபடியினாலே, இத்தாலியாவிலிருந்து புதிதாய் வந்திருந்த பொந்துதேசத்தானாகிய ஆக்கில்லா என்னும் நாமமுள்ள ஒரு யூதனையும் அவன் மனைவியாகிய பிரிஸ்கில்லாவையும் அங்கே கண்டு, அவர்களிடத்திற்குப் போனான்.*

**அப்** *18:18,*

*பவுல் அநேகநாள் அங்கே தரித்திருந்தபின்பு, சகோதரரிடத்தில் உத்தரவு பெற்றுக்கொண்டு, தனக்கு ஒரு பிரார்த்தனை உண்டாயிருந்தபடியினால் கெங்கிரேயா பட்டணத்தில் தலைச்சவரம் பண்ணிக்கொண்டு, சீரியாதேசத்துக்குப் போகக் கப்பல் ஏறினான்பிரிஸ்கில்லாளும் ஆக்கில்லாவும் . .அவனுடனே கூடப்போனார்கள்*

**அப்** *18:26,*

*அவன் ஜெபஆலயத்தில் தைரியமாய்ப் பேசத்தொடங்கினபோது, ஆக்கில்லாவும் பிரிஸ்கில்லாளும் அவன் பேசுகிறதைக் கேட்டு, அவனைச் சேர்த்துக்கொண்டு, தேவனுடைய மார்க்கத்தை அதிக திட்டமாய் அவனுக்கு விவரித்துக்காண்பித்தார்கள்.*

**ரோமர்** *16:3,*

*கிறிஸ்து இயேசுவுக்குள் என் உடன்வேலையாட்களாகிய பிரிஸ்கில்லாளையும் ஆக்கில்லாவையும் வாழ்த்துங்கள்.*

*1 கொரிந்தியர் 16:19,*

Notes:

____________________________________________________________
____________________________________________________________
____________________________________________________________

*ஆசியா நாட்டிலுள்ள சபையார் உங்களை வாழ்த்துகிறார்கள் . ஆக்கில்லாவும் பிரிஸ்கில்லாளும் தங்கள் வீட்டிலே கூடுகிற சபையோடுங்கூடக்* ***கர்த்தருக்குள்*** *உங்களை மிகவும் வாழ்த்துகிறார்கள்.*

*2 தீமோத்தேயு 4:19,*

*பிரிஸ்காளுக்கும் ஆக்கில்லாவுக்கும், ஒநேசிப்போருவின் வீட்டாருக்கும் என் வாழ்த்துதலைச் சொல்லு.*

ஆகவே ஒருவரை ஒருவர் தாங்கி ஒருவரை ஒருவர் கவனித்துக்கொள்ளுங்கள்.

*So embrace each other and look after each other.*

இன்றைய சூழ்நிலையில் குடும்பமாக நாம் யாரை கர்த்தருக்குள் வளர்க்க (mentoring) முடியும்?

*What kinds of people can families today begin a mentoring relationship with?*

- தங்கள் வீட்டை விட்டு பயிலுகிற கல்லூரி மாணவர்கள் - *College students away from home*
- பேரப்பிள்ளைகள், உடன் பிறந்தவருடைய பிள்ளைகள் - *Grandkids, nephews, nieces*
- புதிதாக இணைந்த குடும்பங்கள் - *Young couples*
- வெளிநாட்டு மாணவர்கள் - *Foreign students*
- மின்னஞ்சல் மூலமாக இளைய போதகர்கள் சுவிசேஷ ஊழியர்கள் - *Through correspondence (e-mail, snail mail) to young ministers, missionaries*
- கிறிஸ்தவ விசுவாசத்தில் இளைய குடும்பங்கள் - *Families who are young in their Christian faith*

Notes:

________________________________________________________
________________________________________________________
________________________________________________________

### *தரிசன அறிக்கைகள் -Vision statements:*

எடுத்துக்காட்டு - Examples

- ஒருவர் மீது ஒருவர் அன்பு செலுத்தி, ஒருவருக்கொருவர் தனிப்பட்ட முறையிலும், குடும்பமாகவும் ஒன்று சேர்ந்து இருப்பதற்கு குடும்ப நேரத்தை ஒதுக்கி அதை கவனமாய் அனுசரிப்போம்.

*We love, create, and protect family time, both one-one and everyone together.*

- எங்கள் தேவைகள், எண்ணங்கள், உணர்வுகளை வெளிப்படையாக பேசவும் மற்றொருவர் கூறுவதை கவனிக்கவும் செய்வோம்.

*We talk about our needs, thoughts and feelings, and we carefully listen to each other.*

- நாங்கள் ஒருவரை ஒருவர் மரியாதையோடும், பொறுமையோடும், கனிவோடும் நடத்துவோம்

*We treat each other with respect, patience, and kindness.*

- ஆவியானவர் எங்களோடு இருக்கும்படியான காரியங்களை பேசவும், செயல்களை செய்யவும் தீர்மானிக்கிறோம்

*We speak and act in a way that allows the spirit to be with us.*

- பிறருடைய குறிக்கோள்களையும், கனவுகளையும், ஊழியங்களையும் போஷித்து அவைகளுக்கு துணையாக இருப்போம்.

*We nurture, support, and celebrate each other's ambitions, dreams and missions.*

- நாங்கள் எப்பொழுதும், யாரும் பார்க்காத வேளையிலும் உண்மையாகவே நடந்துகொள்வோம்

*We are always honest and do the right thing even when no one is looking.*

Notes:

________________________________________________________
________________________________________________________
________________________________________________________

- துணிச்சலாக பொது ஒழுக்கங்களை கடைப்பிடிப்போம்

*We courageously commit to public virtue.*

- தேவன் எங்களை நேசிக்கிறார், நாங்கள் அருமையானவர்கள், அற்புதமானவர்கள் என்று அறிந்திருக்கிறோம்!

*We know that God loves us and we are wonderful and amazing!*

- சுயசார்பாகவும் சுதந்திரமாகவும் வாழ தேவையான அறிவையும், திறமைகளையும், அணுகுமுறைகளையும் வளர்த்துக்கொள்வோம்

*We build our knowledge, skills, and attitudes of self-reliance and freedom.*

- எங்களை சுற்றி இருப்பவைகளை அழகாகவும் இன்னும் மேன்மையாகவும் வைத்துக்கொள்வோம்

*We make everything around us better and more beautiful.*

- ஒருவருக்கொருவர் அன்பு செலுத்தி, பகிர்ந்துகொடுத்து, உதவிசெய்து ஒருவரையொருவர் வளர்த்துக்கொள்வோம்

*We build others up through service, sharing and love.*

- எங்கள் இல்லத்தை பாதுகாப்போம், பரிசுத்த ஆவியானவர் இங்கு வாசம் செய்கிறார்

*We protect our home and the Spirit dwells here.*

- இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷத்தை கற்றுக்கொண்டு, வாழ்ந்து, பிரசங்கிப்போம்

*We learn, live, and share the gospel of Jesus Christ.*

- அன்பு எங்கள் திசைகாட்டியும் நங்கூரமுமாம்

*Love is our compass and our anchor.*

Notes:

______________________________________________________
______________________________________________________
______________________________________________________

## ***குறிக்கோள் வாசகம் - Mission Statements***

- ***தன்னை குறித்து***: தேவன் எனக்கு எவ்வளவாய் தேவை என்பதை உணரவேண்டும்

*Inward: understand how much you need God*

- **தேவனை குறித்து**: கர்த்தருடைய அன்பை அனுபவிக்க வேண்டும்

*Upward: Experience the love of God*

- **சுற்றுபுறத்தை குறித்து**: வாய்ப்பை குறித்து நோக்கமாயிருக்க வேண்டும்

*Outward: Look at the opportunity*

- **முன்னோக்கி**: திட்டமிட்டு செயல்படுத்த வேண்டும்

*Onward: Plan and execute*

எடுத்துக்காட்டு - Examples:

*We, the __________________________, believe that our purpose as a family is to [general mission statement]. We will accomplish this by:*

*Valuing_____________________________ and _________________________ as our main guiding principals*

*Making our home a place of _____________________, _____________________________, _________________________________, and _______________________________________.*

*Prioritizing _______________________________________ above lesser values*

Notes:

______________________________________________________________
______________________________________________________________
______________________________________________________________

*Interacting with each other in a spirit of ______________________________*

________________________ ஆகிய நாங்கள், குடும்பமாக எங்கள் நோக்கம் *[mission statement]* என்று நம்புகிறோம். இதை கீழ்க்கண்ட வழிகளில் செய்துமுடிப்போம்:

___________________________ மற்றும் _______________________ முக்கிய வழிகாட்டியாக மதித்து,

எங்கள் இல்லத்தை __________________, _________________________, ______________________________, மற்றும் ___________________________________ இடமாக வைத்திருப்போம்.

குறைந்த மதிப்புடையவைகளை காட்டிலும் ____________________________________-ஐ முன்னிறுத்தி, ஒருவரோடு ஒருவர் ______________________________ ஆவியினால் பேசிக்கொள்வோம்.

Notes:

__________________________________________________________
__________________________________________________________
__________________________________________________________

Notes:

_______________________________________________________________

_______________________________________________________________

_______________________________________________________________

Notes:

_______________________________________________________________

_______________________________________________________________

_______________________________________________________________

## *18. என்னோடு இருந்தார்கள்.. இப்போது துரத்துகிறார்கள்*

உங்களோடு இருப்பவர்களே உங்களுக்கு விரோதமாக உங்களை துரத்துகிறார்கள்செய்வதற்கு . வழி எதுவும் இல்லை என்று உங்கள் உயிரை காப்பாற்ற ஓடுகிறீர்கள்

*When you are being chased by your own and left with nothing and running for life…*

*சங்கீதம் 4 & 5*

*அதோடு சங்கீதம் 42, 43 &55*

**சூழல்**: *தனது மகன் அப்சலோமிற்கு பயந்து தாவீது தனது மனைவிகளையும் பிள்ளைகளையும் கூட்டிக்கொண்டு ஓடுகிறார்.*

*When David was running away for his life with his wife and children from his own son Absalom*

*வேத பகுதி: 2 சாமுவேல் 17*

***மாலையில் பாடும் பாடல் - சங்கீதம் 4***

*Sung in the evening*

*தாவீது இராஜாவின் மகன் அப்சலோம் தான் அரசனாக விரும்பினதினாலே தாவீதை கொல்ல நினைத்தான். ஆகையால் தாவீது தன் அரண்மனையிலிருந்து தன் உயிரை காப்பாற்றிக்கொள்ள மீண்டும் ஒருமுறை ஓடுகிறார்.*

*தாவீது ஆண்டவரிடம், "நீர் எனக்காக போராடுகிறீர் என்று என் எதிரிகள் அறியும்படி செய்யும்" என்று ஜெபிக்கிறார். கர்த்தர் தாவீதின் ஜெபத்தை கேட்டு அதற்கு பதிலளிக்கிறார். தாவீது சமாதானத்துடன் உறங்குகிறார். கர்த்தர் நமக்கு சமாதானம் தருகிறார் என்றால், உள்ளத்தின் ஆழத்தில் நாம் பயப்பட தேவையில்லை.*

Notes:

__________________________________________________________

__________________________________________________________

__________________________________________________________

*வ 1-2, கர்த்தரிடத்தில் ஜெபம்*

*வ 3-4, எதிரிகளுக்கு இருதயத்திலிருந்து வார்த்தை*

*வ 5-8, கர்த்தர் மனமகிழ்ச்சியளிக்கிறார்*

## கர்த்தரிடத்தில் ஜெபம்

**வ** *1-2, Prayer to God*

*1. என் நீதியின் தேவனே, நான் கூப்பிடுகையில் எனக்குச் செவிகொடும்; நெருக்கத்தில் இருந்த எனக்கு விசாலமுண்டாக்கினீர்; எனக்கு இரங்கி, என் விண்ணப்பத்தைக் கேட்டருளும்.*
*2. மனுபுத்திரரே, எதுவரைக்கும் என் மகிமையை அவமானப்படுத்தி, வீணானதை விரும்பி, பொய்யை நாடுவீர்கள் . (.சேலா)*

தாவீது கர்த்தரிடத்தில் உதவி கேட்கிறார். தாவீது தன் எதிரிகளிடத்தில் என்ன சொல்லவேண்டும் என்பதை கர்த்தரிடம் சொல்லிவிட்டார். ஆனால், உண்மையில் கர்த்தர் அவர்களிடம் “நீங்கள் ஜெயிக்க முடியாது” என்று கூற வேண்டும் என்று தாவீது ஆசைப்படுகிறார். ஏன் தாவீது இவ்வாறு ஆசைப்படுகிறார் என்றால், அவர்கள் தேவனுக்கு எதிராக போராடுகிறார்கள். அவர்களின் முட்டாள் தனமான ஆசை என்னவென்றால், தாவீதை கொன்றுவிட்டு அப்சலோம் இராஜாவாக வேண்டும் என்பதே.

## எதிரிகளுக்கு இருதயத்திலிருந்து வார்த்தை

**வ** *3-4, Mind voice to enemies*

*3. பக்தியுள்ளவனைக் கர்த்தர் தமக்காகத் தெரிந்துகொண்டாரென்று அறியுங்கள்; நான் கர்த்தரை நோக்கிக் கூப்பிடுகையில் அவர் கேட்பார்.*
*4. நீங்கள் கோபங்கொண்டாலும், பாவஞ்செய்யாதிருங்கள்; உங்கள் படுக்கையிலே உங்கள் இருதயத்தில் பேசிக்கொண்டு அமர்ந்திருங்கள்(.சேலா) .*

தாவீது தன் எதிரிகளை நோக்கி, அவர்கள் ஜெயிக்க முடியாது என்பதற்கு இன்னும் சில காரணங்களை சொல்கிறார்.

Notes:

________________________________________________________
________________________________________________________
________________________________________________________

- ➢ தேவன் தாவீதை இராஜாவாக தேர்ந்தெடுத்தார் - *LORD chose David as king*
- ➢ தேவன் அப்சலோமை தேர்ந்தெடுக்கவில்லை - *LORD did not choose Absalom*
- ➢ தேவன் தாவீதை அவன் எதிரிகளிலிருந்து வேறுபடுத்தினார் -*LORD made David different from his enemies*
- ➢ தேவன் தாவீதுக்கு செவிகொடுத்து அவனுக்கு பதிலளிப்பார் -*LORD will listen to David and answer him*

இது தாவீதின் எதிரிகளை கோபமடையச்செய்யும். அவர்கள் தங்கள் நாவுகளினால் அல்ல நினைவுகளிலே தர்க்கம் பண்ணுகிறார்கள்.

### கர்த்தர் மனமகிழ்ச்சியளிக்கிறார்

*V 5-8, God gives Joy*

*5. **நீதியின் பலிகளைச் செலுத்தி, கர்த்தர்மேல் நம்பிக்கையாயிருங்கள்.***
*6. **எங்களுக்கு நன்மை காண்பிப்பவன் யார் என்று சொல்லுகிறவர்கள் அநேகர்; கர்த்தாவே, உம்முடைய முகத்தின் ஒளியை எங்கள்மேல் பிரகாசிக்கப்பண்ணும்.***
*7. **அவர்களுக்குத் தானியமும் திராட்சரசமும் பெருகியிருக்கிறகாலத்தின் சந்தோஷத்தைப்பார்க்கிலும், அதிக சந்தோஷத்தை என் இருதயத்தில் தந்தீர்.***
*8. **சமாதானத்தோடே படுத்துக்கொண்டு நித்திரைசெய்வேன்; கர்த்தாவே, நீர் ஒருவரே என்னைச் சுகமாய்த் தங்கப்பண்ணுகிறீர்.***

தேவன்மேல் உள்ள விசுவாசம் அவனுக்கு அதிகமாயிருந்தது. அதினால், தேவனுக்கடுத்த சடங்காச்சாரமான காரியங்களினால் திருப்தி அடைய முடியாது என்று தாவீது உணர்ந்திருந்தான்.

துன்மார்க்கரின் சந்தேகங்கள் தாவீதின் காதுகளில் ஒலிக்கின்றன. தொடர்ச்சியாக மனிதர்களிடம் பிரச்சனைகளையும் ஏமாற்றங்களையும் சந்தித்த ஒருவன் இயற்கையாக தேவன் நமக்கு ஏதேனும் நன்மை செய்வாரா இல்லையா என்று சந்தேகிப்பான். தாவீது நெருக்கத்தில் (*distress*), துன்மார்க்கர் தன்னை சூழ்ந்திருப்பதால் விரக்தி (*vexed*) அடைந்தபோதும், தேவனை குறித்து தன் இருதயத்தில் மனமகிழ்ச்சிகொள்ள

Notes:

________________________________________________________________
________________________________________________________________
________________________________________________________________

முடிந்தது; ஏனெனில், தேவன் அந்த மகிழ்ச்சியை அவன் இருதயத்தில் வைத்தார்.

தாவீதால் இரவில் நிம்மதியாக உறங்க முடிந்தது, மிகுந்த நெருக்கத்தின் நாட்களாக இருந்தாலும், சுற்றி எதிரிகள் சூழ்ந்து தன்னை துரத்தினாலும் அது தாவீதை அணுகவில்லை. ஏனெனில், தாவீதின் பாதுகாப்பு தேவனிடத்திலிருந்து வருகிறது, அவனை சுற்றியிருக்கும் சூழ்நிலைகளால் அல்ல.

### காலையில் பாடும் பாடல் - சங்கீதம் 5

*Sung in the Morning*




*Psalms 5*

*"Criticism is the manure in which God's servants grow best."*

*"விமரிசனங்களே தேவ ஊழியர்கள் சிறப்பாக வளர்வதற்கான உரம்"*

நீங்கள் தாக்குதலுக்கு உள்ளாகும்போது

*When you are under attack*

Notes:

______________________________________________________________
______________________________________________________________
______________________________________________________________

**வ** *1-3,* **தேவனிடத்தில் ஜெபம்**- *Pray to God*

வ *4-6,* தேவனிடத்தில் விண்ணப்பம் - *Appeal to God*

வ *7-8,* தேவனிடம் நெருங்கி சேர்தல் - *Draw near to God*

வ *9-10,* தேவனிடத்தில் விண்ணப்பம் - *Appeal to God*

வ *11-12,* கர்த்தருக்குள் சந்தோஷமான அடைக்கலம் - *Joyful refuge in God*

## தேவனிடத்தில் ஜெபம்

**வ** *1-3, Pray to God*

*1.* ***கர்த்தாவே, என் வார்த்தைகளுக்குச் செவிகொடும், என் தியானத்தைக் கவனியும்.***
*2.* ***நான் உம்மிடத்தில் விண்ணப்பம்பண்ணுவேன்; என் ராஜாவே, என் தேவனே, என் வேண்டுதலின் சத்தத்தைக் கேட்டருளும்.***
*3.* ***கர்த்தாவே, காலையிலே என் சத்தத்தைக் கேட்டருளுவீர்; காலையிலே உமக்கு நேரே வந்து ஆயத்தமாகி, காத்திருப்பேன்.***

*a)* தேவனிடத்தில் உண்மையாய் ஜெபியுங்கள் *-Pray to God Honestly*

இந்த ஜெபங்கள், தான் நல்ல நிலையில் இருக்கிறேன் என்று மற்றவர்களுக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட வார்ததைகளினால் உருவானது அல்ல *(the politically careful words).* மாறாக, இந்த வார்த்தைகள் பெரிதான தேவையோடு இருக்கிற ஒரு மனிதனின் உண்மையான கதறல். தாவீது எளிதாக, *(plain)* தான் கஷ்டத்தில் இருப்பதையும் தன் தேவை சந்திக்கப்படவும் சொல்லி கதறுகிறார். *David was making it very plain he is in trouble and he needs help.*

*b)* தனியாக தனிப்பட்ட முறையில் ஜெபியுங்கள் *-Pray personally*

தாவீது தேவனை *"*என் ராஜாவே, என் தேவனே*"* என்று அழைக்கிறார். தாவீது ராஜாவாக இருந்தபோதிலும், அதைவிட மிக பெரும் இராஜ்ஜியத்தின் கீழ் தான் ஊழியம் செய்வதை அவர் உணர்ந்திருந்தார்.

*c)* இடைவிடாது - தொடர்ந்து ஜெபியுங்கள் */Pray persistently*

Notes:

________________________________________________________
________________________________________________________
________________________________________________________

“காலையில் ஜெபிப்பதாக” தாவீது இரண்டுமுறை கூறுகிறார். முந்தின சங்கீதத்தில் அவர் மாலையில் ஜெபித்தார். காலை எழுந்தவுடன் தீய எதிரிகளின் மிரட்டல்களே அவர் மனதில் வந்தது ஆகவே உடனே அதை ஜெபமாக மாற்றினார்.

d) எதிர்பார்ப்போடு ஜெபியுங்கள் - *Pray expectantly*

தாவீது தன் ஜெபத்திற்கு வரும் பதிலுக்காக காத்திருப்பதாக கூறுகிறார், “ஆவலோடு காத்திருப்பதாக” (*“eagerly waiting”*) கூறுகிறார்.

*David saying that he will wait in expectation for an answer to his prayer “eagerly waiting”*

## தேவனிடத்தில் விண்ணப்பம்

**வ** *4-6, Appeal to God*

*4.* **நீர் துன்மார்க்கத்தில் பிரியப்படுகிற தேவன் அல்ல; தீமை உம்மிடத்தில் சேர்வதில்லை.**
*5.* **வீம்புக்காரர் உம்முடைய கண்களுக்கு முன்பாக நிலைநிற்கமாட்டார்கள்; அக்கிரமக்காரர் யாவரையும் வெறுக்கிறீர்.**
*6.* **பொய் பேசுகிறவர்களை அழிப்பீர்; இரத்தப்பிரியனையும் சூதுள்ள மனுஷனையும் கர்த்தர் அருவருக்கிறார்.**

தனது எதிரிகள் யாவரும் துன்மார்க்கராய் இருக்கிறபடியால், நீதியாளரான கர்த்தர் தன் சார்பாகவே காரியங்களை செய்வார் என்று தாவீது வாதாடுகிறார். கர்த்தரின் நீதியை ஆராய்ந்து, தேவன் எல்லா தவறான காரியங்களையும் செம்மையாக்குவார் என்ற உண்மையினிமித்தம் தாவீது தன்னைத்தான் ஆறுதல் படுத்திக்கொள்கிறார்.

பாவம் செய்பவர்களுக்கு எதிராக தேவன் எவ்வளவு வலிமையாக செயல்படுகிறார் என்று பாருங்கள்.

- தேவன் துன்மார்க்கத்தில் களிகூருவது இல்லை - *God takes no pleasure in evil (5:4)*
- கர்த்தர் துன்மார்க்கரோடு வாசம் செய்ய முடியாது - *God cannot dwell with the wicked (5:4)*

Notes:

__________________________________________________________
__________________________________________________________
__________________________________________________________

- வீம்புபேசுகிறவர்கள் தேவனுடைய பிரசன்னத்தில் நிற்க முடியாது - *God cannot have in His presence the arrogant (5:5)*
- தவறு செய்பவர்களை கர்த்தர் வெறுக்கிறார் - *God hates those who do wrong (5:5)*
- பொய் சொல்பவர்களை கர்த்தர் அழித்துப்போடுவார் - *God destroys those who tell lies (5:6)*
- மாயக்காரனையும் இரத்தப்பிரியனையும் கர்த்தர் அருவருக்கிறார் -*God abhors bloodthirsty and deceitful men (5:6)*

## தேவனிடம் நெருங்கி சேர்தல்

*V 7-8, Draw near to God*

7. **நானோ உமது மிகுந்த கிருபையினாலே உமது ஆலயத்துக்குள் பிரவேசித்து, உமது பரிசுத்த சந்நிதிக்கு நேரே பயபக்தியுடன் பணிந்துகொள்ளுவேன்.**

8. **கர்த்தாவே, என் சத்துருக்களினிமித்தம் என்னை உம்முடைய நீதியிலே நடத்தி, எனக்குமுன்பாக உம்முடைய வழியைச் செவ்வைப்படுத்தும்.**

கர்த்தருடைய பரிசுத்தத்தையும், பாவத்தையும் கர்த்தர் எவ்வளவாய் வெறுக்கிறார் என்பதையும் தாவீது அறிவித்திருக்கிறார். ஆகவே, தன்னுடைய சுய நீதியின் நிமித்தம் *(own righteousness)* தேவனிடத்தில் சேர முடியாது என்று தாவீது உணர்ந்திருந்தார். அதனால்தான், கர்த்தருடைய அளவற்ற கிருபைதான் *(His abundant loving kindness)* கர்த்தருடைய வாசஸ்தலத்தில் சேருவதற்கு ஒரே வழி என்று ஒப்புக்கொள்கிறார்.

துன்மார்க்கரிடமிருந்து தன்னை காப்பது மாத்திரமல்ல, அவர்களை போல தான் ஆகிவிட கூடாது என்றும் தாவீது தேவனிடத்தில் ஜெபிக்கிறார். தாவீது தடுமாறும்படி அவனுடைய விமரிசகர்கள் ஆவலோடு காத்திருந்தார்கள், அப்போது தாவீதின் மேல் கல்லெறியும்படி தயாராக இருந்தார்கள்.

## தேவனிடத்தில் விண்ணப்பம்

**வ** *9-10, Appeal to God*

Notes:

____________________________________________________________
____________________________________________________________
____________________________________________________________

*9.* ***அவர்கள் வாயில் உண்மை இல்லை, அவர்கள் உள்ளம் கேடுபாடுள்ளது; அவர்கள் தொண்டை திறக்கப்பட்ட பிரேதக்குழி; தங்கள் நாவினால் இச்சகம் பேசுகிறார்கள்.***
*10.* ***தேவனே, அவர்களைக் குற்றவாளிகளாகத் தீரும்; அவர்கள் தங்கள் ஆலோசனைகளாலேயே விழும்படிசெய்யும்; அவர்கள் துரோகங்களினுடைய திரட்சியினிமித்தம் அவர்களைத் தள்ளிவிடும்; உமக்கு விரோதமாய்க் கலகம்பண்ணினார்களே.***

தன்னை கல்லெறிபவர்களுடைய துன்மார்க்கத்தை விளக்கி கர்த்தர் நியாயந்தீர்க்கும்படி வேண்டுகிறார். அவர்களுடைய ஒரு வார்த்தையைக்கூட நம்பமுடியாது என்று தாவீது கூறுகிறார்.

நாம் ஏன் பாவிகளுடைய ஆலோசனையையும் துன்மார்க்கருடைய அறிவுறுத்தலையும் கேட்க வேண்டும்?

*Why do we listen to counsel of sinners and the advice of the ungodly?*

தேவனைக்காட்டிலும் அவர்கள் நம் வாழ்வில் சிறந்த ஆலோசனையை கொடுத்துவிட முடியும் என்று நாம் ஏன் நினைக்கிறோம்?

*Why do we think that they can help us with life decisions better than God?*

அவர்கள் நாவு திறந்த பாதாளம், அதை பின்தொடர்ந்து செல்பவர்கள் யாவரும் தங்களுக்கு தாங்களே பிரேதக்குழிகளை உண்டாக்கிகொள்கிறார்கள்.

*Their throat is an open grave and all who follow their words will make their grave.*

### கர்த்தருக்குள் சந்தோஷமான அடைக்கலம்

**வ** *11-12, Joyful refuge in God*

*11.* ***உம்மை நம்புகிறவர்கள் யாவரும் சந்தோஷித்து, எந்நாளும் கெம்பீரிப்பார்களாக; நீர் அவர்களைக் காப்பாற்றுவீர்; உம்முடைய நாமத்தை நேசிக்கிறவர்கள் உம்மில் களிகூருவார்களாக.***

Notes:

__________________________________________________________
__________________________________________________________
__________________________________________________________

***12. கர்த்தாவே, நீர் நீதிமானை ஆசீர்வதித்து, காருணியம் என்னுங் கேடகத்தினால் அவனைச் சூழ்ந்துகொள்வீர்.***

தன்னைப்போல தாக்கப்படும் கர்த்தருடைய ஜனம் யாவருக்கும் தாவீது வேண்டுகோள் வைக்கிறார். நீதியின் பிள்ளைகள் கர்த்தரை அணுகும்போது அவரிடத்தில் அவர்கள் அடைக்கலம் காண்பார்கள். கர்த்தரிடத்தில் பாதுகாப்பிற்காக நாம் செல்லும்போது அவர் நம்மை வெறுமையாய் திருப்பி, நீங்களே உங்களை பார்த்துக்கொள்ளுங்கள் என்று ஆண்டவர் சொல்வதில்லை. *When we go to God for protection, we will not be turned away and left to defend ourselves.* ஏற்ற மனதோடு நாம் அவரை அண்டினால், அவருடைய பரிசுத்த கரங்களுக்குள் ஆனந்தமும், மனமகிழ்ச்சியும் காண்போம்.

ஒரு விசுவாசி தாக்கப்படும்போதும் அவரால் மனமகிழ்ச்சியோடு இருக்கமுடியும் என்று தாவீது கூறுகிறார். ஏனெனில், கர்த்தரின் கருண்யத்தின் கேடயத்தால் சூழ்ந்துகொள்ளப்படுகிறோம்.

## முடிவுரை

*Conclusion*

நீங்கள் தாக்கப்படும்போது:

- ஜெபத்தில் தேவனிடத்தில் தஞ்சமடையுங்கள்
- அவர் நேர்மையான நீதிபதி, அவரிடம் வேண்டுங்கள்
- அவருடைய கிருபையினிமித்தம் அவரிடம் நெருங்கி சேருங்கள்
- அவர் உங்கள் பாதுகாவலராக இருப்பதால் அவரில் களிகூருங்கள்

*When you're under attack,*

- *Take refuge in the Lord through prayer.*
- *Appeal to Him as the Righteous Judge.*
- *Draw near to Him by His grace,*
- *Rejoicing in Him as your defender.*

Notes:

_______________________________________________________

_______________________________________________________

_______________________________________________________

## இயேசு கிறிஸ்து

இயேசு தான் சிலுவையில் அறையப்பட போகிறோம் என்றும் யூதாஸ் தன்னை காட்டிக்கொடுக்கப் போகிறான் என்றும் அறிந்திருந்தார். அந்த நேரத்தில் இயேசு பிதாவினிடத்தில் ஜெபிக்க செல்கிறார்.

***மத்தேயு** 27:36,*

*அப்பொழுது, இயேசு அவர்களோடே கெத்செமனே என்னப்பட்ட இடத்திற்கு வந்து, சீஷர்களை நோக்கி நான் : அங்கே போய் ஜெபம்பண்ணுமளவும் நீங்கள் இங்கே உட்கார்ந்திருங்கள் என்று சொல்லி;*

***லூக்கா** 22:42-43,*

*42. பிதாவே, உமக்குச் சித்தமானால் இந்தப் பாத்திரம் என்னைவிட்டு நீங்கும்படிசெய்யும்; ஆயினும் என்னுடைய சித்தத்தின்படியல்ல, உம்முடைய சித்தத்தின்படியே ஆகக்கடவது என்று ஜெபம்பண்ணினார். 43. அப்பொழுது வானத்திலிருந்து ஒரு தூதன் தோன்றி, அவரைப் பலப்படுத்தினான்.*

## அப்போஸ்தலனாகிய பவுல்

*Apostle Paul*

அப்போஸ்தலனாகிய பவுல் எருசலேமிற்கு சென்றால் கைது செய்யப்படுவார் என்று அவர் அறிந்திருந்தபோதும், தனது அர்ப்பணிப்பில் அவர் இடறல் அடையவில்லை.

*When Apostle Paul was warned that he will be bound if he goes to Jerusalem he didn't waver in his commitment.*

*Acts 20:24, But none of these things move me; nor do I count my life dear to myself, so that I may finish my race with joy, and the ministry which I received from the Lord Jesus, to testify to the gospel of the grace of God.*

*அப்போஸ்தலர் 20:24,*

*ஆகிலும் அவைகளில் ஒன்றையுங்குறித்துக் கவலைப்படேன்; என் பிராணனையும் நான் அருமையாக எண்ணேன்; என் ஓட்டத்தைச் சந்தோஷத்தோடே முடிக்கவும், தேவனுடைய*

Notes:

________________________________________________________
________________________________________________________
________________________________________________________

*கிருபையின் சுவிசேஷத்தைப் பிரசங்கம்பண்ணும்படிக்கு நான் கர்த்தராகிய இயேசுவினிடத்தில் பெற்ற ஊழியத்தை நிறைவேற்றவுமே விரும்புகிறேன்.*

- கப்பல் விபத்திற்குள்ளான போது, இடறவில்லை
- எந்த காரணமும் இல்லாமல் கசையடிகள் கொடுக்கப்பட்ட போதும், அடித்து துன்புறுத்தப்பட்டபோதும், இடறவில்லை
- கைது செய்யப்பட்டதால், இடறவில்லை
- கொடுமைப்படுத்தப்பட்டபோது (persecute), இடறவில்லை
- பொது இடத்தில் அவமானப்படுத்தப்பட்ட போது, இடறவில்லை
- தன்னை விட படிப்பும் ஞானமும் குறைந்தவர்கள் தன்னை விமர்சித்து குற்றப்படுத்தியபோதும், இடறவில்லை
- தன கைகளில் பாம்பு சுற்றிக்கொண்டபோதும், இடறவில்லை
- பொய்யாய் குற்றம்சாட்டப்பட்ட போதும், இடறவில்லை
- சரீர பெலவீனத்தாலும், இடறவில்லை
- தான் பணியாற்றிய ஊழியர்களின் நிமித்தம் ஏமாற்றங்களும் சந்தேகங்களும் இருந்தபோதும், அவற்றிற்காக பவுல் வருந்தினார். ஆனாலும், இதின் நிமித்தமாகவும் அவர் இடறவில்லை.

- *The Apostle Paul was not moved by a shipwreck.*
- *He was not moved by being beaten and whipped for no good reason.*
- *He was not moved by being imprisoned.*
- *He was not moved by being persecuted.*
- *He was not moved by being publicly humiliated.*
- *He was not moved by the criticism of people with less education and knowledge.*
- *He was not moved by a snake wrapping itself around his hand.*
- *He was not moved by being falsely accused.*

Notes:

________________________________________________________

________________________________________________________

________________________________________________________

- *He was not moved by his physical infirmity once the Lord said He was in it.*
- *He was not moved by the doubts of or disappointment with those with whom he worked even though his heart was grieved for them.*

அப்போஸ்தலனாகிய பவுலை உந்தித்தள்ளியது ஒரே ஒரு காரியம்தான். தனது ஓட்டத்தை முழுமையாக முடித்தோம் என்கிற மனமகிழ்ச்சி... கர்த்தர் தன்னை அழைத்த நோக்கத்தை செய்து முடித்தோம் என்கிற நிறைவு மாத்திரமே.

*There was only one thing and one thing only that moved the Apostle Paul. . .and that was completing his assignment with joy. . .doing the thing that God called him to do.*

### செயல்படுத்துதல்

*Application:*

கர்த்தர் நம் வாழ்வில் எப்படிப்பட்ட சோதனைகள் அனுமதித்தாலும், அவை யாவும் நாம் அவரோடு உண்மையாய் இருப்பதற்காகவும், தனிப்பட்ட உறவை வளர்த்துக்கொள்ளவும், ஜெபத்தில் தரித்திருக்கவும் தான். சோதனைகளை சந்திக்கும்போது உங்களுக்கு முதலில் நினைவில் வருகிற காரியம் என்ன?

- உங்கள் கணவன் / மனைவி
- உங்கள் போதகர்
- உங்கள் ஜெப குழு தலைவர்
- கர்த்தருக்குள் உங்கள் சகோதரன் / சகோதரி
- ஆண்டவர்

Notes:

__________________________________________________________
__________________________________________________________
__________________________________________________________




*Whatever trials God sends into our lives are to cause us to turn to Him in honest, personal, persistent prayer. What is the first thought comes to you when you are facing a trial?*

- *Your spouse*
- *Your Pastor*
- *Your cell group leader*
- *Brother/sister in Christ*
- *Or God*

*சில கிறிஸ்தவர்கள், பிறருக்கு வரும் சோதனைகளை கண்டு தாங்கள் வழிவிலகி ஆண்டவரை விட்டு தூரம் போய்விடுவார்கள். ஆனால் வேறு சிலரை அது ஆண்டவரிடம் இன்னும் நெருங்கி அழைத்து செல்கிறது. இந்த வித்தியாசத்திற்கு காரணம் என்ன?*

*Some Christians allow the attacks of others to drive them away from the Lord, whereas for some it drives them to the Lord. What makes the difference?*

*கிறிஸ்தவர்கள் தங்கள் எதிரிகளை கர்த்தர் நியாயந்தீர்க்கும்போது அதில் மகிழ்ச்சியடைய வேண்டுமா*

Notes:

__________________________________________________________
__________________________________________________________
__________________________________________________________

*துக்கப்பட வேண்டுமா ?***வெளிப்படுத்தல்** *18:20-ன் படி நாம் என்ன செய்யும் படி அறிவுருத்துகிறது?*

*Should Christians take pleasure or be grieved at the thought of God judging their enemies? How does it reflect upon us in the light of Revelation 18:20?*

வெளிப்படுத்தல் *18:20*

*பரலோகமேபரிசுத்தவான்களாகிய அப்போஸ்தலர்களே! ! !தீர்க்கதரிசிகளே அவளைக்குறித்துக் களிகூருங்கள்உங்கள் . நிமித்தம் தேவன் அவளை நியாயந்தீர்த்தாரேஎன்று தூதன் ! .சொன்னான்*

*Revelation 18:20, Rejoice over her, O heaven, and you holy apostles and prophets, for God has avenged you on her!"*

நம்மை விமர்சிப்பவர்கள் முன் நம்மை நியாயப்படுத்த வேண்டுமா அல்லது கண்டுகொள்ளாமல் விட்டுவிட வேண்டுமா என்று எப்படி நாம் அறிவது? வேதத்தின் எந்த கோட்பாடுகள் இதற்கு ஆதாரம் கொடுக்கிறது?

*How can we know whether to defend ourselves before critics or just to ignore them? What biblical principles apply?*

Notes:

____________________________________________________________
____________________________________________________________
____________________________________________________________

Notes:

________________________________________________________________
________________________________________________________________
________________________________________________________________

Notes:

______________________________________________________________
______________________________________________________________
______________________________________________________________

# *19. வெற்றியா துக்கமா...*

## உங்கள் மகன் கொல்லப்படுகிறதின் மூலம் நீங்கள் உங்கள் சொந்த மகனை ஜெயம் கொண்டீர்கள்.

*You have won a victory over your own son by getting him killed … you call this victory or sad day…*

***சங்கீதம் 144***

***சூழல்:*** *அப்சலோம் மீது வெற்றி*

**வேதவாக்யங்கள்:** *2 சாமுவேல் 15 to 18*

- *V 1-2, David praises God for His political successes.*தாவீது அவனது அரசியல் ரீதியான வெற்றிக்காக தேவனை துதிக்கிறான்.
- *V 3-4, David confesses his own unworthiness.* தாவீது தான் தகுதியற்றவான் என்று அறிக்கை செய்கிறான்.
- *V 5-6, He prays to God to smash his enemies.* அவன் தனது எதிரிகளை தகர்க்கும்படி தேவனிடம் ஜெபிக்கிறான்.
- *V 7-8, He prays for deliverance from hypocrites near him.* தன் அருகிலிருக்கும் வெளிவேஷக்காரர்களிடத்திலிருந்து விடுதலைக்காக ஜெபிக்கிறான்.
- *V 9-10, He promises to creatively praise God for His works.* தேவனின் கிரியைகளுக்காக அவரை ஆக்கப்பூர்வமாக துதிப்பேன் என்று வாக்களிக்கிறான்.
- *V 11, He prays again to be saved from hypocrites near him.* மீண்டும் வெளிவேஷக்காரர்களிடத்திலிருந்து காப்பாற்றப்படுவதற்கு ஜெபிக்கிறான்.
- *V 12-14, He lists blessings of family, economy, production, and safety.* குடும்பம், பொருளாதாரம், உற்பத்தி , மற்றும் பாதுகாப்பின் ஆசீர்வாதங்களை பட்டியலிடுகிறார்.
- *V 15, He summarizes all as God's blessing, but exalts God Himself.* - அனைத்தையும் தேவனின் ஆசிர்வாதம் என்று சுருக்கமாய் கூறி, தேவனையே உயர்த்துகிறான்.

Notes:

________________________________________________________
________________________________________________________
________________________________________________________




தாவீது தன்னை கர்த்தருடைய ஜனத்தின்மேல் ராஜாவாக ஏற்படுத்தினத்திற்காக தேவனை மகிமைப்படுத்தி இந்த மகிமையின் சங்கீதத்தை ஆரம்பிக்கிறார். “தேவனே கர்த்தர்” என்று சொல்லி சங்கீதம் முடிவடைகிறது, எனவே நாம் அவருடைய வல்லமையை நம்புவதன் மூலம் அவரை நமது தேவனாக கொண்டுள்ளோம்.

*V 1-2, தாவீது அவனது அரசியல் வெற்றிக்காக தேவனை துதிக்கிறான்.*

***1 என் கைகளைப் போருக்கும் என் விரல்களை யுத்தத்திற்கும் படிப்பிக்கிற என் கன்மலையாகிய கர்த்தருக்கு ஸ்தோத்திரம்.***
***2 அவர் என் தயாபரரும், என் கோட்டையும், என் உயர்ந்த அடைக்கலமும், என்னை விடுவிக்கிறவரும், என் கேடகமும், நான் நம்பினவரும், என் ஜனங்களை எனக்குக் கீழ்ப்படுத்துகிறவருமாயிருக்கிறார்.***

தாவீது ஆரம்பகாலத்திலிருந்து ஒரு பலத்த பராக்கிரமசாலியாக அறியப்பட்டிருப்பதற்கு தேவனே காரணராக இருந்தார். தாவீது ஒரு போர் வீரனானாலும் ஒரு சாந்தகுணமுள்ள சமாதானத்து விரும்பினான், சங்கீதக்காரனாயும், இசைக்கலைஞனாயும், நடனக்கலைஞனாயும் இருந்தான். தேவன் தாவீதுக்கு வழங்கிய எல்லா பாதைகளுக்காகவும் தொடர்ந்து தேவனைத் துதித்தான்.

Notes:

________________________________________________________
________________________________________________________
________________________________________________________

*தாவீது தேவனாகிய கர்த்தரை அவனுடைய*

- *கோட்டை,*
- *உயந்த கோபுரம்,*
- *மீட்பரானவர் , மற்றும்*
- *கேடயம் – அவனது எதிரிகளுக்கு எதிராக அணைத்து பாதுகாப்பு மற்றும் பாதுகாப்பையும் வழங்குகின்றனர்.*

*V 3-4, தாவீது தான் தகுதியற்றவான் என்று அறிக்கை செய்கிறான்.*

***3 கர்த்தாவே, மனுஷனை நீர் கவனிக்கிறதற்கும், மனுபுத்திரனை நீர் எண்ணுகிறதற்கும், அவன் எம்மாத்திரம்?***
***4 மனுஷன் மாயைக்கு ஒப்பாயிருக்கிறான்; அவன் நாட்கள் கடந்துபோகிற நிழலுக்குச் சமானம்.***

*தாவீது தான் தகுதியற்றவன் என்ற கருத்தை அழுத்தம் திருத்தமாக முன்வைக்கிறார். தான் ராஜாவாக இருந்தாலும் தன்னில் ஒன்றும் இல்லை என்று தாவீது அறிந்திருந்தார். மனிதனுடைய வாழ்க்கை மிகவும் குறுகியது, ஒரு தலைமுறை சென்ற பாதையிலிருந்து இன்னொரு தலைமுறை விலகி வேறு வழியில் செல்கிறது; மனிதன் முக்கியத்துவம் அற்றவன்.*

*V 5-6, தனது எதிரிகளை தகர்ப்பதற்கு தேவனிடம் ஜெபிக்கிறான்.*

***5 கர்த்தாவே, நீர் உமது வானங்களைத் தாழ்த்தி இறங்கி, பர்வதங்கள் புகையும்படி அவைகளைத் தொடும்.***
***6 மின்னல்களை வரவிட்டுச் சத்துருக்களைச் சிதறடியும், உமது அம்புகளை எய்து அவர்களைக் கலங்கடியும்.***

*இஸ்ரவேல் தேசத்தின் மக்களுக்கும் தீர்க்கதரிசிகளுக்கும் சீனாய் மலையில் வெளிப்பட்ட தேவனுடைய மகா மகிமையை அடிக்கடி நினைவுகூருவர். துவே தேவனுடைய மகா மென்மையின் காட்சியாக இருந்தது.*

*இடிமுழக்கம் போன்ற ஒரு சூறாவளியை போல தேவன் தன்னுடைய எதிரிகளை சிதறடிக்கும்படி தாவீது விரும்புகிறான். இந்த இரண்டு வசனங்களில் தாவீது தனது சொந்த இராணுவத்தையும் ஆயத்தங்களைப் பற்றியும் குறிப்பிட*

Notes:

_________________________________________________________
_________________________________________________________
_________________________________________________________

வில்லை ஆனால் தேவனுடைய மகா மகிமையை அவர் வெளிப்படுத்தி தனது எதிரிகளை நிர்மூலமாக்கும்படி வேண்டுகிறார்.

*V7-8, தன் அருகிலிருக்கும் வெளிவேஷக்காரர்களிடத்திலிருந்து விடுதலைக்காக அவன் ஜெபிக்கிறான்.*

**[7] உயரத்திலிருந்து உமது கரத்தை நீட்டி, ஜலப்பிரவாகத்துக்கு என்னை விலக்கி இரட்சியும்.**
**[8] மாயையைப் பேசும் வாயும், கள்ளத்தனமான வலதுகையும் உடைய அந்நிய புத்திரரின் கைக்கு என்னை விலக்கித் தப்புவியும்.**

தாவீது, திரளான தண்ணீர்கள்போல் தன்னை அமிழ்த்தும் விஷயத்தில் நேரடியாக தேவன் இடைப்படும்படி கர்த்தரை அழைக்கிறார்.

- ➢ அந்த நெருங்கிய நண்பர்களின் துரோகம் ஒரு பயங்கரமான ஆபத்து.
- ➢ நன்றியில்லாத மனிதன் பிரச்சனையின் நேரத்தில் ஒரு நம்மை செயல்பட தடை செய்யும் வலியாய் இருக்கிறது.
- ➢ தன்னுடைய சொந்த மகனை விட பெலிஸ்தியரின் கூலிப்படைகள் நம்பத்தகுந்தவர்களாக இருந்தார்கள்.
- ➢ பெலிஸ்தியன் ராஜாவாகிய காத், இஸ்ரவேலின் ராஜாவாகிய சவுலை காட்டிலும் தாவீதை மிகவும் நன்றாக கவனித்தார்கள்.
- ➢ சீப்-ன் (Ziph) யூதர்கள் அந்நியர்களைப்போல இரண்டு முறை தாவீதுக்கு துரோகம் செய்தனர்

தன் நம்பிக்கைக்குரிய நெருங்கியவர்களின் வார்த்தைகள் தற்பெருமையை மாத்திரமே கொண்டிருந்தது. அவர்களுடைய வாயின் வார்த்தை நலமாக இருந்தது, ஆனால் அவர்களுடைய இருதயத்திலோ போர் இருந்தது.

*V 9-10, தேவனின் கிரியைகளுக்காக அவரை ஆக்கப்பூர்வமாக துதிப்பேன் என்று வாக்களிக்கிறான்*

**[9] கர்த்தாவே, நான் உமக்குப் புதுப்பாட்டைப் பாடுவேன்; தம்புரினாலும் பத்துநரம்பு வீணையினாலும் உம்மைக் கீர்த்தனம்பண்ணுவேன்.**

Notes:

________________________________________________________
________________________________________________________
________________________________________________________

***10 நீரே ராஜாக்களுக்கு ஜெயத்தைத் தந்து, உமதடியானாகிய தாவீதைப் பொல்லாத பட்டயத்திற்குத் தப்புவிக்கிறவர்.***

தேவனுடைய விடுதலை நேர்மையானவர்களுடைய வாயிலிருந்து துதிகளாக உண்டுபண்ணும். தாவீது அவனுடைய சாதனைகளிலிருந்து அவனுக்கென்று எந்த புகழும் எடுத்து கொள்ளவில்லை. தேவன் தாவீதுக்காக பெரிய காரியங்களை செய்தார் அது அவனை உறுதியாக தேவனுக்கு பாடல்களை பாடும்படியாக தூண்டியது.

*V 11,* வெளிவேஷக்காரர்களிடத்திலிருந்து காப்பாற்றப்படுவதற்கு மறுபடியும் ஜெபிக்கிறான்.

***11 மாயையைப் பேசும் வாயும், கள்ளத்தனமான வலதுகையும் உடைய அந்நிய புத்திரரின் கைக்கு என்னை விலக்கித் தப்புவியும்.***

*7-8.* வசனங்களில் இருந்து மீண்டும் திரும்ப செய்கிற ஜெபம், சவுல் மற்றும் அப்சலோம் போன்ற தாவீதின் உள் எதிரிகள் பெரும் பிரச்சனையாய் இருக்கிறார்கள் என்று விவரிக்கிறான்.

*V 12-14,* குடும்பம், பொருளாதாரம், உற்பத்தி , மற்றும் பாதுகாப்பின் ஆசீர்வாதங்களை பட்டியலிடுகிறார்.

> *12. அப்பொழுது எங்கள் குமாரர் இளமையில் ஓங்கிவளருகிற விருட்சக்கன்றுகளைப்போலவும், எங்கள் குமாரத்திகள் சித்திரந்தீர்ந்த அரமனை மூலைக்கற்களைப்போலவும் இருப்பார்கள்.*
>
> *13. எங்கள் களஞ்சியங்கள் சகலவித வஸ்துக்களையும் கொடுக்கத்தக்கதாய் நிரம்பியிருக்கும்; எங்கள் கிராமங்களில் எங்கள் ஆடுகள் ஆயிரம் பதினாயிரமாய்ப் பலுகும்.*
>
> *14. எங்கள் எருதுகள் பலத்தவைகளாயிருக்கும்; சத்துரு உட்புகுதலும் குடியோடிப்போகுதலும் இராது; எங்கள் வீதிகளில் கூக்குரலும் உண்டாகாது.*

மகிழ்ச்சியும் வளமும் நிறைந்த குடும்பங்களை அவர்கள் சந்ததியார் கண்டுகொள்ளும் அடையாளங்கள். பொருளாதார செழுமை விவசாயத்தால் அளவிடப்படுகிறது, தேவையான பொருட்கள் வந்தடைகின்றன, செய்யும் முதலீடுகளில் அதிக லாபமும் பெறுகிறார்கள் என்று தாவீது விவரித்தான்.

Notes:

__________________________________________________________
__________________________________________________________
__________________________________________________________

உறுதியான உழைப்பு ஆசிர்வதிக்கப்பட்ட உற்பத்தி.

- ➢ திருட்டு இல்லை - எதிரிகள் நகரத்திற்குள் பிரவேசிக்கிறதும் அல்லது திருடுவதற்காக தாக்குதல் மேற்கொள்ளும் திருடர்களிடமிருந்தும் பாதுகாப்பு
- ➢ வெளியேறுதல் இல்லை - ஆபத்துக்காக ஒரு நகரத்தை விட்டு கட்டாயத்தினால் வெளியறுவது அல்லது சிறைப்பிடிக்கப்பட்டு எடுத்துக்கொள்ளப்படுவது இல்லை
- ➢ நமது தெருக்களில் முறுமுறுப்பு இல்லை - அனைத்து உள்நாட்டு முரண்பாடுகளிலிருந்தும் தேசம் அமைதியாயிருக்கும்

*V 15,* அவன் அனைத்தையும் தேவனின் ஆசிர்வாதமாய் கருதி, தேவனையே உயர்த்துகிறான்.

**[15] இவ்விதமான சீரைப்பெற்றஜனம் பாக்கியமுள்ளது; கர்த்தரைத் தெய்வமாகக் கொண்டிருக்கிற ஜனம் பாக்கியமுள்ளது.**

இந்த பாடல் முடியும் பொழுது ஒரு மகத்தான காரியத்தை அதாவது தேவனைத் தவிர முக்கியத்துவம் வேறு யாருக்கும் இல்லை என்று கூறி முடிகிறது. சங்கீதத்தின் கவனம் ஆசிர்வாதங்களில் அல்ல ஆசிர்வதிக்கிற தேவனாகிய கர்த்தர் மேலேயே இருக்கிறது!

## செயல்படுத்துதல்

ஒரு சகோதரன், சகோதரி, போதகர், அல்லது தந்தையாக உங்கள் நம்பிக்கையை வைப்பதற்கு ஒரே இடம், **கர்த்தர்** மாத்திரமே. உங்கள் நம்பிக்கையை தேவனிடம் வைப்பதன்மூலம் உங்களுக்காகவும் உங்களோடே இருபவர்களுக்காகவும் நீங்கள் பூரணமான சமாதானத்தை பாதுகாக்க முடியும்(ஏசாயா 26:3-4).

நீங்கள் அத்தகைய அமைதியை இப்போது அனுபவிக்கிறீர்களா? இல்லை என்றால் உங்கள் நம்பிக்கை எங்கே இருக்கிறது என்பதை சரிபாருங்கள்.

தாவீது ராஜாவாக இருந்தும் அவன் அநேக காரியங்களை நிறைவேற்றிருந்தாலும் தேவனுக்கு முன் அவன் ஒன்றுமே

Notes:

______________________________________________________
______________________________________________________
______________________________________________________

*இல்லை என்பதை அவன் அறிந்திருந்தான். நாமும் மனிதனாக, மனுஷியாக, குடும்பங்களாக, சபையாக இப்படி பட்ட மனப்பான்மை கொண்டிருக்க வேண்டும்.*

*நீங்கள் பெருமைபாராட்டுவது உங்கள் சாதனைகள் மீதா அல்லது கர்த்தர் மீதா ?*

*நாம் கர்த்தரின் பார்வையில் அற்பமானவர்களாக இருந்தாலும் தேவனுடைய கிருபையும் நன்மையையும் நம்மை மகிமையில் விசேஷித்தவர்களாக மாற்றுகின்றன. தனி மனிதர்களாக, குடும்பமாக, சபையாக தேவனுக்குள் மனத்தாழ்மையாய் இருப்பது நமது கடமையும் ஞானமுமாய் இருக்கிறது.*

*நமது அன்றாட வாழ்வில் தேவனுடைய மகிமை நம்மில் வெளிப்படும்படி தேவனுக்கு முன்பாக நாம் மனத்தாழ்மையாய் இருக்கிறோமா?*

*கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் சபைகளில் பெரும்பாலும் அவர்களின் மத்தியில் மாய்மாலம் செய்கிற / பொய்யான சகோதரர்களை சமாளிக்க வேண்டிருக்கிறது.*

- ➢ *கவனியுங்கள், ஒரு சிறு கூட்டமான பன்னிரண்டு அப்போஸ்தலர்களுக்குள் ஒரு மத பிசாசு இருந்தது - யூதாஸ்*
- ➢ *மாய்மாலம் செய்யும் தவறான சகோதரர்களால் அப்போஸ்தலனாகிய பவுல் சந்தித்த பாடுகளை கவனியுங்கள் (2 கொரிந்தியர் 11:26; கலாத்தியர் 2:4; பிலிப்பியர் 1:15-17).*
- ➢ *கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்கு உண்மையுள்ளவர்களை அடையாளம் காண விரோதத்தை அனுப்புவதாக உறுதியளித்தார் (I கொரிந்தியர் 11:19).*
- ➢ *இறுதியில் இந்த சகோதரர்கள் விசுவாசத்தை விட்டு விலகுவதை காண்கிறோம் (I யோவான் 2:19; யூதா 1:19).*

Notes:

________________________________________________________
________________________________________________________
________________________________________________________

*உடன் சகோதரர்களிடமிருந்து வரும் பொய் குற்றச்சாட்டுகளை எப்படிச் சமாளிக்கிறீர்கள்?*




'It's been reported that you have a serious drink problem'

*பாடல் நம் சபைக்கும் ஐக்கியத்திற்கும் முக்கியமான அங்கமாக இருக்கிறது, ஏனென்றால் அது இரண்டு ஏற்பாட்டிலும் மேன்மைப்பெற்றிருக்கிறது. தேவனுடைய ஆவியுடன் இருக்கும் மனிதனும் மனுஷியும் பாடுவதில் மகிழ்வார்கள் (எபேசியர் 5:19); (கொலோசெயர் 3:16).*

*நம்முடைய சூழ்நிலைகள் எப்படி இருந்தாலும் கர்த்தரை துதித்து பாடுவோம்.*

Notes:

___________________________________________________________

___________________________________________________________

___________________________________________________________

Notes:

_______________________________________________________________

_______________________________________________________________

_______________________________________________________________

Notes:

________________________________________________________________
________________________________________________________________
________________________________________________________________

## 20. அற்பமானவனும்... விசேஷித்தவனும்...

### நாம் தேவனை நோக்கி பார்க்கும்போது நாம் எவ்வளவு முக்கியத்துவமானவர்களல்ல என்பதை அறிவது

*When you look up and see God and know how insignificant we are..*

*சங்கீதம் 8*

**சூழல்**: *கர்த்தரைத் துதிப்பது*

**வேதவாக்கியம்**: *2 சாமுவேல் 22:1-51*

*தாவீது ராஜா எழுதின ஒரு மகிழ்ச்சியின் பாடல். வேறு வார்த்தைகளில் சொன்னால், இந்த சங்கீதம் ஒரு விண்வெளி ஆராய்ச்சியாளர் (astronomer) இரவில் வானத்தை பார்த்து, தேவனைப் புகழ்ந்து பாடுவதைப் போல எழுதப்பட்டிருக்கிறது.*

*தேவனுடைய மகத்துவமான நாமத்தையும், வானத்திலும் பூமியிலும் அவருடைய மகிமையையும் துதித்து ஆரம்பிகிறது. எதிரிகளையும் பழிவாங்குபவர்களையும் பாலகரையும் குழந்தைகளையும் கொண்டு அடக்குவதின் மூலம் தேவனுடைய மகிமை விவரிக்கப்பட்டிருக்கிறது.*

*பரலோகத்தின் தேவனுடைய கிரியைகளை ஒப்பிட்டு பார்க்கையில் பூமியிலுள்ள மனிதனின் கிரியைகள் அற்பமானதாக இருப்பதை கண்டு தாவீது தேவனை துதிக்கிறார். அவ்வளவு மகத்துவமுள்ள தேவன் மனிதர்களை கூட நினைப்பது தாவீதுக்கு வியப்பாயிருக்கிறது. தேவதூதர்களை விட மனிதனை சற்று குறைவானவர்களாக தேவன் படைத்தார் என்றும் விலங்குகள், பறவைகள், மீன்கள் உள்பட அவருடைய கரங்களின் கிரியைகள்மேல் மனிதனை வைத்தார் என்றும் தாவீது குறிப்பிடுகிறான்.*

*இந்த சங்கீதம் ஆரம்பித்தது போலவே, பூமியனைத்திலும் தேவனுடைய மகத்துவமுடைய நாமத்தை துதித்து நிறைவடைகிறது. அவரை துத்திப்பதே அவருடைய படைப்புகள் எல்லாம், குறிப்பாக மனிதர்களும் அவருக்கு தரும் சரியான மறுமொழியாக இருக்கமுடியும்.*

Notes:

________________________________________________________
________________________________________________________
________________________________________________________

*V 1-2, God's Majesty in Creation -* படைப்பில் தேவனின் மகத்துவம்

*V 3-8, Man's dignity over Creation -* படைப்பின்மேல் மனிதனின் மரியாதை

*V 9, Man's Response -* மனிதனின் பதில்

*V 1-2, God's Majesty in Creation -* படைப்பில் தேவனின் மகத்துவம்

[1] ***எங்கள் ஆண்டவராகிய கர்த்தாவே, உம்முடைய நாமம் பூமியெங்கும் எவ்வளவு மேன்மையுள்ளதாயிருக்கிறது! உம்முடைய மகத்துவத்தை வானங்களுக்கு மேலாக வைத்தீர்.***

[2] ***பகைஞனையும் பழிகாரனையும் அடக்கிப்போட, தேவரீர் உம்முடைய சத்துருக்களினிமித்தம் குழந்தைகள் பாலகர் வாயினால் பெலன் உண்டுபண்ணினீர்.***

- ➢ பூமியெங்கும் அவருடைய நாமம் மேன்மையுள்ளது
- ➢ அவருடைய மகிமை பரலோகத்தைக் காட்டிலும் மேலானது
- ➢ குழந்தைகள் பாலகர் நாவிளும் வல்லமை தேவனால் நியமிக்கமுடியும்
- ➢ அதன் மூலம் எதிரிகளையும் பழிவாங்குபவர்களையும் மௌனமாக்குங்கள்

*V 3-8, Man's dignity over Creation -* படைப்பின்மேல் மனிதனின் மரியாதை

[3] ***உமது விரல்களின் கிரியையாகிய உம்முடைய வானங்களையும், நீர் ஸ்தாபித்த சந்திரனையும், நட்சத்திரங்களையும் நான் பார்க்கும்போது,***

[4] ***மனுஷனை நீர் நினைக்கிறதற்கும், மனுஷகுமாரனை நீர் விசாரிக்கிறதற்கும் அவன் எம்மாத்திரம் என்கிறேன்.***
[5] ***நீர் அவனை தேவதூதரிலும் சற்று சிறியவனாக்கினீர்; மகிமையினாலும் கனத்தினாலும் அவனை முடிசூட்டினீர்.***

[6] ***உம்முடைய கரத்தின் கிரியைகளின்மேல் நீர் அவனுக்கு ஆளுகை தந்து, சகலத்தையும் அவனுடைய பாதங்களுக்குக் கீழ்ப்படுத்தினீர்.***

Notes:

________________________________________________________
________________________________________________________
________________________________________________________

7 ஆடுமாடுகளெல்லாவற்றையும், காட்டுமிருகங்களையும்,

8 ஆகாயத்துப் பறவைகளையும், சமுத்திரத்து மச்சங்களையும், கடல்களில் சஞ்சரிக்கிறவைகளையும் அவனுடைய பாதங்களுக்குக் கீழ்ப்படுத்தினீர்.

*a)* மனிதன் அற்பமானவன்

- ➢ வானங்களை, நிலவை, நட்சத்திரங்களை ஒப்பிடும்போது மனிதன் அற்பமானவன்
- ➢ ஆயினும் மனிதனை நினைப்பது வியப்பாக இருக்கிறது
- ➢ நினைப்பது மாத்திரமல்ல மனிதன்மேல் அக்கறையும் கொள்கிறார்




*b)* மனிதனின் மேன்மை

- ➢ தேவதூதர்களை விட சற்று குறைவாக உருவாக்கப்பட்டான்
- ➢ மகிமையினாலும் கனத்தினாலும் முடிசூட்டப்பட்டான்
- ➢ தேவனின் கரியைகள் மீது ஆதிக்கம் கொடுக்கப்பட்டுள்ளது
- ➢ எல்லாம் அவனுடைய பாதங்களுக்குக் கீழ்ப்படுத்தப்பட்டது

Notes:

__________________________________________________________

__________________________________________________________

__________________________________________________________

- ஆடு
- மாடு
- நிலத்தின் ஜீவராசி
- ஆகாயத்தின் பறவைகள்
- கடலின் மீன்கள்

*V 9, Man's Response - மனிதனின் பதில்*

**[9] எங்கள் ஆண்டவராகிய கர்த்தாவே, உம்முடைய நாமம் பூமியெங்கும் எவ்வளவு மேன்மையுள்ளதாயிருக்கிறது.**

- பூமியெங்கும் அவருடைய மகத்துவமான நாமத்திற்காக தேவனை துதிப்பது

தாவீது இஸ்ரவேலுக்கு ராஜாவாக இருந்தபோதிலும் தன்னை குறித்து உயர்வாய் எண்ணாமல் பரலோகத்தையும் தேவனுடைய படைப்பையும் ஒப்பிட்டு பார்த்து தான் எவ்வளவு சிறப்பற்றவனாய் இருக்கிறான் என்று உணர்ந்தான்.

## செயல்படுத்துதல்

நீங்கள் தேவனுடைய படைப்பிலிருக்கும் மகத்துவத்தை காண்கிறீர்களா?

Do you see the majesty of God in the creation?

நீங்கள் தேவனுடைய மகத்துவத்தை உங்களில் காண்கிறீர்களா?

Do you see the majesty of God in you?

தாவீது தன் வாழ்நாள் முழுவதிலும் உயர்ந்த நிலையிலும் தாழ்ந்த தருணங்களிலும் தேவனைத் துதிக்க முடிந்தது. அவனுடைய கவனம் என்றும் தேவன்மேல் இருந்தது… உங்கள் கவனம் அப்படி இருக்கிறதா?

David was able to praise God all through his life both at high times or low. His focus was always on God… do you feel the same way?

Notes:

____________________________________________________________

____________________________________________________________

____________________________________________________________

*ஏன் தாவீது தேவனுக்கு மனிதன்மேல் இருக்கும் அக்கறையின்மேல் வியந்தார்?*

What prompted David’s amazement over God's concern for man?

*இப்பொழுது, வானம் பூமியெங்கிலும் யாருக்கு அதிகாரம் இருக்கிறது? (எபிரேயர் 2:9; மத்தேயு 28:19; எபேசியர் 1:20-22; 1 பேதுரு 3:22)*

Who now has all authority over heaven and earth? (Hebrews 2:9; Matthew 28:19; Ephesians 1:20-22; 1 Peter 3:22)

*மரணத்தின் துன்பத்திற்கு ஆளான இயேசு கிறிஸ்து மகிமையினாலும் கனத்தினாலும் முடிசூட்டப்பட்டார். இப்போது அவர் எல்லாவற்றிற்கும் தலையாய் இருக்கிறார். அந்த இயேசு இப்போது உங்களுக்குள் வாழ்கிறார்!*

Jesus Christ, who became man and through the suffering of death, has been crowned with glory and honour. He is now head over all things. That Jesus lives inside of you!

*நீங்கள் உங்களை இந்த கோணத்தில் பார்கிறீர்களா?* Do you see yourself in this light?

Notes:

____________________________________________________________
____________________________________________________________
____________________________________________________________

Notes:

_____________________________________________________________

_____________________________________________________________

_____________________________________________________________

Notes:

_______________________________________________________________
_______________________________________________________________
_______________________________________________________________

Notes:

____________________________________________________________________________
____________________________________________________________________________
____________________________________________________________________________